புதிய கல்வெட்டுத் துணைவன்

(மூலமும் வினாவிடையும்)

★

(1976 மார்ச்சு முதல்
சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் தேர்வுக்கும்
தமிழ் M. A. தேர்வுக்குமுரியது)

★

எழுதியோர் :

புலவர் **வே. மகாதேவன்,**

கல்வெட்டாராய்ச்சிப் புலவர், சிவநெறிச் செல்வர்

கா. ம. வேங்கடராமையா, M. A.,

திருப்பனந்தாள்.

NO. 3, PYCROFTS ROAD
MADRAS-5

1975 (1000 பிரதிகள்)

கிடைக்குமிடம் :

வித்துவான் வே. மகாதேவன்,

கோவிந்தபுரம் B. O.

ஆடுதுறை அ. நி. 612 101. தஞ்சை மாவட்டம்.

குறிப்பு : கல்வெட்டு (ஓர் அறிமுகம்) என்னும் பாடநூலின் பிற்பகுதியில் உள்ள விளக்கவுரைகளையும், கட்டுரைகளையும் மாணவர் பயிலுதல் இன்றியமையாததாகும்.

நன்றி. தமிழ்நாட்டரசு தொல்லியல் துறை.

விலை ரூ. 6–00

ஜெமினி அச்சகம், 28, மடத்துத்தெரு, கும்பகோணம். (போன்: 885)

இதனுள்......

		மூலம்	வினா-விடை
1	பல்லவ மன்னன் சிம்மவர்மனின் பள்ளன்கோயில் செப்பேடுகள்	1	50
2	முதலாம் பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகள் ...	2	57
3	பாண்டியன் பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரம் செப்பேடுகள் ...	4	66
4	வீரபாண்டியனின் சிவகாசிச் செப்பேடுகள்	12	86
5	ஆய்குலமன்னன் கோக்கருநந்தடக்கனின் பார்த்திவசேகரபுரம் செப்பேடுகள் ...	15	98
6	முதலாம் இராசராசனின் பெரிய லெய்டன் செப்பேடுகள் ..	19	115
7	பாண்டிய நெடுஞ்செழியனின் மீனாட்சிபுரக் கல்வெட்டு ...	35	138
8	சிற்றண்ணல்வாயில் கல்வெட்டு ...	35	144
9	புகளூர்க்கருகிலுள்ள ஆர்நாட்டார் மலையிலுள்ள சங்ககாலச் சேரர் கல்வெட்டு	36	146
10	அரச்சலூர் இசைக் கல்வெட்டு ...	36	154
11	திருநாதர்குன்று கல்வெட்டு	37	157
12	முதலாம் மகேந்திரவர்மனின் தண்டம்பட்டு நடுகல் ...	37	158
13	முதலாம் மகேந்திரவர்மனின் எடுத்தனூர் நடுகல்	37	160

14	இரண்டாம் நரசிம்மவர்மனின் தா. வேளூர் நடுகல்	...	38	163
15	கம்பவர்மனின் சின்னையம்பேட்டை நடுகல்	...	38	165
16	,, திருவான்மூர் ,,	...	39	168
17	பழமங்கலம் நடுகல் ...	...	39	170
18	கம்பவர்மனின் தா. வேளூர் ,,	...	39	172
19	அரிமிதையமாவலிவாணராயரின் தகடூர் ,,	...	40	173
20	முதலாம் மகேந்திரவர்மனின் மோத்தக்கல் ,,	...	40	174
21	அய்யப்பதேவனின் ரெட்டியூர் ,,	...	41	175
22	முதல் இராஜேந்திரனின் திருவையாற்றுக் கல்வெட்டு	...	41	176
23	தந்திவர்மனின் திருவெள்ளறைப் பாடல் கல்வெட்டு	...	42	179
24	அபராஜிதவர்மனின் திருத்தணிப் பாடல் கல்வெட்டு	...	42	180
25	சோழர்காலப் பாடற்கல்வெட்டு	...	43	181
26	சோழச் சேனபதி நரலோகவீரன் தில்லைத் திருப்பணி செய்தமையைக் குறிக்கும் பாடற் கல்வெட்டு	...	43	183
27	இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி		43	184
28	சடையவர்மன் சுந்தரபாண்டியன் ,,	...	44	186
29	விஜயநகர மன்னன் வீரப்பிரதாப சதாசிவராயர் காலத்திய கல்வெட்டு	...	45	191
30	திருவீங்கோய் மலையிலுள்ள கிருஷ்ண தேவ மகாராயரின் கல்வெட்டு	...	48	200
31	**பொதுக் கட்டுரைகள்**	...	203	TO

முதற்பகுதி

கல்வெட்டு மூலம்

I

சிம்மவர்மனின் பள்ளன்கோவில் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

கோவிசைய **சிம்ஹவர்மற்கு** யாண்டாருவது வெண் குன்றக் கோட்டத்துப் பெருநகரநாட்டு நாட்டார் காண்க தந்நாட்டு அமண் சேர்க்கை பருத்திக் குன்றில் **வஜ்ரநந்திக்** குரவர்க்குப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்தோந் தாங்களும் படாகை நடந்து கல்லுங் கள்ளியுந் நாட்டி அறையோலை செய்து கொடுத்து விடுதக வென்று நாட்டார்க்குத் திருமுகம்விட நாட்டாருந் திருமுகம் கண்டு தொழுது தலைக்கு வைத்து படாகை நட[ந்]து கல்லுங் கள்ளியு நாட்டி நாட்டார் விடுந்த அறையோலைப்படிக் கெல்லை கீழ் பாலெல்லை ஏந்தலேரியின் கீழைக் கடற்றின் மேற்கு மோமைக் கொல்லை எல்லை இன்னும் தென்பாலெல்லை வேள்வடுகன் கேணியின் வடக்கும் கடற்றினெல்லை இன்னுந் நீலபாடி எல்லை இன்னும் விலாடன் குற்றேத்தத் தெல்லை இன்னும் மேல்பாலெல்லை மாவேத்தத்து வதியின் கிழக்கும் மும்மூலை ஏத்தத் தெல்லை இன்னு மாற்றெல்லை இன்னும் வடபாலெல்லை பெருங்கொல்லையின் தெற்கு இன்னும் பாண்டியன் கயத்தெல்லை இன்னும் முருக்கங் கேணி எல்லை இவ்விசைத்த பெருநான்கெல்லையகத்து மகப்பட்ட நிலம் நீர் நிலமும் புன்செய்யும் களரும் கன்று மேய் பாழும் காடும் பீடிலிகையும் கிடங்குங் கேணியும் மனையும் மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உண்ணில னொழி வின்றி கோவும் பொறியும் மாற்றி குடிநீக்கி இவ்வூர் பெற்ற

வஜ்ரநந்திக்குரவர்க்கே பள்ளிச்சந்தமாக தாமரிலும் பதினறரைப்பட்டி நிலங்கொடுத்தோம் இந்நிலத்திற் கெல்லை கீழ்பாலெல்லை புலிகிழார்பட்டியின் மேற்கும் தென்பாலெல்லை முள்ளெறிபா[க்க]த் தெல்லையின் வடக்கும் மேல்பாலெல்லை போக்குவாய்ச்செறுவின் கிழக்கும் வடபாலெல்லை பல்லாங்குழிக்காவின் தெற்கும் இந்நான் கெல்லை யகத்தும் அக[ப்]பட்ட **பூமியும்** பருத்திக் குன்றில் **வஜ்ரநந்திக்**குரவர்க்கே பள்ளிச்சந்தமாக **பரதத்தி** சென்றது **நரபயனுணத்தி**யால் **ஸி**

II

முதலாம் பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமும் ஒம்மனம்பாக்கமு ... [ஒங்கணத] ... [ட] விச்சாவி நீதப்பல்லவரசன் விலைக்காணங் கெயிக் கொடுத்து [ச் சி] ராவ[ெ]ண செயிது ஆயிரத்தி[ரு]நூற்றுக் குழிப் படியால் விற்றுக் கொண்ட நிலம் த[ளி] எடுப்பதற்கு ஒடு சுடக்கொண்ட நிலம் தலெப்பாடகத்துள் சூளைமேட்டுப் பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுங்கூட அயிந்தே கால் பட்டி நிலமும் விற்று கொண்டு விச்சாவிநீத பல்லவபரமேச்சுரகரம் எடுத்து ஏரி தோண்டி இத்தளி வழிபாடு செயிவார்க்கு இருக்கும் மனையும் மனைப்படப்பும் வகுத்து இதநுள் மிக்க நிலம் ஒழுக்கவிக்கு வி[ளை] நிலமா[க]வும் இன் நிலத்துக்கு [கீழ்பா]லெல்லை முதுகாட்டு வழியின் மேற்கும் தென்பா[ெ]லல்லை ஊ]ர்புகு [வழியின் வடக்கு]ம் மெல்பாலெல்லை ஊர்புகுவழி நின்றும் வடக்கு

நொக்கி நாட்டுக்காலு[க்]கே போன வ[ழி]யின் கிழக்கும் வடபாலெல்லை நாட்டுக்காலுந் தெற்கும் இன்நான்கெல்லெ அகத்து[ம்] தளி[யு]ம் ஏரியும் வழிபாடு செயிவார்[க்]கு மனையும் மனைப் படப்புன் நீக்கி மிக்க நிலமும் சூளைமேட்டுப் பட்டியும் ஒழுக்கவிக்கு விளை நிலமாக கொடுத்[த]து இத்தளிக்கு வேண்டுந் தேவகரும நவகருமஞ் செயிவதற்கும் இருபதின்மர் சதுர்ப்பேதிகளுக்குப் பிரமதேயங் கொடுப்பதற்கும் மணயிற் கோட்டத்துப் பன்மா நாட்டுப் பரமேச்சுர மங்கலத்துள் அகப்பட்டவளெயில் சுற்று நிலம் அத்தனையும் இருப[த்]தையிந்து பங்காயி இதனுள் மூன்று பங்கும் கூரத்துத்தளிக்கு [தே]வ[கரும] நவகருமஞ் [செய்]வதாகவும் கூரத்து மண்டக[த்து]க்கு தண்ணீர்[க்]குந் தீக்கும் ஒரு பங்காகவும் இம்மண்டகத்தே பாரதம் வாசிப்பதற்கு ஒரு பங்காகவும் நின்ற இருபது பங்கும் இருபதின்மர் சதுர்ப்பேதிகளுக்கு பிரமதேயமாக கொடுதுது இவ்வூர் மனையும் மனைப் படப்பும் ஊராள்சியும் செக்கும் தறி[யும்] கூலமும் தரமும் கத்திக்காணமும் மற்றும் பொதுவினால்லுள்ளதெல்லாம் இ[ப்]பங்கு இருபத்தைன் தின் வழியாலே பங்கிட்டுண்ப[ர்]ராகவும் இவ்வூர் பரமச்சுர தடாகத்துக்கு பாலாற்று நின்றும் தோண்டின பெரும்பிடுகு காலி[ந் பு]மூதிபாடும் நீ[ர்]ரீன்த வழியா[லே [தலை]வாயும் தலெப்பேழையும் ஊ[ற்]று[க்] காலும் தோண்[டின நில] மெல்லாம் [பரமேசு]வரமங்கலத்து நி[ல]மாக இக்காலுள் குற்றே[த்த] மையும் நாட[ா]ழ்ச்சியு[ள்] நாட்டுப்பண்ணிக்கெயு[ம்] ... தானங் கொடுத்த மூன்று பங்குநுளும் [ஒ]ன்றரைப் பங்[கு] ...நார் [அ]னந்தசிவ ஆசாரியர் மக்கள் மக்கள் ம[ரு] மக்கள் ... ப்புற[ம]க் கொண்டு வழிபாடு செயி[து பலி] போ[சன] ... ம் கொண்டு பு[ல்ல]ச[ரு]மர் மக்க[ள் மக்கள்] வகருமமும் இவ்விருவர் மக்கள் மக்கள் ... **தேவதமாகா** நின்ற **பப்பபடார** கருங் கா ... க்காத்து **கொடுக்க.**

III

பாண்டியன் பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேடுகள்

ஸ்வஸ்திஸ்ரீ ஓங்குதிரை வியன்பரப்பில் **உததி** ஆலய மாகத் தேங்கமழ் மலர்நெடுங்கட்டிசை மகளிர் மெய்காப்ப விண்ணென் பெயரெய்திய மேகஜாலி விதானத்தின் றண் ணிழற்கீழ் **ஸகஸ்ரபணமணி** கிரணம் விளக்கிமைப்ப **புஜங்கமபுரஸ்ஸரபோகி** என்னும் பொங்கணை மீய் மிசைப் பயந்தரு தும்புரு நாரதர் பனுவரைப்பிசை செவி உறப் பூதலமகளொடு பூமகள் **பாதஸ்பர்சனை** செய்யக் கண்படுத்த கார்வண்ணன் றின்படை மால் **ஸ்ரீபூபதி**, ஆதி **புருஷன்** அமரநாயகன் அழகமை **நாபிமண்டலத்துச்**, சோதி மரகத துளைத் தாட் சுடர் பொற்றுமரை மலர்மிசை, விளைவுறு **களமகணிஸ**மெனு மிளிர்ந்திலங்கு சடைமுடி ஓடள வியன்ற **கமண்டலு** வோடக்ஷமாலைஒடு தோன்றின, **சதுர்புஜன் சதுர்வக்த்ரன் சதுர்வேதி சதுர்த்வயா க்ஷன்** மதுக்கமழ் மலர்க் கமலயோனி மனந்தந்த மாமுனி **அத்ரி**, அருமரபிற் பலகாலந் தவஞ்செய்வுழி அவன் கண்ணி, லிருள்பருகும் பெருஞ்சோதி **இந்துகிரணன்** வெளிப்பட்ட னன், மற்றவற்கு மகனாகிய மணிநீள்முடிப் புதனுக்கு, கற்றைச் செங் கதிர்கடவுள் வழிவந்த கழல் வேந்தன், ஏந் தெழிற்றோள் இளனொரு நாளீசனது சாபமெய்தி, பூந்தளவ மணிமுறுவற் பொன்னாகிய பொன்வயிற்றுள், போர் வேந்தர் தலைபணிப்ப வந்து தோன்றிய **புரூ**ரவர்ப்பின், பார்வேந்த ரேனைப்பலரும் பார்காவல் பூண்டு[ய்]த்தபின், திசையானை யின் **கும்ப** கூடத்துலவிய செழுமகரக் குலம், விசைஒடு விண் மீ[ன்]னொடு போர்மிக் கெழுந்த கடற்றிரைகள் சென்று தன் சேவடிப் பணிய அன்று நின்ற ஒருவன்பின் விஞ்சத்தின் **விஜம்பணையும்** பெறல் **நகுஷன்மதவிலாசமும்** வஞ்சத்

தொழில் வாதாவி சீராவிய **மஹோததி**களின் சுருங்காத பெருந்தன்மையும் **சுகேதுசுதை சுந்ரதையு** மொருங்கு முன்னாள் மடிவித்த சிறுமேனி உயர்தவத்தோன், மடலவிழ் பூமலையத்து மாமுனி புரோசிதனாகை, கடல் கடைந்தமிர்து கொண்டுங் கயலினை வடவரைப் பொறித்தும் **ஹரிஹயனா** தாரம்பூண்டு மவன் முடிஒடு வளை உடைத்தும், விரிகடலை வேலின் மீட்டும் **தேவாசுரஞ்** செரு வென்றும், அகத்திய னொடு தமிழா[ய்]ந்தும் மிகத்திறனுடைய வேந்தழித்து **தசவதனன்** சார்பாகச் சந்து செய்துந் **தார்த்தரஷ்ட்ரர்,** படைமுழுதுங் களத்தவிய **பாரதத்துப்** பகடோட்டியும், மடைமிகுவேல் வானர**த்வஜன் வசுசாப** மகல்வித்தும் **ஹரிச்சந்ரன்** னகரழித்தவன், **பரிச்சந்தம்** பலகவர்ந்தும் நாற்கடலொரு பகலாடி நாற்கோடி பொன்னியதி நல்கி நூற் கடலைக் கரைகண்டு நோன் பகடாயிரம் வழங்கியும் உரம் போந்த தின்டோளரைசுக சுரம் போகித் துறக்க மெய்தியும் பொன்னிமையப் பொருப்பதனில் கண்ணிமையிற் கயலெழுதியும், பாயல் மீமிசை நிமிர்ந்து பல்லுண்டி விருப்புற்றுங், காயல் பாய் கடல்போலக் குளம் பலவின் கரையுயரியும், மன்னெதிரா வகை வென்று தென் மதுராபுரஞ் செய்தும், அங்கதனி[ல்]லருந் தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும், ஆலங்கானத் தமர் வென்று ஞாலங்காவல் நன்கெய்தியும், கடிநாறு கவினலங்கற் களப்பாழர் குலங்களைந்தும், முடி சூடிய முரண் மன்னர் ஏனைப் பலரு முன்னிகந்தபின், இடையாறையும் எழில் வெண்பைக்குடியிலும் வெல்கொடி எடுத்த, குடை வேந்தன் திருக்குலத்துக் கோமன்னர் பலர் கழிந்தபின், காடவனைக் கருவூரில் கால் கலங்கக்களிறுகைத்த, கூடலர்கோன் **ஸ்ரீபாரந்தகன்** குரைகழற் கோச் சடையற்குச், சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் **ஸ்ரீவல்லபன்** வேய் போலுந் தோளியர்கேள் **வித்யாதர ஹிரண்யகர்பன்** குண்ணூரி லமர் வென்றுங் குரைகடலீழங் கொண்டும், விண்ணுள

வில்லவற்கு விழிஞத்து விடை குடுத்தும், காடவனைக் கடலா னூர்ப் பீடழியப் பின்னின்றுங் குடகுட்டுவர் குண சோழர் தென்கூபகர் வடபுலவர் அடலழிந்து களஞ்சேர அமர்வல் லான் மகன் பட்த் தன், களிறேன்று வண்குடந்தைக் கதி காட்டியம்புரசீலன், ஒளிறிலைவேல் **உபாயபகுலன்** உம் பர்வான் உலகணைந்தபின் மற்றதற்கு மகனாகிய கொற்றவ னெங் **கோவரகுணன்,** பிள்ளை பிறைச் சடைக்கணிந்த பினாகபாணி எம்பெருமானை, உள்ளத்திலினிதிருவி உலகங் காக்கின்ற நாளில், அரவரைசன் பல்லூழி ஆயிரமா யிருந் தலையால், பெரிதரிதின் பொறுக்கின்ற பெரும்பொறை மண்மகளைத்தன், தொடித்தோளில் லெளிது தாங்கிய தொண்டியர் கோன் துளக்கில்லி, வடிப்படை **மானாபரணன்** திருமருகன் மயிலையர்கோன், பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தரு சிரி கண்டராசன், மத்தமாமலை வலவன் மணிமக ளக்கள நிம்மடி திருவயிறு கருவுயிர்த்த **ஸ்ரீ பாரந்தக மகாராஜன்** விரைபரித் தேர் வீரநாரணன் முன்பிறந்த வேல் வேந்தனைச் செந்தாமரை மலர்ப் பழனச் செந்நிலந்தைச் செருவென்றும் கொந்தார்பூம் பொழிற் குன்றையுங் குடகொங்கிலும் பொக்கரணியுந் தென்மாயலுஞ் செழு வெண்கையும் பராந்தகத்துஞ் சிலைச்செதிர்ந்த மன்மாயா மிகுத்தவர் **வஸ்துவாகனங்** கொண்டும், ஆறு பல தலை கண்டும் அமராலையம் பல செய்துஞ், செறுபடுவியன் கழனித் தென்விழிஞ நகர்கொண்டுங், கொங்கினின்று தேனூரளவுங் குடகொங்கருடல் மடிய, வெங்கதிர்வேல் வலங்கொண்டும் வீரதுங்கனைக் குசைகொண்டும், எண்ணி றந்த பிரமதேயமும், எண்ணிறந்த தேவதானமும், எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத் தியற்றுவித்தும், நின்றபெரும் புகழாலுந் நிதி வழங்கு கொடையாலும், வென்றிப் போர்த் திருவாலும் வெல்வேந்தரில் மேம்பட்ட, கதிரார்கடுஞ் சுடரிலை வேல் கலிப்பகை கண்டரொள் கண்டன் **மதுராபுரபரமேஸ்வரன் மானிநிமகரகேதனன்**

தன் செங்கோல் யாண்டு நாற்பதின்மேல்மூன்றேமூர் யாண்டில், பொன் சிறுகாமணிமாடப் புரந்தரனது நகர் போன்ற, களக்குடி நாடதனிற் படுங் களக்குடி வீற்றிருந் தருள, ஆசிநா டதனிற்படும் பிரமதேயம் கன்னிடக்கைத் தேசமலி திருமங்கலமிது பண்பெருநல்லூர்ப் படுவதனைப் பாங்கமைந்த குடிகளது காராண்மை, மோடெழுந்த முதுகொம்பரீக் கோடெழுந்து கிடந்ததனைக், கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழுரைக் களைகட்ட, மற்றிரண்டோண் மாக்கடுங்கோன் மாண[ம்] பேர்த்தருளிய கோன், ஒன்று மொழிந்திரண்டோம்பி ஒருமுத்தீயுள்பட்டு, நன்று நான்மறை பேணிஆய்வேளிவி நலம் படுத்து அறுதொழிற்கண் மேம்பட்ட மறைஓத பதிருவர்க்குக் காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச் செப்பேடு செய்து குடுத் தருளினன் றேர்வேந்த நின் குல முத[ல்]வன் மைப்படுகண் மடமகளிர் மதவேள் மனுசமானன், வழுவாத செங்கோ னடவி மண்மகட்கொரு கோவாகிக், கழுதூரில் **சித்தி** செய்த கடிக்கூட னகர்காவலன் சோமாசி குறுச்சியீது தொல்லை மேற்படி கிடந்ததனை **சோமபான மஹேசுத்த ராகிய காடகஸ் ஸோமயாஜியார்க்கு ஏகபோக** மதுவாக எழிற் செப்பேட்டோடு குடுத்தனன் ஆகிய இவ்வூரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில் இழந்துபோயின வென்றும் ஏதமில் சோமாசி குறுச்சிச் செழுந்தகைய நிலத்துப்படும் நிலத்தைக் கடற்றிருக்கைய் கிழவன் மதிதரு பெருநான்கெல்லை இட்டுக் கொண்டு மற்றதனை **மதுரதர**நல்லூரென்று பேரிட்டுக் குடிநிலஞைக் கொண்ட நில மதுவும் அவன்குடி நிலஞைகைய் தவிர்ந்து கொண்டு சோமாசிகுறிச்சி மேலை புரவேறப் பெறுவதென்றும் சொல்லியவூர்ரண்டுந் தம்மி வெல்லை கலந்து கிடக்கு மாதலில் ஒன்ருகவுடன் கூட்டிப் புரவெழுதிப் பிடி சூழ்ந்து நன்ருகிய **சாசனஞ்** செய்து நன்கருளவேண்டு மென்றும் வாசநாள் மலர்கமழ் பொழில் லாசிநாட்டுள **க்ராமாகிய** கருவமைந்த கனக

மாளிகைத் திருமங்கலநகர்த் தோன்றல் சோமாசி குறிச்சி என்னும் காமர்வண் பதிகாவலன் வடிவமை **வான தோத்ரத்து பௌதாயன** கல்பத்துக் குடிவிளங்க வெளிப் பட்டு **குண** கணங்கட்கிடமாகி மறைநான்கின் றுறை போகிய மாயானம்பி பட்டற்குச் சிறுவனுகிய பெருந் தகைஇன் திசைமுகன் வெளிப்பட்டனை ஒன் **தர்மவத்சலன் அதர்மகோபி** மாயாநாராயணபட்டர் **மகாபத்நி** வயிறுயிர்த்த சேயான திருத்தகைஇன் **நாராயணங் கேசவன்** கல்விக்கடல் கரைகண்டு **க்ஷத்ரியானு** மத முணர்ந்து சொல்வித்தகந் தனதாக்கி **சுத்த சீலாசாரனுகி** மீனவன் வீரநாராணற்கு **விஸ்வாஸகர்மங்கட்கான** தன்மையனுதலில் லருளறிந்து விண்ணப்பயஞ் செய மதுர (தர) தரநல்லூரெனும் வளம்பதி சோமாசி குறுச்சி அதன் மேலே புரவேற்றி ஆங்கதுந் திருமங்கலமும் உடன்கூடப் பிடிசூழ்வித் துலகறியக் குடுத்தருளினன் வடங்கூடு முறைமகளிர் மன்மதவேள் மனுசரிதன் வெ மற்றிதனுக் காணத்தி வண்டமிழ்க்கோனதிகாரி பெற்றடம்பூண் மணி மார்பன் பொழிற் புல்லூரெழிற் **பூசுரன்** செய்யுந்து புனற் செறுவின் செங்கழ நீர் மல[ர்]படுகர் வைய்குந்த வளநாடன் **வாத்ஸகோத்ரசூடாமணி** ஹரிசரண கமல சேகரன் ஆயிரத்தஞ்ஞூற்றுவன் திருமகிழிளையானக்கன் திசைநிறை பெரும்புகழாளன் புவனதலம் புகழ நிதி அவனி**சுர** குலதிலகன் தாதலர் பூம்பொழி றழுவிச் சாலிவிளை வயவளத்தால் மேதகுபுகழ் வேண்புனாட்டு பெருந்ததூவெள்ளி எனப் பெயரிய திருந்துபதிக் குடித் தலைவன் தென்னவன் திருவருள்சூடிய பெருந்தூவெள்ளி கிழவனுகிய பெருந்தகை சேந்தங்கிழவன் நலமணிசீர் நடுவுநிலை நன்கு நாயகனைகவும் அலர் கமழும் பொனலளற்று நாட்டுக் கக்கிரமாகிய முகிரேய் பொழில் முசுக்குறுச்சி முற்குடிப்பினேர் கார்முளைய் அகனிலத்தோர் புகழளற்று நாட்டுக்கோன் னருந்தமிழின் பாத்தொகு பொருள்

பயனுணர்வோன் கொடைபயில் கற்பகசீலன் சாத்தம் படாரனெனப்பியரிய தக்கோன் மிக்கோங்கு கார் வயல்சூழ் களாத்திருகைப் பேரரண்சூழ் பெரும் காக்கூர்த்தலை ஆகிய குலக்குருசில் தருதேய மாணிக்கம் கலைபயில் கிழவங்கோனும் கணக்குநூல்பயில் கணக்கராக வும் மாசில்லான் குடித்தோன்றிய ஆசிநாட்டு நாட்டாரும் மச்சுறுவளமணவிவேந்தநேச்சுரநாட்டு நாட்டாரும் உட னாகி நின்றெல்லை காட்டப் பிடி சூழ்ந்த பெருநான்கெல்லை உட கீழெல்லை புனல் புவனிபுத்தேள் மாருதம் கனல் இருசுடர் யஜமானன் ஆகிய திறலஷ்டமூர்த்தி அமரர்க்கு மறிவரிஓன் வேகவெள் விடைஊர்தி விஷமலோ சனன் மகிழ்ந்துறையும் வாழியவான் திருவிருப் பூர் மூழிநின்று தென்கிழக்கு நோக்கிப் போயின வெள்ளாற்றுக்கும் ஆயின பெருநல்லூர்ச்சிறைக்கும் வன்கள்ளி முரம்புக்கும் வண்ணத்தார் வளாகத்தின் நன்குயர் பரம்பீட்டுக்கும் நலமிகு கள்ளிக்குறிச்சி மேலைக்கள்ளி முரம்புக்கும் மேதகு நடையாட்டிகுளத்தில் சால நீர் கோளுக்கும் இக்குளத்தின் தென்கொம்பின் மறுவாக்கும் பாங்கமைபடு பாறைக்கும் பயந்தரு குடிநடைஓரிஓங்கிய வன்குளத்தகம் பால்லொழுகிய வன்பெருப்புக்கும் இப் பெருப்பை ஊடறுத்துச் செப்படு செழுங் கிழக்கு நோக்கி வாரிக் கொள்ளிக்கேய் போயின வழியதற்கும் வயல் மலிந்த வாரிக்கொள்ளிக்குளத்தி னீர்கோளுக்கும் அடிகுழிக்கும் மேக்கும் தென்னெல்லை திருமகு நிலப்பாறைக்கும் செஞ் சாலி விளைகழனி ஏரியதனை வடகடைக் கொம்பிற்கும் ஒழுகுகள்ளி முரம்புக்கும் நீருடை அளவைச் சுனைக்கும் ஊருடையான் குழித் தென்கடைக் கொம்புக்கும் நெடுமணிற் கற்றூழ்வுக்கும் நீர்மாற்றுத் திடலுக்கும் கடிகமழ் பூந்தார்க் கணத்தார் குழிக்கும் வடக்கு மேலெல்லை கூற்றன் குழிமீய் குழியேய் போயின படுகாலுக்கும் பொற்றருமாருத்தமாணி [க்]குளத்துக் கரை பெருப்புக்கும் நாடறி நங்கையார் குழி

பின் மீய்குழியேய் காடனேரிக்கேய் போயின வழிக்கு மேதமில்லெறிச்சில் வழிக்கும் எழிலமை நேச்சுற நாட்டோ லைக் குளத் தெல்லைக்கும் கிழக்குமன் வடவெல்லை வளமிக்க மருத வேலி இள நேச்சுறத் தெல்லைக்கும் வெள்ளாற்றுக்கும் தெற்கும் இவ்விசைத்த பெருநான் கெல்லை உண்ணில மொன்ஞெழியாமல் காராண்மை மீயாள்சி உள்ளடங்கக் கண்டமைத்துச் சீர்சான்ற திசையனைத்தின் னெல்லைவாய்க் கன்ஞெட்டித் தருமங்களிரொன்று பயில் திருமங்கலத்துச் சவையார்க்கும் தொல்லை வண் சோமாசிக் குறிச்சி மல்லன் மாமறையோர்க்கும் **ப்ரம்மதேயஸ்திதி** வழாவகைய் **ப்ரதி**வியின்கண் ணிலை பெறுத்து **தர்ம்மகர்ம்மபராயண ஞகியதராபதி** கொடுத்தருளியபின் ஈண்டிய பெரும் புகழேடுறு **சாண்டில்ய கோத்திரத்து** ஏத்தார் புகழ் ஏக **சந்தி காத்யாயன சூத்திரத்து** வரிவண்டு மதுநுகர் பொழிற் சிரி**வல்லப**மஙகலத்து செப்பரிய செழுஞ் செல் **வத்துப்** பம்பிரால் மேதக்கலை பயில் **கணஸ்வாமிபட்டற்** குற்ற பெருமர்மதலை உலவு சீர்த்தி **யோகேஸ்வரபட்டற்கு விசிஷ்டஞகிய** திருவடிச் சோமாசி யென்னுஞ் சீர்மறை யோன் மகள் பயந்த திருமருசீர்ச் சிரி **மாதவன் ஸ்ரீமாதவ சரண சேகரன் வேதவேதாந்தங்களும் விவிதஸாஸ்த்ரமும்** தன்ஞெடு பிறரோதிக் கேட்டுணர் வெய்த உரைக்கு **மாசார்யஞகி** பெருந்தகைய் பிரமதேய மிதற்கு **பரசஸ்தி** செய்தோற்கு திருந்திய நன் பெருவளாலும் செழும் புனற் பருத்தி வயக்கலும் இவ்வயல்களில் கிணறிரண்டும் அக் கிணற்ருல் விளைநிலனும் மற்றவ்வூர் மாசவைஓர் பெற்ற பரிசேய் கொடுத்தபின் சீரிய செழும் பணி இதற்குச் செப்பேடு வாசகத்தை ஆரியம் விராய்த் தமிழ் தொடுத்து மதிஓற்கும் அது எழுதிய கற்பமைந்த கரதலத்துச் சிற்ப மாத்தாண்டற்[க்]கும் மண்ணெங்குந் நிறைந்த வான் புகழ் கண்ணங்கீரன் வ்யக்கல் திருமிகு நற்சிறுக் குளவளால் மருவிய சோமாசி வயக்கல் லென்னும் வயல்களிற் கிணறு

கள் ளொரு மூன்றும் எக்காலமும் மன்னுக் கிணற்ருல் விளை வயலனைத்தும் இறையிலியாகவும், சொல்லிய இக்கிணறு மூன்றின்னிடைக் கிடந்த தொன்னில முழுவதும் இல்லவளா லதுவாகவும் எழின்மிக்க தோட்டமாகவும் வல்லெருமை வெருவு மீன்கள் விராலுகள் புனற்பதி இதனிற் கொல்லூரி மையிற் செம்பாகமும் **மகாசபை** குறிப்பேடு கொடுத்துப் பகல் செய்யும் பருதிஞாயிறும் இரவுச் செய்யும் பனிமதி உம் அகல்ஞாலமும் உளவளவும் செப்பேடு செய்து கொடுத்தருளினன் மணிநீழ்முடிமன் பணிகழல் **வசுதாதிப வாசுதேவன்** அணிநீள் வுயத்த**ஹிதாக்நி** அசலாசலன் **அநர்வர்ஜ்யன்** கொந்தலர்தார் கோச்சடையன் கூடர் கோன் குருசரிதன் செந்தமிழ்க்கோன் **ஸ்ரீ நிகேதனன் ஸ்ரீ பராந்தக மகாராசன்** உ **ப்ரசஸ்திசேஷக்ருத் பாண்டியத்ரமிளாபரண கவி: கர்மாரச்ரேணி காமுக்யா சிவபாதாம் புஜாச்ரித:** உ தேர் மிகு மாக்கடற்ருனைத் தென்னவர்கோன் றிருவருளாற் சீர்மிகு செப்பேட்டுக் குச் செந்தமிழ்ப் பாத் தொடை செய்தோன் **அற்புதமெனும்** பாழிக்கள் அவிர்சடைமுடி அரன் வேண்ட நற்பரசு **நிமிர்த்தவன** ளிர்சடை மேலலங்கல் பெற்ற மாமுனி மருவழி வந்தோன் பாமரு **பண்டித தாசன்** பொன்வரன்றி மணிவரன்றி அகில்வரன்றிக் கரைபொரு புனற் றென் வைய்கை வளநாடன் செழுங்குண்டூர் நகர்த் தோன்றல் பாண்டித் தமிழாபரண னென்னும் பலசிறப்பும் பெயரெய் திய பாண்டிமாராயப் பெருங்கொல்லனைசிய சிரீவல்லவன் உ தென்னவர்தந் திரலானைச் சிலைஓடு புலிகயலிணைமன் பொன்னிமையச் சிமையத்து விறற்கருவி இறற் போக்குந் தொழில் செய்து வந்தவர்பின்னோன் செயல்பல பயின்றோர் முன்னோன் திருமலி **சாசனம்** மிதற்குச் செழுந்தமிழ் பாடி னோன் தாதை நிருபசேகரப் பெருங் கொல்லன் நிறை புகழ் நக்கெனழுத் திவை உ

IV

வீரபாண்டியனின் சிவகாசிச் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

உடைடை சந்திரனது வழித்தோன்றி இத்தராமண்டல முழுதாண்டு பண்டிந்திரன் முடி வளையுடை(ய்)த்து மிமையத்துக் கயலெழுதியும் ஆனையாயிர மையமிட்டு மகத்தியனொடு தமிழ் தெரிஞ்சும் வானவர்க்குத் தூது சென்று மால்கடலின் வரவு மாற்றியு மீண்டிய வக்கடல் கடைந்து மின்னன பலதிறல் செய்த **பாண்ட்யபரமேஸ்வரரான்** பரம்பரையிந் வந்து தோன்றினன் மன்னவர்கோன் இராச மல்லன் மணிமுடி மானுபரணன் றென்னவர்கோன் மற்றவற் குச் சேரலன்றன் மடப்பாவை சீர்திகழு மணிபயிலிச் செழு நிலந் தொழ வெளிப்பட்ட **வீரகேரளன் வீரபாண்டியன் விநையகஞ்சுகன்விசாலசீலன்** றன் னுடையகுலம்விளங்கு தண்டேய தமிழ்க்கூடலில் மன்னிய மணிமுடி கவித்து **மகாபிஷேக** மகிழ்ந்த நாளில் மேதகு **சாசனஸ்லோகம்** விதி கிடந்தவா செய்யவல்ல **பூசுர**மத்திவன்னது தன் பூம்பொருநம் புடைவர்க்குஞ் சீர்திகள்தரு முள்ளிநாட்டுத் தென்வீரதரமங்கலத் தேர்திகழும் பெருந்தன்மை **ராதிதர கோத்ரத்தி** லளப்பரிய பேரொழுக்கத் **தாச்வலாயக சூத்ர**த்து விளக்குமுறவந்து தோன்றி **விப்ரர்க்**கோர் விளக்கா யின ஒருதன்மை இருபிறப்பில் முச்செந்தீ நால்வேதத் தரு மரபி லைய்வேள்வி யாறங்கத் தந்தணாளன் கோவிந்த **ஸ்வாமிபட்டச்** சோமாசி தன் குலவரவில் **வாசுதேவ** பிராம்பரப[ட்]டனென்ற மறை வாழ்நனை மதித்தருளி நீய் செய்கென மற்றவனு மனமகிழ்ந்துவிதித்தமைத்த**அநுஷ்டுப்** பின் விழுப்ப நோக்கி மிமகுந்து தனக்கிரண்டா மாண்டி னதிரா மாண்டி லண்ட நாட்டு மின்னுகொடி நெடுமாட வீதி வீரபாண்டியபுரமான செல்லூரிலிருந்தருளி நலந்திகழ் மேல் வேம்ப நாட்டு நலபுரத்துக் கொப்பத்தில் கலந்தவாழை

கோடுட்படக் காமருகோல் புறனுஞ்சிலா விருபூவிளைவது நீர்நிலன் மூவேலியுங் குடி இருக்க முருகூர் பொழில் புடை சுற்றிய முதுநிலத்தில் பத்து மாவு மற்றதற்கு **தக்ஷிணை**யாக மன்னு **சாசன**மங்கலமென வேற்றபேருடை ஏக**போக ப்ரம்ஹதேய**மாய்ப் பிடிசூழ்வித்து ஊராண்மையில் வே[று]ன்றுக்கி . நாட்டாண்மையோ டுடன்கூட்டிக் காராண்மையும் மீசாய்சியும் முள்ளடங்க கல்ப்பமைய **சாசன**மு மறையோலை[யு]ந் தனித்தனியேய் சமைப்பித்து **பூசுர**ற்குக் குடுப்பித்தி[ப்] பூதலத்தென் புகழ் நிறு[த்]தென தெழிலரும் போர்க்கூற்றத்தி லிரணசிங்கமங்கலத்து செழு மலர்த் தென்னவன் **ப்ரஹ்மஸ்ரீதுங்கராஜ**னையினவனததன் விண்ணப்பமாகவும் மன்திர ஓலை[நா]யகன் கணையர்பள்ளி மன்னின தென்னவன் உத்தர மந்திரி ஆயின இயக்கஞ் செல்வன் ஆணத்தி ஆகவும் ஏர் திகழு மதிள்க்கூடல் **ராஜசிம்ஹ**னென்னும் பியருடைச் சீர்திகள் தமிழப் பேரரையன் திருந்ததிகாரமாகவும் அணுக்கபிள்ளை தென் பருத்திக்குடிநாட்டுச் செழும்பொழில்சூழ் செந்நிலக்குடித் தன்குலத்தில் மேந்தோன்றிய சடையங்காளிஉம் மாசறுசீர் வெள்ளப்பநாட்டு வடிநெடுவேல் கேசவங் கணவதியோடுடன் கெழுதகு கண்காணி ஆகவும் பூம்பொழில் புறத்தாய நாட்டு நற்றராயக்குடி மேம்படு சீர் அரையன் விரையாச்சிலைஉம் திருக்கானப்பேர்கூற்றத்துச் சிறுசேவூர்க் காடம்படால கனும் சோழநாட்டு மாங்குடிச் சோலை கிழவனும் விக்கிரம காம வளநாட்டு கண்ணனூர் இளவளம்புல்லனும் புரவுவரி ஆகவும் அனுத்தரப்பல்ல[வ]அரைசெனும் பியரியன்ற மாறஞ்சோலை மால்களிற்றின் நாசகமினிதியற்ற முள்ளி நாட்டு குளத்தூர் அரையன் திருச்சிராப்பள்ளி ஆணை ஒழுகவும் மேல் வேம்பநாட்டு நாட்டாரும் **ப்ரம்ஹதேய**க் கிழவரும் நலபுரத்து ஊராரும் உடனின்று நிலம் அளந்து பிடிசூழ்ந்து கல்நாட்டி எல்லைதெரிச்ச பெருநான்கெல்லைக்குக் கீழ் எல்லை மாயன் பதக்கென்னுஞ் செய்யின் வடதலைத்

துலாச் செய்க்கிறைக்குந் தேயாற் பண்ணையினின்றுந் தெற்குநோக்கிச் செழுங்கழனி வாழை கோட்டிதனுக்கேய் பாய்ந்த வாய்க்காலூடேய் போந்து சூழ்புனலணி கண்ணிற்காய் பண்ணை தன்னைத் துன்னவந்து மற்றி தனின்றும் கண்ணிற்காய் வடதலைத்துடவைகளுக்கிறைக்கப் பாய்கின்ற சிறுகாலின் ஊடுபோந்து கண்ணிற்காய் வடகீழ்த் தலைத் துடவைகளின் தென்வரவை நண்ணவந்து கிழக்கு நோக்கி நாட்டுபெருங்காலில்நின்று மேதகு பராங்குசமங்கலத்து மேல் எல்லையின் மேலருகேய் தாதமர்பொழில் வாழைகோட்டுப் பொழியுடேய் தண் பொரு[ந]ம் எய்த வந்து தெக்கு நோக்கிப் பா[ய்]ந்த தனுக் கியன்ற மேக்கும் செய்தமைத்து தென் எல்லை தண்பொருநல் வீற்றிருகழ வடக்கும் குடக்கெல்லை வன்னி யோடு பொழியினின்றும் குலையாமல் வடக்குநோக்கிக்களுச் செய் புகக் கல்லின் வாய்க்காலை ஊடறுத்து வடக்கு நோக்கி அங்குற நட்ட நடுகல்லின் மாடு நின்று கிழக்கு நோக்கி வண்கணத்தா மங்கலமுடையான் வயக்கின நெடுங்கண் டுவலின் மத்திமமேய் கிழக்கு நோக்கி நயக்க வந்து வாழை கோட்டின் நாற்றங்கால் புகப்பாய்[ந்]த புறக்காலை நணுக வந்து கருங்குடிப் பொழியினின்றும் (.........) வேற்சாத்தன் பதக்கென்னுஞ் செய் புகப்பா[ய்]ந்த காலை எய்தவந்தக் காலூடேய் கிழக்கு நோக்கி இனிது போந்து நெய்தலம் பனைநாட்டுப் பெருங்காலில் நின்று நின்பரவைக் கடனடு வேய் சாத்தன்பதக்கெனுஞ்செய்புகத் தணைந்தகாலின் செந்நடுவேய் வடக்கு நோக்கி வந்துமற்றிதினின்று திண்டிறல் விளங்குடையான் இட்ட மண் மதிளொரகு போந் தெழினுட்டுப் பெருங்காலதனைஒட்ட வந்ததன் கிழக்கும் மற்றத னுத்தரந்திசை ஓங்கெல்லை நாட்டுப் பெருங்காலினின்றுங் கிழக்கு நோக்கி நலவரவெகடகிட்டம் படவணைக்கின்ற எழில் விளங்கு பேரணை உட்படகௌகீன் பணையினின்றும் கிழக்கு நோக்கிந வாழை கோட்டுக்கேய்

வந்து மாயான் பதகெ[க்] கென்னு மஞ்செய் வடதுலாச் செய்களுக்கினிதி [..] நம் எழிற்பணையின் றெற்[க்]கும் மற்றிவை எல்லையாகத் தனி [...] [றைக்] கடன் ஈழக்கழஞ்சு ஈரேழுதான்பகுத்து உண்ணிலம் ஒழிவின்றி [...] கேழ் விள[ங்]கச் செய்தனன்னூர் மோயம்பில் **அவநிகாந்தனே** உடை...

V

ஆய்குல மன்னன் கோக்கருநந்தடக்கனின் பார்த்திவசேகரபுரச் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

ஸ்வஸ்திஸ்ரீ கலியுகக்கோட்டுநாள் பதினன்கு நூறுயிரத்து நாற்பத்து ஒன்பதினுயிரத்து எண்பத்து ஏழு சென்ற நாள் **ஸ்வஸ்திஸ்ரீ** கோக்கருநந்தடக்கனுக்கு யாண்டு ஒன்பது நாள் பதினைஞ்சு இந்நாளால் முடால நாட்டுப் பசுங்குளத்துப் படுநிலத்தில் முன்சிறைச் சவையாருடைய உழக்குடிவிளை என்னு நிலம் இவைகளுக்கு அடிக்கடி நிலங்குடுத்து மாறிக்கொண்டு இந்நிலம் **பிடி** சூழ்ந்து ஸ்ரீ கோயில் எடுத்து **விஷ்ணுபட்டாரகரை ப்ரதிஷ்டை** செய்து **பார்த்திவசேகரபுரம்** என்று பேர் இட்டு காந்தளூர் **மர்யாதியால்** தொண்ணுற்று ஐவர் சட்டர்க்கு சாலையுஞ் செய்தான் ஸ்ரீ கோக்கருந்தடக்கன் அகநாழிகைச் சென்னடைக்கு அட்டின பூமி பொழிசூழ் நாட்டு குராத்தூரில் இடைக் குராத்தூர் வயலுங் கரையும் உண்ணிலம் ஒழிவின்றி மேற்பாதி மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தான் செங்கழுநாட்டு ஐம்மாக்கொல்லை மெற் கொல்லை வயலுள் வெஞ்சைக்குளத்தின் கீழ் வெஞ்சைப்பொறை தடி ஒன்றும் சாயறைக் கலம்பாடு தடி மூன்றும் நெடுமட்குளத்தின் கீழ் நரியறை தடி ஒன்றும்

கொற்றனறை தடி ஒன்றும் குளவறை தடி ஒன்றும் நீரறை தடி ஒன்று மாயிலறை தடி ஒன்றும் தலை விலைச்செய் தடி இரண்டும் எருமையறையுந் துடவர் இரண்டேற்றித்தடி மூன்றும் பகைதொங்கன் தடி ஒன்றும் ஏற்றித் தடி பதினைஞ்சு விதை மடைப்பள்ளி நாழியால் ஆயிரத்து இருநூற்று நாழியுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க உற அட்டிக் குடுத்தன வள்ளு*

பணி குத்துக்காற்படாது செய்விப்பது அகநாழிகைப் பணி செய்வார் படாரரை ஆட்டப் பொழுதிற் பன்னிரு குடநீராக முப்பத்தறு குடநீர் குடுப்பது பூ இடுவான் குணந்த பூ இரண்டையு மாலையுங் கட்டிக் குறைவறக் குடுப்பது நொந்தாவிளக்கினுக்காக மெதுகின் மேற்பாற் கீழூரில் நெடுமண்ணென்னுந் தோட்டம் தென்னாட்டுக் கோனையின சடையந்தனிச்செய்கெ சந்ததி சந்ததியேய் கீழ்ப்பாதி அனுபவிப்பதாகக் காராண்மை யாகவு மேற்பாதி நந்தா விளக்கினுக்குமாக அட்டிக்குடுத்தான் விழாப்புறமாக ஏழு நாடிருவிழாச் செய்து பங்குனி வியாகம் ஆருடுவதாகவும் சட்டப்பெருமக்களும் பணி மக்களும் ஏழு நாளும் படி இரட்டி ஆணியம் பெறுவதாகவு மற்றும் விழாவினுக்கு வேண்டுவதுக்குமாக அட்டின பூமி மெதுகின் மேற்பாற் கீழூர் பெருங்குளத்தின் கீழ் ஆதனறை இள்வாதனறை தலைத்துடவை மஞ்சாடியறை பனையறை செத்தறை தடி இரண்டேற்றித் தடி. ஏழு விதை எண்ணூற்று நாற்பதிறுழி இவை தென்னாட்டுக் கோனையின சடையந் தனிச்செய்கை சந்ததி சந்ததியேய் போகத்துக் கும் பொலிக்கும் ஆயவிக்கதியேற்றி உடன்வாரம் நாற் கலனேய் எண்குறுணி நெல்லுக்கொண்டு கீழ்பாதி காராண்

இதற்கும் அடுத்த ஏட்டின் தொடக்க வாசகத்துக்கும் தொடர்பு காணப்படவில்லை. இடையில் ஒரு ஏடு இருந் திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

மையாக உழுது ஆலிலை வாரம் ஊட்டுவதாக மேற்பாதி திருவிழாப்புறமாக அட்டிக் குடுத்தன பணிமக்களுக்கு விருத்திக்காக அட்டின பூமி தெங்க நாட்டு விளப்பில் தலைவிளப்பில் பதினாழிக் காலால் எண்கல வித்துப்பாடும் இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன இந்நாட்டேய் இளவே ணாட்டு நல்லூர் பதினாழிக் காலால் எண்கல வித்துப் பாடும் இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன இந்நாட்டேய் இடைநீர்க் கால் பனையூரும் பியலாகும் பதினாழிக்காலால் எண்கல வித்துப் பாடும் இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தன செங்கழு நாட்டுப் பாறையில் சயவஞ்சரனயின சாத்தஞ் சடையன் கீழ்ப்பாதி சாலாபோக மருசாதியினால் உழுதால் காஞ்சிரங் குளத்தின் கீழ் கீழப்பொறை தடி ஒன்று விதை கலம் செங்கழு நாட்டுக் குன்றத்தூருடைய குமாரசுவாமி பட்டன் முடால நாட்டுக் கீழ்குளத்து வயலுள் தான் பிரமதேயம் பெற்று டைய நிலத்தில் அட்டின பூமி கடலங்குளத்தாலும் இலஞ்சக்குளத்தாலும் நீர் பெறுவன எருவிச்செய் தடி ஏழு விதை பதினாழிக்காலால் இருகலம் ஓமாயனாட்டுச் சிறுமண்ணூர் இளையான்கண்டன் தாங்கள் கீழ்ப்பாதி உழுதூட்டுவதாக அட்டினபூமி சிறுமண்ணூர் பொன் னறைக்கலம்பாட்டு வயலுள் பொன்னறை தடி ஒன்று விதை கலனேய் தூணி ஏற்றிப் பணி மக்களுக்கு விருத் திக்காக அட்டி முதலாயின பூமி முப்பத்தெண்கலனே யிரு குறுணி இதனுள் சாந்தி செய்வானுக்கு விருத்திக்காக அடுத்த பூமி மீனச்சிச் சிறுகுண்டூர்ரா குளத்தின் கீழ் குருந்தறை பரனியறை பலாவனறைக் கலம்பாடு புளியறைக் கலம்பாடு ... யறைக் கலம்பாடு ஊற்றுத்தடி ஆயினியறை ஏற்றி தடி பத்து விதை ... முப்பத் ... ட்டுக்கசிர ... பன்னிரு குறுணியும் சிறு கொல் கீழ்ப் பொறை விதை கலமும் ஏற்றி

ஐங்கலனேய் பங்கிரு குறுணிப்பாடும் குடுத்தன அக நாழிப் பணி நாலுக்குமாக ஈயானஞ்சுவானுக்குங் குமரங் கண்டனுக்கும் உருத்திர .... எண்கல விதைப்பாடும் இதனேடு செல்லுங் கரையும் அட்டிக் குடுத்தது **பஞ்சகவ்யுங்** தெளிப்பானுக்கு தெதி கீழ்குளத்து எருவிச்செய் தடி ஏழு விதை இருகலமும் அடுத்தன பூ இடுவான் ஒருவனுக்கு விருத்தி அருமூனே ஆதனூர் வயலுள் படைப் பறை மருணறைமாத்தூர் வயலுள் பராயறையிற் கிழக்கின் கூறும் ஏற்றி விதை இரு கலமும் அடுத்தன தட்டழி மத்தளி கரடிகை தாளங் காகளம் ஏற்றி எட்டுப் பணிமாயநாட்டாரும் மூடாலநாட்டாரும் படைப்பாநாட்டாரும் வள்ளுவநாட்டாரும் அறமரு சாதி காக்கும் பரிசினற் காப்பது இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார் உடைய கலம் நாற்பத்தைந்து தயித்திரியச் சரணத்தார் உடைய கல் முப்பத்தாறு தலவகார சரணத்தார் உடைய கலம் பதினலு இனி வருங்கல மூன்று சரணத்தார்க்கும் ஒப்பது **ப்ரவேஸகஞ்** செய்யும் பரிசு வையாகரண மீமாயப் புரோஹிதப் புன்பாய் புவிஹ்ரீம் இலன் **த்ரைராஜ்யவ்யவஹா**ரத்துக்கு வேண்டும் ஓத்துடையன் இது **சத்யம்** என்று ஐவர் சட்டரைக் கொண்டு பஞ்சக்கஞ்செய்தான் புகவு பெறுவான் வாரம் ஓதும் பரிசு சூத்திரத்திலுஞ் சூத்திரா ரணத்திலுஞ் துருச் சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு கிரமவாரம் அடுத்தோதுவது சாகையிலுங் கற்பத்திலுங் கணத்திலுங் துருச் சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு வாரம் அடுத்தோதுவது நாலு பாதத்திலுங் துருச் சொல்லி ஒன்பது புகவினில் அகத்தூஹத்தில் இரண்டு வாரம் அடுத்தோதுவது முக்கால் வட்டத்து வைத்து ஒரு சட்டனே ஒரு சட்டன் பிழைக்கப் பேசுவானயில் பெருமக்களுக்கு அஞ்சு காணம் பொன்றண்டம் இட்டுச் சாலை உண்பது குட்டுவானயில் ஒரு காசு தண்டம் இட்டு சாலை உண்பது

குட்டுண்டானும் அஞ்சு காணம் பொன் றண்டம் இட்டு சாலை உண்பது படைக்கலத்தால் புண்செய்தான் அறத் துக்குப் புறத்தனவது சட்டர் படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்குச் செல்லப் பெறார் சட்ட ... ... யிலகப் பட்ட எச்சூது முக்கால்வட்டத்திருந்து பொரப்பெறார் பொருவார் அற்றைக் காலம் இழப்பது சட்டர் வெள் ளாட்டிகளை மடத்தில் வைத்துக்கொள்ளப் பெறார் சாலா போகமுந் தேவதானமும் சத்திமுகம் இன்றி விலக்கப் பெறார் விலக்குவார் மெய் வேற்றுவகை ஐங்கழைந்து பொன் தண்டம் இட்டன்றிச் சாலே உண்ணப்பெறார் சாலா போகத்திலுந் தேவதானத்திலுங் குடியை வலியக் கொண்ட முதல் ஒன்றுக்குப் பத்தாகக் குடுப்பது சவைக்கடமை கடவார் பக்கால் மூன்று சரணத்திலு மூவர் சென்று புக்கது பாடாவது பாடு போகில் ஐம்பத்துநாலு காணம் பொன் தண்டமும் பட்டு கடமையுங் குடுப்பது தேவர் சென்னடையும் பதினழிச்சாலையும் எவ்வழக்கு சொல்லியும் விலக்கப்பெறார் விலக்குவார் நியதி கழஞ்சு பொன் தண்டம் இட்டன்றிச் சாலை உண்ணப்பெறார் பணி மக்கள் சட்டரைப் பிழைக்கப் பேசுவார் ஒரு காசு தண்டப் படுவது இப்பரிசு தெங்க நாட்டு வெண்ணீர் வெள்ளாளன் தெங்க நாடு கிழவனயின சாத்த முருகன் ஆணத்தியாக ஓமாய னட்டுப் பாகோட்டு பாப்பிகைகோட்டு திரையன் ஓமாயனடுகிழவனயின சிங்கக்குன்றப் போழன் எடுத்து ஸ்வஸ்திஸ்ரீ

VI

முதலாம் இராஜராஜனின் பெரிய லெய்டன் செப்பேடுகள்

தமிழ்ப் பகுதி

ஸ்வஸ்திஸ்ரீ உ கோனேரின்மைகொண்டான் **க்ஷத்ரியசிகாமணி**வளநாட்டு பட்டனக்கூற்றத்து

நாட்டார்க்கும் ப்ரம்ஹதேயக்கிழவர்க்கும் தேவதானம் பள்ளிச்சந்தக் கணிமுற்றூட்டு வெட்டப்பேற்றார் களிலார்க்கும் நமக்கு யாண்டு இருபத்தொன்றாவது நாள் தொண்ணூற்றிரண்டினால் தஞ்சாவூர்ப் புறம்படி மாளிகை ராஜாஸ்ரயதில் தெற்க்கில் மண்டபத்து நாம் இருக்கக் கிடாரத்தரையன் சூளாமணிபந்மன் க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுப் பட்டநக்கூற்றத்து நாகபட்டணத்து எடுப்பிக்கின்ற சூளாமணிபந்மவிஹாரத்துப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்கு க்ஷத்ரியசிகாமணிவளநாட்டுப் பட்டநக்கூற்றத்து ஆனைமங்கலம் பள்ளிச்சந்தம் இறங்க லுள்பட அளந்தபடி நீங்கல் நீக்கி நிலந் தொண்ணூற்றேழே யிரண்டு மா முக்காணி யரைக்காணி முந்திரிகைக் கீழ் மூன்று மாமுக்காணி முந்திரிகைக் கீழ் அரையேயிரண்டு மாவினால் இறைகட்டினகாணிக்கடன் நெல்லு எண்ணா யிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து முக்கலனே இரு தூணிக் குறுணி ஒரு நாழியும் கடாரத்தரையன் க்ஷத்ரிய சிகாமணிவளநாட்டுப் பட்டனக்கூற்றத்து நாகப்பட்டணத் தெடுப்பிக்கின்ற சூளாமணிபந்மவிஹாரத்துப் பள்ளிக்கு இறுப்பதாக யாண்டு இருபத்தொன்றாவதுமுதல் பள்ளிச்சந்த சந்த இறையிலியாக வரியிலிட்டுக் குடுக்கவென்று நாம் சொல்ல நம்ஓலைஎழுதும் நித்தவிநோதவளநாட்டு ஆவூர்க் கூற்றத்து விளத்தூர்கிழவன் அமுதன் தீர்த்தகரன் எழுத்தினாலும் நம் ஓலைநாயகன் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச்சதுர்வேதி மங்கலத்து க்ருஷ்ணன் இராமனான மும்முடிசோழ ப்ரம்ஹமாஹாராயனும் நித்தவிநோதவளநாட்டுப் பாம்புணிக்கூற்றத்து அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவயனான மும்முடிசோழபோசனும் அருமொழிதேவ வளநாட்டு நென்மலிநாட்டுப் பருத்திக்குடையான் வேளாளுத்தம சோழநான மதுராந்தக மூவேந்தவேளானும் ஒப்பினாலும் புக்க நந்தீட்டின் படியே வரியிலிட்டுக்கொள்க

வென்று நம் கருமமாராயும் ஆரூரன் அரவணையானன பராக்கிரமசோழமூவேந்தவேளானும் தத்தன்சேந்தனான செம்பியன்மூவேந்தவேளானும் அருங்குன்றமுடையான் மாப்பேரன்பொற்காரியும் நடுவிருக்கும் புள்ளமங்கலத்துப் பரமேஸ்வரபட்டசர்வக்ருதுயாஜியும் கடலங்குடி தாமோதரபட்டனும் நம் கருமமாராயும் க்ஷத்ரிய சிகாமணிவளநாட்டுத் திருநறையூர்நாட்டுக் கற்குடையான் பிசங்கன்பாளூரானமீனவன்மூவேந்த வேளானும் அருமொழி தேவவளநாட்டுப் புறங்கரம்பை நாட்டு வங்கநகருடையான் சங்கரநாராயணனரங்கனும் நடுவிருக்கும்வெண்ணைநல்லூர்த் தம்மடிபட்டனும் பசலைத்தியகம்பக பட்டனும் சொல்ல புரவுவரிக் கிளிநல்லூர் கிழவன் கொற்றன்பொற்காரியும் கழுமலமுடையான் சூற்றியன் தேவடியும் பழுவூருடையான் தேவன்சாத்தனும் கள்ளிகுடையான் அணையன் தளிக் குளவனும் வரிப்பொத்தகம் சாத்தனூருடையரன் குமரன ரங்கனும் பருத்தியூர்க்கிழவன் சிங்கன் வெண்காடனும் இருந்து யாண்டு இருபத்தொன்றுவது நாள் தொண்ணூற் றுறிஞல் பள்ளிச் சந்தம் இறையிலியாக வரி[யி]லிட்டுக் குடுத்த தங்கணுட்டுப் பட்டனக் கூற்றத்து ஆனைமங்கலம் அளந்தபடி நீங்கல் நீக்கி நிலன் தொண்ணூற்றேழே யிரண்டு மாக்காணி யரைக்காணி முந்திரிகைக் கீழ் மூன்று மா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையேயிரண்டு மாவும் பிடி சூழ்ந்து பிடாகை நடப்பி[ப்]பதாகக் கண்காணி நடுவிருக்கும் வெண்ணைநல்லூர்த்தம்மடிபட்டனையும் பட்டன் க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டு ஸ்ரீதுங்கமங்கலமான அபிமானபூஷணச்சதுர்வேதி மங்கலத் துத் தூற்பில் ஸ்ரீதரபட்டனையும் இன்னாட்டு வேளா நாட்டுத் திருநல்லூர் பார்க்குளத்துப் பற்பநாப பட்டனையும் இவ்வூர் பேரேமபுறத்து வெண்ணைய் பட்டனையும் ராஜேந்திரசிம்ஹ வளநாட்டு கார்நாட்டுத் தனியூர் ஸ்ரீவீர

நாராயணச்சதுர்வேதிமங்கலத்து த்வேதைகோமபுரத்து நந்தீஸ்வரபட்டனையும் புரவுவரி கள்ளிக்குடையான் அணையன் தளிக்குளவனையும் பேர்த் தந்தோந் தாங்களும் இவர்களோடு நின்று எல்லை தெரித்துப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செ[ய்]து போத்தகவென்னும் வாசகத்தால் மந்திரவோலை விளத்தூர்கிழவன்அமுதன்தீர்த்தகரன் எழுத்தினலும் மந்திரவோலைநாயகன் க்ருஷ்ணன் இராமனை மும்மடி சோழப்ரம்ஹமஹாராயனும் அரைசூருடையானீராயிரவன் பல்லவயனை மும்மடிசோழபோசனும் பருத்திக் குடையான் வேள்ானுத்தம சோழநாந மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பிநாலும் திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே உரிமை பூண்[ட]மை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்க பாடியு நுளம்பபாடியுந் தடிகைபாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமுந் தி[ண்]டிறல் வென்றித் தண்டாற் கொண்டு தன்னெழில் வளர் ஊழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசு கொள் ஸ்ரீ கோவி ராஜராஜகேஸரிவர்ம்மரான ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு இருபத்தொன்றாவது நாட்டோமுக்குத் திருமுகம் வர நாட்டோமுந் திருமுகங்கண்டு எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேல் வைத்துப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து எல்லை தெரித்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்த நிலத்துக்குக்

கீழ்பாற்கெல்லை க்ஷத்ரிய சிகாமணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துக் கோவூர் மேலெல்லை கோவூர்த் தச்சனிலத்துக்கும் கோவூர்க் காவிதியோடைக்கு மேற்குந் தெற்கின்னும் இவ்வூர்ப் புகையுண்ணி யென்னும் நிலத்துக்கு மேற்கும் தெற்கின்னும் இவ்வெல்லையே கிழக்கு நோக்கிப்

போய் இன்னிலத்துக்குத் தெற்கின்னும் புகையுண்ணி யென்னும் நிலத்துக்கு மேற்கும் தெற்கின்னும் மேற்கின்னும் புகையுண்ணிக்குப் பாயும் வாய்க்காலின் மேலையரைக்காலில் நாற்றுக்காலாக அட்டிக்கிடந்த சிறுவரம்புக்கு வடக்கும் இன்னும் இவ்வரைக் காலிலேய் மேற்கு நாற்றுக்காலாக அட்டிக்கிடந்த சிறுவரம்புக்கு மேற்கும் இன்னும் இந் நாற்றுக் காலுக்கேய் தெற்கு வரம்பாக அட்டிக்கிடந்த வரம்புக்கு வடக்கும் இன்னும் இவ்வரைக் காலின்மேல் வரம்புக்கு மேற்கும் இன்னும் இவ்வரைக்காலின் தெற்கில்ப் புகையுண்ணி யரைக்காலுக்கு மேற்கும் இன்னும் இதன் தெற்கில் கோவூர்க் குசவ நிலன் ஒரு மா வரைக்கு மேற்கும் இதன் தெற்கில் ஒரு மாவரைக்கு மேற்கும் இதன் தெற்கில் ஓடையில் நடுவுக்குத் தெற்கும் இன்னும் இக்கோவூர் எல்லைக்கு மேற்கும் தெற்கின்னும் கோவூர் வெள்ளாளன் அரைசூர் மறியாடி ஒரு மாவுக்கு மேற்கும் இதன் தெற்கில் ஓடை நடுவுக்குத் தெற்கும் இவ்வோடையே தென்கிழக்கு நோக்கிப் போய் மேற்பள்ள வாய்க்கால் இவ்வோடைக்கேய் விழுந்த இடத்துக்கு மேற்கும் இன்னும் மேற்பள்ள வாய்க்காலின் தென்கரைக்குத் தெற்கும் கோவூர் மேல் பள்ளத்து மேல்வரம்புக்கு மேற்கும் இவ்வூர் மேல் பள்ளத்து வெள்ளாளன் உருப்பழிபாக்கரன் அரைக்காலில் வட வரம்புக்கு வடக்கு இவ்வரைக் காலின் மேலை ஓடையின் நடுவுக்கும் வெள்ளாளன் பரமேஸ்வரன் நறையூர் அரைக் காலுக்கு மேற்கும் இவ்வோடையின் நடுவுக்கு மேற்கும் கோவூர் வெள்ளாளனையாறன் சேந்தன் அரைக்காலின் கொத்தத்து இவ்வோடைக்கே மேற்கும் இவ்வரைக் காலுக்குத் தெற்கும் மேல் பள்ள நிலத்தின் கொத்தத்து இவ்வோடைக்கேய் மேற்கும் இவ்வோடை எறிவட்டி வாய்க்காலுக்கேய் விழுந்த இடத்துக்கு மேற்கும் இவ்வெறி வட்டிவாய்க் காலுக்கேய் தெற்கும் இவ்வெறிவட்டி வாய்க் காலுக்கே மேற்கும்

தென்பாற்கெல்லை இவ்வெறிவட்டி வாய்க்காலுக்கு வடக்கும் இவ்வெறி வட்டி வாய்க்காலே மேற்கு நோக்கிச் சென்று இவ்வாய்க்காலை யூடறுத்துத் தென் கரைக்கேயேறி தெற்கின்னும் இவ்வானைமங்கலத்து **ப்ரம்ஹதேயத்துப்** படுகை வேலி நிலத்தின் மேலெல்லையே சென்று தென் வடலாய்க் கிடந்த ஓடைக்கு மேற்கும் இவ்வெல்லையே தெற்கு நோக்கிச் சென்று மேற்கின்னும் இவ்வோடைக்கேய் வடக்கும் இன்னும் இவ்வோடைக்கு வடக்கு நோக்கி யெறிவட்டி வாய்க்காலுக்கே யுற்றதற்கு கிழக்கும் இவ் வெறிவட்டி வாய்க்காலையூடறுத்து வடகரையேயேறி இவ் வாய்க்காலின் வடகரையே மேற்கு நோக்கிச் சென்று இவ்வாய்க்காலுக்கு வடக்கும் இவ்வெல்லையேய் மேற்கு நோக்கிச் சென்று இவ்வாய்க்கால் தான்கிடந்த வாறே மேற்கு நோக்கி இன்னாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்மஹதேயம்** சீவளேய்குடியில் நிலன் நான்மாவில் வடவரம்பேயுற்று இவ்வரம்பே மேற்கு நோக்கிச் சென்று பழவிளப்பான் ஓடையே யுற்று இவ்வெல்லைக்கு வடக்கும்

மேல்பாற்கெல்லை வடக்கு நோக்கி நாட்டுப் போக்குத் தலைவாயர் வெட்டப் பேற்றுக்குக் கிழக்கும் வடக்கின்னும் இன்னாட்டுப் பட்டனக் கூற்[ற]த்து முஞ்சிகுடி நிலத்தின் கீழெல்லையான ஓடையே யுற்று இவ்வோடையின் நடுவேய் வடக்கு நோக்கிச் சென்று இவ்வோடையுள்ப்பட்ட இவ் வோடைக்குக் கிழக்கும் இவ்வோடை தான் கிடந்தவாறேய் வடக்கு நோக்கி இம் முஞ்சிகுடி நிலமேயுற்று இம் முஞ்சி குடிக்குக் கீழெல்லையான ஓடையேயுற்று வடக்கின்னும் இவ் வெல்லைக்குக் கிழக்கும் இவ்வோடை தான் கிடந்தவாறேய் பல முடொக்கு முடொங்கி வடக்கு நோக்கி இம் முஞ்சிகுடி நிலமே யுற்று இம் முஞ்சிகுடிக்குக் கீழெல்லையான ஓடையே வடக்கின்னும் இவ்வெல்லைக்குக் கிழக்கின்னும் இவ் வோடை தான் கிடந்தவாறேய் வடக்கு நோக்கிச் சென்று

இதனை விட்டு இம் முஞ்சிகுடி வெள்ளாளன் இராமன் கோவிந்த[ந்] நாங்மாவின் தென்வரம்பேயுற்று இவ் வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று இம் முஞ்சிகுடி ப்ரம்ஹதேயமான நிலத்தின் தென் வரம்பேயுற்று இதனுக் குத் தெற்கும் இதனுக்கேய் கிழக்கும் இன்னும் இம் முஞ்சிகுடி ப்ரம்ஹதேயம் நிலத்துக்கேய் வடக்கும் இவ் வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று இம் முஞ்சிகுடி வெள்ளான் வகைக் கீழெல்லையான நிலத்துக்குக் கிழக்கும் இவ்வெல்லையே வடக்கு நோக்கிச் சென்று வடமேற்கு நோக்கி முஞ்சிகுடி ஊதாரி மயக்கலென்னும் நிலமேயுற்று இன்னிலத்தின் கீழ் வரம்புக்குக் கிழக்கும் இதன் வட வரம்பேய் மேற்கு நோக்கிச் சென்று வடவரம்புக்கு வடக்கு[ம்] இச்செயின் மேலைப் பறையோடை வடக்கு நோக்கிச் சென்று இவ்வோடைக்குக் கிழக்கும் இவ் வோடையே வடக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத் துக்குப் பாயக் கல்லின ராஜராஜன் வாய்க்காலே யுற்று இவ்வாய்க்காலை யூட[று]த்து வடகரைக்கேயேறி இவ்வானை மங்கலத்து ப்ரம்மதேயத்துக் கால்வாயென்னும் நிலத்தின் கீழ்வரம்புக்குக் கிழக்கும் வடக்கு நோக்கிச் சென்று கிழக்கு நோக்கிச் சென்று இவ்வானைமங்கலத்து ப்ரம்மதே யத்துக் கிளான் கிளான் காற்செயின் தென்வரம்பே யுற்றுத் தென்கிழக்கு நோக்கிச் சென்று இதினின்று வடகிழக்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் சென்ற எல்லைக்குத் தெற்கும் கிழக்கும் இதன் வடவரம்பேய் வடமேற்கு நோக்கிச் சென்று இதனுக்கு வடக்கும் இன்னும் இவ்வானை மங்கலத்து ப்ரம்ஹதேயத்து ஆரிதன்சிறியான்கடம்பன் மூன்று மாவின் கீழ் வரம்புக்குக் கிழக்கும்

வடபாற்கெல்லை இச்செயின் தென்வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இதனுக்குத் தெற்கும் இக்காட்டுப்

பட்டநக் கூற்றத்து ப்ரம்ஹதேயம் பிரம்பில் கொட்டிடலான நிலத்தின் எல்லையேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத்து ப்ரம்ஹதேயத்து வாச்சியன் பரமேஸ்வரன் பூவன் நிலத்தின் மேல்வரம்பே யுற்றதற்குத் தெற்கும் இந்நிலத்துக்கேய் மேற்குந் தெற்கும் கிழக்கும் இந்நாட்டு ப்ரம்ஹதேயம் பிரம்பில் கொட்டிலான நிலத்தின் கீழ் வரம்புக்குக் கிழக்கும் இவ்வரம்பேய் வடக்கு நோக்கிச் சென்று விளப்பென்னும் ஆற்றின் தென்கரைய்ய யுற்றுத் தென்கரைக்குத் தெற்கும் இக்கரையேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வானை மங்கலத்து மகாதேவர் தேவதானமான ஒருமாவரையின் மேல்வரம்பேயுற்று இவ்வரம்புக்கு மேற்கும் இவ்வரம்பேய் தெற்கு நோக்கி இத்தேவர் தேவதானமான முள்ளி வரவையின் மேல் வரம்பேயுற்று இவ்வரம்புக்கு மேற்கும் இவ்வரம்பே தெற்கு நோக்கியுங் கிழக்கு நோக்கியுஞ் சென்று இத்தேவர் குளமேயுற்று இத்தேவர் குளத்துக்குப் பாயும் வாய்க்காலின் மேல் வரம்பே தெற்கு நோக்கிச் சென்று இத்தேவர் தேவதானங் கணவதிகாலான நிலத்தின் மேல் வரம்புக்கு மேற்கும் இக்கணவதி காலான தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வரம்புக்குத் தெற்கு இத்தேவர் தேவதானமான மெழுக்குப்புறம் ஒருமாவின் மேல் வரம்புக்கு மேற்கும் இவ்வொரு மாவின் தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இவ்வரம்புக்குத் தெற்கும் இத்தேவர் தேவதானம் முக்காணியின் தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று பத்தல் வாய்க்காலே யுற்றதற்குத் தெற்கும் இப்பத்தல் வாய்க்காலின் மேல் கரையே வடக்கு நோக்கிச் சென்று விளப்பேயுற்றதற்குக் கிழக்கு இவ்விளப்பை யூடறுத்து வடகரைக்கேயேறி இந்நாட்டுப் பட்டனக் கூற்றத்து ப்ரம்ஹதேய முங்கிற்குடி யெல்லையேயுற்று இவ்வெல்லையே வடக்கு நோக்கியுங் கிழக்கு நோக்கியுஞ் சென்று இதனுக்குக் கிழக்குந் தெற்கும் இன்னும் இம்முங்கிற்குடி

நிலத்துக்கேய் மேற்கும் இவ்வெல்லையே தெற்கு நோக்கி விளப்புக்கேயுற்று விளப்பையூடறுத்துத் தென்கரையே கிழக்கு நோக்கிச்சென்று இந்நாட்டுக் கோவூர் கணவதி மயக்கலான நிலத்தின் மேல்வரம்பேயுற்றதற்குத் தெற்கும் இக்கணவதி மயக்கலான நிலத்தின் மேல் வரம்புக்கு மேற்கும் இக்கணவதி மயக்கலின் தென்வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று இந்நாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதேய** நல்லூர்ச் சேரிக்குப் பாயும் வாய்க்காலை யுற்றதற்குத் தெற்கும் இவ்வாய்க்காலின் தென் கரையேய் கிழக்கு நோக்கிச் செ[ன்]று இந்நாட்டுக் கோவூர் வெள்ளாளன் உருப்பழி பாக்கர நொருமாவின் தென் வரம்பேயுற்று இத்தென் வரம்பேய் கிழக்கு நோக்கிச் சென்று கோவூர் முன்றுடங்கின தச்சன்னிலத்துக்கே யுற்றதற்குத் தெற்கும் ஆக இவ்விசைத்த பெருநான் கெல்லையிலு மகப்பட்ட நீர் நிலனும் புன்செயும் ஊரும் ஊரிருக்கையுங் குளமும் ஸ்ரீகோயில்களும் பறைச்சேரியுங் கம்மாணசேரியுஞ் சுடுகாடும் பெறுவதாகவும் இவ்வூர் மனையும் மனைப்படப்பையுங் கடையுங் கடைத்தெருவும் மன்றுங் கன்றுமேய்பாழுங் குளமுங் கொட்டகாரமுங் கிடங்குங் கேணியும் ஓடையும் உடைப்பும் மீன்பயில் பள்ளமுந் தேன்பயில் பொதும்பும் மேநோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் உள்ளிட்டு நீர்பூசி நெடும்பரம் பெறிந்து உடும்போடியாமை தவழ்ந்த தெவ்வகைப் பட்டதுங் உண்ணிலமொழிவின்றிக் காராண்மை மீயாட்சியு மிகுதிக்குறையு முள்ளடங்க இப்படி பெற்றதற்குப் பெற்ற **வ்யவஸ்தை** இன்னிலத்துக்கு நீர்க்கீந்தவாறு வாய்க்கால் குத்திப் பாய்த்தவும் வாரவும் விடவும் பெறுவதர்கவும் இன்னிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும் இவ்வாய்க்கால்கள் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவுங் குற்றேத்தம் பண்ணவுங் கூடை நீரிறைக்கவும் பெறாத

தாகவுஞ் சென்னீர்ப் பொதுவினை செய்யாததாகவும் அன்னீரடைத்துப் பாச்சப் பெறுவதாகவுஞ் சுட்டோட்டால் மாடமாளிகை யெடுக்கப் பெறுவதாகவுந் துரவு கிணறு இழிச்சப் பெறுவதாகவுங் காவு தெங்கிடப் பெறுவதாகவுந் தமன[க]மு[ம்] மருவு மிருவேலியுஞ் செண்பகமுஞ் செங்கழு நீரும் மாவும் பலாவுங் கமுகும் பனையுங் கொடியும் உள்ளிட்ட பல்லுருவில் பயன்மரம் இடவுந் நடவும் பெறுவதாகவும் பெருஞ்செக்கிடப் பெறுவதாகவும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் புறவூர்களுக்குப் போய் நீர் பாயும் வாய்க்கால்கள் மேனடைநீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும் புறவூர் நிலத்தூடு போந்து இவ்வூர் நிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும் இவ்வூரிட்ட தெங்கும் பனையும் ஈழவரேறப் பெறாததாகவுந் தன் குடிக்கேற்ற வண்ணம் முரைசும் முப்படித் தோரண[மு]ம் நாட்டப் பெறுவதாகவும் இப்படிப் பெற்றதற்கும் பெற்ற பரிஹாரந் நாடாட்சியும் ஊராட்சியும் வட்டி நாழியும் பிதா நாழியுங் கண்ணலக்காணமும் வண்ணாரப்பாறையுங் குசக்காணமுந் நீர்க்கூலியும் ஓலைக்கூலமுந் தறிப் புடைவையுந் தரகுந் தட்டார்ப் பாட்டமும் இடைப் பாட்டமு மாட்டுக்கிறையு[ம்] நல்லாவுந் நல்லெருதுந் நாடுகாவலும் ஊடுபோக்கும் விற்பிடியும் வாலமஞ்சாடியும் உலகும் ஓடக்கூலியும் மன்றுபாடும் மாவிரையுந் தீயெரியும் ஈழம் பூட்சியும் கூத்திகாலும் உள்ளிட்டுக் கோத்தொட்டுண்ணப் பால தெவ்வகைப்பட்டதுங் கோக்கொள்ளாதேய் பள்ளிச் சந்தத்துக்கேய் பெறுவதாகவும் இப்படி பெற்ற வ்யு வஸ்தையும் பரிஹாரமும் பெற்ற இன்னிலங் காராண்மை மீயாட்சியு மிகுதிக் குறைமையு முள்ளடங்கப் பட்டனக் கூற்றத்து நாகபட்டனத்துக் கடாரத்தரையன் எடுப்பிக் கின்ற சூளாமணிபன்மவிஹாரத்துப் பள்ளிக்குப் பள்ளிச் சந்தயிறையிலியாகக் குடுத்த இன்னாட்டு ஆனைமங்கலம்

பள்ளிச்சந்தஇறங்கலுள்பட யாண்டு இருபத்தொன்ருவது முதல் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து நாட்டோம் நாட்டாரோடும் உடனின்று பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்து குடுத்தேன் புரவுவரி கள்ளிக் குடையான் அணையன் தளிக்குளவனே னிவையென்னெழுத் தென்றும் இவ்வாணைமங்கலம் பிடி சூழ்ந்து பிடாகை நடக்கிறபோது ஆணையேறி இறைட்டாரோரும் உடனின் றெல்லை தெரித்துக் காட்டினேன் இவ்வாணை மங்கலத் திருக்கும்வெள்ளாளன் கோன் புத்தனே னிவையென்னெழுத் தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணிவளநாட்டுப் பட்டனக்கூற்றத்து **ப்ரம்ஹ**தே[ய]ங் கடம்பனூர் **சபை**யோம், இவர்கள் சொல்ல இவ்வூர் **மத்யஸ்தன்** முப்பத்திருவன்ய**க்ஞ**நாநகற்பகாதித்தனேனிவை யென்னெ ழுத்தென்றும் இக்கடம்பனூரார் சொல்ல இவ்வூர் **வைகானசன்** நாராயணன்**தா**மோ**த**ரனேனிவை யென்னெ ழுத்தென்றும் இப்படி பிடாகை நடந்து பிடி சூழ்ந்து அறவோலை செய்து குடுத்தோம் க்ஷ**த்ரியசிகா**மணி வளநாட்டுப்பட்டனக்கூற்றத்து **ப்ரஹ்மதே**யம் நாரண மங்கலத்து **ஸபை**யோம் இவ்வூர் **மத்யஸ்தன்** இருநூற்றுவன் உத்தமநான **ப்ரம்ஹ**மங்க**ல்ய**னேனி வையென்னெழுத்து தென்றும் இப்படி பிடி சூழ்ந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனம் கூற்றத்து வேலங்குடி வேலங் குடையான் நாராயணன் ஒற்றியேன் இவை யென்னெழுத் தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதேய** மூங்கிற்குடி **சபை**யோம் இவ்வூர் **மத்யஸ்தன்** குணவனந்தியானஅலங்காரப்

பிரியனே னிவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து நரி மன்றத்து ஊரோம் ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர் **மத்யஸ்தன்** ஐம்பத்திருவன் விடேல்விடுகனேன் இவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வள நாட்டுப் பட்டனக்கூற்றத்து சாத்தமங்கலத்தூரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் வேட்க்கோவன் நேந்திரன் சாத்தநான நாநூற்றுவப் பெருங்கோ வேளானேனிவை யென்னெழுத்தென்றும் இப்படி பி[டி] சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதேய**ம் சந்நமங்கலத்து **சபை**யோம் **சபை**யார் சொல்ல எழுதி[னேன்] இவ்வூர் கரண**த்தா**ன் **மத்யஸ்தன்** துருக்கன் கமுதனேனிவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதேயம்** கொட்டாரக்குடி **ஸபை**யோம் இவவூர்க் கரண**த்**தான் **மத்யஸ்தன்** ஊரான் சந்திர**சேகர** நான **ப்ரம்ஹ**மங்**கல்ய**னேன் இவை யென்னெழுத் தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துக் கோவூர் ஊரோம் ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் **மத்யஸ்தன்** ஐய்யனைய்யனேனிவை யென்யெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து உத்தூர் ஊரோம் ஊர[ா]ர் சொல்ல வெழுதினேன் இவ்வூர் கரணத்தான் **மத்யஸ்தன்** நக்கன் மூள்ளியேனிவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி

சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதேயம்** நன்னிமங்கலத்து **சபையோம் சபையார்** சொல்ல இவ்வூர்க் கரணத்தான் **மத்யஸ்தன்** கண்ணன் அலங்காரப்பிரியனேனிவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதே**யம் பொருவநூர் **சபையோம் சபை**யோர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் மாதேவன் ஊரனேனிவை யென்னெழுத் தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து ஆளாங்குடி ஊரோம் ஊர[ா]ர் சொ[ல்]ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் **காஸ்யபன் சூர்ய**னரங்கனேன் இவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகா**மணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துத் துறையூர் ஊரோம் ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் காரணத்தான் **பாரத்வாஜி திரித்தி** வைகுந்தன் எழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக்கூற்றத்து **ப்ரம்ஹ தேயம்** பிரம்பில் **சபையோம்** இவ்வூர்க் கரணத்த[ா]ன் **மத்யஸ்தன்** குணவன்னந்தியான அலங்காரப்பிரியனேன் இவை யென்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் கடம்பங் குடியூரோம் ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் **மத்யஸ்தன்** குணவனந்தியான அலங்காரப் பிரியனேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து

சேந்தமங்கலத்து ஊரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் **மத்யஸ்தன்** ஊரான் ஐய்யனேனிவை என்னெழுத் தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்ற[த்]துச் சிறுச்சேந்தமங்கலத்து எட்டி வலஞ்சுழியன் சங்கனேன் இவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துக் குற்றாலத்தூரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் தேவன் ஊரனே னிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துத் திருநாவூர் ஊரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர் **மத்யஸ்தன்** சதுர்முகனரங்கத்தேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து **ப்ரம்ஹதேயம்** உவர்க்குடி **சபையோம் சபை யார்** சொல்ல எழுதினேன் இவ்வூர் ஊர்க்கரணத்தான் வேட்கோவன் மாறுகநாரயணனேனிவை என்னெழுத்தென் றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து முஞ்சிகுடி ஊரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட்கோவன் மாநாகன் கண்ணனேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து திருக்கண்ணங்குடி **சபையோம்** சபையார் சொல்ல வெழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் வேட் கோவன் அதிராமன் இருபத்து நால்வனுகிய முன்னூற்று வனேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து

பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரிய சிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து கடம்பவலை வாட்கை ஊரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் **மத்யஸ்தன்** ஊரானுஈரானேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்துப் பாளங்கொற்றங்குடி ஊரோம் ஊரார் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் **மத்யஸ்தன்** ஊரானு[ஈ]ரானேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து வெண்கிடங்கில் ஊரோம் ஊர[ா]ர் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் **மத்யஸ்தன்** ஊரா[ர்] நக்கனேனிவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தோம் இவ்வாணைமங்கலத்து **ப்ரும்ஹதேயத்து** ஆரிதன் சிறியான் கடம்பனேனிவை என்னெழுத்தென்றும் இப்பரிசு பட்டாய் நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டுத்திருநறையூர்நாட்டு **பரமஹ தேயம்** ஸ்ரீதுங்கமங்கலத்துத் தூற்பில் ஸ்ரீதரபட்டனேனிவை யென்னெழுத்தென்றும் இப்படிபட்டா[ய்] நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டு வேளாநாட்டுத் திருநல்லூர்ப் பார்க்குளத்துப் பற்பநாப பட்டனேனிவை என்னெழுத்தென்றும் இப்பரிசு பட்டாய் நின்று நடப்பித்து அறவோலை செய்வித்தேன் **க்ஷத்ரியசிகாமணி** வளநாட்டு வேளாநாட்டுத் திருநல்லூர் பேரேமபுரத்து வெண்ணைய பட்டனேனிவை யென்னெழுத்தென்றும் இப்பரிசு பட்டாய் நின்று பிடி நடப்பித்து அற-வோலை செய்வித்தேன் **ராஜேந்திரசிம்ஹ** வளநாட்டு ஸ்ரீவீர

நாராயணச் சதுர்வேதிமங்கலத்து த்வேதைகோமபுரத்து நந்தீஸ்வரபட்டனேனிவை என்னெழுத்தென்றும் புகுந்த அறவோலைப்படியே வரியிலிட்டுக் கொள்கவென்று நங்கரும மாராயும் மீனவன் மூவேந்தவேளானும் கொற்றமங்கல முடையானும் தேவன்குடையானும் நடுவிருக்குங் கடலங் குடித் தாமோதர பட்டனும் கொட்டையூர்ப் பூவத்த பட்டனும் நங்கரும மாராயும் பராக்ரமசோழ மூவேந்த வேளானும் செம்பியன் மூவேந்த வேளானும் சோழ வேளா ஞும் அரைசூருடையானும் நடுவிருக்கும் புள்ளமங்கலத்து பரமேஸ்வரபட்ட ஸர்வக்ரதுபாஜியுஞ் சொல்லப்புரவுவரி ஆலங்குடையான் கோதண்டன் சேனனும் பூதமங்கல முடையான் இளவடிகள் நள்ளாறனும் ஆலத்தூருடையான் கற்பகஞ்சோலையும் வரிப் பொத்தகம் பருத்தியூர் கிழவன் சிங்கன் வெண்காடனும் முகவெட்டி கீழ்வாய் கணபதியும் முண்டனரங்கனுஞ் சையதன மலனும் தத்தன் சீகிட்டனும் வரிப்பொத்தகக் கணக்கு மாதேவன் பூமியும் வரியிலிடு உறுவூருடையான் தாழி வீர சோழனும் பட்டோலை பெருமானம்பலத்தாடியும் சீகண்டன் தேவனும் மாகாள னறிஞ்சியும் நக்கன் மண்டகவனும் இருந்து இருபத்து மூன்றாவது நாள் நூற்றறுபத்து மூன்றிநால் வரியிலிட்டுக் குடுத்தது "இவை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டு நடார்கிழான் அரையன் அருமொழியான ராஜேந்ரசோழப் பல்லவரையன் எழுத்து" "உய்யக் கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச்சதுர் வேதி மங்கலத்து கிருஷ்ணன் ராமனை ராஜேந்ர சோழ ப்ரஹ்மமாரா[ா]யனுக்கும் ஒக்கும்" "நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்[து] அரைசூருடையான்

ஈராயிரவன் பல்லவயனை உத்தம சோழப் பல்லவரையனுக்கும் ஒக்கும்'' "ராஜேந்ரசிம்ஹ வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் கடலங்குடி த்வேதை கோமபுரத்து தாமோதர பட்டனுக்கும் ஒக்கும் உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு குறும்பல் கிழான் அரையன் சீகண்டனை மீனவன் மூவேந்த வேளானுக்கும் ஒக்கும்"

VII

பாண்டிய நெடுஞ்செழியனின் மீனாட்சிபுரக் கல்வெட்டு

1. கணிய் நந்தஅ ஸிரிய் இகுவ்அன் கே தம்மம் இத்தஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல்அன் வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய், 2. கணிய் நந்த ஸிரிய்குஅன் தமம் இத நெடுஞ்சழியன் ஸலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் செஇய பளிய். 3. கணிஇ நத ஸிரிய் குவ ... வெள்அறைய் நிகமது காவிதிஇய் கழிதிக அந்தைஅ ஸ" தன் பிணஊ கொடுபிதோன் 4. சந்தரிதன் கொடுபிதோன் 5, வெள்அறை நிகமதோர் கொடிஓர்.

VIII

சிற்றண்ணல்வாயில் கல்வெட்டு

எருமிநாடு குமிழ்ஊர் பிறந்த காவுடி ஈதேன்கு சிறுபோவில் இளயர் செய்த அதிட்அனம்

IX

புகளூருக்கு அருகில், ஆர்நாட்டார்மலையில் உள்ள சங்ககாலச் சேரர் கல்வெட்டு

வடபுறமுள்ள கல்வெட்டு: *1. ஞைகன் மகன்எங் கீரன்.* **தென்புறக் குகையிலுள்ள கல்வெட்டு:** 2. (a) *மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் ...* (b) *கோஆ...ல்லிரும்புறை மகன் பெருங்* (c) *கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங்* (d) *கோ ளங்கோ ஆக அறுபித கல். 3* (a) *தா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்* (b) *கோஆதன் செல்லிரும்பொறை மகன்* (c) *பெருங்கடுங்கோன் மகன் ளங்* (d) *கடுங்கோ ளங்கோ ஆகி அறுத்த கல். 4. கொற்றந்தை ளஎய் முன்று*

X

அரச்சலூர் இசைக்கல்வெட்டு

முதல் கல்வெட்டு:

த	தை	தா	தை	த
தை	தா	தே	தா	தை
தா	தே	தை	தே	தா
தை	தா	தே	தா	தை
த	தை	தா	தை	த

இரண்டாம் கல்வெட்டு:

கை	த	தை	த	கை
த	தை	[த]	தை	த
தை	த	தை	த	தை
த	தை	[த]	தை	த
[கை	த	தை	த	கை]

மூன்றும் கல்வெட்டு :

எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்

XI

திருநாதர்குன்று கல்வெட்டு

ஐம்பத்தேழ னசனங் நோற்ற சந்திரநந்தி ஆசிரிகர் நிசீதிகை

XII

முதலாம் மகேந்திரவர்மனின் தண்டம்பட்டு நடுகல்

கோவிசையு மயீந்திரபருமற்கு பதின்எட்டாவது வேணாட்டு ஆந்தைபாடி ஈசை பெரும்பாணரைசரு மருமக்கள் பொற்சேந்தியாரு சேவகரு தொறுக் கொண்ட ஞான்று மீட்டுபட்டான் [வே]ணாட்[டு] நந்தி[யார்] கல் க...

XIII

முதலாம் மகேந்திரவர்மனின் எடுத்தனூர் நடுகல்

I

கோவிசைய மயிந்திரபருமற்கு முப்பத்துநான்காவது வாணகோ அரைசரு மருமக்கள் பொற்றொக்கைஆர் இளமகன் கருந்தேவக்கத்தி தன்னெருமைப்புறத்தே வாடி பட்டான் கல்

II

[கோவிவ]ன் னென்னும் நாய் இருகள்ளனைக் கடித்துக் காத்திருந்தவாறு

XIV

இரண்டாம் நரசிம்மவர்மனின் தா. வேளூர் நடுகல்

கோவிசைய நரசிங்கபருமற்கு இரண்டாவது வாணகோஒஅதிரைசர் சேவகர் மீகொன்றைநாட்டு மேல்வேளூர் ஆளும் பனையமாரியார் இவ்வூர்த் தொறுக்கொண்ட ஞான்று பட்டா[ர்]

XV

கம்பவர்மனின் சின்னையன்பேட்டை நடுகல்

ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய கம்பபருமற்கு யாண்டு மூன்றாவது வயிரமேகவாணகோவரையர் சேவகன் மீகுன்றைநாட்டு மலையனூருடைய செம்பத் தொண்டன் மகன் காரிப்பெருமான் பாசாற்றெருமைத் தொறு எயினாட்டார் கொள்ளப் பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று கோவூர் நாட்டுச் சிற்றிடையாற்று முதுகொன்றை மூக்கின் மீமலை அயங்கயக்கரையிற் சென்று முட்டி மலையனூருடைய செம்பர் மகன்னுன காரிப் பெருமான்னன் உரையிலும்புமாள எவ்விப் பத்திரமுருவி எதிரே சென்று பட்டான்

XVI

கம்பவர்மனின் திருவான்மூர் நடுகல்

ஸ்ரீ கம்பபருமற்கு யாண்டு இருபதாவது பட்டை பொத்தனுக்கு ஒக்கொண்டநாகன் ஒக்கதிந்தன் பட்டை பொத்தன் மேதவம் புரிந்ததென்று படாரிக்கு நவக்கண்டங் குடுத்து குன்றகத்தலே அறுத்துப் பிடலிகை மேல் வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது எமூர்ப் பறை கொட்டக் கல்மேடு செய்தாராவிக்குக் குடுப்பாராணர் பொத்தனங்கிழவர்களும் தொறுப்பட்டி நிலம் குடுத்தார்கள் இது அன்றென்ருர் கங்கையிடைக் குமரி இடை எழுநூற்றுக்காதமும் செய்தான் செய்த பாவத்துப் படுவார் அன்றென்ருர் அன்ருள் கோவுக்கு காற்பொன் றண்டப் படுவார்

XVII

பழமங்கலம் நடுகல்பாடற் கல்வெட்டு

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரை
சாய்த்தமகன் வென்ற சயம்பெருக—சீர்த்தபுகழ்
நிக்குவனம் கற்பொறிக்கப் பட்டான் கரடிகுல
சொக்கனேந்த லேஉலகிற் காண்

XVIII

கம்பவர்மனின் தா. வேளூர் நடுகல்

ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய கம்பபருமற்கு யாண்டெட்டா வது வயிரமேக வாணகோவரையராள்த் தகடூர்நாட்டுப்

பாகாற்றூர்க் கதவமாதேவன் மகன் காளம[ன்] மீய் கொன்றைநாட்டு மேல்வேளூர் இருந்து வாழாநின்ற காலத்து முருங்கைசேரி நத்தத...ன்றமையனூர் மகளைக் கள்ளர் பிடிக்க... த்தூரரந்... கொண்டெய்[ய]... அவளை விடுவித்துத் தான்பட்டான் காளமன்.

XIX

அரிமிதைய மாவலிவாணராயரின் தகடூர் நடுகல்

ஸ்வஸ்திஸ்ரீ அரிமிதையமாவலிவாணராயர் கங்கநாடும் புறமலைநாடும் கோயினூர்நாடும் கோவூர்நாடும் தாயனூர் நாடும் பற்றநாடும் ம[ாளா நிற்க] அவர்க்குத் தாநாகிப் பிள்ளைய் கொண்டுள்புகுந்து வஞ்சித்து நாடு கொண்டா னுளம்பன் அவர் போரிற் றுஞ்சின பின்னைத் தேவிமார் கருப்பிணி யருளராக அவளைக் காத்திருந் தாண்பிள்ளைப் பெறுவதுந் தகடூர் புகுந்து நுளம்பன் பலத்தோடே துணிந்து நாடு பாவிநார் சங்கரகுட்டியார். அவரோடுடன் புகுந்து தகடூரில் பட்டார் நாகந்தை சிறுகுட்டியார் கல் நாடு

XX

முதலாம் மகேந்திரவர்மனின் மோத்தக்கல் நடுகல்

கோவிசைய மயிந்திரபருமற்கு முப்பத்திரண்டாவது பொன்மோதனூர் சேவகன் விண்றன்[வ]டுகன் புலி குத்திப் பட்டான் கல்.

XXI

அய்யப்பதேவனின் ரெட்டியூர் நடுகல்

ஸ்வஸ்திஸ்ரீ அய்யப்பதேவன் நாடாள வேணுடைய இ[ற]சப்பையனார் அடியான் அளய்குட்டி பன்றி குத்தி பட்டான்

XXII

முதலாம் இராஜேந்திரனின் திருவையாற்றுக் கல்வெட்டு

கோப்பரகேசரிபந்மராந உடையார் ஸ்ரீராஜேந்ர தேவர்க்கு யாண்டு 3ஆவது ராசே[ஜ]ந்ரசிங்க வளநாட்டு பொய்கைநாட்டு திருவையாற்றுத் தென்கயிலாயமுடையார் கோயிலில் ஆடவல்லார்க்கு நம்பிராட்டியார் த்ரைலோக்கிய முடையார் அதிகாரிச்சி முத்தான்பொந்நங்கை சாத்தி அருளத் திருக்கழுத்துக்கு இட்ட சண்பகாறை ஒன்றுங் குடினைக்கல்லால் பொந் அறுகழஞ்சும் இதில் கட்டிந மாணிக்கம் ஒன்றும் வயிர மிரண்டும் உட்பட நிறை அறு கழஞ்சேய் மஞ்சாடியும் மஞ்சுமாவும் திருக்கைக்கு சாத்தி அருள இட்ட திருக்கைக்காறை ஒன்று பொந் இரு கழஞ்சாக திருக்கைக்காறை நாலினால் பொன் எண்கழஞ்சும் திருவடிக்காறை ஒன்று பொன்முக்கழஞ்சாக இரண்டினால் பொன் அறுகழஞ்சும் ஆக பொந் இருபதின் கழஞ்சும் இது மாணிக்கம் ஒன்றும் வயிரம் இரண்டும் உட்பட நிறை இருபதின்கழஞ்சேய் மஞ்சாடியும் மஞ்சு மாவும் இவர் நம்பிராட்டியார்க்கு சாத்தி அருள இட்ட ஒன்றைத் தாலி மணி பதின்றுஒருபதுமுடையின... ங்கு

ஒன்றும் கொக்குவாய் ஒன்றும் படுகண் ஒன்றும் கோத்த காணாட்பட நிறை முக்கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியு மஞ்சு மாவும் திருக்காதுக்கு சாத்த இட்ட நா[றை] கண் பட்டி இரண்டி[ன்]னால் பொந் அரைக்கழஞ்சேய் நாலு மஞ்சாடியு(ம்) மஞ்சு மாவும் ஆகப் பொந் ந[ா]க்க ......

XXIII

தந்திவர்மனின் திருவெள்ளறைப் பாடல் கல்வெட்டு

ஸ்ரீ| கண்டார் காணா வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று
[னையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னை தளரச் செய்து நில்லாமுன்
னுண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினோய்

XXIV

அபராஜிதவர்மனின் திருத்தணிப் பாடல் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்கு
கருங்கல்லால் கற்றளியா நிற்க – விரும்பிய
நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பிஅப்பி
பொற்பமைய செய்தான் புரிந்து

XXV

சோழர் காலக் கல்வெட்டுப் பாடல்

(மு) வண்டறைதார் மன்னர் மலைபடைத் தெ[ன்](ந்) [மன்னரைவென்
கண்டதிறற் காங்கே(ம)[ய]ன் கண்சிவப்ப—பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மாலவ(ஞ)ர் செஞ்சோரி
அலைகடாம் பாட்டுண் டது.

XXVI

சோழச்சேனுபதி நரலோகவீரன் தில்லையில் திருப்பணி செய்வித்ததைக் குறிக்கும் கல்வெட்டுப் பாடல்

தில்லையில்பொன் னம்பலத்தைச் செம்பொனால் வேய்ந்துவாா
நெல்லையைப்பொந் நாக்கிநா னென்பரால்—ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்கும்
குடைவேந்தர் தொண்டையார் கொல்

XXVII

இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தி

பூமருவிய திருமாதும் புவிமாதும் செயமாதும்
நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க
அருமறை விதிநெறி யனைத்துந் தழைப்ப

வருமுறை யுரிமையில் மணிமுடி சூடித்
திங்கள் வெண்குடைத் திசைக்களி றெட்டுந்
தங்கு தனிக்கூடந் தானென விளங்கக்
கருங்கலி பட்டியைச் செங்கோல் துரப்பப்
பொருகதி ராழி புவிவளர்த் துடன்வர
வில்லவ ரிரட்டர் மீனவர் சிங்களர்
பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய
எண்ணருங் கற்பம் மண்ணகம் புணர்ந்து
செம்பொன் வீர சிம்மா சனத்து
புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவனச்சக்ரவர்த்திகள்
ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு :

XXVIII

சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி (கி. பி. 1251 — 1270)

பூமலர்வளந் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப
நாமலர்வளர் கலைவஞ்சி நலமிகுமா மனத்துறையச்
சிமையவரைத் திறல்மடந்தை திருத்தோளின் மிசைவாழ
விமையவர்கோ னன்றிட்ட வெழிலாரங் கழுத்திலங்கப்
பகிரதிபோற் றுய்யபுகழ்ப் படர்வல்லி கொழுந்தோட்டத்
திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவத்
தண்டாள மணிக்கவிகை தெண்டிரைசூழ் பார்நிழற்ற
வெங்கோயக் கலிகடந்து செங்கோலெண் டிசைநடப்பச்
செம்முரசின் முகில்முழங்கச் சிலையகன்று விசும்படையைத்
திறற்புலிபோய் வனமடையக்
கயலிரண்டு நெடுஞ்சிரேக் கனவரையின் விளையாட
வொருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்

தருமறையோ ரைவேள்வி யாறங்க முடன்சிறப்ப
வருந்தமிழு மாரியமு மறுசமயத் தறநெறியுந்
திருந்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்கக்
குச்சரரு மாரியரும் கோசலரும் கொங்கணரும்
வச்சிரருங் காசியரு மாகதரும்......
அருமணருஞ் சோனகரு மவந்தியரு முதலாய
விருநிலமா முடிவேந்தரி றைஞ்சிநின்று திறைகாட்ட
வடிநெடு வாளும் வயப்பெரும் புரவியுந்
தொடிநெடுந் தோளுமே துணையெனச் சென்று
சேரனுந் தானையுஞ் செருக்களத் தொழிய
வாரசும் புலரா மலைநாடு நூறப்
பருதிமா மரபிற் பொருதிறல் மிக்க
சென்னனியைத் திறைகொண்டு திண்டோள் வலியிற்
பொன்னி நாட்டுப் போசலத் தரைசர்களைப்
புரிசையி லடைத்துப் பொங்குவீரப் புரவியுஞ்
செருவிற லாண்மை சிங்கணன் முதலாய
தண்டத் தலைவருந் தானையு மழிபடத்
துண்டித் தளவில் சோரிலெங் கலுழிப்
பெரும்பிணக் குன்ற மிருங்கள விறைத்துப்
பருந்தும் காகமும் பாறுந் (த)சையும்
அருந்தி மகிழ்ந்தாங் கமர்க்கள மெடுப்பச்
செம்பொற் குவையுந் திகழ்கதிர் மணியு... ......

XXIX

விஜயநகர மன்னன் வீரபிரதாப சதாசிவராயர் காலத்துக் கல்வெட்டு

ஸேதுவங்யே சகஸ்யாப்தே ஸ்ரீமான்வேங்கட தேசிக: சிந்தாமணி மகாக்ராமம் ஸ்ரீரங்கேஸாய தத்வாந். சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன்மஹா இரா... ...

இராஜஇராஜ [ப]ரமேஸ்வர ஸ்ரீவீரப்ரதாப ஸ்ரீமன் சதாசிவ இராஜ மஹாஇராயர் ப்ருதுவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1467 இதன்மேல் சொல்லாநின்றி விஸ்வாவசு சம்வத்சரத்து பால்குணமாசத்து சுக்ல பக்ஷத்து சப்தமியும் சோம வாரமும் பெற்ற ரோஹிணி நக்ஷத்ரத்து தென்கரை பாண்டிகுலாசனி வளநாட்டு விழாவருவீதி (வீதி) வளநாட்டு திருவரங்கந் திருப்பதி ஸ்ரீரங்கநாததேவர் ஸ்ரீ பண்டாரத்துக்கு ஸ்ரீ சைலபூர்ணா சார்ய தாதாசார்யரான ஔக்குத் திருவேங்கடயங்கார் சிலாசாசனம் பண்ணி சமர்ப்பித்த படி தென்கரை இராஜ கம்பீர வளநாட்டு தஞ்சாஊர் உசாவடி உறையூர் கூற்றத்து கீழ்பலாற்று தேவதானத்துக்கு மேற்கு திருச்சிராப்பள்ளி மண்கோட்டைக்கு வடக்கு கிருஷ்ணராய அலவந்தபுரம் உறையூர் வெட்டிக்கு கிழக்கு திருக்காவேரிக்கு தெற்கு இன்னுங்கெல்லைக்குள்பட்டு முன்னுள் திருவரங்கன் திருப்பதி பிடாகையாக்கி பின்பு நலந்திகழ் நாராயண ஜீயர் திருவரங்கன் திருப்பதியை யாறுகொள்ளுகிறது கண்டு மேல்முகம் ஆனைக் காத்தான் கரைக்கு யந்ரஸ்தாபனமும் பண்ணி சாஸ்தாவையும் ப்ரதிஷ்டித்து கிழியாறுங் கிழித்து தென் திருக்காவேரி மலடு செய்வித்து மலடனுறு கெட வடகரை நாணல் நடவும் கிழியாற்றுக்கு தென்கரை ஞணல் நடாமல் சிந்தாம[ணியில்] இடங் கொடுக்க[வும்] கட்டளை இட்டு சிந்தாமணி மஹாஜனங்களுக்கு கொள குட்டை க்ராமம் பரிவர்த்தனை பண்ணிக் கொடுக்கையில் சோழன் அழைப்பித்து சந்நியாசியானவன் ஸர்வ பூதஸௌகார்த்த முண்ட[ாய்] இருக்க வேண்டி இருக்க இப்படி ப்ராம்ஹண ஹிம்சை பண்ணலாமோ என்று கேழ்க ப்ராம்ஹண ஹிம்சைக்கு ஆக்ஞை இடுகிற பரதேவதை தானே ... ... நிமித்தக்ருதம் பாபம் தர்மாய கல்பதே என்று ஸ்ரீ பகவத் கீதையிலேபி சொன்னது கண்டு செய்தோங் காணுமென்ன அது கேட்டு சோழன்

சந்தோஷித்து இதுவே நினைவானால் இந்தப் பாவம் அடிக்கழஞ்சு பொன் பெறுமென்று ஸ்ரீ இரங்கநாததேவர்க்கு தாரைவாத்து கொடுத்ததுக்கு பின்பு நெடுநாளைக்கு மேலாகச் சி[ல] காலம் பண்டாரவாடையாய் திறந்துபோன சிந்தாமணி க்ராமம் க க்கு தானமானியம் நிலம் நஞ்செ நிலம் 7 1/4-1/10 புஞ்செ நிலம் [7] 3/4 ஆக நிலம் 14 1/10 இதுக்கு பொன் 146 சிந்தா[மணி] நத்தம் செய்த்தலைத்திடர் வாஸ்து வாஸ்துஸேஷம் ஆறு ப்ராப்தி வெள்ளாங்குடி இருப்பு[க] மற்றும் எப்பேர்பட்ட சகல சமுதாய ப்ராப்தியும் உட்பட நிதி நிக்ஷேப ஜல பாஷாணாதி அஷ்டபோக தேஜ ஸ்வாம்யங்களும் உள்பட நமக்கு நம்முடைய ப்ரியசிஷ்ய னாய ஸ்வஸ்தி ஸ்ரீ மந்மஹாமண்டலேஸ்வரஸோம குலதிலகாயமான நான் இராமஇராஜாசதாசிவராய மஹா இராயர் கையில் ஏகபோக்யமாய் தாரை வார்பித்து தருகையில் நான் பூர்வன் நலந்திகழ் நாராயண ஜீயர் இட்ட கட்டளைப் படியிலே பெருமாளுக்கே பொலிஊட்டாக இராயற்கும் இராஜாவுக்கும் தர்ம்மமாக சமர்பித்து இந்த சிலோத்தாரணம் பண்ணின க்ராமத்தில் உபையங் கொண்டு பெருமாள் தினம் நாலு தளிகை அமுது செய் தருளி இதில் நிபத்திக் கட்டளை அற்றபடி விட்டவன் விழுக்காடு சதுர்தாம்ஸம் நாலு தளிகையிலே ஒரு தளிகையும் [ஔக்கு] திருவேங்கடயங்கார் சந்தாநபரம்பரை ஆக சந்ராதித்யவரையும் அனுபவித்துக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்தருளும்படிக்கு நடக்கக் கடவதாகவும் இப்படிக்கு இந்த சிலாசாசன [மெழுதின] மைக்கு கோயில்க் கணக்கு ஸ்ரீ ரங்கநாராயன ப்ரியன் எழுத்து

XXX

திருஈங்கோய் மலைமீதுள்ள கிருஷ்ணதேவமகாராயரின் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ

நமஸ்துங்க சிரச்சும்பி சந்த்ர சாமரசாரவே ।
த்ரைலோக்ய நகராரம்ப மூலஸ்தம்பாய சம்பவே ॥

ஸ்வஸ்திஸ்ரீ *விசயாப்யுதய சாலிவாகன சகாப்தம்* ***1439*** *இதின்மேல் செல்லாநின்ற ஈசுவர [பிலவங்க] சம்வத்ஸரம் [புஷ்ய மாசத்துப் பௌர்ணமி நாள்] ஸ்ரீமன் மஹாமண்டலேசுவர அரியராயரவிபாடன் பாஷைக்குத் தப்புவராயரகண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சதுச் சமுத்திராதிபதி ஸ்ரீ வீரப்பிரதாப ஸ்ரீ வீரகிருஷ்ணதேவ மகாராயர் சோழ மண்டலத்து விஷ்ணுஸ்தானம் சிவஸ்தானம் முதலான தேவஸ்தானங்களுக்கு சோடி சூலவரி புறவரி அரசுபேறு மற்றும் உண்டானது எல்லாம் சர்வ மானியமாக திருவுளம் பற்றின தர்மசாசன ராயசம் நாம் விசயநகரத்திலிருந்து புறப்பட்டு பூர்வ திக்குவிசையார்த்தம் எழுந்தருளி உதயகிரி துர்க்கமும் யிரிசிக் கொண்டு திருமலை ராகுத்தராயனையும் பிடித்துக் கொண்டு வினிகொண்ட வெல்லம கொண்டை நாகார்ச்சுன கொண்டை கொண்டை வீடு கொண்டை பள்ளி ராசமகேந்திரவரம் முதலான துர்க்கங்களும் இரிசிக் கொண்டு பிரதாபருத்திர கசபதி குமாரன் வீரபத்திரனையும் பிரதாபருத்திர கசபதி பிரகலாதன் சிரச்சந்திரன் மல்லூகான் உத்தண்டகான் முதலான பாத்திர சாமந்தரையும் சீவக்கிராகமாகப் பிடித்துக் கொண்டு பிரதாபருத்திர கசபதியையும் முறிய வெட்டி சிங்காத்திரிக்கு எழுந்தருளி பொட்டுநூரில்*

ஜயஸ்தம்பம் நிறுத்தி சோள மண்டலத்தில் தேவஸ்தானம் திருச்சிராப்பள்ளி திருஈங்கோய்மலை சந்தலைகை திருக்காட்டுப்பள்ளி திருமழவாடி வல்லம் தஞ்சாவூர் திருநல்லூர் திருவாரூர் திருநகரி திருவையாறு திருவெழுந்தூர் இராசராமப்பாளையம் திருவாஞ்சியம் திருப்புகலூர் திருப்பனந்தாள் திருநாங்கூர் தாடாலங்கோயில் சீர்காழி அரிகண்டபுரம் உள்பட இரண்டாற்றுப் பற்றுச் சீர்மை புவனேகவீரன் பட்டணச் சீர்மை ராசராசச்சுரச் சீர்மை தஞ்சாவூர்ச் சீர்மை வீரமடக்குச் சீர்மை வழுதலம்பட்டுச் சீர்மை வழுவத்தூர்ச் சீர்மை பெரம்பூர்ச் சீர்மை குழித்தண்டலைச் சீர்மை உட்பட்ட விஷ்ணுஸ்தானம் சிவஸ்தானம் தேவஸ்தானங்களில் பூர்வம் முதலாக அரைமனைக்கு இறுத்து வருகிற சோடி சூலவரி ஆயம் ஸ்தலயாதிக்கம் பதினாயிரம் பொன்னிலே [அந்தந்த தேவஸ்தானங்களுக்கு மகரசங்கராந்தி புண்ணிய காலத்திலே கிருஷ்ணவேணி தீரத்திலே] உண்டவல்லி அநந்தசாயி சந்நிதியிலும் விசயவாடை மல்லிகார்ச்சுனதேவர் சந்நிதியிலுமாக தாராபூர்வமாகச் சர்வமானியமாக விட்டு [தர்மசாசன ராயசமும் பாவித்தோம் இந்த ராயசப்பிரமாணத்திலே எல்லா தேவஸ்தானங்களிலும்] சிலாசானம் எழுதிவிச்சு பூஜை புனஸ்காரமும் அங்கரங்க வைபோகமும் திருப்பணிகளும் சாங்கோபாங்கமாக ஆசந்திராதித்த ஸ்தாயியாக நடத்திக் கொண்டு சுகத்திலே இருக்கவும் இந்த தர்மத்துக்கு அகிதம் நினைத்தவன் தங்கள் தங்கள் மாதாபிதாவையும் கோபிராமணரையும் வாரணாசியிலே கொன்ற பாவத்திலே போகக் கடவராகவும்.

ஸ்வதத்தாத்விகுணம் புண்யம் பரதத்தானுபாலனம் ।
பரதத்தாபஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது ॥

இரண்டாம் பகுதி
கல்வெட்டு விளு விடை

I

மூன்றும் சிம்மவர்மனின் பள்ளன்கோயில் செப்பேடு

1. பள்ளன்கோயில் செப்பேடு – குறிப்பு வரைக.

தஞ்சைமாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள 'பள்ளன்கோயில்' என்னும் ஊரில் பயிரிடுவதற்காக மேட்டுநிலமொன்றைச் செப்பனிடும்போது சில செப்பேடுகள் கிடைத்தன. அவைகளில் ஒன்று பல்லவ அரசன் சிம்ம வர்மனால் அளிக்கப்பெற்ற செப்பேடு ஆகும். அதுவே பள்ளன்கோயில் செப்பேடு என்று அழைக்கப்படுகிறது. தற்போது இச்செப்பேடு மர்ரே கம்பெனி இராஜம் அவர்களிடம் உள்ளது.

இச்செப்பேடு, முத்திரையுடன் கூடிய செப்பு வளையத்தில் கோக்கப்பெற்ற ஐந்து ஏடுகளைக் கொண்டது. வளைய முத்திரையில், 'இது சிம்மவர்மன் முத்திரை' என்று கூறும் வடமொழிச்சுலோகமும், படுத்துறங்கும் ரிஷப வடிவமும், அஷ்ட மங்கல உருவங்களும் உள்ளன. ஐந்து ஏடுகளில், முதல் ஏடுமட்டும் உடைந்து போய் ஒரு பகுதி மட்டும் உள்ளதாக இருக்கிறது.

இச்செப்பேடு 64 வரிகளைக் கொண்டது. முற்பகுதி யான 1 முதல் 24 வரிகள், 9 வடமொழிச் சுலோகங்களாகக் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இவ்வடமொழிப் பகுதி 'ஸ்வர்க்க' எனத் துவங்குகிறது. 25 முதல் 64

வரிகள் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. எனினும் தமிழ்ப்பகுதியில் வரும் வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் எழுத்தின் ஒற்றெழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளன. தமிழ், கிரந்த எழுத்துக்களின் மேற்புறம் அமையும் கோடாகிய தலைக்கட்டுப் பெற்றுள்ளன.

இச்செப்பேடு சிம்மவர்மனின் 6ஆம் ஆட்சி யாண்டில் (கி. பி. 550இல்) அளிக்கப்பட்டுள்ளது. முற்பகுதியில் உள்ள முதலிரு வடமொழிச் சுலோகங்களில் பல்லவ புராண புருஷ மரபும், அடுத்த மூன்று சுலோகங்களில் சிம்ம வர்மனின் மகனை சிம்மவிஷ்ணு சோழநாட்டைக் கைப் பற்றிய செய்தியும் அடுத்த நான்கு சுலோகங்களில் வஜ்ர நந்திக் குரவர்க்குத் தானம் செய்ததும் கூறப்பட்டுள்ளன. **வடமொழிப் பகுதியால், "இக்கொடை சிம்மவர்மனின் காலத்தில் இவன் மகன் சிம்ம விஷ்ணுவால் தரப் பெற்றது"** என அறிய வருகிறது.

பாடமாகிய தமிழ்ப் பகுதியில் வஜ்ரநந்திக்குரவர்க்குப் பள்ளிச்சந்தமாகப் பெருநகர நாட்டில் அமண்சேர்க்கை என்னும் சிற்றூரைத் தந்த செய்தியும், நாட்டவர் அவருக்கே தாமர் என்ற ஊரில், 16½ பட்டி நிலத்தைக் கொடுத்தும், அவற்றின் நான்கெல்லைகளும் கூறப்பெற்றுள்ளன. 'நரபயன்' என்பவன் இச்சாசனத்தின் ஆணத்தியாவான்.

செப்பேட்டின் இறுதியில் 'ஸி' என்னும் எழுத்து உள்ளது; இதனை 'ஸித்தம்' என்னும் சொல்லாக அறிஞர் கருதுவர்.

2. பள்ளன்கோயில் செப்பேட்டில் கண்ட செய்திகள் யாவை?

பள்ளன்கோயில் செப்பேடு வஜ்ரநந்திக் குரவர்க்குச் சிம்மவர்மனின் ஆறுவது ஆட்சியாண்டில் தரப்பெற்ற இரு நிலக் கொடைகளைக் கூறுகின்றது.

மூன்றும் சிம்மவர்ம பல்லவன், தன் 6-ஆம் ஆட்சியாண்டில் வெண்குன்றக் கோட்டத்தின் பிரிவுகளுள் ஒன்றாகிய பெருநகரநாட்டுச் சபையாருக்குப் "பெருநகர நாட்டில் உள்ள அமண்சேர்க்கை என்னும் பகுதியைப் பருத்திக்குன்றில் வாழும் வஜ்ரநந்திக்குரவர்க்குப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்தோம்; நீவிர் படாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்துகொடுத்து விடுதக" எனத் திருமுகம் போக்கினான்.

நாட்டவர் அரசனின் திருமுகம் வரக்கண்டு தொழுது வாங்கித் தலைமேல் வைத்துக்கொண்டனர். ஆணையிற் கூறியபடியே பிடாகை நடந்து நில எல்லைகளில் கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்தனர். அமண் சேர்க்கையின் எல்லையாவன:

கிழக்கு: ஏந்தல் ஏரியின் கீழைக் கடறு; ஒமைக்கொல்லை.

தெற்கு: வேள்வுடுகன் கேணி; கடறு; நீலபாடி; விலாடன் குற்றேத்தம்.

மேற்கு: மாவேத்தத்துவதி; மூம்முலையேத்தம்; ஆறு.

வடக்கு: பெருங்கொல்லை; பாண்டியுள் கயும்; முருக்கங் கேணி.

இப்பெருநான்கெல்லையில் அகப்பட்ட நிலம், நீர்நிலம், புன்செய், களர், கன்றுமேய்பாழ், காடு, பீடிகை, கிடங்கு, கேணி, மனை, மனைப்படப்பு, உடும்போடி ஆமை தவழ்ந்தது எல்லாம் உண்ணிலம் ஒழிவின்றிக் கோவும் பொறியும் மாற்றிக் குடிநீக்கி வஜ்ரநந்திக் குரவர்க்குப் பள்ளிச் சந்தமாகத் தரப்பெற்றது.

நாட்டார் இவர்க்கே, தாமர் என்ற ஊரில் $16\frac{1}{2}$ பட்டி நிலம் கொடுத்தனர். அதன் நான்கு எல்லையாவன:

கிழக்கு: புலிகிழார்ப்பட்டி.
தெற்கு: முள்வேறிபாக்கத்தெல்லை.
மேற்கு: போக்குவாய்ச்செறு.
வடக்கு: பல்லாங்குழிக்கா.

நாட்டுச்சபையார் மேற்கண்ட நிலங்களைப் பரதத்தியாகத் தந்தனர். நரபயன் என்பவன் இவ்வாணையை நிறைவேற்றினன்.

3. குறிப்புத் தருக.

1. **சிம்மவர்மன்:** இவன் மூன்றும் சிம்மவர்மன். சுமார் 550 – 575 வரை ஆண்டவன். இவன் மகன் சிம்ம விஷ்ணு. சிம்மவிஷ்ணு தன் தந்தையின் காலத்திலேயே சோழரைவென்றமையும், வஜ்ரநந்திக்குரவர்க்குப் பள்ளிச் சந்தமாக அமண்சேர்க்கையை அளித்தமையும் பள்ளன் கோயில் செப்பேட்டினல் அறியப்பெறும்.

2. **வஜ்ரநந்திக்குரவர்:** இவர் மூன்றும் சிம்ம வர்மனின் ஆறும் ஆண்டில் அமண் சேர்க்கை என்னும் பகுதியையும் தாமரில் $16\frac{1}{2}$ பட்டி நிலத்தையும் பள்ளிச் சந்தமாகப் பெற்றவர். பருத்திக்குன்று என்றும் ஸ்ரீ வர்த்தமானேச்வர தர்ம தீர்த்தம் என்றும் கூறப்பட்ட பகுதியில் வாழ்ந்தவர்; எண்ணிலா நற்குணங்களுடையவர்; நந்திசங்கத்தில் தோன்றியவர்; சகல சாஸ்திரங்களும் கற்ற ஆசாரியர்.

3. **நரபயன்:** இவன் பள்ளன்கோயில் செப்பேடுகளின் ஆணத்தியாவான். (ஆணத்தி – அரசாணையை நிறைவேற்றுபவன்.) நரபயன் என்ற சொல் மக்கட்கு அச்சம் தருபவன் என்று பொருள்படும். எனினும் இவன் மக்களின் அச்சம்போக்கிய அமைச்சன் ஆவான்.

4. **வெண்குன்றக் கோட்டம்:** தொண்டை மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களுள் ஒன்று. வந்தவாசி தாலூகா வெண்குன்றத்தை ஒட்டிய நிலப்பரப்பு.

5. **பெருநகர நாடு:** பெருநகரைச் சுற்றியமைந்த நாடு. (நாடு–தற்காலத் தாலூகாவுக்குச் சமமான நிலப் பரப்பு.) பெருநகர் என்பது, உத்தரமேரூரை அடுத்து எட்டுக்கல் தொலைவில் உள்ளது.

6. **அமண்சேர்க்கை:** சமணர் சேர்ந்து வாழ்ந்த பகுதி. ''ச்ரமணச்ரமம்'' என்று வடமொழிப் பகுதியில் இருத்தலால் அமண்சேர்க்கை என்பது ஊரின் பெயராகலாம்.

7. **பருத்திக்குன்று:** காஞ்சிபுரத்துக் கருகில் உள்ள திருப்பருத்திக்குன்று. பழங்காலத்தில் இது ஜின காஞ்சி எனப்பெற்றது; சமணாசாரிய பீடங்கள் நான்கில் ஒன்று; "ஸ்ரீவர்த்மாநேச்வர தர்ம தீர்த்தம்" என்பது இதற்கு வடமொழிப் பகுதியில் கண்ட பெயர்.

8. **தாமர்:** தாமரில் வஜ்ரநந்திக் குரவர்க்குப் பதினறரைப் பட்டி நிலம் சிம்மவர்மனின் ஆறும் ஆண்டில் பள்ளிச்சந்தமாகத் தரப்பெற்றது. இது காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ளவூர். இந்நாளில் தாமல் என வழங்குகிறது.

9. **கோவிசைய:** பல்லவர் சூடிய பட்டப் பெயர். "கோவிசைய சிம்மவர்மன்" என்பதுபோல வரும். 'வெற்றி பொருந்திய மன்னன்' என்பது பொருள்.

10. **நாட்டார்:** நாட்டுநிர்வாகச்சபையார்; இச் சபை நகர கிராமப் பிரதிநிதிகளைத் தன்னகத்துக் கொண்டது.

11. **பள்ளிச்சந்தம்:** சைன பௌத்த மதத்தவர்க்கு அளிக்கப்பெற்ற இறையிலி நிலம்.

12. **படாகை:** உட்கிடையூர்; பிடாகை.

13. **திருமுகம்:** அரசனின் ஆணை எழுதப்பெற்ற ஓலை. இது 'ஸ்ரீமுகம்' எனவும், 'ஆக்ஞாபத்ரம்' எனவும் கூறப்படும்.

14. **கல்லும் கள்ளியும் நாட்டுதல்:** தானமாக அளிக்கப்பெற்ற நிலத்தின் எல்லைகள் புலனாகுமாறு அடையாளக் கற்களையும் கள்ளியையும் நடுதல். திருமால் கோயில் இறையிலிகட்கு ஆழிக்கற்களும், சிவாலய இறையிலிகட்குச் சூலக்கற்களும் எல்லைக் கற்களாக நடப்பெறும்.

15. **அறையோலை செய்தல்:** நாட்டுச் சபையார் எல்லையைப் பிடி சூழ்வித்துக் கல்லும் கள்ளியும் நாட்டி வகுத்த பின்னர் பொதுமக்களுக்கு அச்செய்தியை அறிவித்தல். நாட்டார் தயாரித்த அறிவிப்போலை, 'அறையோலை' எனப் பல்லவர் காலத்திலும், 'அறவோலை' எனச் சோழர் காலத்திலும் கூறப்பெற்றது.

16. **கீழைக் கடறு:** கடறு – காடு. ஏந்தல் ஏரியின் கீழ்ப்புறத்துக்காடு. அமண்சேர்க்கையின் கீழ்ப்பால் எல்லைகளுள் ஒன்று.

17. **விலாடன் குற்றேத்தம்:** விலாடனுக்கு உரிய குற்றேத்தம். மாடுகளால் இழுக்கப்பெறாமல் ஒரு மனிதன் முன்னும் பின்னுமாக நடந்து நீரினை இறைக்கும் சிறுஏற்றம், குற்றேற்றம் எனப்பெற்றது.

18. **மாவேத்தத்துவதி:** அமண்சேர்க்கையின் மேல் எல்லைகளுள் ஒன்று; மாவேற்றத்திற்குச் செல்லும் வழி. (மாவேத்தம் – பெரிய ஏற்றம்) இரண்டு மாடுகளால் இழுக்கப்பெற்று நீரிறைக்கப்பெறும் கவலை ஏற்றம்.

19. **மும்மூலை ஏத்தம்:** அமண் சேர்க்கையின் மேற்கு எல்லைகளுள் ஒன்று. மூன்று மூலைகளில் ஏத்தங் களுடன் அமைவது.

20. **நீர்நிலன்** – நன்செய்.

21. **கன்றுமேய்பாழ்:** ஆநிரை முதலியவற்றின் மேய்ச்சலுக்குரிய பொதுநிலம்.

22. **பீடிலிகை:** பொதுவாகப் பலிபீடத்தைக் குறிக்கும் சொல். காவிரிப்பூம்பட்டினத்து இலகொளி சிலாதலம்போல அமைந்த சைன நூல்களில் குறிப்பிடப் பெறும் புடவி சிலாதலத்தையும் அதனை ஒட்டிய பகுதியையும் குறிக்கும்.

23. **உடும்போடி ஆமை தவழ்ந்தது உட்பட:** உடும்பு ஓடும் பகுதியும் ஆமை தவழும் பகுதியும் உட்பட மேடாக அமைந்த பகுதியும் கீழ் அமையும் பள்ளமும் உள்ளடங்க என்பது பொருள்.

24. **கோவும் பொறியும் மாற்றி:** அரசன் அந் நிலத்தில் இருந்து பெறக்கூடிய வரி முதலான எல்லா உரிமை களையும் நிலத்தின் பெயரையும் மாற்றி. (பொறி - பெயர்)

25. **குடிநீக்கி:** குடி – நிலத்தை உழுபவன். இவனை அகற்றுதல் குடிநீக்குதல் எனப்பெறும். தானம் செய்பவன் உழும் குடிமகனை அகற்றி அளித்தல் குடி நீக்குதல்; அவ்வாறு அளிக்கப்பெறுவது குடிநீக்கிய பள்ளிச்சந்தம் எனப்பெறும். இவ்வகையாக அளிக்கப்பெறும் தானங்களில் உழுபவனுக்குரிய குடிவார உரிமை (காராண்மை)யும் நிலச் சொந்தக்காரனுக்கே உரியதாகும். மற்றொருவகை, உழுங் குடியை அப்புறப்படுத்தாமல் தரும் குடி நீங்கா இறையிலி. அவ்வகையில் தானம் பெறுபவன் நிலச் சொந்தக்காரனுக் குரிய மேல்வாரம் (மீயாட்சி) மட்டுமே பெற்று அனுபவிப்பான்.

26. **பரதத்தி சென்றது:** தானமாகத் தரப்பெற்றது என்பது பொருள். பர + தத்தி எனப் பிரிக்கப்பெறும். இத் தொடர் பிறனுக்கு, அல்லது பிறனால் கொடுக்கப்பெற்றது எனப்பொருள்படும்.

27. **ஆணத்தி:** ஆக்ஞப்தி; அரசு ஆணையை நிறை வேற்றும் அரசு அலுவலன்.

II

முதலாம் பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகள்

1. கூரம் செப்பேடு — விளக்கம் தருக.

பல்லவ அரசன் முதல் பரமேச்வரவர்மனால் வெளியிடப் பெற்றவை கூரம் செப்பேடுகள். செங்கை மாவட்டம் கூரம் கோயில் அறங்காவலரிடமிருந்து விலையாகப் பெறப்பெற்ற இச்செப்பேடு, இந்நாளில் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ளது.

இச்செப்பேட்டின் ஏடுகளைக் கோத்த வளையத்தின் பூட்டுப்பகுதி வட்டவடிவமானது; 2½ அங்குல விட்டம் உடையது. முத்திரையில் படுத்துறங்கும் ரிஷபமும், மேலே பிறைச்சந்திரனும், சிவலிங்கமும் காணப்பெறுகின்றன. "முத்திரை தேய்வுற்றமையால் எழுத்துக்கள் படிக்கத் தக்கனவாக இல்லை" என டாக்டர் Hultzsch (உல்சு) கூறுவர். இவ்வளையத்துள் ஏழு மெல்லிய இதழ்கள் கோக்கப்பட்டு உள்ளன. கடைசி இதழ் உடைந்து பாதிப்பகுதியே கிடைத்திருக்கிறது.

இச்செப்பேடு வடமொழிப் பகுதியும், தமிழ்ப் பகுதியும் உடையது. 95 வரிகளில் எழுதப்பட்டுள்ளது. செப்பேட்டின் முதல் 57 வரிகளில் 26 வடமொழிச் சுலோகங்கள் அமைகின்றன. வடமொழிப் பகுதி கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.

சாசனத்தின் வடமொழிப் பகுதி 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் துவங்குகிறது. சாசன இறுதியில் 'பூமிதானத்திலும் உயர்ந்த தானம் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை' என்னும் காப்புரையான வடமொழிச் சுலோகம் தமிழ்ப் பகுதியினை அடுத்து அமைந்துள்ளது.

வடமொழிப் பகுதியில் முதற்கண் புராண பல்லவ அரசர் கூறப்பெற்றுள்ளனர். பின்னர் முதல் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதல் பரமேச்வரவர்மன் என்னும் பல்லவ அரசரின் வெற்றிச் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

முதல் நரசிம்மவர்மன் (630 – 668) "சோழரையும் பாண்டியரையும் களப்பிரரையும் வென்றவன்; சாளுக்கிய அரசனைப் பரியலம் மணிமங்கலம், சூரமாரம் என்னும் இடங்களில் வென்றவன்; புலகேசியின் முதுகாகிய பட்டயத்தில் தன் வெற்றியை எழுதியவன்; வாதாபி கொண்டவன்" எனப்படுகிறான். கூரம் செப்பேட்டில் 6 முதல் 26 வரை அமைந்த சுலோகங்கள் முதல் பரமேச்வரவர்மன், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்யனுடன் சண்டையிட்ட போர்க்களத்தை மிகு இலக்கிய நயம்பட வர்ணிக்கின்றன. இப்பகுதியில் பல்லவனின் யானையின் பெயர் அரிவாரணம்; குதிரையின் பெயர் அதிசயம் எனக் கூறப்பெற்றுள்ளது. பரமேச்வரவர்மன் பெருவள நல்லூர்ப் போரில் விக்கிரமாதித்யனைக் கந்தையைச் சுற்றிக் கொண்டு ஓடுமாறு செய்தான்.

கூரத்தில் வித்யாவிநீத பரமேச்வரனுடைய கோயிலுக்குப் பரமேச்வரமங்கலம் என்னும் ஊர் தேவதான பிரமதேயமாகத் தரப்பட்டது. இது வித்யாவிநீத பல்லவனின் விண்ணப்பத்தால் சர்வதத்த பரிகாரமாகத் தரப்பெற்றது. கூரத்தாசாரியன் மகன் அனந்தசிவாசாரியர், புல்லசருமன் ஆகிய இருவரும் தேவதான பிரமதேயம் கொண்டனர். உத்தரகாரணிகனை மகாசேனதத்தன் என்பவன் இச் செப்பேட்டின் ஆணத்தியாவான்.

பாடமாகிய தமிழ்ப் பகுதி: ஊற்றுக் காட்டுக் கோட்டத்தில் நீர்வேளூர் நாட்டில் இருந்த கூரம் என்னும் ஊரில் திருக்கோயில் எடுப்பித்தமை, பரமேச்வரமங்கலத்தில் தேவதான பிரமதேயமாக நிலம் தரப்பெற்றமைபற்றித் தமிழ்ப் பகுதியில் உள்ளது.

வடமொழிப் பகுதியும் தமிழ்ப் பகுதியும் கோயிலில் பாரதம் வாசிக்கப்பட்டமையைக் கூறுகின்றன. தமிழ்ப் பகுதியில், நில இறையிலி 25 பங்கில் ஒரு பங்கு பாரதம் வாசிக்கத் தரப்பெற்றது என்று கூறப்பட்டுள்ளது. (பாரதம் வாசித்தற்குத் தரப்பெற்ற நிவந்தங்களுள் இதுவே முற்பட்டது எனலாம்.)

வடமொழிப் பகுதியில் இல்லாமல் தமிழ்ப் பகுதியில் மட்டும் பின்வருவன காணப்படுகின்றன: முதலாவது, 1200 குழிகள் கொண்டது ஒருபட்டி என்னும் நில அளவை. இரண்டாவது, வித்யாவிநீதன் (முதல் பரமேச்வரன்) பரமேச்வரமங்கலம் என்னும் ஊரில் பரமேச்வர தடாகம் எனும் நீர்நிலை கண்டான்; இதற்குப் பாலாற்றில் இருந்து நீர்வருவதற்குப் பெரும்பிடுகுகால் என்னும் வாய்க்காலை வெட்டினன்.

2. கூரம் செப்பேட்டில் கண்ட செய்திகளைத் தருக.

பல்லவ மன்னன் முதல் பரமேச்வரவர்மனின் கூரம் செப்பேட்டுத் தமிழ்ப் பகுதி, கூரம் என்னும் ஊரிலும், பரமேச்வரமங்கலம் என்னும் ஊரிலும் இம்மன்னவன் செய்த அறச்செயல்களைக் கூறுகிறது.

ஊற்றுக் காட்டுக் கோட்டத்தில் நீர்வேளூர் நாட்டில் இருந்த கூரமும், ஞம்மனம் பாக்கமும் வித்யாவிநீத பல்லவ அரசனால் விலைப்பொருளைக் கையில் கொடுத்துத் தனக்குரியதாக ஆவணம் செய்துகொள்ளப்பெற்றன.

திருக்கோயில் எடுப்பதற்காகச் செங்கல்சுடத் தலைப் பாடகத்தில் சூளைமேட்டுப்பட்டி என்னும் நிலமும், கூரத்தின் உட்பகுதியில் மண்டகம் எடுத்தநிலமும் வாங்கப் பட்டன. இந்நிலம் 5¼ பட்டி (6300 குழி) பரப்பளவுடையது. இந்நிலத்தில் முதல் பரமேச்வரனால் (அ) வித்யா விநீத பல்லவ பரமேச்சுரகரம் என்னும் சிவாலயம் எடுப்பிக்கப் பெற்று (ஆ) ஏரி தோண்டப்பெற்றது; (இ) வழிபாடு செய்வார்க்கு மனையும் மனைப்படப்புகளும் வகுக்கப் பெற்றன; (ஈ) எஞ்சிய நிலம் கூரத்து இறைவனுக்கு நாடோறும் அமுதுபடையலுக்காக விளை நிலமாக ஆக்கப் பெற்றது. இதன் எல்லை:

கிழக்கு — முதுகாட்டுவழி.

தெற்கு — ஊர்புகுவழி.

மேற்கு — ஊர்புகுவழியில் இருந்து நாட்டுக் காலுக்கே போனவழி.

வடக்கு — நாட்டுக்கால்.

இக்கோயிலுக்கு வேண்டும் தேவகருமம் நவகருமம் செய்வதற்காகவும், சதுர்வேதம் வல்ல இருபது

அந்தணர்க்குப் பிரமதேயமாக நிலம் தரவும், முனைவில் கோட்டத்துப் பன்மா நாட்டில் இருந்த பரமேச்வரமங்கலம் என்னும் ஊர் தரப்பெற்றது. இந்நிலம் 25 பங்குகளாகப் பிரிக்கப்பெற்றது.

கூரத்துத்தளிக்குத் தேவகருமம் நவகருமம் செய்ய மூன்று பங்கு; கூரம் மண்டகத்துக்குத் தேவையான தண்ணீர்க்கும் தீக்கும் ஒரு பங்கு; கூரம் மண்டகத்தில் பாரதம் வாசிக்க ஒரு பங்கு; இருபதின்மர் சதுர்வேதிகளுக்குத் தலைக்கு ஒரு பங்காக 20 பங்குகள்; ஆக 25 பங்குகள்.

இவ்வூர்க்குரிய மனையும் மனைப்படப்பும் ஊராட்சியும் செக்கும் தறியும் கூலமும் தரமும் கத்திக்காணமும் மற்றும் பொதுவாக உள்ள எல்லாமும் இப்பங்கு விகிதப்படி பிரித்துக்கொள்ளப் பெறவேண்டும்.

பரமேச்வரமங்கலத்தில் இருந்த பரமேச்வர தடாகத்திற்குப் பாலாற்றில் இருந்து நீர் வருவதற்காக வெட்டப்பட்ட பெரும்பிடுகு வாய்க்காலுக்குரிய புழுதிப்பாடும், நீரேந்து வழியாலே தலைவாய், தலைப்பேழை, ஊற்றுக்கால் தோண்டிய இடமெல்லாம் பரமேச்வரமங்கலத்தைச் சார்ந்ததேயாகும்.

இறுதிப்பகுதி சிதைந்துள்ளது. உடைந்த ஏட்டில் அமைந்த செய்தியை வடமொழிப் பகுதியால் அறியலாம். கூரம் கோயிற்குத் தேவகருமம் நவகருமம் புரிவதற்கான நிலப்பங்குகள் மூன்று, இரு அந்தணரிடம் வழிவழியாக அனுபவித்துப் பணியாற்றும் வண்ணம் தேவதான பிரமதேயமாக்கப்பட்டன. ஒன்றரைப் பங்கு வீதமாகக்கூரத்தாசாரியன் மகன் அனந்த சிவாசாரியார் என்பவரும், புல்லசருமன் என்பவரும் இதனைப் பெற்றனர்.

3. குறிப்புத் தருக.

(அ) **வித்யாவிநீத பரமேசுரகரம்:** வித்யா விநீத பல்லவனால் கூரம் என்னும் ஊரில் எடுப்பிக்கப் பெற்ற சிவாலயம். (1) வித்யாவிநீத பல்லவன் என்பது முதல் பரமேசுரவர்மனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று என்பது டாக்டர் கோபாலன், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோர் கருத்து. (2) வித்யாவிநீத பல்லவன், பரமேசுரபல்லவனுக்கடங்கிய பல்லவர்குலச் சிற்றரசன் என்று சமஸ்கிருதப் பகுதியில் இருந்து அறியவரும். வித்யாவிநீத பரமேஸ்வரக்ருகம் என்பது இச்சிவாலயத்தின் பெயர். (க்ருகம் என்பது கரம் என மருவியுள்ளது.)

(ஆ) **பரமேச்வரமங்கலம்:** முதல் பரமேச்வர வர்மனால் ஏற்படுத்தப் பெற்ற ஊர். இது தொண்டை மண்டலத்தில் மணவில் கோட்டத்தில் பன்மா நாட்டில் இருந்தது. இவ்வூரில் பரமேஸ்வரவர்மன் பரமேஸ்வர தடாகம் என்னும் நீர்நிலையையும், இதற்கு நீர் பாய்வதற்குப் பெரும்பிடுகுகால் என்னும் வாய்க்காலையும் வெட்டுவித்தான். பரமேச்வரமங்கலம், மதுராந்தகம் தாலூகா கீழக்குக் கூற்றுக் கடற்கரைப் பக்கத்தில், பாலாற்றின் தெற்கில் உள்ளது. இவ்வூரில் உள்ள கைலாசநாதர் கோயிலை, 'சைலேசுவரம்' என்று நிருபதுங்கவர்மன் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

(இ) **பெரும்பிடுகுகால்:** முதல் பரமேச்வரவர்மன் பரமேச்வரதடாகம் வெட்டுவித்தான். இத்தடாகத்திற்குப் பாலாற்றில் இருந்து நீர் வருவதற்காக வெட்டப்பெற்ற கால்வாய் பெரும்பிடுகுகால் எனப்பெற்றது. (பெரும்பிடுகு – பேரிடி; பல்லவர் சிறப்புப் பெயர்.)

'இவ்வூர் பரமேச்சுர தடாகத்துக்குப் பாலாற்று நின்றும் தோண்டின பெரும்பிடுகுகாலின் புழுதிப்பாடும் நீர்நீந்த்

வழியாலே தலைவாயும் தலைப்பேழையும் ஊற்றுக்காலும் தோண்டின நிலமெல்லாம் பரமேச்வர மங்கலத்து நிலமாக இக்காலுள் குற்றேத்தமையும் நாட்டாட்சியும் நாட்டுப் பணிக்கையும்......' என்பது சாசனப் பகுதி.

பெரும்பிடுகுகாலில் தலைவாயும் தலைப்பேழையும் இருந்தன; ஊற்றுக்கால்கள் இருந்தன; பாய்ச்சலுக்குட் படாத தரிசும் இருந்தது. இவையனைத்தும் பரமேச்சுர மங்கலத்துக்குரிய நிலப் பகுதியாகும். இக்காலில் குற்றேத்தம் அமைவது பற்றி இறுதிப் பகுதி அமைகிறது.

பெரும்பிடுகு காலிலமைந்தன :

(a) **தலைவாய் :** கால்வாய் ஆற்றில் இருந்து பிரியும் இடத்தில் அமைந்த தலைப்பு மதகு. (தலைவாய் – Head sluice with many ventways.) தலைவாய், கூற்றன்வாய், வாய்த்தலை, முகவாய் என்ற சொற்களால் குறிக்கப்பெறும். நீர் வேண்டியபோது திறக்கவும் மூடவும் கூடிய வகையில் அமைவது தலைவாய் எனலாம். இது சிறு கண்கள் பல உடையதாக இருந்ததாதல் கூடும்.

(b) **தலைப்பேழை :** கால்வாயின் தொடக்கத்தில் அமையும் தலை மடை. (மடை – Small sluice with single ventway.) பேழை – பெரிது என்று பொருள்படுவது. தலைப்பேழை – தலைப் பகுதியில் உள்ள அகன்ற வாயினை உடைய மதகு.

(c) **ஊற்றுக்கால் :** ஆற்றிலும் பிறவற்றிலும் நீர் வற்றும்காலத்தில் ஊற்றுக்களைத் தோண்டுவர்; ஊற்று நீர் செல்லும் கால் ஊற்றுக்கால். இத்தகைய கால்கள் எடுக்கச் சிறப்பனுமதி பெறல் வேண்டும். பாலாறு, வேகவதி யாற்றுப்பகுதிகளில் மட்டும் இத்தகைய கால்கள் இருந்தன.

(ஈ) ஊற்றுக்காட்டுக் கோட்டம் : இது தொண்டை மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களுள் ஒன்று; நீர்வேளூர், பாலையூர், ஆற்றூர் முதலான நாடுகளைத் தன்னகத்துக்கொண்டது. காஞ்சியை ஒட்டி வழங்கிய பெருநிலப்பரப்பு இக் கோட்டத்தில் அமையும். ஊத்துக்காடு, காஞ்சியின் அருகில் உள்ள தோரூர்.

(உ) நீர்வேளூர் நாடு : ஊற்றுக் காட்டுக் கோட்டத்தின் உட்பிரிவுகளில் ஒன்று; காஞ்சிக்கு அருகில் உள்ள கூரத்தைச் சுற்றியமைந்த பகுதி. வடமொழியில் இது, 'நீர் வேளூர் என்ற அவாந்திரராஷ்டிரம்' எனப்பெறும். (ராஷ்டிரம் – மண்டலம்; இங்கு நாடு என்றே பொருள் கொள்ள வேண்டும்)

(ஊ) மணயிற்கோட்டம் : மணவிற்கோட்டம். இது தொண்டை மண்டலத்து 24 கோட்டங்களுள் ஒன்று; பழையனூர்நாடு, கான்றூர்நாடு, பன்மாநாடு முதலிய பிரிவுகளையுடைது. கூவம், பழையனூர், மதுராந்தகம் தாலுகா ஊர்களுட் சில இக்கோட்டத்துள் அமைவன.

(எ) அளவைகள் :

(1) பட்டி : நில அளவைகளில் ஒன்று. பள்ளன் கோயில் செப்பேடு பெருநகரநாட்டார் தாமர் என்னும் ஊரில் வஜ்ரநந்திக் குரவர்க்குப் 16½ பட்டி நிலம் பள்ளிச் சந்தமாகத் தந்ததனைக் கூறுகிறது. "வித்யாவிநீத பல்லவரசன் விலைக்காணம் கைக்கொடுத்து சிராவணை செய்து ஆயிரத்திருநூற்றுக் குழிப்படியால் விற்றுக் கொண்ட நிலம்" என்பது கூரம் பட்டயப் பகுதி. இதிலிருந்து 1200 குழிகள் கொண்டது ஒரு பட்டி என்று அறியலாம். 'பட்டி' – பட்டிகா என வடமொழிப் பகுதியில் குறிக்கப்பெறும். **(2) தலைப்பாடகம் :** ஊரின் வெளியில் முதலில் அமைந்த நிலம். 240 குழி ஒரு பாடகம் என்பதனைக் கம்பவர்மனின் கல்வெட்டொன்றால் அறியலாம்.

(ஏ) வரிகள்:

(1) **ஊராட்சி:** *ஊராள்வோர் பெற்ற வரி.* (2) **செக்கு:** *செக்கினை வைத்திருப்போர் செலுத்தவேண்டிய வரி.* (3) **தறி:** *நெசவாளர் தம்முடைய தறிக்காகச் செலுத்தும் வரி. இவ்வரி ஆடையாகச் செலுத்தப்பெறும்.* (4) **கூலம்:** *தானியமாகச் செலுத்தும் வரி அல்லது தானியத்துக்கு விதிக்கப்பெற்ற வரி.* (5) **தரம்:** *நிலத்தின் தரத்திற்கேற்ப விதிக்கப்பெற்ற வரி.* (6) **கத்திக்காணம்:** *ஆயுத வரி. டாக்டர் மீனாட்சி, ஆயுதம் செய்வோர் செலுத்தும் வரி என்பர்.* (7) **நாட்டாட்சி:** *நாட்டுச் சபையாரின் ஆட்சி; அன்னோரால் விதிக்கப்பெற்ற வரி.*

(ஐ) *1.* **பிரமதேயம்:** *மறைவல்ல பிராமணருக்குத் தரப்பெறும் நில இறையிலி.* 2. **தேவதான பிரமதேயம்:** *தேவதானம் காரணமாகத் தரப்பெறும் பிரமதேயம்; இந்நிலம் பெற்ற அந்தணன் தன் வருவாயின் ஒரு பகுதியைச் சிவன் கோயிற்குத் தருதல் வேண்டும்.* 3. **ஒழுக்கவிக்கு விளைநிலன்:** *நாடோறும் இறைவனுக்குப் படைக்கும் அமுதுபடையல்* **'ஒழுக்கவி'** *எனப்படும். இவ்வொழுக்கவிப்புறமாக வைக்கப்பெற்ற நிலம்.*

Holy service.

(ஒ) **தேவகருமம் நவகருமம் செய்தல்:** *கருமம்—பணி; தேவகருமம் – வழிபாட்டுப் பணி; நவகருமம் – புதுத் திருப்பணிகள். "பூசைக்கும் திருப்பணிக்கும்" எனப் பிற்காலச் சாசனங்களில் காணப்படுவதற்குச் சமமான தொடர் இது.*

(ஓ) **மண்டகம்**–*மண்டபம்; திருக்கோயில் எனினும் ஆம்.* **சதுர்ப்பேதிகள்** – *நான்கு வேதம் வல்ல அந்தணர்.* **நாட்டுப் பணிக்கை** – *நாட்டுச் சபையாரின் கட்டளை.*

III

பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேடு

1. தளவாய்புரச் சாசனம் பற்றிக் குறிப்பு வரைக.

திருநெல்வேலி மாவட்டத்தில், கோவில்பட்டி வட்டத்தில் உள்ளதான தளவாய்புரம் என்னும் ஊரின் வெளியே நிலத்தைத் தோண்டும்போது பூமியில் ஒரு மரப்பெட்டி புதைந்திருப்பதனைக் கண்டனர். அதன் உள்ளே இச் செப்பேடுகள் இருந்தன. தளவாய்புரத்தில் கிடைத்த இச்செப்பேடுகள், பாண்டியன் பராந்தகன் வீரநாராயணன் என்பவனால் வெளியிடப்பெற்றவை.

இச்செப்பேடு, முனைகள் தட்டிச் சமன்படுத்திப் பிணைக்கப்பெற்ற வளையத்தில் கோக்கப்பெற்றுள்ள ஏழு இதழ்களைக் கொண்டது. இதழ்கள் 18 அங்குல நீளமும் $5\frac{1}{2}$ அங்குல அகலமும் உடையவை. முத்திரை, செப்பேடுகளுடன் கோக்கப்பட்டிருக்கிறது. முத்திரையில் மீனிரட்டை, புலி ஆகிய இரண்டு சின்னங்களின் கீழே ஒரு வில்லின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இலச்சினையின் விளிம்பை ஒட்டிக்கிரந்த எழுத்தில் வடமொழி அனுஷ்டுப் சுலோகம் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

இச்செப்பேடு 238 வரிகளை உடையது. முற்பகுதியாக ஒன்று முதல் 65 வரை அமைந்த வரிகளில் 39 வடமொழிச் சுலோகங்கள், கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. ஸ்ரீமாதவகவியால் இயற்றப்பெற்ற இவ்வடமொழிப் பகுதி, 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் தொடங்கி 'நமசிவாய' என முடிகிறது. 66 முதல் 238 வரையுள்ள வரிகள் தமிழ்ப் பகுதி. இது வட்டெழுத்துக்களால் எழுதப்பெற்றுள்ளது. இடையில்வரும் வடசொற்கள் கிரந்த எழுத்தில் எழுதப் பெற்றுள்ளன.

இச் செப்பேடுகள், பராந்தகன் வீரநாராயணன் என்னும் பாண்டிய மன்னனின் 45-ஆம் ஆட்சியாண்டில் கி. பி. 887-இல் வெளியிடப்பட்டன.

தமிழ்ப் பகுதி 'ஓங்குதிரை வியன் பரப்பில்' எனத் துவங்குகிறது. **மதுரைக்காஞ்சியின் தொடக்கமும் இதுவேயாகும்.** இத்தமிழ்ப்பகுதிக்கு முன் "ஸ்வஸ்திஸ்ரீ" என்பது கிரந்த எழுத்தில் உள்ளது. தமிழ்ப் பகுதியைப் பாடியவன் பாண்டித்தமிழாபரணன் என்னும் சிறப்புப் பெயருடையவன்; பாண்டிமாராயப்பெருங்கொல்லன் ஆகிய ஸ்ரீவல்லபன் எனப் பெற்றான்.

தமிழ்ப் பகுதியில், தொடக்கத்தில் புராண மரபு அமைகிறது. திருமால், பிரமன், அத்திரி, சந்திரன், புதன், புரூரவன் என்ற மரபு கூறியபின் திருவிளையாடற் புராணச் செய்திகள், பாண்டியர் ஆற்றிய அருஞ்செயல்கள் கூறப் பெறுகின்றன. இவற்றுள்,

(1) அகத்திய முனிவருடன் தமிழாராய்ந்தது. (2) இராவணனுடன் சமாதானம் செய்துகொண்டது. (3) அர்ச்சுனனின் வசுசாபத்தை நீக்கியது. (4) அரிச்சந்திரன் நகரை அழித்துப் பரிச்சந்தம் கவர்ந்தது. (5) தென்மதுராபுரியும் சங்கமும் கண்டது முதலாயின குறிக்கத்தக்கன. வரலாற்று வேந்தராக முதல் வரகுணன், இவன் மகன் ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன், இவன் மக்கள் இரண்டாம் வரகுணன், வீரநாராயணன் ஆகியோர் கூறப்பட்டுள்ளனர்.

பராந்தகன் வீரநாராயணன் தன் 45-ஆம் ஆட்சியாண்டில், களக்குடியில் வீற்றிருந்தபோது ஸ்ரீ நாராயணங் கேசவன் என்பான், "அரசே! முன்னாளில் பாண்டியன் கடுங்கோன், திருமங்கலம் என்னும் ஊரை 12 அந்தணர்க்கு இறையிலியாகத் தந்தான். கழுதூரில் உயிர்நீத்த பாண்டியன் ஒருவன், காடக சோமயாஜியாருக்குச் சோமாசி

குறிச்சியை ஏகபோகமாகத் தந்தான். இவ்விருதானங்கட்கும் உரிய செப்பேடுகளும் மறக்கேட்டில் (கலகத்தில்) அழிந்தன. அந்நிலங்களின் எல்லைகளும் திரிந்துவிட்டன. கடற்றிருக்கைக்கிழவன் என்பான் பெருநான் கெல்லை வகுத்துச் சோமாசிகுறிச்சி நிலத்தைத் தனதாக்கிக் கொண்டு, எஞ்சிய பகுதியை மதுரதரநல்லூர் என்னும் பெயரால் வெள்ளான்குடியாக ஆக்கினன். அரசே! இவ்விருவூர்களையும் இணைத்துச் சோமாசிகுறிச்சி என்னும் பெயரால் பிடிசூழ்வித்து முன்போல் இறையிலியாக்க வேண்டும்." என வேண்டினன். அரசனும் அவ்வாறே செய்வித்தான். ஆரியம் பாடியவன், ஆரியம் விராய் தமிழ் தொடுத்தவன் முதலியவர் மரபுப் பெருமைகளையும் அவர்க்குத் தரப்பெற்ற கொடைகளையும் இச்செப்பேடு கூறுகிறது.

2. தளவாய்புரச் சாசனத்துக்கண்ட பாண்டியர் மரபு தருக.

புராண மரபு: அலைகளை ஆலயமாகக் கொண்டவனும் ஆயிரம் படங்களுடைய ஆதிசேடன் என்னும் அணையின் மேல் பூமகளும் திருமகளும் பாதங்களை வருட அறிதுயில் அமர்ந்தவனும் ஆகிய ஆதிநாயகன் **திருமால்.**

இத்திருமாலின் உந்தியில் இருந்து பொற்றாமரை ஒன்று தோன்றி மலர்ந்தது. அத்தாமரையின்மீது சடைமுடி, கமண்டலம், சபமாலை முதலியவற்றுடன் நாற்கரமும் நான் முகமும் இரு நான்கு கண்களும் உடைய **பிரமன்** தோன்றினன். பிரமனின் மனத்தில் **அத்திரி** என்னும் முனிவன் தோன்றினன். தவவலிமை படைத்த அத்திரியின் கண்களில் இருந்து **சந்திரன்** வெளிப்பட்டான். சந்திரனின் மகன் மணிநீள்முடிப் **புதன்.** புதன் 'இளை' என்னும் பெண்ணினை மணந்து '**புரூரவன்**' என்னும் அரசனைப் பெற்றெடுத்தான்.

வரலாற்றரசர் :

பல அரசர்கள் ஆண்ட பின்னர்ப் **பராந்தக பாண்டியன்** ஆட்சி புரிந்தான். இவன் கோச்சடையன் என்பவனுக்கு மகன்; பல்லவ அரசனைக் கருவூரில் கால் நடுங்குமாறு யானையைச் செலுத்தி வென்றான்.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் : இவன் பராந்தகனின் மகன். வேய்போலும் தோளியர் கேள். வித்யாதர ஹிரண்ய கர்ப்பன் (கல்வி செல்வம் ஆகியவற்றுக்கு உறைவிடம்). இவன் குன்னூர்ப் போரில் வென்றான்; இலங்கையைக் கைப்பற்றினன்; விழிஞப் போரில் சேரனைக் கொன்று விண்ஆள விடை கொடுத்தான்; கடலானூர்ப் போரில் பல்லவன் பெருமைகுன்றி முதுகிட்டோடுமாறு செய்தான்; மேற்கு நாட்டுச் சேரர், கிழக்கிலுள்ள சோழர், தெற்கில் உள்ள கூபகர், வடநாட்டவர் ஆகிய அனைவரையும் குடமூக்குப் போரில் அழித்தான்; அமர்வல்லான் மகனும் அழியுமாறு தன் யானை ஒன்றை அவன்மீது செலுத்தினன். "அம்புர சீலன் ஒளிர் இலைவேல் உபாய பகுலன்" என்னும் சிறப்புப் பெயர்களுடையவன்.

வரகுணவர்மன் : இவன் ஸ்ரீவல்லபனின் முதல் மகன்; இளம்பிறையைச் சடையில் அணிந்த பிநாகபாணியாகிய சிவபெருமானைத் தன் உள்ளத்தில் இனிதின் நிறுவி இவ்வுலகத்தைக் காத்தவன். இவன் தம்பி பராந்தகன்.

பராந்தகன் : இவன் ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபனின் இளைய புதல்வன். பொத்தப்பிக்குலச் சோழன், ஸ்ரீகண்டனுடைய மகள் அக்களநிம்மடிபால் பிறந்தவன்; **வீரநாராயணன்** எனப்பெற்றவன். இவன் தனக்கு முன் பிறந்த அரசனைச் செந்நிலத்துப் போரில் வென்றவன்; குன்றை, குடகொங்கு, பொக்கரணி, தென்மாயல், வெண்கை என்னும் இடங்களில் நடந்த போர்களில்

வென்றவன்; பராந்தகம் என்னும் இடத்தில் பகை மன்னர் பலரைக் கொன்று, எஞ்சியவரின் வஸ்துவாகனங்களைக் கைப்பற்றினன். ஆறுகளுக்குத் தலைப்புக்களமைத்தான்; பல ஆலயங்களை எடுத்தான்; புகழாலும் கொடையாலும் வெற்றியாலும் வேந்தரில் மேம்பட்டுத் திகழ்ந்தான்; தென் விழிஞ நகரை அழித்தான்; கொங்கு முதல் தேனூர் வரை, குடகொங்கருடைய உடல் மடியும்படி வேலாயுதத்தால் வென்று கொண்டான்; வீரதுங்கன் என்பானுக்குக் கடிவாள மிட்டான்; அளவில்லாத தேவதானங்களையும் பிரமதேயங்களையும், தடாகங்களையும் உலகில் செய்வித்தான்.

இவ்வரசன், வீரநாராயணன், கலிப்பகை, கண்டருள் கண்டன், மதுராபுரி பரமேச்வரன், மாநிதி மகரகேதனன், வஸுதாதிப வாசுதேவன், அஹிதாக்கினி, அசலாசலன், அநவர்ஜ்யன், கொத்தலர்தார்க்கோச்சடையன், கூடற்கோன், குருசரிதன், செந்தமிழ்க்கோன், ஸ்ரீநிகேதன் என்னும் சிறப்புப் பெயர்களுடையவன்; ஸ்ரீநாராயணங் கேசவனின் விண்ணப்பத்தின்படி சோமாசி குறிச்சியைப் பிரமதேயமாக்கியவன்.

3. பாண்டியர்தம் அருஞ்செயல்களாகத் தளவாய்புரச்சாசனத்துக் கூறப்பெற்றுள்ளன யாவை?

(1) போர்தொடுத்து வானைத் தொடுமாறு பொங்கி எழுந்த கடலலைகள் எல்லாம் தன் பாதம் பணியுமாறு தனியொருவனாக ஒரு பாண்டியன் நின்றமை (2) அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றமை (3) திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் கொண்டமை (4) தம்மிலச்சினையாகிய இரட்டைக்கயல்களை இமயமலையில் பொறித்தமை (5) இந்திரனுடைய முத்தாரத்தை அணிந்தமை (6) இந்திரனுடைய முடிவளையை யுடைத்தமை (7) விரிகடலினை வேலினால் மீட்டமை (8) தேவாசுர யுத்தங்களில் வெற்றி

கொண்டமை (9) அகத்திய முனிவனோடு தமிழாய்வு நடத்தியமை (10) இராவணன் செய்த தொல்லைகளில் இருந்து நீங்குவதற்காக அவனோடு சமாதனம் செய்து கொண்டமை (11) துரியோதனாதியர் படைகள் அழியுமாறு பாரதப் போரில் யானையை ஓட்டியமை (12) அநுமனுடைய அடையாளம் பொறித்த கொடியையுடையவனை அருச்சுனனின் வசுசாபத்தை நீக்கியமை (13) அரிச்சந்திரனுடைய நகரினை அழித்து அவனுடைய பரிக்கூட்டத்தைக் கைப்பற்றியமை (14) ஒரு நாளிலேயே நான்கு கடல் நீரையும் கொண்டுவந்து அபிஷேகம் செய்துகொண்டமை (15) நான்கு கோடிப் பொன் கொடுத்து நூற்கடலைக் கரைகண்டமை (16) ஆயிரம் யானைகளுக்கு உணவு வழங்கியமை (17) குளங்களின் கரைகளை உயர்த்திக் கடல் போலாக்கியமை (18) தென் மதுராபுரியை அமைத்தமை (19) இந்நகரில் அரிய தமிழ்ச் சங்கம் கண்டு தமிழ் வளர்த்தமை (20) ஆலங்கானம் என்னும் இடத்தில் நடந்த போரில் வென்று ஞாலம் காவல் நன்கெய்தியமை (21) களப்பாளர் குலத்தை அழித்தமை (22) இடையாறை வெண்பைக்குடி முதலான இடங்களில் வெற்றிபெற்றமை.

4. தளவாய்புரச் சாசன அறச்செயலை விளக்குக.

ஸ்ரீ பராந்தகன் வீரநாராயணன் தன் 45-ஆவது ஆட்சியாண்டில் களக்குடி நாட்டின் தலைமையூரான களக்குடியில் வீற்றிருந்தான். அப்போது ஸ்ரீ நாராயணங்கேசவன் என்னும் அரசியல் தலைவன் ஒருவன் அச்சபைக்கு வந்தான்; அரசனுடைய குறிப்பினை அறிந்து பேசலானான்.

"அரசே! ஆசி நாட்டில் உள்ள கன்னிடக்கை தேசமலி திருமங்கலம் என்னும் சிற்றூர், முன்பு பெருநல்லூரின் ஒரு பகுதியாக இருந்தது. மேடாகவும், பழ மரங்கள் வளர்ந்த காடாகவும் இருந்தது. மானம் போர்த்தருளியகோன்

என்னும் சிறப்புப்பெயரை உடையவனும், கற்றறிந்தோர் போற்றுமாறு களப்பிரரை அழித்தவனும் ஆகிய கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் அந்தணர் பனிருவர்க்கு இவ்வூரைக் காராண்மை மீயாட்சி உள்ளடங்கத் தானமாக்கிச் செப்பேடும் செய்து கொடுத்தருளினன்.

தேர்வேந்த! உன் குலமுதல்வனும் மகளிர்க்கு மன்மதனும் மனுவுக்குச் சமானமானவனும், நீதிதவறா மன்னவனும் ஆகிய கழுதூரில் உயிர்நீத்த காவலன் ஒருவன், சோமாசி குறிச்சி என்னும் ஊரினைச் சோமபானம் செய்து தெளிந்த காடக சோமயாஜியார் என்பவருக்கு ஏகபோகமாகத் தந்து எழிற்செப்பேடும் கொடுத்தருளினன்.

திருமங்கலம், சோமாசிகுறிச்சி என்னும் இரண்டு ஊர்களுக்காகத் தரப்பெற்ற செப்பேடுகள் இரண்டும் மறக்கேட்டில் தொலைந்துபோயின. சோமாசிக் குறிச்சியில் உள்ள நன்செய் நிலத்தைக் கடற்றிருக்கைக் கிழவன் என்பவன் பெருநான்கெல்லையிட்டுத் தன்னுடைய நிலமாக்கிக்கொண்டு மற்றப்பகுதியை, 'மதுரகரநல்லூர்' என்ற பெயரிட்டு வெள்ளான் இருப்புக் குடிநிலமாக்கிக் கொண்டான்.

அரசே! கடற்றிருக்கை கிழவனுடைய உரிமையைத் தவிர்த்து நீக்கி, வெள்ளான் குடியிருப்பு நிலையை மாற்றித் தம்முள் எல்லை மயங்கிக்கிடக்கும் திருமங்கலம், சோமாசி குறிச்சி என்னும் இவ்விருவூர்களையும் ஒரூராக ஆக்குதல் வேண்டும். முன்பு போலவே பிரமதேய இறையிலி நிலமாக ஆக்கி, வரி என்னும் புத்தகத்தில் எழுதுவித்துச் சாசனம் செய்து தரல் வேண்டும்"

என்று ஸ்ரீ நாராயணங்கேசவன் விண்ணப்பித்துக் கொண்டான்.

அரசன் நாராயணங்கேசவனின் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்தான். "மதுரதரநல்லூரைச் சோமாசி குறிச்சியுடன் இணைத்து ஒரூராக்கி இறையிலியாக்கி, இறையிலியாக்கப்பட்ட பகுதியாகிய சோமாசி குறிச்சியையும் திருமங்கலத்தையும் ஒன்றுசேர்த்து அவ் வெல்லையைப் பெண் யானையால் சூழ்வித்து உலகறியக் கொடுக்க அரசாணை பிறப்பித்தான்.

இவ்வரசாணையை ஆணத்தியும், மத்யஸ்தனும், கணக்கரும் நிறைவேற்றுவாராயினர். ஆசிநாட்டு நாட்டுச் சபையினரும், நேச்சுரநாட்டுச் சபையினரும் கூடி இருந்து வழிகாட்டி யானையைச் சூழ்வித்தனர். அவ்வியானை சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளும் திருவிருப்புக்குத் தென்கிழக்காக ஓடிய வெள்ளாறு, பெருநல்லூர் ஏரி முதலான இடங்களின் வழியே சென்று நான்கெல்லைகளையும் காட்டிற்று. யானையால் சூழப்பட்ட இப்பெருநான்கெல்லைக் குட்பட்ட நிலமனைத்திற்கும், எல்லைக்கற்களை நடுவித்தான். பிரமதேயத்தன்மை குறையாத வகையில் உலகில் அறச் செயலை நிலைபெறுத்துவதைக் குறிக்கோளாக் கொண்ட பாண்டிய அரசன், திருமங்கலத்துச் சபையாரிடத்திலும் சோமாசிகுறிச்சியில் உள்ள அந்தணரிடத்தும் இந்நிலத்தைக் காரண்மை மீயாட்சி உள்ளடங்கத் தந்தான்.

வடமொழிப் பிரசஸ்தியைச் செய்த ஸ்ரீ மாதவன் ஸ்ரீ மாதவ சரண சேகரன் என்பவனுக்குப் பிரசஸ்தி செய்தமைக்காக நற்பெருவளால், பருத்திவயக்கல் என்னும் நிலங்களையும், இந்நிலங்களில் உள்ள கிணறு இரண்டையும், அக்கிணற்று நீரால் விளைகின்ற நிலத்தையும் ஊர்ச் சபையார் அரசனுடைய கட்டளைப்படி கொடுத்தனர்.

இச்செப்பேட்டுத் தமிழ்ப் பகுதியை எழுதியவனுக்கும், செப்பேட்டைப் பொறித்தவனுக்கும், கண்ணங்கீரன் வயக்கல், சோமாசி வயக்கல் என்னும் வயல்களும், இவற்றின்

உள்ளே உள்ள மூன்று கிணறுகளும், அக்கிணறுகளால் நீர்பாயும் வயல்களும் தரப்பெற்றன. கிணறுகட்கு இடையி லமைந்த வளவிய நிலமும், எழில்மிக்க தோட்டமும், வீடு கட்டுதற்குரிய நிலமும், நீர்வளம்மிக்க இப்பகுதியில் மீன்களைப் பிடிக்கும் உரிமையில் பாதியும் இவர்க்கு மகாசபைக் குறிப்பொடு கொடுக்கப்பெற்றன. பாண்டியன் இம்மூன்று அறச்செயல்களும் செய்வித்துப் "பகல்செய்யும் பருதிஞாயிறும், இரவுசெய்யும் பனிமதியும், அகல் ஞாலமும் உள்ளளவும்" நிற்குமாறு செப்பேடு செய்து கொடுத்தான்.

5. குறிப்புத் தருக.

(அ) **கடுங்கோன்:** *இவன் கி. பி. 575-இல் களப் பிரரிடம் இருந்து அரசாட்சியைக் கைப்பற்றி மதுரையில் மீண்டும் பாண்டிய அரசாட்சியை நிலைநிறுத்தியவன். இவன்,*

"கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாளரைக் களைகட்ட
மற்றிரள்தோள் மாக்கடுங்கோன்
மானம் போர்த்தருளிய கோன்"

எனப்பெறுகிறான். வேள்விகுடிச் செப்பேடுகள் "மானம் போர்த்த தானை வேந்தன்" எனக் குறிப்பிடும். இவ்வரசன் ஆசிநாட்டில் உள்ள திருமங்கலம் என்னும் சிற்றூரைக் காடு கெடுத்து விளைநிலமாக்கிப் பன்னிரண்டு அந்தணர்க்குச் செப்பேடு செய்து கொடுத்தருளியவன்.

(ஆ) **கழுதூரில் சித்திசெய்த கடிக்கூடல் நகர்க் காவலன்:** *தளவாய்புரச் சாசனத்தின் தமிழ்ப்பகுதி, "கழுதூரில் சித்திசெய்த கடிக்கூடல் என்னும் நகர அரசன் சோமாசிகுறிச்சி என்னும் ஊரைக் காடக சோமாசியார் என்பவருக்குத் தானமாகத் தந்தனன்" என்று கூறுகிறது. இவ்வரசன் பாண்டியர்குலத்தவன் என்பதனைக், 'கூடல்*

நகர்க்காவலன்' என்றமையாலும் 'நின்குல முதல்வன்" எனப் பாண்டியனை நோக்கிக் கூறப்பட்டுள்ளமையாலும் அறியலாம். இவன் 'கழுதூர்' என்னும் ஊரில் இறந்தவன் என்பதனைக் 'கழுதூரில் சித்திசெய்த' என்னும் அடைமொழி உணர்த்துகிறது. இவன் யார் என்பது தமிழ்ப் பகுதியால் புலனாகவில்லை. ஆயின் வடமொழிப் பகுதியின் 24-ஆம் சுலோகம், "தெய்வஉலகம் சென்ற உன்னுடைய தந்தையால் கழுதூர் நிவாசத்திலிருந்து காடக சோமயாஜி என்பவருக்கு மற்றொரு கிராமம் அளிக்கப்பட்டது" என்று நாராயணங்கேசவன் பராந்தகன் வீரநாராயணனிடம் விண்ணப்பித்துக்கொண்டான் என்று கூறுகிறது. இதனால், காடக சோமயாஜியாருக்குத் தானமளித்தவன் பராந்தகன் வீரநாராயணனின் தந்தையான ஸ்ரீவல்லபன் என்பது புலனாகும். "ஸ்ரீவல்லபன் கழுதூர் என்னும் இடத்தில் தங்கித் தன்வாழ்நாளிறுதியைக் கழித்தான்; அக்காலத்தில் இத் தானம் செய்தான்; அங்கேயே இறந்தான்." என அறியலாம். இவ்வரிய வேந்தனை, இளம் பெண்டிர்க்கு மன்மதன்; மனுவுக்குச் சமமானவன்; நீதிதவறாச் செங்கோலினன்; மண் மகட்கொரு தலைவன். எனச் சாசனம் குறிப்பிடுகிறது.

(இ) **பொத்தப்பிக்குலச் சோழன்:** இவன் பெயர் ஸ்ரீ கண்டன். இவன் பொத்தப்பிச் சோழர் குலத்தவன்; பெருவலிமை படைத்தவன்; தொண்டைநாட்டினை ஆண்டவன்; மானாபரணனின் மருமகன்; தொண்டியர்கோன்; மயிலையர் கோன், மத்தமாமலைவலவன் என்னும் சிறப்புப் பெயர்களுடையவன். இவன் மகள் அக்களநிம்மடி என்பவள் ஆவாள். இவள் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனை மணந்தாள். அவள்பால் பராந்தகன் வீரநாராயணன் பிறந்தான்.

(ஈ) **ஸ்ரீநாராயணங்கேசவன்:** நாராயணனின் மகன் கேசவன். தளவாய்புரச் சாசனத்தின் விக்ருப்தி

(விண்ணப்பித்துக் கொண்டவன்) இவன் ஆசிகாட்டிலுள்ள திருமங்கலத்தில் பிறந்தவன்; சோமாசிகுறிச்சியின் தலைவன்; தர்மவத்சலன் எனவும், அதர்மகோபி எனவும் பாராட்டப்பெற்ற ஸ்ரீ மாயா நாராயண பட்டரின் மகன்; வானகோத்திரத்தில் பௌதாயன கல்பத்தில் குடிவிளங்கத் தோன்றியவன்; பெரும் கல்விமான்; பராந்தகன் வீரநாராயணனுடைய நம்பிக்கைக்குரிய செயலாளன்; சொல்வன்மை மிக்கவன்.

(உ) **இளையான் நக்கன்**: இவன் தளவாய்புரச் செப்பேட்டின் **ஆணத்தி**. வீரநாராயணனின் அதிகாரி; புல்லூரில் வாழ்ந்த அந்தணன்; திருமாலின் திருவடிகளைத் தலையிற்சூடிய விஷ்ணு பக்தன்; ஆயிரத்தைஞ்ஞூற்றுவன் என்னும் குலச் சிறப்புப் பெயருடையவன்; வைகுந்தவள நாடன், வத்சகோத்ரச் சூடாமணி என்னும் சிறப்புப் பெயர்கள் உடையவன்.

(ஊ) **சேந்தங்கிழான்**: இவன் தளவாய்புரச் செப்பேட்டின் **மத்யஸ்தன்** (நடுவுநிலை நாயகன்.) நிலத்தேவர் குலத்துக்குத் திலகம் போன்றவன். வேண்புநாட்டுப் பெருந்தூவெள்ளி என்னும் பெயருள்ள குடியில் பிறந்தவர்களுக்குத் தலைவன்; பெருந்தூவெள்ளி என்னும் ஊரின் உரிமையாளன்.

(எ) **கணக்கு நூல் பயில் கணக்கர்**: தளவாய்புரச் செப்பேட்டுக்குக் கணக்கு நூல்களைக் கற்ற கணக்கர் இருவர் இருந்தனர். (1) **சாத்தம்படாரன்**: இவன் அளற்றுநாட்டில் உள்ள முசுக்குறிச்சியில் பிறந்த அந்தணன்; அளற்றுநாட்டுக்குத் தலைவன்; கலையறிவும் சீலமும் உடையவன். (2) **கிழவங்கோன்**: களாத்திருக்கை என்னும் ஊரைச் சேர்ந்த பெருங்காக்கூரின் தலைவன்.

(ஏ) **ஸ்ரீ மாதவன் ஸ்ரீ சரணசேகரன்**: இச்செப்பேட்டின் **வடமொழிப் பிரசஸ்தியை எழுதியவன்**. இவன்

ஸ்ரீ வல்லபமங்கலம் என்னும் ஊரில் பிறந்தவன்; சாண்டில்ய கோத்திரத்தினன்; ஏகசந்தி, காத்யாயன சூத்திரத்தினன்; கணஸ்வாமிபட்டருக்குச் சோமாசி என்னும் வேதியனின் மகள் பால் தோன்றியவன்; வேத வேதாந்தங்களையும் சாஸ்திரங்களையும் போதிப்பதில் வல்லவன். (இவனுக்குத் தரப்பெற்றுள்ள கொடையை வினா 4-இல் காண்க)

(ஐ) **பாண்டியமாராயப் பெருங்கொல்லனாகிய ஸ்ரீ வல்லபன்:** இவன் **தமிழ்ப் பகுதியைப் பாடியவன்.** கருமாரர் குலத்து உதித்தவன்; பெரும் சிவபக்தன்; 'அற்புதம்' என்னும் இடத்தில் சிவபெருமான் வேண்டப் பரசினைச் செய்து தந்த மாமுனிவனாகிய மனுவின் மரபில் வந்தவன்; குண்டூர் நகரின் தலைவன்; பண்டிததாசன், தென்வைகை வளநாடன், தமிழாபரணன் என்று சிறப்பிக்கப் பெறுபவன். (கொடை வினா நான்கில் காண்க)

(ஒ) **நிருபசேகரப் பெருங்கொல்லனாயின நக்கன்:** பாண்டியனுடைய வலிய ஆணையாகிய சிலை, புலி கயலிணையை இமயத்தில் பொறித்தவர் மரபினன். தளவாய்புரச் செப்பேட்டுத் தமிழ்ப்பகுதியைப் பாடியவனின் தந்தை. இவன் சிற்பமார்த்தாண்டன் எனவும் கூறப்பெற்றான்.

(ஓ) **அகத்திய முனிவன்:** அகத்திய முனிவன் விந்தியமலையின் வளர்ச்சியையும், இந்திர திருவாகிய நகுஷனது செருக்கையும், வஞ்சத் தொழில் வல்லவனாகிய வாதாபியின் உயிரையும், கடலின் குறையாத் தன்மையையும், சுகேதுசுதை எனப்பெறும் தாடகையின் அழகையும் அழித்தவன்; சிறுமேனியும் உயர்ந்த தவமும் உடையவன்; பொதியமலையில் உறைபவன்; பாண்டியர் இவனோடு தமிழ் ஆய்ந்தனர். இவன் பாண்டியரின் புரோகிதன்.

"விஞ்சத்தின் விஜ்ரும்பணையும் பெறல்நகுஷன் மதவிலாசமும்
வஞ்சத்தொழில் வாதாவி சீராவியும் மகோததிகளின்
சுருங்காத பெருந்தன்மையும் சுகேதுசுதை சுந்தரதையும்
ஒருங்குமுன்னுள் மடிவித்த சிறுமேனி உயர்தவத்தோன்
மடலவிழ்பூ மலையத்து மாமுனி புரோசிதனாக"

என்பது சாசனப்பகுதி.

(ஔ) **இளை : இளன்** என்பவன் சூரிய குலத்தைச் சேர்ந்த ஓரரசன். இவன் சிவபெருமானுடைய சாபத்தால் பெண்ணாக மாறினான்; 'இளை' என்னும் பெயரினைப்பெற்றான். இப்பெண்ணைச் சந்திரகுலத்தினைச் சேர்ந்த புதன் மணந்து, புரூரவனைப் பெற்றான். செப்பேட்டுப் பகுதி பின் வருமாறு : 'மணிநீள்முடிப் புதனுக்குக் கற்றைச்செங்கதிர்க் கடவுள் வழிவந்த கழல்வேந்தன் ஏந்துஎழில்தோள் இளன் ஒருநாள் ஈசனது சாபம் எய்தி பூந்தளவ மணிமுறுவல் பொன்னாகிய பொன்வயிற்றுள் போர்வேந்தர் தலைபணிப்ப வந்து தோன்றிய புரூரவன்...'

6. தளவாய்புரச் செப்பேட்டினால் மும்மூர்த்திகளைப் பற்றி அறியப்பெறும் செய்திகளைத் தருக.

சிவபெருமான் : (1) நீர், நிலம், ஆகாயம், வாயு தேயு, சூரியன், சந்திரன், இயமானன் என்னும் அட்ட மூர்த்தியானவன். (புனல், புவனி, புத்தேள், மாருதம், கனல், இருசுடர், எஜமானன் ஆகிய திறல் அஷ்டமூர்த்தி). (2) அமரர்க்கும் அறிவறியோன். (3) வேகம் பொருந்திய வெள்விடையூர்தியோன். (4) தண்மை பொருந்திய சந்திரனையும், வெம்மை பொருந்திய சூரியனையும், அக்கினியையும் தன் கண்களாக உடையவன் (விஷமலோசனன்-சமமில்லாத கண்களை உடையவன்). (5) பிள்ளைப் பிறையைச் சடைக் கணிந்தவன். (6) கையில் பிநாகம் என்னும் வில்லினை உடையவன் (பினாகபாணி).

திருமால் :

ஓங்குதிரை வியன் பரப்பில் உததிஆ லயம் ஆக
தேங்கமழ் மலர்நெடும்கண் திசைமகளிர் மெய்காப்ப
விண்ணென் பெயரெய்திய மேகஞாலி விதானத்தின்
தண்ணிழற்கீழ் ஸ்கஸ்ரபண மணிகிரணம் விளக்கிமைப்பப்
புஜங்கம புரஸ்ஸரபோகி என்னும் பொங்கணை
மீமிசை பயந்தரு தும்புரு நாரதர்
பனுவல் நரப்பிசை செவியுறப் பூதல
மகளொடு பூமகள் பாதஸ்பரி சனைசெய்யக்
கண்படுத்த கார்வண்ணன் திண்படைமால் ஸ்ரீபூபதி
ஆதிபுருஷன் அமரநாயகன்...

இதன் பொருள் பின்வருமாறு :—

பேரலைகளையும் பெரும் பரப்பினையும் உடைய கடலை ஆலயமாகக் கொண்டவன் ; மலர் நெடுங்கண்ணுடைய திசை மகளிரால் காவல் செய்யப்பெறுபவன் ; மேகதோரணங்களை உடைய, விண் என்னும் விதானத்தின் கீழே ஆயிரம் படங்களையுடைய ஆதிசேடன் என்னும் அணையின் மீது அமர்ந்தவன் ; தும்புரு நாரதர் பாடல்களையும் வீணை இசையையும் செவிமடுப்பவன் ; நிலமகளும் திருமகளும் அடிவருட அறிதுயிலமர்ந்தவன் ; நீலமேகவண்ணன், ஆதிபுருஷன், அமரநாயகன்.

பிரமன் :

ஆதிபுருஷன் அமரநாயகன் அழகமைநாபி மண்டலத்து
சோதிமரகதத் துளைதாட் சுடர்பொற்று மரைமலர்மிசை
விளைவுறு களம கணிசமென மிளிர்ந்திலங்கு
சடைமுடியொடு அளவியன்ற கமண்டலுவொடு
அக்ஷமாலையொடு தோன்றின
சதுர்ப்புஜன் சதுர்வக்த்ரன் சதுர்வேதி சதுர்த்வயாக்ஷன்
மதுகமழ்மலர்க் கமலயோனி

திருமாலின் திருவுந்தியில் இருந்து தோன்றிய, மரகதப் புள்ளிகளை உடைய தண்டின்மேல் மலர்ந்த பொற்றாமரையில் தோன்றியவன்; இவன் கதிர்போல் மிகுந்த சடைமுடிகளும், கமண்டலமும், அக்ஷமாலையும் உடையவனாகத்தோன்றியவன். நான்கு புஜங்களையுடையவன்; நான்கு முகங்களுடையவன்; நான்கு வேதங்கள் அறிந்தவன்; எட்டுக் கண்களுடையவன்; தாமரை மலரைத் தன் பிறப்பிடமாகக்கொண்டவன்.

7. "காடவனைக் கருவூரில் கால்கலங்கக் களிறுகைத்த கூடலர்கோன் ஸ்ரீ பராந்தகன்" – இச்சாசனத் தொடரை ஆராய்க.

பாண்டியன் முதல் வரகுணன் தந்திவர்மபல்லவனைக் கருவூரில் வென்ற செய்தியைத் தளவாய்புரச் செப்பேட்டின் இத்தொடர் விளக்குகிறது.

முதல் வரகுணபாண்டியன் 792 – 832 வரையாண்டவன். திரு. நீலகண்ட சாஸ்திரியாரவர்கள், "முதல் வரகுண பாண்டியனுடைய பேரர்கள் பராந்தகன் எனவும், வரகுணன் எனவும் பெயருடையவர்களாக இருக்கின்றனர். பாட்டனுடைய பெயர் பேரர்க்கிடப்பெறும் வழக்கடிப் படையில் நோக்கும்போது, வரகுணபாண்டியன், பராந்தகன் என்னும் பெயருடையவனாதல் வேண்டும்" எனக்கூறினார். இன்னும் சிலசான்றுகள் காட்டி நெடுஞ்சடையன் பராந்தகனும் முதல் வரகுண பாண்டியனும் ஒருவராயிருத்தல் வேண்டும் எனக் கருதினர். இப்பட்டயம் வரகுண பாண்டியனைக் "கூடலர் கோன் ஸ்ரீ பராந்தகன்" எனக் கூறுவது நீலகண்ட சாஸ்திரியார் கருத்துக்கு அரண் கூட்டுவதாகும்.

சதாசிவபண்டாரத்தாரவர்கள், "நெடுஞ்சடையன் பராந்தகன் பரமவைணவன்; முதல் வரகுணன் சிவபக்தன்.

எனவே இருவரும் ஒன்றென்றல் எவ்வாற்ருனும் பொருந்தாதது" எனக்கூறி, இத்தொடர்க்குக்,

"காடவனைக் கருவூரில் கால்கலங்கக் களிறுகைத்த
கூடலர்கோன் **ஸ்ரீ வரகுணன்**"

எனப் பாடம் கொண்டார்.

நெடுஞ்சடையன் பராந்தகனும் முதல் வரகுணனும் வெவ்வேருனவர் ஆயினும், முதல் வரகுணன், பராந்தகன் என்னும் பெயரும் உடையவன் என்பதனை இப்பட்டயத் தொடர் உறுதிசெய்கிறது.

8. மாணிக்கவாசகர் காலம் கணிக்கத் தளவாய்புரச் சாசனம் துணைபுரிவது எவ்வாறு?

மாணிக்கவாசகர் காலப் பாண்டியன் வரகுணனுவன். இதனை,

"**வரகுணனும் தென்னவன்** ஏத்தும் சிற்றம்பலத்தான்"
"மயலோங்கு இருங்களியானை **வரகுணன்** வெற்பு"

என்னும் திருக்கோவையார் (306; 327) பாடற் பகுதிகளால் அறியலாம். பாண்டிய அரசர் மரபில், வரகுணன் என்னும் பெயருடன் இருவர் குறிக்கப்பெறுகின்றனர்.

முதலாமவன் சடையவர்மன் வரகுண மகாராசன். இவன் இரண்டாம் இராசசிம்மனின் மகன்; ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனுடைய தந்தை. கி. பி. 792 முதல் ஆட்சி செய்தவன். மாணிக்கவாசகர்காலப் பாண்டிய மன்னன் முதல் வரகுணன் என்பது திரு. சதாசிவ பண்டாரத்தார் கருத்து.

முதல் வரகுணனின் மகன் ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன். ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் முதல் மகன் இரண்டாம் வரகுணவர்மன். தளவாய்புரப் பட்டயங்கள்,

"மற்றவர்க்கு மகனாகிய கொற்றவன் எங்கோவரகுணன்
பிள்ளைப்பிறைச் சடைக்கணிந்த பினாகபாணி
எம்பெருமானை,
உள்ளத்தில் இனிதிருவி உலகம் காக்கின்ற நாளில்"

எனக் குறிக்கின்றன. எனவே இவ்வரகுணனின் காலத்திலேயே மாணிக்கவாசகர் வாழ்ந்தார் என்று அறிஞர் கூறுவர்.

9. பின்வரும் சாசனப் பகுதியை விளக்குக.

ஒன்றுமொழிந்து இரண்டோம்பி ஒருமுத்தீ யுட்பட்டு
நன்றுநான் மறைபேணி ஐவேள்வி நலம்படுத்து
அறுதொழில்கள் மேம்பட்ட மறையோர் பன்னிருவர்.

இது **எண்ணலங்காரம்** பொருந்தியுள்ள பகுதி. விளக்கம் பின்வருமாறு: **ஒன்று:** வாய்மை. **இரண்டு:** காலை, மாலை வழிபாடு. **முத்தீ:** காருகபத்தியம்; ஆகவனீயம்; தக்கிணாக்கினியம். **நான்மறை:** இருக்கு, யசுர், சாமம், அதர்வம். **ஐவேள்வி:** பிரமவேள்வி (வேதமோதுதல்); வேதவேள்வி (யாகம் செய்தல்); மானிடவேள்வி (விருந்தோம்புதல்); தென்புலத்தார் வேள்வி (தென்புலத்தார் பொருட்டு நீர்க்கடன் முதலியன செய்தல்); பூதவேள்வி (பிராணிகட்குப் பலியுணவு ஈகை). **அறுதொழில்:** ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

10. குறிப்பு வரைக.

1. **களக்குடி:** களக்குடி நாட்டின் தலைநகர். வீரநாராயணன் தன் நாற்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் இங்கிருந்தபோதே சோமாசிகுறிச்சியைப் பிரமதேயமாக்க ஆணை பிறப்பித்தான். இந்நகர்,

"பொன்சிறுகா மணிமாடப் புரந்தரனது நகர் போன்ற களக்குடி நாட தனிற்படும் களக்குடி'

எனக் குறிக்கப் பெறுகிறது.

2. **தர்ம கர்ம பராயணனாகிய தராபதி:** பராந்தகன் வீரநாராயணன் பிரமதேய நிலங்களின் தன்மை சிறிதும் குறையாத வகையில் உலகத்தில் தர்மச் செயல்களை நிலை பெறச் செய்வதனைத் தன் குறிக்கோளாகக் கொண்டவன். "பிரமதேயஸ்திதி வழாவகை ப்ருத்வியின்கண் நிலைபெறுத்து தர்ம கர்ம பராயணனாகிய தராபதி" எனப்படுகிறான்.

3. **மகாசபை குறிப்பொடு கொடுத்தல்:** ஆரியம் விராய் தமிழ் தொடுத்த மதியினனுக்கும் சிறப மார்த்தாண்டனுக்கும், வீரநாராயணன், பலகொடைகள் தந்ததுடன், "வல்லெருமை வெருவு மீன்கள் விரால் உகள்புனல் பதிஇதனில் கொல்லுரிமையில் செம்பாகமும் மகாசபை குறிப்பொடு கொடுத்துப் பகல்செய்யும் பருதிஞாயிறும் இரவுச்செய்யும் பனிமதியும் அகல்ஞாலமும் உள்ளளவும் செப்பேடு செய்து கொடுத்தருளினன்." மீன் பிடிக்கும் உரிமை ஊர்ச் சபைக்குரியது. அவ்வுரிமையிற் செம்பாதி தரப்பெற்றது. "கொடைகள் அரசனால் தரப்பெறினும் மகாசபையினுடைய குறிப்பேட்டில் குறித்துப் பதிய வைத்துக் கொள்வதற்குரிய குறிப்புடன் தரப்பெறும்; சந்திரனும் சூரியனும் மண்ணுலகும் உள்ளளவும் நிலைபெற்று அறம் நிகழ்வதாகுக எனச் செப்பேடு செய்து தருவர்" என்ற செய்திகள் இங்குக் கூறப்பட்டுள்ளன.

4. **புரவு எழுதுதல்:** நிலத்தை இறையிலியாக்கும் போது 'இந்நிலம் இறையில்லாது' என வரிப்பொத்தகத்தில் குறித்தல். இவ்வாறு குறிக்கப் பெற்ற பின்னரே சாசனம் செய்து தரப்பெறும். 'புரவு எழுதி பிடி சூழ்ந்து நன்றாகிய சாசனம் செய்து நன்கருள வேண்டும்' என்பது சாசனத் தொடர்.

5. **வைகை:** பாண்டித் தமிழாபரணனுக்குரிய பெருமைகளைப் பேசும்போது, 'வைகையாறு பொன்னையும் மணியினையும் அகிலையும் அரித்துக் கொண்டு கரையொடு பொருது ஓடும் புனல் வெள்ளம் உடையது" எனக் குறிக்கப்பட்டுள்ளது.

'பொன்வரன்றி மணிவரன்றி அகில்வரன்றிக்
தென் வைகை வளநாடன்' [கரைபொரு புனல்

என்பது சாசனம்.

11. தளவாய்புரச் சாசனத்திற்கண்ட சிறப்புச் செய்திகள் யாவை?

1. ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன் குடமூக்குப் போரில் அமர்வல்லான் மகனை யானையை ஓட்டி அழித்தமை; (அமர்வல்லான் யார் எனத் தெரியவில்லை.) கழுதூரில் உயிர்நீத்தமை.

2. இரண்டாம் வரகுணனின் சிவபக்தி.

3. ஸ்ரீ வல்லபனின் மனைவி அக்களநிம்மடி. இவள் ஸ்ரீ கண்டன் மகள். பராந்தகன் வீரநாராயணன் தன் தமையன் ஒருவனைச் செந்நிலத்துச் செருவில் வென்றான்; வீரதுங்கனைக் குசைகொண்டான் என்னும் செய்திகள். (கடிவாளமிடப்பட்ட வீரதுங்கனும், கொல்லப்பெற்ற தமையனும் யாவரெனத் தெரியவில்லை.)

இவை பிறசாசனங்களில் காணப்படாதனவாகும்.

12. வடசொற்களின் பொருள்:

உததி – கடல். **சகஸ்ரபணமணிக்கிரணம்** – ஆயிரம் படங்களில் உள்ள மணிகள் வீசும் ஒளி. **புஜங்கம புரஸ்ஸரபோகி** – ஆதிசேடன். **பாதஸ்பரிசனை** அடி– வருடுதல். **நாபி** – உந்தி. **களமகணிசம்** – கதிர்கள்.

சதுர்வக்த்ரன்-நான்முகன். **சதுர்த்வ்யாக்ஷன்** – எட்டுக் கண்களுடையவன். **விஜ்ரும்பணே** – செருக்கு. **மகோததிகள்** – கடல்கள். **சுகேதுசுதைசுந்தரதை** – தடாகையின் அழகு. **ஹரிஹயன்**–இந்திரன். **தாத்தராஷ்ட்ரர்**– துரியோதனுதியர். **தசவதனன்** – இராவணன். **வானரத்வஜன்** – குரங்குக்கொடியுடைய அருச்சுனன். **வித்யாதர ஹிரண்யகர்பன்** – வித்தைக்கும் செல்வத்திற்கும் உறைவிட மானவன். **வஸ்து வாஹனம்**-பொருளும் ஊர்தியும். **சித்தி செய்த** – உயிர்நீத்த. **சோமபானமஞ்சுத்தர்** – சோமபானம் செய்து மனத்தெளிவு அடைந்தவர். **அக்ரமாகிய** – முதன்மை வாய்ந்த. **ஹரிசரண கமல சேகரன்** திருமாலின் திருவடித் தாமரைகளைத் தலையிற் சூடியவன். **அவனிசுரர் குலத்திலகன்** – நிலத்தில் உள்ள தேவர் என்னும் குலத்தினரின் திலகம் போன்றவன். **மதுராபுர பரமேஸ்வரன்** – மதுரை நகரின் தலைவன். **மனிமகர கேதனன்** – பெண்கட்குக் காமன். **வஸுதாதிப வாஸுதேவன்** – மண்ணுக்கதிபதியான திருமால்; கொற்றவரில் திருமால். **ஆஹிதாக்கினி** – வேள்விவேட்டவன்.

13. தளவாய்புரச் சாசனத் தமிழ்ப் பகுதியின் இடையில் அமைந்துள்ள வடமொழிச் சுலோகத்தை எழுதிப் பொருளைக் கூறுக.

பிரசஸ்தி சேஷக்ருத் பாண்ட்யத்ரமிளாபரண: கவி:
கர்மாரச்ரேணி காமுக்யா சிவபாதாம் புஜாச்ரித:

என்பது தளவாய்புரச் சாசனத் தமிழ்ப் பகுதியின் இடையில் அமைந்துள்ள வடமொழிச் சுலோகம். இது அனுஷ்டுப் சுலோகம் ஆகும். 227—28ஆம் வரிகளில் கிரந்த எழுத்துக்களில் இது வெட்டப்பெற்றுள்ளது. தளவாய்புரச் சாசனத் தமிழ்ப் பகுதியை எழுதிய பாண்டித் தமிழாபரணன் என்னும் பாண்டி மாராயப்

பெருங்கொல்லனாகிய ஸ்ரீவல்லபனைப் பற்றிக் கூறுகிறது. "பாண்டியத்ரமிளர்களுக்கு அணியாகத் திகழ்பவனும், கருமாரர் கூட்டத்தில் சிறப்புப் பெற்றவனும், சிவபெருமானுடைய பாதங்களாகிய தாமரையைத் தியானிப்பவனுமாகிய கவி இந்தப் பிரசஸ்தியை எழுதினான்" என்பதிச் சுலோகத்தின் பொருளாகும்.

IV

வீரபாண்டியனின் சிவகாசிச் செப்பேடுகள்

1. சிவகாசிச் செப்பேடு – குறிப்பு வரைக.

சிவகாசிச் செப்பேடுகள் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் என்னும் அரசனால் வெளியிடப் பெற்றவை. இச்செப்பேடுகள் சிவகாசி ஒரகண்டே கனகையநாயுடு குடும்பத்தாரிடம் இருந்தன; திரு. இரா. நாகசாமி அவர்களால் கண்டுபிடிக்கப் பெற்றுச் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் சேர்ப்பிக்கப்பெற்றன.

சிவகாசிச் செப்பேடு 5 இதழ்களுடையது; மூன்றும் ஏடு இரண்டு துண்டுகளாகக் கிடைத்துள்ளது; ஐந்தாம் ஏடு ஐந்து துண்டுகளாக உடைந்துள்ளது; ஒரு துண்டு கிடைக்கவில்லை. ஏடுகள் வளையத்தில் கோக்கப் பெறவில்லை; முத்திரையும் காணப்படவில்லை.

செப்பேடு வடமொழிப் பகுதியும் தமிழ்ப் பகுதியும் உடையது. சமஸ்கிருத சுலோகங்கள் 26 காணப்பெறுகின்றன. இப்பகுதி கிரந்த எழுத்துக்களால் எழுதப் பட்டுள்ளது. வழக்கம்போல இப்பகுதியில் றகர ழகரங்கள் வட்டெழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. இப்பகுதியில் பாண்டிய மன்னர் மரபும் கொடைச் செயலும் கூறப் பட்டுள்ளன. இது 1–46 வரிகளில் அமைவது.

தமிழ்ப்பகுதி (46–117) வட்டெழுத்தால் எழுதப்பட்டுளது; செய்யுளும் உரைநடையுமாக உள்ளது; பாண்டியர் திறல், மாறுபரணனன், வீரபாண்டியன் ஆகியோர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. ஸ்ரீ வீரபாண்டியன் மகாபிஷேகம் மகிழ்ந்த நாளில், சாசனச் சுலோகம் செய்த வாசுதேவப் பீதாம்பரபட்டன் என்பவனுக்குச் சாசன மங்கலம் என்னும் பெயரால் ஏகபோகப் பிரமதேயச் சிற்றூர் தரப்பெற்றது எனக் கூறுகிறது.

2. இன்னன பலதிறல்செய்த பாண்டிய பரமேஸ்வரராள் பரம்பரை – பலதிறல்கள் யாவை?

சிவகாசிச் சாசனத்தில் பாண்டிய வேந்தர் பரம்பரையினர் செய்த அருஞ்செயல்களாகக் கூறப்பட்டுள்ளன பின்வருமாறு:

(1) சந்திரன் வழியில் தோன்றி இம்மண்ணுலகு முழுமையையும் ஆண்டமை; (2) முன்பு இந்திரன் முடியை வளையால் உடைத்தமை; 3) இமயத்தில் தன் சின்னமாகிய கயலைப் பொறித்தமை; (4) ஆயிரம் யானைகட்கு உணவிட்டமை; (5) அகத்தியனோடு தமிழ் தெரிந்தமை; (6) வானவர்க்குத் தூது சென்றமை; (7) பெரிய கடலின் வரவினை மாற்றியமை; (8) கடலைக்கடைந்து அமிர்தம் கொண்டமை.

3. பாண்டியராற்றிய அருஞ்செயல்களாகச் செப்பேடுகள் கூறும் செய்திகள் யாவை?

(கல்வெட்டெண் 3ல் பதில் 3ம் 4ல் 2ம் காண்க)

4. சிவகாசிச் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மன்னர் மரபினைக் கூறுக.

*சிவகாசிச் சாசனம் வரலாற்று வேந்தர் மூவரைப் பற்றிய சில புதுச் செய்திகளைத் தருகிறது. இச்சாசனத்தில் "**மாறபரணன்** என்னும் வேந்தன், மன்னவர்கோன், இராச மல்லன் என்னும் சிறப்புப் பெயர்களுடையவன்; இம் மன்னன் சேர அரசன் (இரவி என்பவனின்) மகளை மணந்தான். இவள்பால் **வீரபாண்டியன்** என்பவன் பிறந்தான். இவ்வீரபாண்டியன், வீரகேரளன், விஜய கஞ்சுகன், விசாலசீலன் என்னும் சிறப்புப் பெயர் களுடையவன்" — என்ற செய்திகள் கூறப்பெற்றுள்ளன.*

சோழவரசன் இராசாதிராசன் I (1018-1054) "தென்னவர் மூவரை வென்றான்; மாறபரணன் தலையை அரிந்தான்; வீரபாண்டியனை (வீரகேரளனை)க் கொன்றான்; சுந்தரபாண்டியனைத் துரத்தினான்" என அவ்வரசனுடைய மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன. இச்சிவகாசிச் சாசனத்தால் மாறபரணன், அவன் மக்கள் வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் ஆகியோர் சமகாலத்தவர்" என்பது தெரிய வருகிறது.

11-ஆம் நூற்றாண்டில், இராசாதிராசனால் கொல்லப் பெற்ற வீரகேரளன் என்னும் பெயருடைய வீரபாண்டியனின் 3-ஆம் ஆண்டில் சிவகாசிச் செப்பேடுகள் வெளியிடப் பெற்றனவாகும்.

5. சிவகாசிச் சாசனம் கூறும் செய்திகளைத் தருக.

வீரபாண்டியன் தன்குலம் தழைக்குமாறு தமிழ்க்கூடல் நகரில் மணிமுடி சூடி மகாபிஷேகம் செய்துகொண்டான். இக்காலத்தில், சாசனச் செய்யுட்களை முறைப்பட இயற்ற வல்ல பீதாம்பரபட்டன் என்பவனைக் கௌரவித்து, "நீ

கவிதை செய்க" எனக் கூறினான். கவிஞன் மனம் மிக மகிழ்ந்தான்; விதிப்படி அனுஷ்டுப் சுலோகம் இயற்றினான். வீரபாண்டியன் இச்சுலோகங்களைக் கேட்டு அவற்றின் விழுப்பம் நோக்கி மிக மகிழ்ந்தான்.

வீரபாண்டியன் தன் மூன்றாம் ஆட்சியாண்டில், அண்ட நாட்டில் மின்னுக்கொடி நெடுமாட வீதிகளையுடைய வீரபாண்டியபுரமான செல்லூரில் தங்கி இருந்தான். அப்போது போர்க்கூற்றத்தில் இருந்த இரணசிங்க மங்கலத்தைச் சேர்ந்த, 'பிரம்மஸ்ரீ துங்கராஜனை வனத்தன்' என்பவன் "பீதாம்பரப்பட்டனுக்கு ஏகபோகப்பிரமதேயமாக நிலம் தரவேண்டும்" என விண்ணப்பித்துக்கொண்டான்.

வீரபாண்டியன், "மேல்வேம்பநாட்டு நலபுரத்துக் கொப்பத்தில் உள்ளதும், புறஞ்சில் என்னும் கோலால் அளக்கப்பெற்றதும், இருபோகம் விளையக்கூடியதுமான வாழைக்கோடு என்னும் பெயருடைய மூன்றுவேலி நன்செய் நிலமும் குடியிருப்பதற்காக முருகூரில் உள்ள பொழில்சூழ் முதுநிலத்தில் பத்து மாவும், 'மன்னுசாசனமங்கலம்' என்னும் பெயரிட்டு, ஏகபோக பிரமதேயமாகப் பிடி சூழ்வித்து, ஊராண்மையில் வேறுபிரித்து, நாட்டாண்மை யுடன் கூட்டிக் காராண்மையும் மீயாட்சியும் உள்ளடங்கக் கற்பித்தபடியே சாசனமும், அறையோலையும் தனித்தனியே செய்து, பூசுரன் பீதாம்பரனுக்குக் கொடுத்துப் பூதலத்தில் என் புகழை நிறுத்துக" என்று மேல்வேம்பநாட்டார்க்கு ஆணை பிறப்பித்தான்

அரசனுடைய ஆணையை, ஆக்ஞப்தி, திருந்து அதிகாரி, கண்காணிகள், புரவுவரி அதிகாரிகள் ஆகியோர் கூடி நிறைவேற்றுகின்றனர். ஆணை நாட்டுச் சபையாரை அடைகிறது.

'அனுத்தரப் பல்லவரையனுயின மாறஞ்சோலை' என்பவன் பெண்யானையின்மீது அமர்ந்து செல்ல 'அரையன் திருச்சிராப்பள்ளி' என்பவன் யானையை நடத்திச்சென்றான். மேல்வேம்பநாட்டவரும் பிரமதேயக் கிழவரும் நலபுரத்து ஊரவரும் உடன் இருந்து நிலத்தெல்லைகளை வழிகாட்டிச் சுற்றிவந்தனர். 'மாயன் பதக்கு' என்னும் இடத்தில் துவங்கி யானையால் வலம் வரப்பட்ட பகுதிக்குட்பட்ட நிலமனைத்துக்கும் நாட்டுச் சபையார் எல்லை தெரித்துக் கல்லும் கள்ளியும் நாட்டினர்; அறையோலை செய்தனர்; சீதாம்பரபட்டனுக்கு ஏகபோக பிரமதேயமாகத் தந்தனர்.

6. குறிப்பு வரைக.

1. **வீரபாண்டியன் கால அரசியல் அலுவலர்:**

(அ) தென்னவன் பிரம்மஸ்ரீ துங்கராசனுயினவனத்தன்: இவன் சிவகாசிச் சாசனத்தின் **விக்ஞப்தி** (விண்ணப்பம்) செய்தவன்). துங்கராஜனுயினவனத்தன் என்பது இவன் பெயர். தென்னவன் பிரும்மஸ்ரீ என்பது பட்டப்பெயர். இது அரசனல் அளிக்கப்பெறுவது. இவன் போர்க் கூற்றத்தில் இருந்த இரணசிங்கமங்கலத்தைச் சேர்ந்தவன்; கார்க்கிய குலத்தினன்; ரவி என்னும் பெயருமுடையவன்.

(ஆ) தென்னவன் உத்தர மந்திரியாயின இயக்கஞ் செல்வன்: இவன் இச்சாசனத்தின் **ஆணத்தி** (ஆணையை நிறைவேற்றுபவன்) ஆவன். இவன் கணையரப்பள்ளி (கணையர்பள்ளி) என்னும் ஊரில் வாழ்ந்தான். தென்னவன் உத்தரமந்திரி என்பது பட்டப்பெயர். 'திருமந்திர ஓலை நாயகம்' என்னும் பணியும் ஆற்றிய இவன் அமைச்சனுமாவன்; சாந்திவிக்கிரகம் முதலான காரியங்களைச் செய்தவன். "பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு" என்ற 633-ஆவது குறளில் கண்ட 'பிரித்தலும் பொருத்தலும்' சந்திவிக்கிரகம் ஆகும். Foreign Minister என்று Dr. Altekar கூறுவர்.

(இ) **தமிழ்ப்பேரரையன் :** இவன் இச்சாசனத்தை **நிறைவேற்றும் அதிகாரி** ஆக இருந்தான்; இராசசிம்மன் என்னும் பெயருடையவன்; தமிழ்ப் பேரரையன் (த்ரமிள மகாராசன்) என்னும் பட்டப்பெயருடையவன்; கூடல் மாநகரில் வாழ்ந்தவன்.

(ஈ) **அணுக்கம் :** அரசனுடைய உடன் கூட்டத் தலுவலர்; மிக நெருக்கமானவர். அணுக்கப்பிள்ளை களான, தென்பருத்திக்குடி நாட்டில் உள்ள செங்நிலக் குடியைச் சேர்ந்தவனை சடையன்காளி என்பனும், வெள்ளப்ப நாட்டில் உள்ள வடிநெடுவேல் என்னும் ஊரினைச் சேர்ந்தவனாகிய கேசவங்கணபதி என்பவனும் இச்சாசனத்தின் **கண்காணி**களாக இருந்தனர்.

(உ) **புரவுவரி :** புரவுவரி – நிலவரி. நிலவரி பற்றிக் கவனிக்கும் அதிகாரிகளின் கழகம் 'புரவுவரித் திணைக் களம்' எனப்பெறும். இக்கழகத்தில் இருந்த அலு வலரும் 'புரவுவரி' எனப்பெறுவர். புறத்தாய நாட்டில் உள்ள நற்றராயக் குடியினைச் சேர்ந்த அரையன் விரையாச் சிலை என்பவனும், திருக்கானப்பேர் கூற்றத்துச் சிறு சேவூரினனாகிய காடம்படாலகன் என்பவனும். சோழ நாட்டு மாங்குடியினனாகிய சோலை கிழவன் என்பவனும் விக்கிரகாம வளநாட்டுக் கண்ணனூரினனாகிய இளவம் புல்லன் என்பவனும் புரவு வரிகளாவர். இவர், இச்சாச னத்தின் **புரவுவரி பற்றிய மாற்றங்களைக் குறித்து வைத்தவர்** எனலாம்.

(ஊ) **மாறஞ்சோலை :** இவன் பெண்யானையின்மீது அமர்ந்து, மன்னுசாசனமங்கலத்தின் **எல்லைகளைச் சுற்றி வந்தவன்.** மாறன் சோலை என்பது இயற்பெயர்; **அநுத்தரப்பல்லவரையன் என்பது பட்டப்பெயர். இவன் வீரபாண்டியனின் யானைப் படைத்தலைவன் (கஜாத்யக்ஷன்) ஆவன்.**

(எ) **திருச்சிராப்பள்ளி:** இவன் மன்னுசாசன மங்கலத்தை வலம் வந்த **யானையை நடத்தியவன்** முள்ளி நாட்டில் இருந்த குளத்தூரின் தலைவன்; திருச்சிராப்பள்ளி என்பது இயற்பெயர்.

2. **பீதாம்பரபட்டன்:** இவன் வீரபாண்டியனுடைய அவைக்களப் புலவன். கோவிந்தசாமிப்பட்டசோமயாஜியின் மகன் வாசுதேவபட்டன்; வாசுதேவபட்டனுக்கு ஆர்யைபால் பிறந்தவன் ஸ்ரீ பீதாம்பரபட்டன். இவன் இலக்கண முறைப்படி சாசனச் சுலோகங்களைப் பாடுதலில் வல்லவன்; அந்தணருட் சிறந்தவன்; முள்ளி நாட்டில் இருந்த, தென்வீரதரமங்கலத்தினன்; ராதிதர கோத்திரத்தினன்: ஆச்வலாயன சூத்திரத்தினன்; அந்தணர்க்கு விளக்கானவன். வீரபாண்டியன் முடிசூடிக்கொண்ட நாளில், அரசன் வேண்டியதற்கிணங்க இவன் அனுஷ்டுப் சுலோகம் இயற்றினன். அனுஷ்டுப்பின் விழுப்பங்கண்டு மகிழ்ந்த வீரபாண்டியன் தன் மூன்றும் ஆட்சியாண்டில் மன்னுசாசனமங்கலத்தை ஏகபோகப் பிரமதேயமாக இவனுக்குத் தந்தான்.

3. **சாசனமங்கலம்:** வீரபாண்டியனல் ஸ்ரீ பீதாம்பர பட்டனுக்களிக்கப்பெற்ற ஏகபோக பிரமதேயத்துக் கிடப்பட்ட புதுப் பெயர். கொப்பத்தில் அமைந்த வாழைக் கோடுட்பட்ட மூன்றுவேலி நிலமும், முருகூரின் பொழில் புடை சுற்றிய நிலம் 10 மாவும் சேர்ந்து இப்பெயர் பெற்றன.

4. **வீரபாண்டியபுரம்:** வீரபாண்டியனல் ஏற்படுத்தப்பெற்ற நகரம்; அண்டநாட்டில் இருந்தது; 'அண்டநாட்டு மின்னுக்கொடி நெடுமாட வீதி வீரபாண்டியபுரமான செல்லூர்' எனப்படுகிறது. வீரபாண்டியன் தன் 3-ஆம் ஆட்சியாண்டில் இங்கு எழுந்தருளி இருந்து ஸ்ரீ பீதாம்பர பட்டனுக்கு ஏகபோகமாக நிலம் தர உத்தரவு பிறப்பித்தான்.

5 **பராங்குசமங்கலம் :** *பெண்யானை 'நாட்டுப் பெருங்காலில் இருந்து மேதகு பரங்குசமங்கலத்துக்குச் சென்றது' எனச் சாசனம் கூறுகிறது. இவ்வூர் அரிகேசரி பரங்குச மாறவர்மன் பெயரால் ஏற்பட்டது ஆகலாம்.*

6. **மகாபிஷேகம் :** *முடிசூட்டு விழா. மந்திரங்கள் முழங்க இந்நாளில் நீராடுவதனாலும், முடிகவிக்கப் பெற்ற பின்பு புண்ணிய நீர் முடிமீது சொரியப் பெறுவதனாலும் இப்பெயருற்றது. அகத்தியர் பாண்டியனுக்கு முடிசூட்டியதனைக், 'கும்ப சம்பவ கர பிராப்த அபிஷேகக் கிரிய:' என்று குறித்தலை நோக்கும்போது, முடிசூட்டுவிழா பட்டாபிஷேகம் எனவும், மகாபிஷேகம் எனவும் கூறப் பட்டமை புலனாகும்.*

7. **ராதிதர கோத்ரம் :** *ரதீதர கோத்திரம்; ரதீதர முனிவரை முதலாக உடையவர்.*

8. **ஆச்வலாயன சூத்திரம் :** *கிருஹ்யசூத்திர நூல்கள் குடும்ப வாழ்க்கைச் சடங்குகளைக் கட்டுப்படுத்துவன. பல கோத்திரத்தவர் ஒரு சூத்திரத்தைப் பின்பற்றுவர். இவையும் முனிவரால் பெயர்பெறும்.*

9. **நில அளவை :** *மாவும் வேலியும்; 100 குழி — 1 மா. இருபதில் ஒரு கூறு.* **வேலி** *— சுமார் $6\frac{2}{3}$ ஏக்கர் அளவுள்ள நிலம்.*

10. **ஏக போக பிரமதேயம் :** *ஒரு சிற்றூர் முழுமையையும் ஒரு அந்தணனே பெற்று முழுமையாக அனுபவித்தல்*

11. **ஊராண்மையில் வேறொன்றாக்கி நாட்டாண்மையோடுடன் கூட்டுதல் :** *ஊராட்சியில் இருந்து பிரித்து நாட்டாட்சியோடு சேர்த்தல். ஒரு குறிப்பிட்ட பகுதியை, ஒருவனுக்கே உரிய ஏகபோக உரிமை படைத்த பிரமதேயம் ஆக்கும்போது அது முன்பிருந்த ஊரிடம் உள்ள எல்லாத் தொடர்புகளையும் இழந்து ஒருவனுக்கேவுரிய*

தனியூராவதனால் நாட்டுச் சபையில் தனிப் பிரதிநிதித்துவம் பெறும்.

12. **ஈழக் கழஞ்சு ஈரேமு :** 14 ஈழக் காசுகள். ஈழக்கழஞ்சு – இலங்கைக் கழஞ்சு எனப் பொருள்படும். இச்சொல் ஈழக் காசினைக் குறிப்பதாகலாம். (ஈழக் காசு ½ கழஞ்சு எடையுடைய சோழர் கால நாணயம்)

13. **தண்பொருநம் :** ஆறு: சிவகாசிச்சானத்து யானை சென்ற பகுதியில் குறிக்கப் பெறுகிறது. தண்பொருநை; தாமிரபர்ணி ஆறாகலாம்.

14. **பெருங்கால் :** பெரியவாய்க்கால். தற்காலத்து, ஆற்றில் இருந்து பிரியும் கால்வாய்களைப் பெரிய வாய்க்கால் (A Class Canal) என வழங்குவர். இதனைப் போலப் பேரளவில் அமையும் கால்வாய், பெருங்கால். நாட்டுப் பெருங்கால், நெய்தலம் பனைநாட்டுப் பெருங்கால், எழினாட்டுப் பெருங்கால் என்பன குறிக்கப்பெற்றுள்ளன.

15. **சூழ்புனல்அணி கண் :** இது நீர்வருவதற்குரிய கண்களை (Sluice) உடைய மடை அல்லது மதகினைக் குறிக்கும். இச்சாசனத்தில், "வாழைக் கோட்டிதனுக்கே பாய்ந்த வாய்க்காலூடே போந்து சூழ்புனலணி **கண்ணிற்** காய்பண்ணை தன்னைத்துன்ன வந்துமற்றிதனின்று **கண்ணிற்**காய் வடதலைத் துடவைகளுக்கு இறைக்கப் பாய்கின்ற சிறுகாலின் ஊடு போந்து **கண்ணிற்**காய் வடகீழ்த்தலைத் துடவைகளை நண்ணவந்து" என்றுள்ள பகுதியால் வாய்க்கால்களில் கண்களையுடைய மதகுகளிருந்தமை அறியலாம்.

16. **சிறுகால் :** சிறு வாய்க்கால். இந்நாளில் பெருவாய்க்காலில் இருந்து பிரியும் வாய்க்கால்களை இரண்டாம் நிலையினதாகக் கருதுகின்றனர். 'சூழ்புனலணி கண்ணில் இருந்து வடதலைத்துடவைகளுக்குப் பாய்கின்ற சிறுகால்' இச்சாசனத்தில் குறிக்கப்பெறுகிறது.

17. **எழில் விளங்கு பேரணை :** *பெரிய வாய்க்கால்களில் அணைகளமைக்கப்பட்டிருந்தன. இச்சாசனம், 'ஒங்கெல்லை நாட்டுப் பெருங்காலில் நின்றும் கிழக்குநோக்கி நல்வரவேகட் கிட்டம்பட வணைக்கின்ற* **எழில் விளங்கு பேரணை** *உட்பட' எனக் குறிக்கிறது. அது அழகிய பெரிய அணை; நாட்டுப் பெருங்காலில் இருந்தது.*

18. **எதிராமாண்டு குறித்தல் :** *சிவகாசிச் சாசனம் வீரபாண்டியனின் "இரண்டாமாண்டின் எதிராமாண்டில்" வெளியிடப்பெற்றது. இத்தகைய இரட்டை யாண்டுகள் பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்பெறும். முன்னால் உள்ள ஆண்டையும் பின்னால் உள்ள ஆண்டையும் கூட்டினால் கிடைக்கும் ஆண்டே கல்வெட்டு வெளியிடப்பெற்ற ஆண்டாகும். முன்னது உத்தரவாகிய ஆண்டு எனவும், பின்னது உத்தரவு செயற்படுத்தப்பட்ட காலம் எனவும் கொள்ளலாம்.*

19. **அனுஷ்டுப் :** *வடமொழிச் சுலோகம் நாலு பாதங்களைக்கொண்டது. ஒவ்வொரு பாதத்திலும் 8 எழுத்துக்கள் வீதமாக, இரண்டு அடிகளால், 32 எழுத்துக்களால் ஆவது. கணம் என்னும் முதல் எழுத்துக்களின் தொடக்கத் தொகுதியடிப்படையில் 9 வகைகளையுடையது. — இது 'விருத்தரத்னாகரம்' என்னும் நூலிற் கண்டது.*

20. **நீர்நிலனும் முதுநிலனும் :** *வாழைக்கோடு என்னும் நிலம் இருபூவிளைவது நீர்நிலன். இருபூவிளையும் நீர்நிலம் — இரண்டுபோக சாகுபடியுடைய நன்செய். முதுநிலன் — பழைய நிலம்; குடியிருப்புக்குரியது.*

21. **காமருகோல் புறஞ்சில் :** *புறஞ்சில் என்பது அளவுகோல். நலபுரத்துக் கொப்பதில் "வாழைக் கோடு என்னும் நிலம் இக்கோலால் அளக்கப்பெற்றது" என்பது சிவகாசி சாசனத்தில் கண்டது.*

22. **கல்பமைய சாசனமும் அறையோலையும் தனித்தனியே சமைப்பித்து** - *கற்பித்தபடியே சாசனமும் அறையோலையும் தனித்தனியே உண்டாக்கி. அரசனுடைய ஆணையாகிய ஸ்ரீமுகம் எனப்படும் திருமுகத்தை ஓலைப்பிடி* பாடாகக்கொண்டு பொதுமக்கள் பலரும் அறியுமாறு கல்லில் வெட்டப்பெறுவது, **கல்வெட்டு**. நிலம் பெற்றோரிடம் நிலைத்திருக்கும் வகையில் கொடுக்கப்பெறும் ஆவணம், **செப்பேடு.** *இவ்விரண்டும்* **சாசனம்** எனப்பெறும். *நாட்டுச் சபையார் நில உரிமை மாற்றத்தைப் பொது மக்கட்கு அறிவிக்கத் தயாரிக்கும் ஓலை,* **அறையோலை.** பொதுமக்கட்கு அறிவித்தல் - **அறையோலை செய்தல்.** *இனிச் சாசனம் அரசனின் ஸ்ரீமுகத்தையும், அறையோலை* நாட்டவரால் எல்லை குறித்து எழுதப்பெற்ற ஓலையையும் *குறிக்கும் என்று சிலர் கூறுவர்.*

7. வடசொற்பொருள் :

வீரகேரளன் - கேரளமும்கொண்ட வீரன். **விநய கஞ்சுகன்** - விநயத்தைக் கவசமாகக் கொண்டவன்; **விநயம்** - *கடுஞ்சொல் இன்மை.* **விசாலசீலன்** - *நிறைந்த ஒழுக்கமுடையவன்.* **சாசனஸ்லோகம்** - *சாசனத்தில் கண்ட வடமொழிச் செய்யுள்.* **பூசுரர்; விப்ரர்** - *அந்தணர்.*

8. பின்வரும் பகுதியை விளக்குக.

> *ஒருதன்மை இருபிறப்பில் முச்செந்தீ நால்வேதத்து*
> *அருமரபில் ஐவேள்வி ஆறங்கத்து அந்தணாளன்.*

சிவகாசி சாசனத்திலமைந்த இத்தொடரில் **எண்ணங்காரம்** *அமைந்துள்ளது.* **ஒருதன்மை :** *அந்தணர்க்கு விளக்காம் ஒருதன்மை.* **இருபிறப்பு :** *பிறப்புக்கு முன்னும் பின்னரும் ஆகிய இரு நிலைகள்.* **முச்செந்தீ; நால்வேதம்; ஐவேள்வி :** *3ல் வினா 9 காண்க.* **ஆறங்கம் :** *வேதாங்கங்கள் - சிட்டை; வியாகரணம்; சந்தஸ்; நிருக்தம் சோதிடம்; கல்பம்.*

9. பாண்டியர் சாசனங்களில்கண்ட திருவிளையாடற் புராணச் செய்திகளைத் தருக.

1. **இந்திரன் ஆரம் பூண்டது:** *'ஹரியயனது ஆரம் பூண்டும்' எனத் தளவாய்புரச் செப்பேட்டிலும், 'விண்ணவர்கோன் அன்றிட்ட எழிலாரம் கழுத்திலங்க' எனச் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் மெய்க் கீர்த்தியிலும் குறிக்கப்படுகிறது.*

2. **இந்திரன் முடியினை வளையால் உடைத்தமை:** *'அவன் முடியொடு வளையுடைத்தும்' எனத் தளவாய்புரச் செப்பேட்டிலும் 'பண்டிந்திரன் முடிவளையுடைத்தும்' எனச் சிவகாசிச் செப்பேட்டிலும் குறிக்கப்பெறுகிறது.*

3. **வானவர்க்குத் தூதாகச் சென்றமையும் கடல் சுவற வேல் எறிந்தமையும்:** *'வானவர்க்குத் தூது சென்றும் மால் கடலின் வரவுமாற்றியும்' எனச் சிவகாசிச் செப்பேட்டிலும் 'விரிகடலை வேலின் மீட்டும்' எனத் தளவாய்புரச் செப்பேட்டிலும் கூறப்பட்டுள்ளது.*

4. **வடிம்பலம்ப நின்ற** *பாண்டியனைத், 'திசை யானையின் கும்பகூடத்து உலவிய செழுமகரகுலம் விசையொடு விண்மீனோடு போர் மிக்கெழுந்த கடல் திரைகள் சென்று தன் சேவடி பணிய அன்று நின்ற ஒருவன்' எனத் தளவாய்புரச் செப்பேடு குறிக்கிறது.*

5. **தமிழ்ச்சங்கம் கண்டமை:** *'தென் மதுராபுரி கண்டும் அங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்' எனத் தளவாய்புரச் செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ளது.*

10. அரசாணை நிறைவேற்றப்பெறுதலைப் பாண்டியர் சாசனங்கள் எவ்வாறு விளக்குகின்றன?

"அரசன் ஆணை பிறப்பிப்பான். ஆணை எழுதப் பெற்ற ஓலை, நாட்டுச் சபையாரை அடையும். நாட்டுச் சபையார் ஆணையை நிறைவேற்றுவர். இச்சபையாருக்குத் துணையாக அரசு அதிகாரிகள், ஆணத்தியாக (ஆணையை நிறைவேற்றுபவராக) வும் இருந்து செயல்படுவார். மற்றும் கணக்கரும், மத்யஸ்தரும் உதவுவர். நாட்டுச் சபையார் நில எல்லைகளை யானையால் வலமாக வந்து, தானம் பெற்றவருக்குத் தருவர்" எனப் பாண்டியர் செப்பேடுகள் காட்டுகின்றன.

தளவாய்புரச் சாசனம், ஒருவன் விண்ணப்பித்துக் கொள்ள அரசன் ஆணை பிறப்பித்தான் என்றும் ஆணையை நாட்டுச் சபையாருடன் ஆக்ஞப்தி, மத்யஸ்தன், கணக்கர் ஆகியோர் இணைந்து நிறைவேற்றினர் என்றும் கூறுகிறது. அரசாணை புரவில் இட்டு மஹாசபை குறிப்பொடு கொடுக்கப் பெறும் என்றும் இது கூறுகிறது.

சிவகாசிச் சாசனம் இம்மூவரோடன்றி அணுக்க அதிகாரிகளும் புரவுவரியலுவலரும் செயலாற்றியமையை விளக்குகிறது. விளக்கம் 75-6; 89-91 காண்க.

V

பார்த்திவசேகரபுரம் சாசனம்

1. பார்த்திவசேகரபுரம் சாசனம் – குறிப்பு வரைக.

திருவனந்தபுரம் அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தில் (ஹுசூர்க் கச்சேரியில்) உள்ள அலமாரியொன்றில் செப்புப் பட்டய ஏடுகள் ஆறு கிடைத்தன. இவ்வாறனுள் ஒன்று மட்டும் விக்கிரமாதித்யவரகுணன் என்னும் ஆய்குல

மன்னனின் திருநந்திக்கரை சாசனம்; ஏனைய ஐந்து இதழ்களும் ஒரே செப்பேட்டுக்குரியவை; இவ்வரசனின் தந்தையான கோக்கருநந்தடக்கனின் 9-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்றவை. இச்செப்பேடுகள் ஹுசூர் கச்சேரி அலமாரியில் இருந்து கிடைத்தமையால் 'ஹுசூர் அலுவலகப் பட்டயம்' எனவும், பார்த்திவசேகரபுரம் பற்றிக் கூறுவதனுல் 'பார்த்திவசேகரபுரம் சாசனம்' எனவும் கூறப்பெறும்.

இச்சாசனத்தின் ஐந்து ஏடுகளும் வளையத்தில் கோக்கப் பெருமல் இருக்கின்றன; சேரநாட்டுச் சாசனங்களில் கையாளப்பெற்ற வட்டெழுத்தால் எழுதப்பெருமல், தமிழ் எழுத்துக்களால் எழுதப்பெற்றுள்ளன. முதல் மூன்று ஏடுகளும் ஒருவராலும் ஏனைய இரண்டும் மற்ருெருவராலும் எழுதப்பெற்றுள்ளன. முதல் இதழ்க்கும் இரண்டாம் இதழ்க்கும் இடையே தொடர்ச்சி இல்லை. ஏடுகளில் எண்ணிடப்பெறவில்லை. இச்சாசனம் 73 வரிகளால் ஆகியது; 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் துவங்கி அவ்வாறே முடிவது.

இது கோக்கருநந்தடக்கன் என்னும் ஆய்குல மன்னனுல் வெளியிடப்பெற்றது. இவ்வரசன் கருநந்தன் என்பவனின் மகன். இவன் காலத்துப் பாண்டிய மன்னன் முதல்வரகுணன். இந்தச் சாசனத்தின் இறுதி ஏட்டில் உள்ள வடமொழிச் சுலோகம் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் கருநந்தடக்கனுக்கும் சிலேடையாக அமைந்துள்ளது. அச்சுலோகம் "இவன் யாதவ குலத்தவன் என்றும் ஸ்ரீ வல்லபன் என்னும் பெயருடையவன்" என்றும் கூறுகிறது.

கலியுகம் தொடங்கிய பதினன்கு நூருயிரத்து நாற்பத்தொன்பதாயிரத்து எண்பத்தேழாம் (14,49,087) நாளில்

இச் சாசனம் வெளியிடப்பெற்றது. இங்ஙகள் கோக்கருநந் தடக்கனின் ஒன்பதாம் ஆட்சியாண்டின் 15-ஆம்நாள் ஆகும். திருவிதாங்கூர்த் தொல்லியல் தொகுதியில், முதன் முதலாக இச்சாசனத்தைப் பதிப்பித்த திரு. கோபிநாதராயரவர்கள், ஆண்டுக்கு 365¼ நாள் வீதமாக கணக்கிட்டுக் கி. பி. 864-5-இல் இச்சாசனம் வெளியிடப்பெற்றிருக்கலாம் என்றனர். சுவெல், பிளீட், முதலிய அறிஞர் சரியாகக் கணக்கிட்டு, இச்சாசனம் கலியப்தம் 3967 கர்க்கடக மாதம் 15-ஆம்நாள் கி.பி. 8-7-866 இல் வெளியிடப்பெற்றது என்பர்.

கோக்கருநந்தடக்கன் முன்சிறை என்னும் ஊரவரிடம் இருந்து பரிவர்த்தனை மூலமாக 'உழக்குடிவிளை' என்னும் நிலம் பெற்றான்; அங்கு விஷ்ணு படாரகர்க்கு ஆலயம் செய்தான்; அப்பகுதிக்குப் பார்த்திவசேகரபுரம் எனப் பெயரிட்டான்; காந்தளூர்ச் சாலையைப் போலவே இக் கோயிலிலும் 95 சட்டர் உண்ணத்தக்க உணவுச்சாலை ஒன்றினை இயற்றினன்.

கோயிலின் அகநாழிகைச் சென்னடைப் பணிகளுக்கும், நொந்தாவிளக்கு எரிப்பிக்கவும், ஏழுநாள் திருவிழா நடத்தவும், பணிமக்களுக்கு விருத்தியாகவும், சாந்தி செய்வான், அகநாழிகைப்பணி செய்வான், பஞ்சகவ்யம் தெளிப்பான், பூ இடுவான், இசைக்கருவிகள் இசைப்பார் ஆகியோருக்கு விருத்தியாகவும் நிலநிவந்தம் தந்தான்.

காந்தளூர்ச் சாலையைப் பின்பற்றி இக்கோயிலில் அமைக்கப்பெற்ற சாலையை, நாட்டுப் பெருமக்கள் அறப்பணிகளைக் காப்பதுபோலக் காக்கவேண்டும் என்பது துவங்கிச் சாலை பற்றிய அரிய குறிப்புகள் பலவற்றைச் சாசனம் தருகிறது. அவை:- சாலையின் உண்கலவரையறை, நுழைவுத் தகுதிகள், சட்டர்கள் வாரம் ஓதும் பரிசு, வரையறைகள், பிழைத்தார்க்குரிய தண்டனைகள் என்பனவாம்.

இச் சாசனத்திற்குத் 'தெங்கநாட்டு வெண்ணீர் வெள்ளாளன், தெங்கநாடு கிழவனுயினை சாத்தன் முருகன்' என்பவன் ஆணத்தியாவான். 'திரையன் ஓமாயனுடு கிழவனுயினை குன்றப் போழன்' இதனை எழுதியவனுவான்.

2. பார்திவசேகரபுரச் சாசனச் செய்திகளைத் தருக.

கோக்கருநந்தடக்கன் தன் ஒன்பதாம் ஆட்சியாண்டின் 15-ஆம் நாளில் (கலியுக நாள் 14,49,087; 8-7-866) முடால நாட்டில் பசுங்குளத்தில் இருந்ததும், முன்சிறை என்னும் ஊரவர்க்குச் சொந்தமானதுமான, 'உழக்குடிவிளை' என்னும் நிலத்தைப் பரிவர்த்தனை மூலமாகப் பெற்றுன். தனக்கு உரியதான அந்நிலத்தைப் பெண் யானையால் சூழ்வித்தான்; திருக்கோயில் எடுப்பித்தான் ; அக்கோயிலில் விஷ்ணுபடாரகரைப் பிரதிஷ்டை செய்தான். இப்பகுதிக்குப் "பார்த்திவசேகரபுரம்" என்னும் பெயரிட்டான் ; காந்தளூர் என்னும் ஊரில் இருந்த அறச்சாலையின் விதிமுறைகளைப் பின்பற்றி, இவ்வூர்க் கோயிலில் தொண்ணூற்றைவர் உண்ணும் ஒரு சாலையையும் ஏற்படுத்தினுன்.

அகநாழிகைச் சென்னடை : கோக்கருநந்தடக்கன் பார்த்திவசேகரபுரம் திருக்கோயிற்கு அகநாழிகைச் சென்னடைப்புறமாக (நித்தியப் படித்தரச் செலவுகட்காகப்) பொழிசூழ் நாட்டூர்களில் ஒன்றுகிய குராத்தூர் என்னும் ஊரில் இருந்த, இடைக்குராத்தூர் என்னும் பகுதியில் வயலும் கரைகளும் உட்பட நிலமனைத்தையும் குடியுரிமை மேல்உரிமையுடன் தந்தான். இவற்றுடன், செங்கழுநாட்டில், ஐம்மாக்கொல்லையின் மேற்புறக் கொல்லைகளில் வெஞ்சைக் குளப் பாய்ச்சலுக்குரிய வெஞ்சைப்பொறை தடி 1; சாயறைக் கலம்பாடு தடி 3; நெடுமட்குளத்தால் நீர்பாயப் பெறுவதான நரியறைத் தடி 1; கொற்றனறைத் தடி 1; குளவறைத் தடி 1; கீரறைத் தடி 1; மாயிலறைத் தடி 1; தலைவிலைச்செய் தடி 2;

எருமையறை(த்தடி) 1; துடவர் (தடி) 2; பகைதமதாஙுகன தடி 1 ஆக 15 தடிகளை (வயல்களைத்) தந்தான். காராண்மைமீயாட்சி உள்ளடங்கத் தரப்பெற்ற இவ்வயல்கள் 'மடைப்பள்ளிநாழி' என்னும் நாழியால் 1200 நாழி விதைப்பாடு உடையவை.

பணி செய்வார்க்கு உரிய விதிகள் : இப்பூமியால் வருவாய் பெற்றுக் கோயில் கருவறையில் பணிசெய்பவர்கள் (1) பணிகளை எவ்வித தடையும் இன்றிச் செய்தல்வேண்டும். (2) அகநாழிகைப் பணிபுரியும் பரிசாரகர் மூலவரைத் திருமஞ்சன மாட்டுவதற்குப் பொழுது ஒன்றுக்குப் 12 குடநீர் வீதம் மூன்று பொழுதுகளுக்குமாக 36 குடம் தண்ணீர் கொண்டுவரவேண்டும். (3) பூ இடுபவன் தான் கொண்டு வந்த பூக்களால், இண்டைகளும் மாலைகளும் நிறையக் கட்டித்தருதல் வேண்டும்.

நந்தாவிளக்குப் புறம் : நொந்தா விளக்கு எரிப்பதற்காக மெதுகின் மேல்பாலுள்ள கீழூரில் இருந்த 'நெடுமண்' என்னும் பெயருடைய தோட்டத்தைத் 'தென்னாட்டுக் கோனையின சடையன் தனிச்செய்கை' என்பவனும் அவன் மரபினரும் குடிவார வருவாயைத் தாம் அனுபவித்துக் கொண்டு மேல்வாரத்தை விளக்குப்புறமாகத் தருமாறு விதித்துத் தானமாகத் தந்தான்.

திருவிழாப்புறம் : இவ்வரசன் (1) ஏழு நாட்கள் திருவிழா நிகழ்த்துவதற்கும் (2) பங்குனி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் தீர்த்தமாடவும் (3) இந்த ஏழு நாட்களிலும் இச்சாலையைச் சேர்ந்த சட்டப் பெருமக்களுக்கும், பணியாளர்களுக்கும் இரண்டு மடங்கு நாட்படி தருவதற்கும் (4) பிறசெலவுகளுக்குமாக மெதுகின் மேற்குப் புறத்தில் உள்ள கீழூர்க்கு உரிய பெருங்குளத்தினல் நீர் பாயும் (அ) ஆதனறை (ஆ) இளவாதனறை (இ) தலைத்

துடவை (௬) மஞ்சாடியறை (௨) பனையறை (௩) செத்தறை தடி 2; ஆக ஏழு தடிகளைத் தந்தான். இந்நிலப்பரப்பு 840 நாழி விதைப்பாடுடையது. இவற்றைத் தென்னாட்டுக் கோனாயின சடையன் தனிச்செய்கையும் அவன் மரபினரும் அனுபவித்துக்கொண்டு, உடன் வாரத்தில் கீழ்ப்பாதியைக் காரண்மையாகக் கொள்ளவும் மேற்பாதியைத் திருவிழாப் புறமாகத் தரவும் விதித்தான்.

பணிமக்களுக்கு விருத்தி: (1) தெங்கநாட்டினைச் சேர்ந்த விளப்பில் என்னும் ஊரில், தலைவிளப்பில் என்னும் பெயரும், பதினாழிக்காலால் எண்கலவித்துப் பாடும் உடைய நிலத்தையும், (2) இந்நாட்டு இளவேனாட்டு நல்லூரில் பதினாழிக்காலால் எண்கலவித்துப் பாடுடைய நிலத்தையும், (3) இந்நாட்டில் உள்ள இடைநீர்க்கால், பனையூரும் பியலாரும் என்னும் ஊர்களில் உள்ள எண்கலவித்துப் பாடுடைய நிலங்களையும் பணிமக்கட்காகத் தந்தான். இவற்றுடன், (1) ஒருகல விதைப்பாடுடையதும், காஞ்சிரங் குளப் பாய்ச்சலின் கீழ் அமைவதுமான கீழைப்பொறைத் தடி ஒன்று, (2) செங்கழுநாட்டுக் குன்றத்தூருடைய குமாரசுவாமி பட்டன் என்பவன் தான் பிரமதேயமாகப் பெற்ற நிலத்தில் கொடுத்த பூமியாகியதும் கடலங்குளத்தா லும், இலஞ்சக்குளத்தாலும், நீர்பெறுவனவும், பதினாழிக் காலால் இருகலவித்துப்பாடு உடையவும் ஆன எருவிச்செய் தடி ஏழு (3) ஓமாயநாட்டுச் சிறு மண்ணூரினன் ஆகிய இளையான் கண்டன் என்பவன் கீழ்ப்பாதி உழுதூட்டுவதாக அளித்ததும், கலனேதூணி விதைப்பாடுடையதுமாகிய பொன்னறைத்தடி ஒன்று ஆகியவை தரப்பெற்றன. அனைத்துமாகப் பணிமக்களுக்கு விருத்தியாக அட்டின பூமி, 38 கலம், 2 குறுணி விதைப்பாடுடையது ஆகும்.

இதனுள் (1) **சாந்தி செய்வானுக்கு** விருத்தியாக மீனச்சி என்னும் ஊரில் சிறு குண்டுரோர் குளத்தினால் நீர்

பாயப் பெறுவதான குருந்தறை முதலான சில வயல்களும், (2) **அகநாழிகை பணியாளர்** நால்வருக்கு எண்கல வித்துப்பாடுடைய நிலமும், (3) **பஞ்சகவ்யம் தெளிப் பானுக்கு,** இருகல விதைப்பாடுடைய எருவிச்செய் தடி ஏழும், (4) **பூ இடுவானுக்கு** இருகல விதைப்பாடுடைய, அருமுனை ஆதனூரில் உள்ள வயலில் படைப்பறை மருணறை யும், மாத்தூர் வயலில் பராயறையின் கிழக்குக்கூறும், (5) எஞ்சிய பகுதிகள் தட்டழி, மத்தளி, கரடிகை, தாளம் காகளம் என்னும் **இசைக்கருவிகள் இசைப்பார்க்கும்** தரப்பெற்றன.

பார்த்திவசேகரபுரம்சாலை – உண்கல வரையறை: பார்த்திவசேகரபுரம் அறச்சாலைக்குப் பெய்த உண்கலங் களுள் பவிழிய சரணத்தார்க்குப் உரியவை – 45; தயித்திரிய சரணத்தார்க்கு உரியவை – 36; தலைவகார சரணத்தார்க்கு உரியவை – 14 ஆக, 95. எப்பொழுதும் இக்கணக்குப் படியே மூன்று சரணத்தார்க்கும் கலங்கள் அமையவேண்டும்.

ப்ரவேசம் செய்யும் பரிசு: பிரவேசம் செய்வோர், (1) வியாகரணம், மீமாம்சை, பௌரோகிதம், வல்லவராக வும். (2) புவிஸ்ரீம் இல்லாதவராகவும், (3) த்ரைராஜ்ய (சேர, சோழ, பாண்டிய அரசு) விவகாரங்களுக்கு வேண்டிய அறிவும் பயிற்சியும் உடையவராகவும் இருக்கவேண்டும். மாணவனை, ஐவர் சட்டரமைந்த குழு ஆராய்ந்து, "இவை உண்மை" என்று உறுதி செய்த பின்னரே அம்மாணவன் சாலையில் சேர்த்துக்கொள்ளப் பெறுவான்.

வாரம் ஓதும் பரிசு: (வேதம் பயிலும் முறை) (1) சூத்திரத்திலும், சூத்திராரணத்திலும், ஒன்பது புகவுகளில் திரும்பத் திரும்ப ஓதி இரண்டுகிரம வாரங்களையும் ஒன்றன் பின் ஒன்றாகப் பயில (அடுத்தோதுவது) வேண்டும். (2) சாகையிலும், கற்பத்திலும், கணத்திலும் ஒன்பதுபுகவுகளில்

திரும்பத் திரும்ப ஓதி இரண்டு வாரங்களை ஒன்றன் பின் ஒன்ருக ஓதிப் பயிலவேண்டும். (3) நான்கு பாதங்களிலும் ஒன்பது புகவுகளில் திரும்பத்திரும்ப ஓதி, அஹத்தூஹத்தில் (மனப்பாட'மாக) இரண்டு வாரங்களை ஒன்றன்பின் ஒன்ருகப் பயிலவேண்டும்.

வரையறைகளும் ஒறுப்பும்: (1) கோயிலின் எல்லைக்குள். ஒரு சட்டனை மற்ருெரு சட்டன் பழித்துப் பேசுவான் ஆனல் சட்டப் பெருமக்களிடத்தில் அஞ்சுகாணம் பொன் (½ கழஞ்சு) தண்டம் செலுத்திய பின்னரே சாலையில் உணவு உண்ணவேண்டும். (2) ஒரு சட்டன் மற்ருெரு சட்டனைக் குட்டுவானுனல் குட்டியவன் ஒருகாசு (1கழஞ்சு) தண்டம் செலுத்திய பின்புதான் சாலையில் உண்ண வேண்டும்; குட்டுண்டவனும் அஞ்சு காணம் (½ கழஞ்சு) பொன் தண்டம் செலுத்திய பின்னரே சாலையில் உண்ண வேண்டும். (3) மற்றவரைப் படைக்கலங் கொண்டு புண் படுத்திய சட்டன் அறநெறிக்குப் புறம்பானவன் ஆவான். (4) சட்டர்கள் படைக்கலம் ஏந்திக் கூட்டத்திற்குச் செல்லுதல் கூடாது. (5) சட்டர், கோயில் எல்லைக்குள் எவ்வகைப்பட்ட சூதும் ஆடுதலாகாது. ஆடுபவர் அன்றைக்குச் சாலையில் உணவுண்ண அனுமதிக்கப்பெருர். (6) சட்டர் வெள்ளாட்டிகளை (மனைவியரை) மடத்தில் வைத்துக்கொள்ளலாகாது. (7) தேவதானம், சாலாபோகம் ஆகியவற்றை அரசு ஆணை இன்றி உரிமையில் இருந்து மாற்றக் கூடாது. மாற்றுபவர்கள் தனித்தனியே ஐந்து கழஞ்சு பொன் தண்டம் செலுத்திய பின்னரே சாலையில் உண்ணலாம். (8) சாலாபோக, தேவதான நிலங்களில் உழும் குடியினரை வற்புறுத்திக்கொண்ட தொகைக்கு, ஒன்றுக்குப் பத்தாகச் செலுத்துதல் வேண்டும். (9) சபையினரிடம் வரி செலுத்துபவர், ஒவ்வொரு சரணத்திற்கும் ஒவ்வொருவர் வீதம், மூவர் சட்டர் குழு நிர்ணயித்த வரியை உரியார் செலுத்துதல் வேண்டும். (10) இவ்வரி நிர்ணயத்தை

மறுத்தவர்கள் 54 காணம் பொன் அபராதத்துடன் வரியைச் செலுத்தவேண்டும். (11) கோயிலின் நித்திய படித் தரத்தையும் பதினுழிச் சாலையையும் எக்காரணத்தை முன்னிட்டும் விலக்குதலாகாது. (12) விலக்குவார் நாடொறும் 5 கழஞ்சுபொன் ஒறுப்புச் செலுத்திய பின்னரே சாலையில் உண்ணலாம். (13) சட்டரைப் பழித்துப் பேசும் பணிமக்கள் ஒருகாசு அபராதம் செலுத்த வேண்டும்.

3. பின்வரும் சாசனத் தொடர்களை விளக்குக.

1. ... **இச் சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தாருடைய கலம் நாற்பத்தைந்து தயித்திரிய சரணத்தாருடைய கலம் முப்பத்தாறு தலவகார சரணத்தாருடைய கலம் பதினுலு இனிவரும் கலம் மூன்று சரணத்தார்க்கும் ஒப்பது ...** ...

இதில் சாலையின் உண்கலவரையறை கூறப்பெற்றுள்ளது. "இக்கல வரையறை எந்நாளும் மாறலாகாது; புதிதாகத் தோன்றும் கலங்கள் எந்தச் சரணத்துக்குரியதோ அதற்கேற்ப வரையறுக்கப்பெற வேண்டும்" என்பது 'இனிவரும் கலங்கள் மூன்று சரணத்தார்க்கும் ஒப்பது' என்பதன் பொருளாகும். The remaining seats are common to the three Charanas *என மொழி பெயர்ப்பர் சிலர்.*

இப் பகுதியில் இருக்கு; யசுர்; சாமம்; அதர்வணம் என்னும் வேதங்களின் பெயர்கள் கையாளப்பெறவில்லை; ருக் பவிழியம் எனவும், யசுர் தயித்திரியம் என்வும், சாமம் தலவகாரம் எனவும் குறிக்கப் பெற்றுள்ளது.

பவிழியம் முதலாகியவை வேதத்தில் ஒரு பகுதியின் பெயர்கள்; இங்கு இவை முழு வேதத்தையும் குறிப்பன. நச்சினார்க்கினியர், "நான்கு கூறுமாய் மறைந்த பொருளுடைமையால் நான்மறை என்றார். அவை தைத்திரியம்,

பௌடிகம், தலவகாரம் சாமவேதமும் ஆம். இனி இருக்கும் யசுரும் சாமமும் அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது. இவை இந்நூல் செய்தபின்னர் வேதவியாதர் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினர் உணர்வதற்கு நான்கு கூறாய் இவற்றைச் செய்தாராகலின் பொருந்தாது'' என்று தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் கூறுவர்.

பி. சா. சுப்பிரமணிய சாத்திரியாரின் தொல்காப்பிய உரைக்குறிப்பு. ''யசுர் வேதத்தில் இருந்த 108 சாகைகளுள் தைத்திரியம் ஒன்று; சாம வேதத்தில் இருந்த 1000 சாகைகளில் தலவகாரம் ஒன்று; ருக்வேதம் படிப்பவர்கள் 'பஹ்வருசா' எனப் பெற்றுள்ளனர். இதனால் ருக்வேதம் 'பாஹ்வ்ருச்யம்' என்று கூறப்பட்டுள்ளமை புலனாகிறது. அச்சொல்லின் பிராகிருத வடிவமே பௌடிகம் ஆகும்'' எனக் கூறுகிறது. இங்குப் பௌடிகம் 'பவிழியம்' எனப் பெறுகிறது. அதர்வண வேதத்திற்குக் கலும் ஓதுக்கப் பெறவில்லை.

2. **வையாகரண மீமாயப் புரோஹிதப் புன்பாய் புவிஸ்ரீம் இலன்:** வியாகரணம், மிமாம்சை, புரோகித அறிவு மிக்கவனாகவும் புவிஸ்ரீம் இல்லாதவனாகவும் இருக்க வேண்டும். (அ) **வையாகரணம் – வியாகரணம்;** சொல்லினது இலக்கணம் கூறும் நூல்கள். (ஆ) **மீமாய – மீமாம்சை;** வேதவாக்கிய விளக்க நூல்கள். வேதத்தின் கர்மகாண்டப் பகுதியை விளக்க, ஜைமினியால் எழுதப் பெற்ற பூர்வ மீமாம்சை; ஞானகாண்டத்தை விளக்குமாறு பாதராயணவ்யாசரால் எழுதப்பெற்ற உத்தர மீமாம்சை என்னும் மீமாம்சை நூல்கள். வேதாங்கங்களுள் மீமாம்சையும் ஒன்று. (இ) **புரோஹிதம் – பௌரோஹிதம்;** மக்கட்குச் சடங்குகளைச் செய்வித்தற்குத் தேவையான அறிவு. (ஈ) **புவிஸ்ரீம் இலன் – புவிஸ்ரீம் என்பதன் பொருள் விளங்கவில்லை என T. A. கோபிநாத ராயர்**

கூறுவர். (புவி — மண்; ஸ்ரீ — செல்வம்) சொந்த நிலமில்லாதவனாக. ஏழையாக இருக்கவேண்டும் எனப் பொருள் கொள்ளலாம்.

3. **சூத்திரத்திலும் சூத்திராரணத்திலும் துருச் சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு கிரம வாரம் அடுத்தோதுவது** — 'சூத்திரத்திலும், சூத்திராரணத்திலும் ஒன்பது புகவுகளில் திரும்பத் திரும்ப ஓதி' இரண்டு கிரம வாரங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக ஓதிக் கற்கவேண்டும்'. **சூத்திரம்** — யாகங்களை எவ்வாறு செய்வது என விதிமுறைகளைக்கூறும் நூல்கள்; (கல்ப சூத்திரம், ச்ரௌத சூத்திரம்) விவாஹ அக்கினியில் நிகழ்த்தும் கர்மாக்களைக் கூறும் நூல்கள்; (கல்ப சூத்திரம்) பொதுத்தர்மங்களைக் கூறும் தர்ம சூத்திர நூல்கள்; முதலியவை. **துருச்சொல்லுதல்** — (ஒரு குறிப்பிட்ட பகுதியையே) திரும்பத்திரும்பக் கூறுதல். கூறும் தடவைகளுக்கும் அளவு நிர்ணயிக்கப்பெறும். இக் காலத்தில் "திருவை சொல்லுதல்" என்பர். **ஒன்பதுபுகவு** — திருவை சொல்லக்குறிக்கப்பெறும் பகுதி. **கிரம வாரம்** — கிரமம் என்னும் வேதமோதும் முறை. வேத சம்ஹிதைகளின் பதங்களை, 1-2 ; 2-3 ; 3-4 என்ற முறையில் கூறுதல். **அடுத்தோதுவது** — அடுத்து ஓதிக்கற்பது ; ஒன்றன்பின் ஒன்றாக ஓதிக்கற்றல். ஒருநாள் திருவை சொன்னால் மறுநாள் கிரம வாரம் ஓதுதல் என்ற முறைபோலும். 'have to be studied alternately' என்பது மொழிபெயர்ப்பு.

4. **சாகையிலும் கற்பத்திலும் கணத்திலும் துருச்சொல்லி இரண்டுவாரம் அடுத்தோதுவது** — சாகையிலும் கற்பத்திலும் கணத்திலும் ஒன்பது புகவுகளில் திரும்பத்திரும்ப ஓதி இரண்டு 'வாரங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஓதவேண்டும். **சாகை** — சாகை யென்பது கிளை எனப் பொருள் தரும் சொல். பலமுனிவரால் ஓதப்பெற்று வந்தவையே வேதங்களாகத் தொகுக்கப் பெற்றன.

தொகுக்கப்பெற்ற பின்னர் ஒவ்வொரு பகுதியும் சாகை எனப்பட்டது. பதஞ்சலி முனிவரின் மாபாடியம், "இருக்கு வேதம் 21 சாகைகளும், யசுர்வேதம் 101 சாகைகளும், சாம வேதம் 1000 சாகைகளும், அதர்வம் 9 சாகைகளும் உடையதாக இருந்தது" எனக்கூறுகிறது. இந்நாளில் சில சாகைகளே காணப்படுகின்றன. **கற்பம்** – கற்பசூத்திரம். இக்கற்ப சூத்திரம் எனும் பெயர் முற்காலத்தில் யாகங்களை எவ்வாறு நடத்துவது என்னும் விதிகளைக் கூறிய நூல்களைக் குறிப்பனவாக இருந்தன; பின்னர் விவாக அக்கினியால் நடத்தப் பெறும் கர்மாக்களைக் கூறும் நூல்களைக் குறிப்பனவாயின.

4. பார்த்திவசேகரபுரம் சாசனம் அக்காலக் கல்வி முறை பற்றி யுணர்த்துவன யாவை?

பார்த்திவசேகரபுரம் சாசனம், காந்தளூர்ச் சாலையை முன்மாதிரியாகக்கொண்ட பார்த்திவசேகரபுரம் கல்விச் சாலைபற்றி யுணர்த்துகிறது. இக்கல்விச் சாலையின் அமைப்பு, நுழையும் முறை, கல்வி முறை, வரையறைகள் பற்றிச் சாசனம் விரிவாகக் குறிப்பிடுகிறது.

(விளக்கம்: பக்கம் 104–109இல் காண்க)

5. குறிப்பு வரைக.

1. **கோக்கருநந்தடக்கன்:** இவ்வரசன் ஆய்குல மன்னன்; பொதியமலையின் தலைவனான ஆய் அண்டிரன் மரபினன். இவனைச் சில பாண்டியர்கல்வெட்டுக்களும், சில செப்பேடுகளும் குறிக்கின்றன. தடக்கன் என்கின்ற பெயரைக் கருநந்தன் + அடக்கன் எனப்பலர் பிரித்துக் கருநந்தன் என்பானின் மகன்; அடக்கன் என்னும் பெயரினன் என்பர். வேறுசிலர், கருநந் + தடக்கன் எனப் பிரித்துக் கருநந்தன் மகன்; தடக்கன் என்னும் பெயரினன் என்பர். "சடையன்" என்னும் ஆய்குல மன்னன் மகன் கருநந்தன்;

கருநந்தனின் மகன் கருநந்தடக்கன். கருநந்தடக்கன் கி.பி. 850-இல் அரியணையேறியவன்; முதல் வரகுணபாண்டியனின் சமகாலத்தவன். விக்ரமாதித்யவரகுணன் என்பவன் இவனுடைய மகன். "கருநந்தடக்கன் யாதவ குலத்தவன்; ஸ்ரீவல்லபன் என்னும் பெயருடையவன்." எனப் பார்த்திவ சேகரபுரம் சாசன வடமொழிச் செய்யுள் கூறுகிறது.

2 **தெங்கநாடு கிழவனாயின சாத்தமுருகன்:** கோக்கருநந்தடக்கனால் வெளியிடப்பெற்ற பார்த்திவசேகர புரம் சாசனத்தின் **ஆணத்தி**யாகத் திகழ்ந்தவன். சாத்த முருகன் என்பது இவன் பெயர். இவன் தெங்கநாட்டின் தலைவன்; கோக்கருநந்தடக்கனின் அரசியல் தலைவன்; இந்நாளில் பார்த்திவபுரத்தின் அருகில் கடற்கரைப் பகுதியில் தேங்காப்பட்டணம் எனப்படும் பகுதியை ஒட்டி அமைந்த பகுதியே தெங்கநாடு எனப்பட்டதாகலாம்.

3. **தேவதானம்:** சிவன்கோயில்கட்குத் தரப்பெறும் இறையிலி நிலம். **சாலாபோகம்:** அந்தணர், அபூர்விகள், சிவயோகிகள் ஆகியவர்களுக்கு அறச்சாலைகளில் உணவூட்டுதற்காகத் தரப்பெற்ற இறையிலிநிலம். **அகநாழிகைச் சென்னடைக்கு அட்டினபூமி:** (அகநாழிகைச் சென்னடைப்புறம்) திருக்கோயில் கருவறைச் செலவுகட்காக அளிக்கப்பெற்ற நிலம் (அகநாழிகை-கருவறை) **நொந்தா விளக்குப்புறம்:** நூண்டா விளக்கு எரிப்பிக்கத் தரப் பெறும் இறையிலிநிலம். **விழாப்புறம்:** திருவிழா நடத்து வதற்காகத் தரப்பெறும் நிலம். **பணிமக்களுக்கு விருத்தி:** கோயிலில் பணிபுரிபவர்களுக்கு அப்பணியாற்றுவதற்காகத் தரப்பெறும் நிலம்.

4. **உடன்வாரம்:** நிலத்தின் மொத்த விளைச்சல். இதுவே காராண்மை, மீயாட்சியாகப் பிரிக்கப்பெறும்.

5. **பதினுழிச் சாலை**: பார்த்திவசேகரபுரம் சாலை. பத்துநாழி = 40 ஆழாக்கு. ஒரு சட்டருக்குப் பத்துநாழி நெல், ஊதியமாக அளிக்கப் பெற்றிருக்கக்கூடும். ஆதலின் இப்பெயர் இச்சாலைக்கு வழங்கியதாகலாம்.

6 **பஞ்சக்கம்**: ஐவர் கூடிய குழு. இக்குழுவே, பார்த்திவசேகரபுரம் சாலைக்கு மாணவர் நுழைவதற்கு அனுமதி தருவது. இக்குழு, மாணவன் தேவையான தகுதியனைத்தும் உடையவனுக இருக்கிருன் என்று சான்று தந்த பின்னரே சாலையில் நுழைவு பெறுவான். பஞ்சக்கம் என்ற சொல் 'பஞ்சாயத்து' என்ற சொல்லுடன் ஒப்பிடற்பாலது.

7. **கழஞ்சு**: பொன் எடை அளவுகளுள் ஒன்று. சுமார் $\frac{1}{6}$ அவுன்ஸ் அல்லது $\frac{5}{12}$ தோலா அல்லது $1\frac{1}{3}$ வராகன் எடையுடையது. 20 மஞ்சாடி – 1 கழஞ்சு. **காசு**: ஒரு கழஞ்சு. **காணம்**: பொன் எடைகளுள் ஒன்று. கழஞ்சின் $\frac{1}{10}$ பாகம். 2 மஞ்சாடி அல்லது 4 குன்றிமணி எடை 1 காணம். இந்நாளைய பணஎடைக்குச் சமம்.

8. **மடைப்பள்ளிநாழி**: **பதினுழிக்கால்**: அளவுக் கலன்கள்.

9. **விதைப்பாடு**: விதையளவு. இச்சாசனம் விளை நிலன்களுக்குரிய விதையளவினைக் கூறுகிறது.

10. **முடாலநாடு**: தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் உள்ள 'மிடாலம்' என்னும் ஊரினைச்சூழ்ந்த பகுதி. **வள்ளுவநாடு**: திருநந்திக்கரையைத் தன்னகத்தடக்கியது. முதல் இராசராசசோழன் சதையநாள் விழாவை உதியர் மண்டலத்தில் நிகழ்த்த ஏற்பாடு செய்தமையைக் கூறும் கல்வெட்டில் கண்ட "ராசராசத் தென் வள்ளுவ நாடு" இதுவே ஆகலாம். **படைப்பாநாடு**: தலைக்குளக்

திருமால் கோயில் கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறது. இந்நாளைய எரானியல் (முட்டம) என்னும் ஊரை ஒட்டி அமைந்த நிலப்பரப்பு

11. **சிங்கங்குன்றப் போழன் :** இச்சாசனத்தைச் செப்பேட்டில் எழுதியவன். "திரையன் ஓமாய நாடுகிழவனுயின சிங்கங் குன்றப், போழன்" எனப் பெறுகிறுன். **சிங்கங்குன்றப்போழன்** என்பது பெயர்; திரையன் சிறப்புப் பெயர் ; இவன் ஓமாய நாட்டுத் தலைவன்.

12. **பசுங்குளம்** – பார்த்திவபுரத்தின் தெற்கே ஒரு கல் தொலைவிலுள்ள பைங்குளம். **மின்சிறை** – பார்த்திபபுரத்தின் வடக்கே இருகல் தொலைவிள்ள முஞ்சிரே. **முட்டம்** – இந்நாளில் எராணியல் என வழங்கும் ஊர். தென் திருவதாங்கூர்ச் சீமையிலுள்ளது.

6. பின்வருவனவற்றுக்குப் பொருள் தருக.

ஸ்வஸ்திஸ்ரீ - மங்களமுண்டாகட்டும் ; **கலிக்கோட்டு நாள்** – கலியுகநாள்; **விஷ்ணுபடாரகர்** – மூலவர் விஷ்ணு; **மர்யாதி** – முறை ; **சட்டர்** – ஆசிரியர் ; **இரண்டேற்றி** – இரண்டுடன் கூட்டி ! **குத்துக்கால் படாது** – தடைபடாது; **இண்டை** – தலைமாலை ; **பஞ்சகவ்யம்** – ஆனைந்து; பசுவின் பால், தயிர், நெய், சாணம் (கோமயம்), சிறுநீர். **ஆருடுவதாகவும்** – தீர்த்தமாடுவதாகவும் ; **பெருமக்கள்** – சட்டருள் மூத்தவர் ; **பிழைக்கப்பேசுவான்** – இழித்துப் பேசுபவன் ; **புறத்தன்** – புறம்பானவன் ; **குட்டம்**-கூட்டம்; **முக்கால் வட்டம்** – கோயில்; **சத்திமுகம்** – ஸ்ரீமுகம், அரசாணை ; **விலக்குதல்** – நிலஉரிமையை மாற்றுதல்; **நியதி** – நாடோறும்.

7. பார்த்திவசேகரபுரம் சாசன அடிப்படையில், 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய' என்னும் தொடருக்கு விளக்கம் தருக.

கோக்கருநந்தடக்கன் கி. பி. 866-இல் பார்த்திவசேகர புரத்தில் தான் எடுப்பித்த ஸ்ரீ கோயிலில் ஒரு அறச் சாலையை அமைத்தான். செப்பேடு "காந்தளூர் மர்யாதையால் தொண்ணூற்றைவர் சட்டர்க்குச் சாலையும் செய்தான் ஸ்ரீ கோக்கருநந்தடக்கன்" எனக் கூறுகிறது.

"காந்தளூர்ச் சாலை" திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாகிய வலிய சாலையாகும். இச்சாலையின் விதி முறைகளைப் பின்பற்றியமைக்கப்பட்ட உணவுச் சாலை பார்த்திவசேகரபுரம் சாலையாகும்.

சாலைகல மறுத்தல்: *"காந்தளூர்ச் சாலைகல மறுத்தல்" என்னும் அருஞ்செயல் புரிந்ததாகப் பல வேந்தர்கள் கூறிக்கொள்கின்றனர். முதல் இராசராசன், "காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய கோராசகேசரி" ஆவான். முதல் இராசேந்திரன், 'தண்டால் சாலை கல மறுத்த கோப்பரகேசரி" ஆவான். இராசாதிராசன், 'வேலைகெழு காந்தளூர்ச் சாலை கலமறுத்த'வன். முதல் குலோத்துங்க சோழனை, 'மேவலர் தம் சேலைதுரந்து சிலையைத் தடிந்து இருகால் சாலைகலமறுத்த தண்டினன்" என்று விக்கிரம சோழனுலாப் பாராட்டுகிறது. சடைய வர்மன் பராந்தக பாண்டியன், "கன்னிப் போர் செய்து காந்தளூர்ச்சாலை கலமறுத்தோன்" எனப் பாராட்டப் படுபவன்.*

கலமறுத்தல்: **கலம்** *– மரக்கலம்;* **அறுத்தல்** *– அழித்தல். அரசன் காந்தளூர் என்னும் துறைமுகச் சாலையில் இருந்த மரக்கலங்களை அழித்தான் என்று*

பொருள் கொள்வர். ஆனல், இச்சாசனத்தில் 'காந்தளூர்ச் சாலை' துறைமுகச் சாலையாகக் குறிக்கப்பெறவில்லை; ஓர் அறச்சாலையாகக் குறிக்கப்பெறுகிறது.

காந்தளூர்ச் சாலையை முன்மாதிரியாகக் கொண்டு பார்த்திவசேகரபுரத்தில் கோக்கருநந்தடக்கனல் ஏற்படுத்தப் பட்ட சாலை (1) ஒரு உணவுச்சாலை; 95 சட்டர்கள் உணவு கொண்ட பதினழிச்சாலை. (2) உணவுச்சாலை மட்டுமன்றி, "த்ரைராஜ்ய விவகாரங்கள் அறிந்த அறிவு சான்ற" வேத வேதியரின் கல்விச்சாலை. இச்சாலையின் ஆசிரியர் (சட்டர்) நிர்வாகத் திறமையும், அரசியலறிவும், படைவலியும், அறிவு வன்மையும் படைத்தவர். இச்சாலையைப்போலவே இதன் முன்மாதிரியான காந்தளூர்ச் சாலையும் அமைந்ததாதல் வேண்டும்.

இச்சாசன அடிப்படையாக நோக்குங்கால், "**சாலை** – அறச்சாலை; **கலன்** – உணவுக்கலன்; **அறுத்தல்** – வரையறுத்தல்" என்னும் பொருள் உருவாகிறது. இச்சாசனத்தில் உணவுக் கலவரையறை கூறப்பட்டுள்ளது.

இராசராசன் முதலான அரசர், சட்டப் பெருமக்களைத் தம் அறிவாலும், ஆற்றலாலும் வென்றனர்; சாலையின் ஆட்சியைக் கைப்பற்றினர்; அங்கே உண்பவர்க்குரிய உணவுக் கலங்களை வரையறுத்தனர். சேர, சோழ, பாண்டிய ராஜ்ய விவகாரங்களுக்குத் தேவையான பேரறிவு படைத்தவர்க்குரிய சாலையை வென்று உணவுக் கலங்களை வரையறுத்த செயலையே, "காந்தளூர்ச்சாலை கலமறுத்தல்" எனக் குறித்துக்கொண்டனர். இதுவே பார்த்திவசேகரபுரம் சாசனத்தின் வழியாகக் கொள்ளத்தகும் பொருளாகும்.

VI

பெரிய லெய்டன் செப்பேடுகள்

1. பெரிய லெய்டன் செப்பேடு – குறிப்பு வரைக.

ஹாலந்து தேசத்தில் உள்ள லெய்டன் (Leiden) நகரப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் சோழர் காலச் செப்பேடுகள் இரண்டுள்ளன. இவற்றுள் ஒன்று இராச ராசன் காலத்தது.

14" × 5" × $\frac{1}{8}$" அமைப்புடைய 21 செப்பேடுகள், ஒரு வளையத்தில் கோக்கப்பட்டுள்ளன. வளையப் பூட்டுவாயில் சோழர் இலச்சினை காணப்படுகிறது. முத்திரையின் கீழ்ப் புறம் வில், அதன்மேல் இடப்புறம் இரட்டைக் கயல், வலப்புறம் அமர்ந்த நிலையிலுள்ள புலி இவையன்றியும் விளக்கு, கவரி, வெண்கொற்றக்குடை ஆகியவை காணப் படுகின்றன. இவ்விலச்சினையை ஒட்டிய வெளிப்புற ஓரத்தே, 'இது இராசேந்திரனால் தரப்பெற்றது' என்று பொருள்படும் வடமொழிச் சுலோகம் காணப்படுகிறது. வளையத் தண்டில், 'ஆனைமங்கலம்' என்று வெட்டப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பெரிய லெய்டன் செப்பேடு, வடமொழி, தமிழ் என்னும் இரு பகுதிகளையுடையது.

வடமொழிப் பகுதி கிரந்த எழுத்துக்களில் எழுதப் பட்டுள்ளது; முதல் 5 ஏடுகளில் 111 வரிகளில் 48 வட மொழிப் பாடல்கள் வெட்டப்பட்டுள்ளன. 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத்துவங்கிப் புராண புருஷர், சங்ககாலச் சோழர், வரலாற்றுச்சோழர் மரபு கூறப்பட்டுள்ளது. இவ்வட மொழிப் பகுதியினைக் கொட்டையூரினைச் சேர்ந்த 'அனந்த நாராயணன்' என்பவன் இயற்றினான்.

பாடமாகிய தமிழ்ப் பகுதி 6-ஆம் ஏடு துவங்கி 332 வரிகளுடன் அமைந்துள்ளது. 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் துவங்கிப் பிள்ளையார் சுழியுடன் முடிகிறது.

இம்முழுச் செப்பேட்டினையும், காஞ்சி நகரினைச்சேர்ந்த ஐவர் வெட்டினதாக வடமொழிப் பகுதியால் அறிகிறோம்.

"இராசராசனின் 21ஆம் ஆண்டில் நாகை சூளாமணி பன்ம விஹாரத்திற்கு, ஆனைமங்கலம் பள்ளிச் சந்தமாகத் தரப்பெற்றது. இராஜராஜன் இறந்த பின்னர் இவன் மகனாகிய இராசேந்திர சோழன் இச்செப்பேடு செய்து கொடுத்து இராசராசன் தந்த நிவந்தத்தை உறுதிசெய்தான்" என்று வடமொழிப் பகுதியால் அறியவருகின்றது.

2. லெய்டன் செப்பேடுகள் கூறும் செய்திகளைத் தருக.

அரசன் ஆணை பிறப்பித்தல்: முதல் இராசராச சோழன், தன் 21ஆம் ஆட்சியாண்டில் 92-ஆவது நாளில், தஞ்சாவூர்ப் புறம்படியில் இருந்த ராஜாஸ்ரயன் என்னும் மாளிகையில் தெற்கில் மண்டபத்தில் எழுந்தருளி இருந்து, க்ஷத்ரிய சிகாமணி வளநாட்டில், பட்டணக் கூற்றத்துக்குரிய நாட்டுச் சபையாருக்கும், பிரமதேய உரிமையாளர்களுக்கும், தேவதானம், பள்ளிச்சந்தம், கணிமுற்றூட்டு, வெட்டிப்பேறு என்னும் வகைகளைச் சேர்ந்த ஊர்ச் சபையாளர்களுக்கும் ஓராணையைப் போக்கினான்.

இராசராசன், "க்ஷத்ரியசிகாமணி வளநாட்டுப் பட்டணக் கூற்றத்தில் உள்ள நாகப்பட்டணத்தில், கடார நாட்டு அரசனான சூளாமணிவர்மன் என்பவன் எடுப்பிக்கின்ற, சூளாமணிபன்மவிகாரம் என்னும் புத்த விகாரத் திற்கு வேண்டும் நிவந்தங்களுக்காகப் பட்டணக் கூற்றத்தில் உள்ள ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச்சந்தம்

இறங்கலாக அளித்தான். இவ்வாணைமங்கலம் 97 வேலி நிலப்பரப்புடையது; இறைகட்டின காணிக்கடனாக 8943 கலனே இருதூணிக்குறுணி ஒருநாழி நெல் வருவாயுடையது. அவ்வருவாய் சூளாமணிபன்மவிகாரத்துப் பள்ளிக்கு யாண்டு 21-ஆவது முதல் செலுத்துவதாகுமாறு வரி என்னும் புத்தகத்தில் பதிந்து பள்ளிச்சந்த இறையிலியாக்கித் தருக" என ஆணையிட்டான்.

அரசு அலுவலர் ஒப்பு நோக்குதல்: 'விளத்தூர்க் கிழவன் அமுதன்தீர்த்தங்கரன்' என்பவன் அரசன் கூறியதனை ஓலையில் எழுதினன். ஓலையில் எழுதுவோரின் தலைவராக விளங்கிய ஓலைநாயகங்களான, 'கிருஷ்ணன் ராமனை மும்முடிசோழப் பிரமமாராயன்', 'ஈராயிரவன் பல்லவயனை மும்முடிசோழபோசன்', 'உத்தம சோழனை மதுராந்தக மூவேந்த வேளான்' என்ற மூவரும் அவ்வோலையில் கையொப்பம் இட்டனர். பின்னர் அரசனின் உடன் கூட்டத்தலுவலரான, அரச கருமமாராயும், (1) ஆரூரன் அரவணையானை பராக்கிரம சோழ மூவேந்த வேளான் (2) தத்தன் சேந்தனை செம்பியன் மூவேந்த வேளான் (3) அருங்குன்றமுடையான் மாப்பேரன் பொற்காரி (4) கற்குடையான் பிசங்கன் பாளூரான மீனவன் மூவேந்த வேளான் (5) சங்கர நாராயணன் அரங்கன் 'நடுவிருக்கை' களான (அ) பரமேஸ்வரபட்ட சர்வக்ரதுயாஜி (ஆ) கடலங்குடி தாமோதரபட்டன் (இ) வெண்ணெய்நல்லூர்த் தம்மடி பட்டன் (ஈ) பசலைத்தியம்பக பட்டன் ஆகியோர் 'அரசாணையை அதில் கண்டவாறே வரியில் இட்டுக்கொள்க' எனப் புரவுவரித்திணைக் களத்தார்க்குக் கூறினர்.

வரியிலிடுதல்: புரவுவரித்திணைக் களத்தவராக இருந்த (1) கிளிநல்லூர்க் கிழவன் கொற்றன் பொற்காரி, (2) கழுமலமுடையான் சூற்றியன் தேவடி, (3) பழுவூருடையான் தேவன் சாத்தன், (4) கள்ளிகுடையான் அணையன்

தளிக்குளவன் என்பாரும், வரிப் பொத்தகம் என்னும் அலுவலராக இருந்த (1) சாத்தனூருடையான் குமரன் அரங்கன் (2) பருத்தியூர்க் கிழவன் சிங்கன் வெண்காடனும் ஒன்ருக இருந்து, இராசராசனின் ஆணையை 21-ஆவது ஆட்சியாண்டு 96-ஆவது நாளில் 'பள்ளிச்சந்தம் இறையிலியாக' வரி என்னும் பொத்தகத்தில் இட்டுக்கொடுத்தனர்.

திருமுகம் : "பட்டணக் கூற்றத்துச் சபையார், தங்கள் நாட்டில் இருந்த ஆனைமங்கலத்தைப் பிடிசூழ்ந்து பிடாகை நடப்பிக்குமாறு செய்க" என்று (1) கண்காணி நடுவிருக்கும் வெண்ணெய் நல்லூர்த் தம்மடி பட்டன் (2) ஸ்ரீதரப் பட்டன் (3) பத்மநாப பட்டன் (4) வெண்ணெய் பட்டன் (5) நந்தீஸ்வரப் பட்டன் (6) புரவுவரியாகப் பணியாற்றிய கள்ளிக்குடையான் அணையன் தளிக்குளவன் என்போர் அதிகாரம் அளிக்கப் பெற்றனர். "இவர்களோடு இருந்து எல்லைகள் தெரித்துப் பெண் யானையைச் சூழ்வித்துப் பிடாகைகளின் வழியே நடந்து, எல்லைக் கற்களும் கள்ளியும் நாட்டி, அறவோலை செய்து தருக" என்னும் அரசனுடைய ஆணை வாசகத்தை, மந்திரஓலை எழுதத் திருமந்திர ஓலை நாயகங்களாகப் பணியாற்றியோர் ஒப்பிட்டு, இராசராசனின் 21-ஆவது ஆட்சியாண்டில் பட்டணக் கூற்றத்து நாட்டுச் சபையாருக்கு அனுப்பினர்.

ஆணையை நிறைவேற்றுதல் : நாட்டுச் சபையார் அரசனின் திருமுகம் வருதலைக் கண்டனர்; எதிரெழுந்து சென்று தொழுது இரு கைகளாலும் அதனை வாங்கித் தம் தலையின்மேல் வைத்துக்கொண்டனர். திருமுகத்தில் குறிப்பிடப்பட்ட எல்லைகளின் வழியே யானையைச் சூழ்வித்து, உட்கிடையூர்களின் வழியே நடந்து, எல்லைகளில் கல்லும் கள்ளியும் நட்டனர். யானை "கோவூர்" என்னும் ஊரின் மேல் எல்லை தொடங்கி வலமாகச் சென்ற வழிகளைச் செப்பேடு விரிவாகக் கூறுகிறது.

தானமாகப்பெற்ற பகுதி: *யானையால் சூழப்பெற்ற பெருநான்கு எல்லைக்குள் அடங்கிய நன்செய், புன்செய் நிலம், ஊர், ஊரவர் வாழிடம், குளம், திருக்கோயில்கள், பறைச்சேரி, கம்மாளச்சேரி, சுடுகாடு என்னும் பகுதிகள் அனைத்தும் பெறுவதாகவும், இவ்வூரில் உள்ள மனைகள், மனைப்படப்புக்கள், கடை, கடைத்தெரு, பொதுமன்றம் கன்று மேய்த்தற்குரிய பொதுநிலம், குளம், நெல்கொட்டும் களஞ்சியம், அகழி, கேணி, ஓடை, உடைப்பு, என்னும் பகுதிகளையும், மீன்கள்வாழும் பள்ளமான நீர்நிலையும், தேன் கூடுகளமைந்த மரப்பொந்தும், மேல்நோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும், நீர்பூசி நெடும்பரம்பு எறிந்து, உடும்பு ஓடி ஆமை தவழும் எல்லாவகைப் பட்டனவும், உள்நிலம் சிறிதும் விடாமல், குடிவாரம் மேல்வார உரிமை மிகுதி குறைவு உட்படத் தரப்பெற்றன. இப்படிப் பெற்றதற்காக, அதனை ஒட்டி அமையும் சில ஒழுங்கு முறைகளை (வியவஸ்தை) பள்ளிச்சந்த உரிமையாளர் கடைப்பிடிக்கவேண்டும்.*

பெற்ற வியவஸ்தைகள் (ஒழுங்குமுறைகள்): (1) *இந்நிலங்களுக்குத் தண்ணீர் பாய்வதற்காகப் புதுவாய்க்கால்களை வெட்டி நீர்பாய்ச்சிக் கொள்ளலாம்; வாய்க்கால்களில் தூர்வாரலாம்; தேக்கிய நீரை வெளிப்படுத்தலாம். (2) இந்நிலங்களுக்குப்பாயும் வாய்க்கால்களில் அதிகமாக நீர் பாயுமாறு விடப்பெறலாம்; வாய்க்கால்களில் வெட்டி அகழ்ந்து நீரைத் தேக்கலாம். (3) இவ்வாய்க்கால்களில் அன்னியர் (அ) வேறு கிளைவாய்க்கால்களைப் பிரித்து நீர் பாய்ச்சுதலும், (ஆ) கட்டைகளைக் குறுக்கே இட்டு நீரைத் தேக்குதலும் (இ) சிறு ஏற்றங்களமைத்து நீர்பாய்ச்சுதலும் (ஈ) கூடையால் நீரிறைத்தலும் கூடாது. (4) சென்னீர் பொதுவினைக்குப் பயன்படுத்தப்பெறக் கூடாது. (5) அந்நீரை அடைத்துப் பாய்ச்சிப் பாசனத்துக்குப் பயன்படுத்*

தலாம். (6) சுட்ட செங்கற்களால் மாடமாளிகைகளைக் கட்டிக் கொள்ளலாம். (7) தூரவும் (பெருங்கிணறு) கிணறும் தோண்டிக்கொள்ளலாம். (8) இளமரக்காவில் தென்னை பயிர்செய்யலாம். (9) தவனம், மரு, வெட்டிவேர், செண்பகம், செங்கழுநீர், மா, பலா, கமுகு, பனை, கொடி உள்ளிட்ட பலவகையான பயன்மரங்களைப் பயிரிடவும் நடவும் உரிமையுண்டு. (10) பெருஞ்செக்குகளை அமைத்துக் கொள்ளலாம். (11) இவ்வூர் நிலத்தினிடையே ஊடுருவிச் சென்று வேற்று ஊர்களுக்குப் போய் நீர்பாயும் வாய்க் கால்களில் உள்ள அதிகமான நீரினைப்பாயுமாறு விடவும், வாய்க்காலைத் தூர்வாரி அகழவும் உரிமை உண்டு. (12) வேற்று ஊர்கட்குரிய நிலத்தினிடையே ஊடறுத்துச் சென்று இவ்வூர் நிலங்களுக்குப் பாயும் வாய்க்கால்களில் அதிகநீரினைப் பாயுமாறு விடவும், வாய்க்காலில் தூர்வாரி அகழவும் உரிமையுண்டு. (13) இவ்வூரில் இடப்பெற்ற தென்னை, பனை மரங்களில் கள் இறக்கும் தொழிலாளராகிய ஈழவர் ஏறக்கூடாது. (14) இவ்வூர் வாழ் மக்கள், தமது குடிக்கு ஏற்றவாறு முரசும் முப்படித் தோரணமும் நாட்டிக்கொள்ளலாம்.

பரிஹாரம் (விலக்கு): வியவஸ்தைகளுடன், தானம் பெற்றமைக்கு, விலக்காக, நாட்டாட்சி, ஊராட்சி, வட்டிநாழி, பிதாநாழி, கண்ணலக்காணம், வண்ணாரப்பாறை, குசக் காணம், நீர்க்கூலி, ஓலைக்கூலம், தறிப்புடவை, தரகு, தட்டார்ப் பாட்டம், இடைப்பாட்டம், மாட்டுக்கிறை, நல்லா நல்லெருது, நாடுகாவல், ஊடுபோக்கு, விற்பிடி, வால மஞ்சாடி, உல்கு, ஓடக்கூலி, மன்றுபாடு, மாவிறை, தீயெரி, ஈழப்பூட்சி, கூத்திக்கால், உள்ளிட்டு, அரசன் வசூலித்து அனுபவித்துக் கொள்ளத்தக்கனவாகிய எல்லாவற்றையும், அரசன் கொள்ளாமல் பள்ளிச்சந்தத்துக்கே உரியது ஆக்கினன்.

அறவோலை செய்தோர்: இப்படிப்பெற்ற வியவஸ்தையும் பரிஹாரமும் உடைய ஆனைமங்கலத்தை. 21-ஆவது ஆட்சியாண்டு முதல் 'இறங்கலுட்பட அளிக்கப்பெற்ற பள்ளிச்சந்தம்' என நாட்டார் கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்தனர். இவருடன் புரவுவரி 'கள்ளிக்குடையான் அணையன் தளிக்குளவன்' இப்பணிபுரிந்தான். பிடி மீது ஏறி எல்லைதெரித்து வழிகாட்டும் பணிபுரிந்தவன் ஆனைமங்கலத்தைச் சேர்ந்த 'வெள்ளாளன் கோன்புத்தன்' என்பவன் ஆவான்.

க்ஷத்ரிய சிகாமணி வளநாட்டில் பட்டணக் கூற்றத்தில் இருந்த பல ஊரவர் கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்தனர். இங்ஙனம் 1. பிரமதேயம் கடம்பனூர் சபையார்; 2. பிரமதேயம் நாரணமங்கலத்துச் சபையார்; 3. பிரயதேயம் மூங்கிற்குடிச் சபையார்; 4. நரிமன்றத்து ஊரார்; 5. சாத்தமங்கலத்து ஊரார்; 6. பிரமதேயம் சந்நமங்கலத்துச் சபையார்; 7. பிரமதேயம் கொட்டாரக்குடிச் சபையார்; 8. கோவூர் ஊரார்; 9. உத்தூர் ஊரார்; 10. பிரமதேயம் நன்னிமங்கலத்துச் சபையார்; 11. பிரமதேயம் பொருவனூர் சபையார்; 12. ஆளாங்குடி ஊரார்; 13. துறையூர் ஊரார்; 14. பிரமதேயம் பிரம்பில் சபையார்; 15. கடம்பங்குடி ஊரார் 16. சேந்தமங்கலத்து ஊரார்; 17. குற்றாலத்து ஊரார்; 18. திருநாவூர் ஊரார்; 19. பிரமதேயம் உவர்க்குடிச் சபையார்; 20. முஞ்சிக்குடி ஊரார்; 21. திருக்கண்ணங்குடிச் சபையார்; 22. கடம்பவலவாட்கை ஊரார்; 23. பாளங்கொற்றங்குடி ஊரார்; 24. வெண்கிடங்கில் ஊரார் ஆகிய இவர்கள் அறவோலை செய்தமையைச் சொல்ல, ஊர்க் கரணத்தார், மத்யஸ்தர் ஆகியோர் கையொப்பம் இட்டனர். இப்பரிசினை அரசாணை வழிநின்று செயல்படுத்தி யானையை நடப்பித்து எல்லைக் கற்களை காட்டுவிப்பித்த அரசலுவலர் நால்வர் கையொப்பமிட்டனர்

அறவோலை அரண்மனையை அடைதல்: மீண்டும் வரியிலிடுதல் : அறவோலை மீண்டும் அரண்மனையை அடைந்தது. கருமமாராயும் 1. மீனவன் மூவேந்த வேளானும் 2. கொற்றமங்கலமுடையானும் 3. தேவன் குடையானும் 4. பராக்கிரமசோழ மூவேந்த வேளானும் 5. செம்பியன் மூவேந்த வேளானும் 6. சோழ வேளானும் 7. அரைசூருடையானும் 8. நடுவிருக்கும் கடலங்குடி தாமோதர பட்டனும் 9. கொட்டையூர் பூவத்தபட்டனும் 10. பரமேஸ்வரபட்ட ஸர்வக்ரதுயாஜியும் ஆகிய பல உடன் கூட்டத்தலுவலர் "புகுந்த அறவோலைப்படியே வரியிலிட்டுக் கொள்க" எனப் புரவரித்திணைக் களத்தார்க்குக் கூறினர்.

புரவுவரித்திணைக்களத்தில், 'புரவுவரி' என்னும் அலுவலராக இருந்த 1. ஆலங்குடையான் கோதண்டன் சேனன் 2. பூதமங்கலமுடையான் இளவடிகள் நல்லாறன் 3. ஆலத்தூருடையான் கற்பகஞ்சோலை ஆகியோரும், 'வரிப்பொத்தக' அலுவலனான பருத்தியூர்க் கிழவன் சிங்கன் வெண்காடன் என்பானும், 'முகவெட்டி' அலுவலரான 1. கீழ்வாய்க்கணபதி 2. முண்டனரங்கன் 3. சையதாமலன் 4. தத்தன் சீகிட்டன் என்பாரும், 'வரிப் பொத்தகக்கணக்கு' என்னும் அலுவலனான, மாதேவன் பூமியும், 'வரியிலீடு' என்னும் அலுவலான, உறுவூருடையான் தாழி வீரசோழனும், பட்டோலை அலுவலரான 1. பெருமான் அம்பலத்தாடி 2. சீகண்டதேவன் 3. மாகாளன் அறிஞ்சி 4. நக்கன் மண்டகவன் என்பாரும் ஒன்றாக நின்று, இராசராசனின் 23 ஆம் ஆட்சியாண்டின் 163 ஆம் நாளில் அறவோலையை வரியிலிட்டுக் கொடுத்தனர்.

1. நடார்கிழான் அரையன் அருமொழியான ராசேந்திர சோழப் பல்லவரையன் 2. கிருஷ்ணன் ராமனான ராசேந்திர சோழப் பிரமமாராயன் 3. அரை

குருடையான் ஈராயிரவன் பல்லவ[ரை]யனான உத்தம சோழப் பல்லவரையான் 4. தாமோதரபட்டன் 5. அரையன் சீகண்டனான மீனவன் மூவேந்தவேளான் ஆகியோர், "ஒக்கும்" எனக் கையெப்பம் இட்டனர்.

3. அரசு ஆணை நிறைவேறப் பதிவு செய்யப் பெறுவது எவ்வாறு? அதற்கு எடுத்துக் கொள்ளப்பெறும் காலம் எவ்வளவு?–பெரிய லெய்டன் சாசனத்தின் வாயிலாக எழுதுக.

அரசன் தான் செய்யக்கருதிய தானம்பற்றித் திருவாய்க் கேள்வி மூலமாகத் திருமந்திர ஓலையிடம் கூறுவான். திருமந்திர ஓலை எழுதிய அரசாணை ஓலையைத் திருமந்திர ஓலைநாயகம் ஒப்பிட்டுக் கையொப்பமிடுவான். அரசனின் உடன் கூட்டத்தலுவலர், "புகுந்த அரசனின் ஓலையை அப்படியே வரியிலிட்டுக் கொள்க" எனக் கூறுவர். புரவுவரித் திணைக் களத்தில், சில அதிகாரிகள் முன்னிலையில் "வரியிலீடு" என்னும் அலுவலன் வரிப் புத்தகத்தில் நில உரிமைபற்றிய மாற்றத்தைக் குறிப்பான். உத்தரவு திருமுகமாக மாறும். இவ் உத்தரவினை நிறைவேற்றும் அதிகாரமும் சில அரசலுவலர்க்களிக்கப்பெறும். திருமுகத்தைத் திருமந்திர ஓலை எழுதத் திருமந்திர ஓலைநாயகம் ஒப்பிட்டு உரிய நாட்டுச் சபையாருக்கனுப்புவார்.

நாட்டாருக்குத் திருமுகம் வர, நாட்டார் திருமுகம் கண்டு, எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேல் வைத்துப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்வர்; அரசாணை நிறைவேற்றப் பட்டமையை ஒட்டிப் பல ஊர்ச் சபையாரும் அறவோலை செய்வர். பின் 'அறவோலை' அரண்மனையை அடையும்.

அரசனின் உடன் கூட்டத்தலுவலர், "புகுந்த அற ஓலைப்படியே வரியிலிட்டுக்கொள்க" எனப் புரவுவரித்

திணைக்களத்தார்க்குக் கூறுவர். புரவுவரி, வரிப்பொத்தகம், வரிப்பொத்தகக் கணக்கு, முகவெட்டி என்னும் அலுவலரின் முன்னிலையில், வரியிலீடு அலுவலர் வரிப்புத்தகத்தில் அறவோலையைப் பதிவர். பின் ஓலைநாயகம் முதலியோர் கையொப்பம் இடுவர்.

(1) இராசராசன் தன் 21-ஆம் ஆண்டு 92ஆம் நாள் உத்தரவிட்டான் (2) இவ்வோலை 96-ஆம் நாளில் வரியில் இடப்பெற்றது. (3) 21-ஆம் ஆண்டில் நாட்டாரைத் திருமுகம் அடைந்தது (4) இரண்டு ஆண்டுகட்குப்பின், 23-ஆம் ஆண்டு 163-ஆம் நாளில் அறையோலை வரியிலிடப்பட்டது என லெய்டன் பட்டயம் கூறுகிறது.

அரசனின் ஆணையின் அடிப்படையாகவே கல்வெட்டுக் களும், செப்பேடுகளும் வெட்டப்பெறுவனவாகும்.

4. பெரிய லெய்டன் செப்பேட்டின் இடையில் அமைந்துள்ள இராசராசனின் மெய்க்கீர்த்தியை எழுதி விளக்குக.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே
செழியரைத் தேசுகொள்
ஸ்ரீகோவிராஜராஜகேஸரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவற்கு
யாண்டு இருபத்தொன்றாவது"

என்பது லெய்டன் பட்டயத்தின் இடையில் அமைந்துள்ள மெய்க்கீர்த்தி. விளக்கம் வருமாறு:

காந்தளூர்ச்சாலை கலமறுத்தல்: இப்போர் கி. பி. 988-ல் நடந்தது. காந்தளூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி; வலியசாலை என்று கூறுவர். இது ஒரு கடற்கரைப்பட்டினம். இங்குச் சேரருடன் போர் நிகழ்ந்தது. இராசராசன் காலத்திலிருந்த சேர அரசன் பாஸ்கர ரவிவர்மன் என்பான். இவன் இராசராசனது தூதனை உதகை என்ற இடத்தில் சிறைப்படுத்தினான்; ஆகையால் இராசராசன் காந்தளூர்ச் சாலையில் போர் நிகழ்த்தி வென்றான்; இப்போரில் சேரமன்னனது மரக்கலங்களை (கப்பற் படையை) அழித்தான்.

சிலர் '**சாலை**' என்பதற்கு 'உணவுச்சாலை' என்றும் '**கலமறுத்தல்**' என்பதற்கு 'இத்தனை மாணவர்க்கு உணவு அளிக்கலாம என்று வரையறை செய்தல்' என்றும் பொருள் தருவர். இவ்வுரை பொருந்தாது என்பர் சிலர்.

வேங்கிநாட்டுப்போர்: வேங்கைநாடு என்பது கிருஷ்ணை கோதாவரியாறுகட்கு இடையில் கீழ்க் கடலைச் சார்ந்து அமைந்தநாடு. அங்குக் கீழைச் சாளுக்கியர் ஆண்டு வந்தனர். சக்திவர்மன் என்பான் தன் தாயத்தினரால் நாடிழந்து இராசராசனை உதவி கேட்டான். இராசராசன் வேங்கிநாட்டிற்குத் தெற்கேயுள்ள நாடுகளை வென்று கி. பி. 999-ல் வேங்கி நாட்டரசனையும் வென்று சக்திவர்மனை வேங்கிநாட்டு அரசனாக்கினான். (வேங்கிநாடு சோழர் ஆட்சிக்கு உட்படுத்தப்பெறவில்லை.)

கங்கபாடி: மைசூர்ப்பகுதிக்குத் தெற்கு, சேலம் ஜில்லாவின் வடக்கு ஆகிய நிலப்பகுதியைத் தன்னகத்துக் கொண்டது, இதன் தலைநகர் தலைக்காடு.

நுளம்பபாடி: மைசூர்ப் பகுதியின் கிழக்கும், பெல்லாரி ஜில்லாவும் அடங்கிய நிலப்பகுதி.

தடிகைபாடி: மைசூர்ப் பகுதியைத் தன்னகத்துக் கொண்ட நிலப்பகுதி.

குடமலைநாடு: இந்நாளில் குடகு என்றும் இது வழங்கப்பெறும். பணசோகே என்ற இடத்தில் போர் நடந்தது.

கொல்லம்: சேரனோடு நடத்திய இரண்டாம்போர் இது.

கலிங்கம்: கோதாவரியாற்றிற்கும் மகாநதிக்கும் இடையில் வங்காளக்குடாக்கடலைச் சார்ந்த நிலப் பகுதி. அங்கு விமலாதித்தன் என்பான் ஆண்டு வந்தான். அவன் வேங்கிநாட்டு அரசனாகிய விமலாதித்தனுக்கு இடையூ விளைவித்தான் போலும். ஆகவே இராசராசனது மகன் இராசேந்திரன் கலிங்க நாட்டின்மேல் படையெடுத்து வென்றான்.

ஈழத்துப்போர்: ஈழ மண்டலம் என்று இலங்கை குறிக்கப்பட்டுள்ளது. 'முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலம்' என்றும், எண்டிசை புகழ்தர ஈழமண்டலம்' என்றும் கல்வெட்டுக்களில் கூறப்படுவதால் சிங்களர் மிக்க ஆற்றலுடன் போர் செய்தனர் என்று அறியலாம். ஈழத்தில் அந்நாளில் ஆண்டவன் ஐந்தாம் மகிந்தன் என்பவன் ஆவன். இப்படையெழுச்சி 991-ல் நிகழ்ந்தது. ஐந்தாம் மகிந்தன் தோற்று, ஈழமண்டலத்தின் தென் பகுதியிலுள்ள ரோகணத்துக்கு ஓடிவிட்டான். ஈழத்தின் வடபகுதி சோழர் ஆட்சிக்கு உள்ளாயிற்று.

இனிச் "**செழியரைத் தேசுகொள்** என்றமையான் பாண்டியர்களை வென்றமையும் அறியப்படும். செழியர் என்று பன்மையிலுள்ளமையின் இவனால் வென்றடக்கப் பட்ட பாண்டியர்கள் ஒருவரின் மேற்பட்டவராதல் வேண்டும் என்றறியலாம். திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் குறிக்கப்பட்ட அமரபுயங்கன் என்பான், அப்பாண்டியர்க்குத் தலைவனாதல் கூடும். சேரர்களோடு போர்புரியத்

சென்றபோது இடையில் மறித்தவன் இவ் வமரபுயங்கன்; இவனை வென்றடக்கிய பிறகே சேரவரசனோடு இராசராசன் போர் புரிந்தான்.

[திருமகள் போல என்பது முதலாம் இராசராசனது மெய்க்கீர்த்தித் தொடக்கமாகும்; இவனது 8-ஆம் ஆட்சியாண்டு (993) முதல் காணப்படுகிறது.]

5. புரவுவரித் திணைக்களம் பற்றிக் குறிப்பு வரைக.

நிலங்களை அளத்தல், தரம் பிரித்தல், வரி நிர்ணயித்தல், வரி பெறுதல் முதலான பணிகளைப் புரிந்த 'நிலவரிக் கழகம்' புரவுவரித் திணைக்களம் ஆகும். இது 'புரவுவரித் திணைக் களநாயகம்' என்னும் தலைவரின் கீழ் இயங்கும் பலவகை அலுவல்ரை உடையது.

புரவுவரி: ஊர்தோறும் சென்று நிலவரி பற்றிய கணக்குகள் "ஊர்ப்பொத்தகத்தில்" குறிக்கப்பெற்றுள்ளனவா? என நோக்குதல் முதலான சில பணிகளை ஆற்றும் அலுவலன். இவன் புரவுவரிக் கண்காணி எனவும் கூறப்பெறுவான். இக்கால ரெவின்யூ அதிகாரிகளைப் போன்றவன்.

வரிப்பொத்தகம்: அரசுக்கு ஒவ்வொரு ஊரில் இருந்தும் ஆண்டுதோறும் வரவேண்டிய வரி வருவாய் (இறை கட்டின காணிக் கடன்) எவ்வளவு எனக் குறிக்கப் பட்டிருக்கும் புத்தகம் 'வரிப் புத்தகம்' எனப்படும். இப் புத்தகத்தில், "இன்னார் இவ்வூரில் இவ்வளவு நிலத்தை வெள்ளான் வகையில் அனுபவிக்கின்றனர்; அவர்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரி இவ்வளவு" என்று குறிக்கப் பெற்றிருக்கும். மேலும் அவ்வூரில் அமைந்த ஜீவித நிலம், தேவதான நிலம், பிரமதேய நிலம், முதலான இறையிலி நிலங்கள் போன்ற எல்லா வகை நிலங்களைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் குறிக்கப்பட்டிருக்கும்.

இவ் வரிப்புத்தகத்தில் நில உரிமையில் செய்யப்படும் மாற்றங்கள் பற்றி ஆணை பிறப்பிக்கப்பெறும் போதும், அவ்வரச ஆணை நிறைவேற்றப்பெற்ற பின்னரும் உடனுக்குடன் குறிக்கப்பெறும். இப்புத்தகத்தைக் கையாளும் புரவுவரித் திணைக்களத்து அலுவலரும் 'வரிப்பொத்தகம்' எனப்படுவர்.

வரிப்பொத்தகக்கணக்கு: ஆண்டொன்றுக்கு ஊர்ச் சபையார் காணியாளரிடம் இருந்து பெறவேண்டிய வரித் தொகை இவ்வளவு, செலுத்தப்பெறவேண்டிய வரிபாக்கி இவ்வளவு என்னும் விவரங்கள் அடங்கிய புத்தகம் 'வரிப் புத்தகக் கணக்கு' எனப்பெறும். இதனைக் கையாளும் அலுவலரும் 'வரிப்பொத்தகக் கணக்கு' எனப் பெறுவர். இராசராசனின் 23ஆம் ஆண்டில் 'மாதேவன் பூமி' வரிப் பொத்தகக் கணக்காக இருந்தான்.

வரியிலீடு: நில உரிமைபற்றிய மாறுதல்களை வரிப் பொத்தகத்தில் குறிப்பவன் 'வரியிலீடு' ஆவன். மாறுதல் பற்றிய அரசாணை அனுப்பப்படுவதன் முன்னும், திரு முகத்தில் அமைந்த அரசாணை நிறைவேற்றப்பட்டு அறை யோலைகள் செய்விக்கப்பெற்று அவை அரண்மனையை அடைந்த பின்னும், புரவுவரித் திணைக்கள அலுவலர் பலர் முன்னிலையில் இவன் வரிப்புத்தகத்தில் குறிப்பான். இராசராசனின் 23-ஆம் ஆண்டில் 'உறுவூருடையான் தாழிவீரசோழன்' இப்பணி புரிந்தான்.

முகவெட்டி: புரவுவரித் திணைக்களக் கீழ்நிலை அலுவலன்; வரிப்புத்தகத்தில் ஒரு ஊரின் பெயரை எளிதில் கண்டறியத் துணைபுரியுமாறு ஊர்ப்பெயரட்டவணை தயாரிப்பவன். இவனுக்குத் துணைபுரிபவன் 'கீழ்முகவெட்டி' எனப்படுவான்.

பட்டோலை: புரவுவரித் திணைக்களத்தில் நாடோறும் நடக்கும் அலுவல்களைக் குறித்துவைப்பவன்.

6. லெய்டன் பட்டயத்துள் 'கோத்தொட்டு உண்ணாற்பாலன'வாகக் குறிக்கப்பெற்ற வரி வகைகள் யாவை? விளக்குக.

1. **ஊராட்சி:** *ஊர்ச் சபையினர் வாங்கிய வரி. ஆண்டிற்கொருமுறை வாங்கப்பெற்றது. சதுர்வேதிமங்கலச் சபையினர் வாங்கிய "சபாவிநியோகம்" என்னும் வரியையும் வெள்ளான் வகைச் சிற்றூரினர் வாங்கிய 'ஊரிடுவரிப்பாடு' என்னும் வரியையும் குறிக்கும் பொதுச்சொல். 2.* **நாட்டாட்சி:** *நாட்டுச் சபையாரால் வாங்கப்பெற்ற வரி. 3.* **வட்டிநாழி:** *வட்டியின் மீது இடப்பெறுகின்ற வரி எனவும், நாழிவட்டில் எனக் கொண்டு நீர்பாயும் நாழிகையைக் கணக்கிட்டு விதிக்கும் வரி எனவும் கூறுவர். "வட்டி என்பது 6 குறுணி அல்லது 48 படி தானியம்கொள்ளும் கூடை. இக் கூடையளவு தானியம் விற்க ஒரு நாழியளவு வரி செலுத்துவது வட்டிநாழி" எனத் திரு.* K. V. S. *ஐயர் கூறுவார்.* Dr. *கிருஷ்ணசுவாமி ஐயங்கார், வட்டில்நாழி எனப்பிரிப்பர். 4.* **பிதாநாழி:** *புதாநாழி. நான்கு நாழி அல்லது ஒரு மரக்காலுக்கு ஒரு நாழி வீதம் பெறப்பெறும் விற்பனைவரி என்பர்,* Dr. *கிருஷ்ணசுவாமி அய்யங்கார். 5.* **கண்ணாலக்காணம்:** *மணமக்கள் தம் திருமணத்தின் போது அரசுக்கிறுக்கும் இறை. 6.* **வண்ணாரப்பாறை:** *துணி வெளுப்பவர் செலுத்தும் வரி. 7.* **குசக்காணம்:** *பானைகளை வனைபவர் செலுத்தும் வரி. 8.* **நீர்க்கூலி:** *தண்ணீர் வரி. 9.* **ஓலைக் கூலம்:** *ஒருவகை வரி; தானியமாகப் பெறப்படுவது. 10.* **தறிப்புடவை:** *நெசவாளர் புடவையாகச் செலுத்தும் வரி; ஓராண்டுக்கு ஒரு புடவையாகலாம்; இது தறிக்கூறை எனவும் கூறப் பெறும். 11.* **தரகு:** *தரகர் செலுத்தும் வரி. 12.* **தட்டார்ப் பாட்டம்:** *பொற்கொல்லர் செலுத்தும் வரி.*

13. **இடைப்பாட்டம்:** *இடையர் செலுத்தும் வரி.* *14.* **மாட்டுக்கிறை, நல்லா, நல்லெருது:** *கால்நடைகளில் மாடுகட்கும் பெரிதும் பயன்படும் ஆவுக்கும் எருதுக்கும் விதிக்கப்பெறும் வரி.* *15.* **நாடுகாவல்:** *நாட்டுச் சபையார் களவு முதலாகிய குற்றம் நிகழாமல் நாட்டினைக் காத்தலுக்காகப் பெறும் வரி; நெல்லாகப் பெறுவர்.* *16.* **ஊடுபோக்கு:** *ஊடுபயிர்கட்காக விதிக்கப்பெறும் வரி.* *17.* **வில்பிடி:** *வில், அம்பு முதலானவற்றுக்கு விதிக்கும் வரி எனவும், வில் பிடிப்போர் கல்வி பயிலுங்கால் செலுத்தும் வரி எனவும் கூறுவர்.* *18.* **வாலமஞ்சாடி:** *மனையின்வால் தெருவின் முன்புறம் நீண்டு கிடத்தற்கு ஏற்பச் செலுத்தும் வரி. ஓரடிக்கு ஒரு மஞ்சாடிப் பொன் பெறப்பட்டதாகலாம்.* *19.* **உல்கு:** *சுங்கவரி.* *20.* **ஓடக்கூலி:** *ஓடத்திற்கு விதிக்கப்பெற்ற வரி.* *21.* **மன்றுபாடு:** *நியாய விசாரணைச் சபையினர் பெறும் அபராதம்.* *22,* **மாவிறை:** *மரவிறை ஆகலாம்; பயன் மரங்களை அனுபவிப்பாரிடம் பெறப்பட்ட வரி. மரம் ஒன்றுக்கு ஒரு மஞ்சாடிப் பொன்வீதம் பெறப்பட்ட மரமஞ்சாடியும் மர இறைகளுள் ஒன்றாகும்.* *23.* **தீயெரி:** *எரிபொருளுக்கு விதிக்கப்பெறும் வரி. கோயில்களில் வேள்விக்கனல் மூட்டி எரியில் பலியிடுதற்குப்பெற்ற 'தீயெரிசோறு' என்னும் வரியையும் குறிப்பதாகலாம்.* *24.* **ஈழப்பூட்சி:** *ஈழவர், கள் இறக்குதல் தொழிலுக்காகச் செலுத்தும் வரி.* *25.* **கூத்திக்கால்:** *நாட்டிய மகளிர் செலுத்தும் வரி.*

7. லெய்டன் பட்டயத்தில் கண்ட அரசியல் பிரிவுகளைத் தருக.

முதல் இராசராசன் காலத்தில் மண்டலங்கள், வளநாடுகளாகப் பிரிக்கப்பெற்றன. (வளநாடு – மாவட்டத்துக்குச்

சமமான நிலப்பரப்பு) வள்நாடுகள், நாடுகளாகப் பிரிக்கப் பெற்றன. (நாடு – தாலூகாவுக்குச் சமம்) லெய்டன் செப்பேடுகளில் கண்ட அரசியல் பிரிவுகள் பின்வருமாறு :

1. **க்ஷத்ரிய சிகாமணி வளநாடு** : கும்பகோணம், நாகப்பட்டினம், நன்னிலம், மாயூரம் தாலூகாவில் அமைந்த பல ஊர்கள் இவ் வளநாட்டில் இருந்தன. 'க்ஷத்ரிய சிகாமணி' என்பது முதல் இராசராசனின் சிறப்புப் பெயர் களில் ஒன்று. இது பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நாடுகளைத் தன்னகத்துக்கொண்டது. இவற்றுள் **பட்டணக் கூற்றமும், திருநறையூர் நாடும், வேளாநாடும்** லெய்டன் செப்பேட்டில் கூறப்பெற்றுள்ளன.

2. **அருமொழிதேவ வளநாடு** : 'அருமொழி' என்பது இராசராசனின் இயற்பெயர். இப்பெயரால் அமைந்த இவ்வளநாடு தென்கடுவாய் எனவும் கூறப்பெறும். நாகைவட்டக் கடுவயாற்றின் தென்பகுதியைத் தன்னகத்துக் கொண்டது என்பர். இவ்வள்நாடு 11க்கும் மேற்பட்ட நாட்டுப் பிரிவுகளுடையது. லெய்டன் பட்டயத்தில் **நென்மலிநாடு, புறங்க்ரம்பைநாடு** என்னும் இரு உட் பிரிவுகள் குறிக்கப்பெற்றுள்ளன.

3. **இராசேந்திரசிங்க வளநாடு** : இது காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதி. இராசேந்திர சிங்கன் என்பது முதல் இராசராசனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. முதல் குலோத்துங்கன் காலத்தில் இவ்வளநாடு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றது. மேற்குப் பகுதி, உலகுய்யவந்த சோழ வளநாடு எனவும், கிழக்குப் பகுதி விருதராச பயங்கர வளநாடு எனவும் பெயரிடப் பெற்றது. 22க்கும் மேற்பட்ட இவ் வளநாட்டின் நாடுகளில், லெய்டனில் காணப்பெறுபவை, **கார்நாடு, குறுக்கைநாடு, பொய்கைநாடு** என்பன.

4. **நித்தவிநோத வளநாடு:** குடந்தை, மன்னார்குடி, தஞ்சை தாலூகாக்களின் ஊர்கள் சில இவ்வளநாட்டகத்தன. நித்தவிநோதன் – முதல் இராசராசன். 10க்கும் மேற்பட்ட இதன் நாட்டுப் பிரிவுகளுள் **ஆலூர்க் கூற்றமும், பாம்புணிக் கூற்றமும்** லெய்டன் பட்டயத்தில் கூறப் பெற்றவையாகும்.

5. **உய்யக்கொண்டார் வளநாடு:** முதல் ராசராச னின் சிறப்புப் பெயராகிய உய்யக்கொண்டான் என்னும் சிறப்புப் பெயரால் அமைந்தது இவ் வளநாடு. "அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக்கொண்டார் வளநாடு" எனத் தஞ்சையில் உள்ள இராசராசன் கல்வெட்டு ஒன்று இதனைக் குறிக்கும். இதன் உட்பிரிவுகளில், **வெண்ணாடு, அம்பர்நாடு, திரைமூர்நாடு** என்பவை செப்பேட்டில் கூறப்பெற்றவை.

8. சிற்றூர் வகை; ஊரவை அலுவலர்பற்றி லெய்டன் பட்டயத்தில் கண்ட குறிப்புகள் யாவை?

I. **சிற்றூர் வகைகள்:** (*1*) **பிரமதேயச் சிற்றூர்:** மறைவல்ல அந்தணர், அரசரிடமும் மற்றவர்களிடமும் பிரம தேயமாக ஓரூரினைப் பெற்று அவ்வூரில் உள்ள நிலங்களைத் தத்தம் பங்கு வீதப்படி அனுபவிக்கும் சிற்றூர் பிரமதேயச் சிற்றூர் எனப்பெறும். பிரமதேய உரிமையாளர் பிரமதேயக் கிழவர் எனப்பெறுவர். லெய்டன் பட்டயத்தில் கண்ட பிரமதேயச் சிற்றூர்களைச் சாசன எண் 6ல் வினா எண் 2ல் அறவோலை செய்தோர் என்னும் பகுதியில் காண்க. (*2*) **தேவதானம்:** சிவன் கோயில்கட்களிக்கப் பெற்ற இறையிலி நிலம் மிகுந்த சிற்றூர். (*3*) **பள்ளிச்சந்தம்:** சைன, பௌத்தப் பள்ளிகட்களிக்கப்பெறும் இறையிலி நிலம் மிகுதியாக அமைவது. ஆனைமங்கலம் முழுப்பள்ளிச்

சந்தச் சிற்றூராகும். (4) **வெட்டப்பேறு** – வெட்டிப்பேறு–வெட்டி என்னும் ஊர்ப் பொது அலுவலனுக்கு ஒதுக்கப்பெறும் இறையிலி நிலம். (5) **கணிமுற்றூட்டு :** சோதிடனுக்கு முற்றூட்டாகத் தரப்பெற்ற இறையிலி. கணி – சமண சங்கத்தவன் எனவும் பொருள் கூறுவர்.

II. **சதுர்வேதிமங்கலங்கள் :** நான்மறையிலும் ஆறு அங்கங்களிலும் வல்ல அந்தணரின் தன்னாட்சி நிலவிய ஊர் சதுர்வேதிமங்கலம். (1) **கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலம் :** உய்யக்கொண்டார் வளநாட்டில், வெண்ணாட்டில் இருந்தது. கேரளாந்தகன் – முதல் இராசராசன். (2) **ஸ்ரீ துங்கமங்கலமான அபிமானபூஷணச்சதுர்வேதி மங்கலம்** – க்ஷத்ரியசிகாமணி வளநாட்டில், திருநறையூர் நாட்டில் இருந்தது. ஸ்ரீ துங்கன்; அபிமானபூஷணன் – இராசராசனின் சிறப்புப் பெயராகலாம். தூற்பில் என்பது இவ்வூரின் பகுதியாக இருந்தது. (3) **ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம் :** இது ராசேந்திர சிம்ம வளநாட்டில், கார்நாட்டில் இருந்தது. வீரநாராயணன் – முதல் பராந்தகன். இது நாட்டுச்சபையாரின் ஆட்சிக்குட்படாமல் அரசனுடைய நேரடி ஆட்சியில் இருந்த **தனியூராகும்.** த்வேதை கோமபுரம் இதன் உட்பிரிவுகளுள் ஒன்று.

III. **ஊர்ச்சபையலுவலர் :** ஊர் எனவும் சபை எனவும் குறிக்கப்பெறும் ஊர்ச்சபையலுவலர். (1) **கரணத்தான் :** ஊர்ச்சபையின் கணக்குகளை எழுதுபவன். சபையின் வாரியங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிக் கணக்கரும், பேரூர்களில் கீழ்க்கணக்கரும் இருந்துள்ளனர். (கரணத்தான் – கர்ணம்) (2) **மத்தியஸ்தன் :** கிராம சபையினரின் முடிவுகளை அவர்கள் கூறியபடி குறிப்பேட்டில் எழுதுபவன்; ஊதியம் பெறும் அலுவலன்; நடுநிலைவகித்து நிகழ்ச்சிகளை நோக்கியதால் மத்யஸ்தன் எனப்பெற்றான். இந்நாளைய சபாநாயகர் போல்வான் இவன்.

IV. **ஊராள்வோன்:** ஊர்க்கு உரிமை படைத்தவன் அல்லது ஊராட்சித்தலைவன். **பருத்தியூர்க்கிழவன்** சிங்கன் வெண்காடன்; **குறும்பல்கிழான்** அரையன் ஸ்ரீகண்டன் போன்றவர் இவ்வகையினர் ஆவர்.

9. குறிப்பு வரைக.

1. **கிருஷ்ணன் ராமன்:** முதல் இராசராசனின் காலத்திலும் இவனுடைய மகன் இராசேந்திரன் காலத்திலும் இருந்த சேனைத்தலைவன்; உய்யக்கொண்டார் வளநாட்டில் வெண்ணாடு என்னும் பகுதியில் இருந்த கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலம் என்னும் ஊரினன். இவன் இராசராசன் காலத்தில் 'மும்மடிசோழப்பிரமமாராயன்' எனவும், இராசேந்திரன் காலத்தில் 'இராசேந்திர சோழப்பிரமமாராயன்' எனவும் கூறப்பட்டான். பெரிய லெய்டன் பட்டயத்தில் இராசராசனின் திருமந்திரஓலைநாயகங்களுள் ஒருவனாகக் குறிக்கப்பெறுகிறான்.

2. **ஈராயிரவன் பல்லவரையன்:** நித்தவினோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூரினைச் சேர்ந்தவன்; இராசராசனின் 21 ஆவது ஆண்டில் 'மும்மடிசோழபோசன்' எனவும் 23-ஆவது ஆண்டில் 'உத்தமசோழப்பல்லவரையன்' எனவும் குறிக்கப்பெறுகிறான்; இராசராசன் இராசேந்திரன் ஆகிய இருவர் காலத்திலும் இருந்தவன்; லெய்டன் செப்பேட்டு ஓலைநாயகங்களுள் ஒருவன்.

3. **கடாரத்தரையன் அல்லது சூளாமணி பன்மவிகாரம்:** கடாரம் என்பது மலேயாவின் மேல் கரையில் தெற்குப் பகுதியில் கெடா என்னும் பெயருடன் வழங்கும் நகர். இப்பகுதியில் இராசராசன் காலத்து அரசனாக இருந்தவன் 'சூளாமணிவர்மன்' என்பவன் ஆவான். இவன் நாகையில் ஒரு புத்த விகாரம் எடுப்பிக்கத்

தொடங்கினன்; பணிமுற்றுமுன் இறந்தான். கி. பி. 1006ஐ ஒட்டி இப்புத்தவிகாரப்பணி இவன் மகன் மாற விஜயோதுங்கவர்மன் என்பவனால் முடிக்கப்பெற்றது. இவன் இவ்விகாரத்திற்குச் 'சூளாமணிபன்ம விகாரம்' எனத் தன் தந்தையின் பெயரை இட்டான். முதல் ராசராசன், ஆனைமங்கலத்தை இதற்குப் பள்ளிச் சந்தமாகத் தந்தான். குறிப்பு :- நாகப்பட்டணத்தில் இருந்த இவ் விகாரம் 28—8—1867ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி ஜெஸூட் மிஷினைச் சேர்ந்தவரால் இடிக்கப்பெற்றது. இங்கிருந்து கிடைத்த புத்தவிக்கிரகங்கள் தற்போது சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன.

4. **தஞ்சாவூர்ப் புறம்படி மாளிகை ராஜாஸ்ரயன்:** தஞ்சாவூர்ப் புறம்படி – தஞ்சாவூர் நகரின் வெளி நகர்ப்பகுதி ஆகும். ராஜாஸ்ரயன் என்பது இராசராசனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று. இது புறம்படியில் இருந்த ஒரு மாளிகையின் பெயராக உள்ளது. (இராசாச்ரயன் – அரசர்களால் விரும்பப்படுபவன்.)

5. **கோநேரின்மை கொண்டான்:** பாண்டியரும் சோழரும் பொதுவாகச் சூடிக்கொண்ட சிறப்புப் பெயர். இங்கு முதல் இராசராசனைக் குறிப்பது.

6. **ராசராசகேசரி:** சோழர் மாறிமாறிச் சூடிய இராசகேசரி என்னும் பொதுச் சிறப்புப் பெயரை ஒட்டி இராசராசனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்.

7. **திருமெழுக்குப்புறம்:** திருக்கோயிலில் மெழுகுவதற்காகத் தரப்பெறும் இறையிலி நிலம்; மூர்த்திக்குப் புனுகுச்சட்டம் சார்த்தும் செலவுகளுக்கு விட்ட இறையிலி என்றும் கூறுவர்.

8. **கோத்தொட்டு உண்ணற்பாலன:** அரசன் வசூலித்து அனுபவித்தற்குரியன. **ஊரிருக்கை:** ஊர்

மக்கள் சேர்ந்து வாழும் இடம். **மனைப்படப்பு:** *மனை கட்டுவதற்குரிய நிலம்.* **மன்று:** *ஊர்ப் பொதுமன்றம்; ஊரம்பலம்.* **கன்றுமேய்பாழ்:** *ஆனிரை மேய்ச்சலுக்குரிய நிலம்.* **கொட்டகாரம்:** *நெல் கொட்டும் களஞ்சியம் அல்லது பொக்கிஷம்.*

10. பின்வரும் சாசனத் தொடர்களை விளக்குக.

1. **பள்ளிச்சந்தம் இறங்கல் உட்பட அளந்தபடி நீங்கல் நீக்கி:** *அரசுக்குச் செலுத்தப்பெற வேண்டிய வரி, முற்றிலும் நீக்கப்பெறுதல்* **நீங்கல்** *எனவும், வரியை அரசுக்குச் செலுத்தாமல், ஊர்ச்சபை முதலான பிற நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் உரிமை தருதல்* **இறங்கல்** *எனவும் கூறப்பெறும்.* **அளந்தபடி:** *நிலங்களை அளந்தபடி. முதல் இராசராசனின் 16-ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1001ல்) தொடங்கி ஈராண்டுகளில் சோணாடு முழுமையும் அளக்கப்பெற்றமையைக் காட்டுவது.* **நீங்கல் நீக்கி:** *முன்பே இறையிலியாக அமைந்த நிலங்களை நீக்கி.*

2. **இறைகட்டின காணிக்கடன்:** *ஆண்டுதோறும் இவ்வளவு இறைவரும் என நிச்சயிக்கப்பெற்ற காணியால் வரும் கடமை. காணிக்கடன் – புரவு வரி; அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய நெல் எனவும் கூறுவர்.*

3. **இன்னிலத்துக்கு, நீர்க்கீந்தவாறு, வாய்க்கால் குத்திப் பாய்த்தவும் வாரவும் விடவும் பெறுவதாகவும்:** *இது வியவஸ்தையில் ஒன்று. பள்ளிச்சந்த நில உரிமையாளர், தம் நிலங்கட்குரிய பாய்ச்சலுக்கேற்ற வகையில் வாய்க்கால்களில் இருந்து கிளைக்கால்களை வெட்டி நீர் பாய்ச்சிக்கொள்ளலாம்; வாய்க்கால்களை வெட்டித் தூர் எடுத்து ஆழமாக்கி நீரைத் தேக்கலாம்; அணைகளில் அதிகமாக நீர்தேங்கிய காலத்தில் தண்ணீரை வெளியேற்றலாம். " இதனால், கிளைக் கால்களைப் பிரித்தல்*

அரசுக்கும் ஊர்ச்சபைக்கும் உரிய உரிமை; காணியாளருக் குரியதன்று. வாய்க்கால் வெட்டு நிகழ்த்தி ஆழமாக்குதல் ஊர்ச்சபை வாரியத்தார் பணி. தண்ணீர் மட்டத்தை அதிகரித்தலும் குறைத்தலும் கலிங்குவாரியத்தின் கடமை. எனினும் இம்மூன்று உரிமைகளும் இங்குப் பள்ளிச் சந்தத்துக்கே உரியதாக்கப் பெற்றன." என அறியப்பெறும்.

4. **இன்னிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடைநீர் பாயவும் வாரவும் பெறுவதாகவும்:** *மேனடை நீர் – அதிகப்படியாகச் செல்லும் நீர் அல்லது தேவையான மட்டத்துக்கு மேல் செல்லும் நீர். இந்நிலத் திற்குப் பாயும் வாய்க்கால்களில் மேனடைநீர் பாய்ச்சிக் கொள்ளலாம். வாய்க்கால்களைத் தூர்வாரி அகழலாம்.*

5. **இவ்வாய்க்கால்களில் அன்னியர் குறங் கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவும் குற்றேத்தப் பண்ணவும் கூடைநீர் இறைக்கவும் பெறுததாகவும்:** *பின்வருவன அன்னியர்க்கு விலக்கப்பெற்றவை.* (1) **குறங்கு அறுத்துக் குத்துதல்:** *மடைகளை வெட்டி நீர் பாய்ச்சுதல் எனவும் கிளைக்கால்களை அமைத்து நீர்பாய்ச்சுதல் எனவும் பொருள்படும்.* (2) **விலங்கு அடைத்தல்:** *விலங்கு – கட்டை. கட்டையை இட்டு ஓடும் நீரைத் தேக்கித் (தற்காலிக) அணைகளமைத்தல்.* **குற்றேத்தம்:** *சிறு ஏற்றம்.* **கூடைநீர்:** *கூடையால் இறைக்கப்பெறும் நீர். பள்ளிச் சந்த உரிமையாளர் மட்டும் இவற்றைப் புரியலாம்.*

6. **சென்னீர் பொதுவினை செய்யாததாகவும் அன்னீரடைத்துப் பாய்ச்சிக்கொள்ளப் பெறுவதாக வும்:** *பாசனத்துக்குப் பயன்படுத்தப் பெறவேண்டியது இவ்வளவு எனத் தீர்மானிக்கப்பெற்ற நீர் வீணாக்கப்பெறல் கூடாது. அந்நீர் உரிய அளவு பாசனத்துக்கு (அடைத்தும்) பாய்ச்சிக்கொள்ளப்பெறல் வேண்டும். (செல் + நீர் –*

சென்னீர். அடைத்துப் பாய்ச்சுதல் — தேக்கிப் பாசனத்துக்குப் பயன்படுத்துதல்) பள்ளிச்சந்த உரிமையாளரேயாயினும் பாசனநீரைப் பிற பொதுப்பணிகட்குப் பயன்படுத்தலாகாது என்பது பெறப்படும்.

11. லெய்டன் பட்டயத்துள் கூறப்பட்டுள்ள வியவஸ்தைகளும் பரிஹாரங்களும் யாவை?

பெரிய லெய்டன் பட்டயங்கள் 'ஆனைமங்கலம்' பள்ளிச்சந்தம் ஆக்கப்பட்ட காலத்தில் சில வியவஸ்தைகளும், பரிகாரங்களும் தரப்பெற்றதாகக் கூறுகிறது. வியவஸ்தை என்றால் தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் (விதிகள்) என்று பொருள். பரிஹாரம் என்றால் தவிர்ப்புக்கள் (விலக்கு) என்று பொருள். இவ்விதிகளும், விலக்குகளும் இத்தகைய ஊர்களுக்கே தரப்பெறும் சிறப்புரிமைகள் ஆகும்.

(விளக்கம்: 119 – 20; 129 – 30; 136 – 8-இல் காண்க.)

VII

மீனாட்சிபுரம் கல்வெட்டு

1. நெடுஞ்செழியனின் மீனாட்சிபுரக் கல்வெட்டு - குறிப்பு வரைக.

அமைவிடம்: மதுரையில் இருந்து மேலூர் செல்லும் சாலையின் வழியாகப் பிரிந்து சென்றால் தென்வடலாக ஐந்து மைல் நீண்டுள்ள ஒரு மலைத்தொடர் உள்ளது. இம்மலை 'கழுகுமலை' 'ஓவாமலை' என்னும் பெயர்களை உடையது. இதனடி வாரத்தில் உள்ள ஊர்களில் மீனாட்சிபுரம் ஒன்றாகும். கழுகுமலையின் கிழக்குப்புறம் வழுவழுப்பாகச் செதுக்கப்பெற்ற பல கற்படுக்கைகளை உடைய இயற்கைக் குகைத்தளம் ஒன்று உள்ளது. இக் குகையின்

மேற்புறம் பாறையில் ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. இவை பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் காலத்தன வாகும். தமிழ்நாட்டரசு தொல்லியல் துறையினரால் 'மீனாட்சிபுரம் கல்வெட்டுக்கள்' எனக் குறிக்கப்பெறும் இச்சாசனத்துக்கு 'மாங்குளம் கல்வெட்டுக்கள்' 'அரிட்டாபட்டிக் கல்வெட்டுக்கள்' என்னும் வேறு பெயர் களும் உண்டு.

கல்வெட்டின் காலம்: "**தமிழி**" எனவும், "**தென்னாட்டுப் பிராமி**" எனவும் கூறப்பெறும் எழுத்துக் களில் இச்சாசனம் எழுதப் பெற்றுள்ளது. எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டே இச்சாசனக் காலங்களை அறிஞர் கணிப்பர். மீனாட்சிபுரச் சாசன எழுத்துக்கள், "மிக முற்பட்டகாலத் **தமிழி**" எழுத்துக் களாகும். இச்சாசனம் கி. மு. 3-ஆம் நூற்றாண்டு அல்லது 2-ஆம் நூற்றாண்டுக்கு உரியது என்பர்.

செய்தி: பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவன் கணியநந்த ஸிரியிகுவன் என்னும் சமணத் துறவிக்குப் பள்ளி செய்வித்தான். இந் நெடுஞ்செழியனின் சகளனும், இளஞ்செழியன் என்பவனுடைய தந்தையுமாகிய செழியன் என்பவனும் கணியநந்த ஸிரியிகுவனுக்குப் படுக்கைகள் செய்தான்; இத்துறவிக்கு, வெள்ளறை நிகமம் என்னும் வணிகக் குழுவினரும், இக்குழுவினைச் சேர்ந்த கழிதிக அந்தை என்பவனின் மகன் பிணவு என்பவனும், சந்தரிதன் என்பவனும் படுக்கைகள் செய்வித்தனர்.

2. ஏழாவது எண் கொண்ட இக் கல்வெட்டுப் பகுதியைத் திருத்தி எழுதி விளக்கம் தருக.

'**கணியநந்த ஸிரியிகுவனுக்குத்**
தர்மம் ஈத்த நெடுஞ்செழியன் பணவன்
கடலன் வழுதி கொட்டுவித்த பள்ளி'

என்பது திருத்தமான பாடம். இதன் பொருள்: கணி என்னும் சமண சங்கத்தைச் சேர்ந்த நந்த ஸ்ரீ இயக்குவன் என்பவனுக்குக் கொடைகள் தந்தவனும் பணவன், கடலன், வழுதி என்னும் குலப் பெயர்களை உடையவனும் ஆகிய நெடுஞ்செழியன் இப்படுக்கைகளை உடைய பள்ளியைச் செய்வித்தான்.

கணிய்நந்தஅஸிரிய்இகுவ்அன்: (1) இதனைக் கணியநந்த ஸிரிஇகுவன் எனப்படிக்கின்றனர். 'கணியன் + நந்தஸ்ரீஇகுவன் = கணிய நந்த ஸிரிஇகுவனுகலாம். இவ்வாருனல் இவன் பெயர் நந்தஸிரிஇகுவன் என்பதாகலாம் ஸிரிஇகுவன் என்பது ஸ்ரீ யக்ஷன் என்பதற்கு உரிய வடமொழியாக்கப் பெயராகிய ஸ்ரீ இயக்குவன் ஆகலாம். இவன் கணியன் (சோதிடன்) ஆவான். கணி என்றசொல் சமணச்சங்கத்தைச் சேர்ந்தவரையும் குறிக்கும்சொல்; 'கணி குணி' என்னும் தொடரால் பள்ளன் கோயில் செப்பேட்டு வடமொழிப் பகுதியில் வஜ்ர நந்திக்குரவர் குறிக்கப்பட்டுள்ளமை இதற்குச் சான்ருகும். இப்பொருளடியாகக் கண்டால் நந்தஸிரிஇகுவன் சமணச்சங்கத்தைச் சேர்ந்தவனுவான்; கி. மு. 3-2-ஆம் நூற்ருண்டுகளிலேயே சமணசங்கத்தவர் இத்தகைய குகைகளில் வாழ்ந்தனர்; தமிழரசரின் பேராதரவு பெற்றனர் என்பது உறுதியாகும் (2) இதனைக் கணியநந்த ஆஸிரிகுவன் எனப்படித்தால் நந்தன் இயற்பெயர்; சமய ஆசாரியனுவான். **கே** – நான்காம் வேற்றுமை உருபு; கு. திராவிடமொழிகளில் கு, கெ, கெ (ge) உ என்பன நான்காம் வேற்றுமை உருபுகள். **தம்மம்** – தர்மம் வடசொல். **இத்தஅ** – ஈத்த; கொடுத்த அகரம் பெயரெச்சவிகுதி. **நெடுஞ்சழியன்** – நெடுஞ்செழியன், மீனாட்சிபுரம் கல்வெட்டுக்கள் முதலிரண்டனுள் நெடுஞ்செழியன் என்பவன் குறிக்கப்படுகிருன். இவன் பணவன் கடலன் வழுதி என்னும் குலச் சிறப்புப் பெயர்களை

உடையவன்; கணியநந்த ஸிரி இகுவனுக்குக் கொடைகள் தந்தவன்; பள்ளியும் அமைப்பித்தவன். இவனுடைய சகளனும் இளஞ்செழியன் என்பவனின் தந்தையும் ஆகியவன் செழியன் என்று இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

தமிழிலக்கியங்களில் நெடுஞ்செழியன் என்னும் பெயருடைய மூன்று பாண்டிய மன்னர்கள் குறிக்கப்பட்டுள்ளனர் (1) தலையாலங்கானம் என்னும் இடத்தில் நடந்த போரில் சோழன் இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளி, சேரமான்யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் பெருவேந்தர் இருவரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான் பொருநன் என்னும் ஐவகை வேளிரும் ஆக எழுவரை வென்றவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனப்பெறுவான். (2) சேரன் செங்குட்டுவனுக்குச் சமகாலத்தவனும் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெற்றவனும், வடவாரியர் படைகடந்தவனும் ஆகிய நெடுஞ்செழியன், இவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனப்பெறுவான். (3) பேரெயின் முறுவலார் என்னும் புலவரால் பாடப்பெற்ற நம்பி நெடுஞ்செழியன்.

மீனாட்சிபுரம் கல்வெட்டுக் கி. மு. 3–2-ஆம் நூற்றாண்டுக்கு உரியது ஆதல் உறுதி. (1) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் சிலப்பதிகார காலத்தவன். (2) தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் கிறித்துவுக்குப் பிற்பட்டவன். எனவே மீனாட்சிபுரம் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற நெடுஞ்செழியன் கி. மு. 3 – 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேறு ஒரு பாண்டிய மன்னன் என்பது ஆய்வாளர் கருத்து.

பணஅண் – அன் விகுதி உடம்படுமெய் பெற்றுப் புணராது விட்டிசைக்கிறது. பணவன் - பாண்டியன் எனவும்

பஞ்சவன் என்பதன் மரூஉ எனவும், கூறுவர். **கடல் அன்** - கடலன். ஒற்றுடன் உயிர் புணரவில்லை. **வழுத்திய்** - வழுதி. பாண்டியர்குலப்பெயர் **கொட்டுபித்தஅ** - கொட்டுவித்த. கொட்டுவித்த, கொடி ஓர் என்பவற்றினைக் கொட்டுவித்தல் எனத் திருத்திக் கொள்ளவேண்டும். கொட்டுதல் - சம்மட்டியால் கம்மியன் அடித்தல்; செதுக்குதல் எனப்பொருள்படும். இதன் பிறவினை வடிவம் கொட்டுவித்தல் என்பது. இது கட்டடக் கலைப்பணியைக் குறிக்கும் சொல். ஒலித்திரிபு நேரிடுங்கால் வகரம் பகரமாக மாறுவது உண்டாதலின் கொட்டுவித்த கொட்டுபித்த என்றுள்ளது. இச்சான்றால் இத்தகைய குகைகளைக் குடைந்து இயற்றுவித்தல் கொட்டுவித்தல் எனப்பெற்றமையை அறியலாம். **பளிஇய்** - பள்ளி. சமணமுனிவர் அல்லது பௌத்தர் வாழிடம். சமணர் மட்டுமே இப்பள்ளிகளில் வாழ்ந்தனர் என்பர் திரு. நாகசாமி. இது பிராகிருதச் சிதைவுச்சொல்.

2. "கணிய நந்த ஸிரி யிகுவ(னுக்குத்) தர்மம்
ஈத்த நெடுஞ்செழியன்
ஸலகன் இளஞ்செழிய(னி)ன் தந்தை
செழியன் செய்பள்ளி" என்பது திருத்தம்

நெடுஞ்செழியனுடைய மனைவியின் உடன்பிறந்தாள் கணவனும் (ஸலகன்) இளஞ்செழியன் என்பவனுடைய தந்தையும் ஆகிய செழியன் என்பான் இப்பள்ளியைச் செய்தான்.

நந்த ஸிரிய்குவன் — நந்த ஸிரியிகுவன். **தமம்** — தம்மம்; தர்மம் - வடசொல். **இத** — ஈத்த. **ஸலகன்** — ஸாலகன் எனவும் படிக்கலாம்; சகளன் - மனைவியின் உடன் பிறந்தாள் கணவன். **இளஞ்சடிகன்** — இளஞ்செழியன்; **தந்தைய்** — தந்தை. **சடிகன்** — செழியன்;

இவன் இளஞ்செழியனின் தந்தை; நெடுஞ்செழியனின் சகளன். **செ இய — செய். பளிய் — பள்ளி.**

3. "கணிய நந்த ஸிரி யிகுவனுக்கு
வெள்ளறை நிகமத்துக் காவிதி
கழிதிக அந்தை அ ஸுதன்
பிணவு கொடுப்பித்தோன்" - என்பது திருத்தம்.

கணியநந்த இயக்குவனுக்கு (திரு) வெள்ளறை நிகமம் என்னும் வணிகக்குழுவினைச் சேர்ந்தவருள் ஒருவனும் காவிதிப்பட்டம் பெற்றவனும் ஆகிய கழிதிக அந்தை என்பவனுடைய மகன் பிணவு என்பவன் கொடுத்தான்.

கணி இநதஸிரிய்குவ(ன்) — கணி(ய) நந்த ஸிரி யிகுவன். **வெள் அறைய் நிகமது** — வெள்ளறை நிகமத்து. **வெள் அறை நிகமம்** — மீனாட்சிபுரம் கல்வெட்டுக்களுள் இந்நிகமத்துக் கழிதிக அந்தையினுடைய மகன் பிணவு தந்த கொடையும், வெள்ளறை நிகமத்தார் பள்ளியில் படுக்கைகள் செய்வித்தமையும் கூறப்பெறுகின்றன. 'வெள்ளறை நிகமத்தார்' என்பவர், வெள்ளறையில் இருந்த வணிகக் குழுவினர் எனலாம். வெள்ளறை திருச்சிக்கு அருகிலுள்ள திருவெள்ளறை ஆகலாம். நிகமம் என்பது வணிகக்குழு எனவும், நகரம் எனவும் பொருள்படும் சொல். **காவிதி இய்** — காவிதி; இது அரசரால் வணிகருட் சிறந்தார்க்கு அளிக்கப்பெறும் பட்டம். வெள்ளறை நிகமத்தாருள் ஒருவனாகிய கழிதிக அந்தை காவிதிப்பட்டம் பெற்றவன். **கழிதிக அந்தை அ** — கழிதிக அந்தை என்பது ஒருவனுடைய பெயர். இப்பெயரின் பின்னமைந்த அகரம் ஆறும் வேற்றுமை உருபு. **ஸுதன்** — சுதன்; மகன் எனப் பொருள்படும் வடசொல்; இக்கல்வெட்டுக்களில் ஸகரம் வருமிடங்களில் எல்லாம் 'தமிழி' எழுத்துக் கையாளப் பெறுமல் 'அசோகன் பிராமி' வரிவடிவமே கையாளப்

பெற்றுள்ளது. **பிணஊ** — பிணவு; அந்தையின் மகன். பின்னல் தட்டி எனினும் ஆம். **கொடுபிதோன்** — கொடுப்பித்தோன்; கொடுப்பித்தான்; விகுதியில் ஆ, ஓ ஆகியிருக்கிறது.

4. "**சந்தரிதன் கொட்டுவித்தோன்**" என்பது திருத்தம். சந்தரிதன் என்பான் இப் பள்ளியில் படுக்கைகளைச் செதுக்குவித்தான் என்பது பொருள்.

கொடுபிதோன் — கொட்டுபித்தான் - கொட்டுவித்தான்.

5. "**வெள்ளறை நிகமத்தார் கொட்டிஓர்**" என்பது திருத்தம். வெள்ளறை நிகமம் என்னும் வணிகக் குழுவினர் இப்பள்ளியில் படுக்கைகளைச் செதுக்குவித்தனர்.

நிகமதார் – நிகமத்தார். **கொடி ஓர்** – கொட்டிஓர், கொட்டினர்.

3. மீனாட்சிபுரம் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள நெடுஞ்செழியன் யார்? ஆராய்க.

விளக்கம்: பக்கம் 140-1-இல் காண்க.

VIII

சிற்றண்ணல்வாயில் கல்வெட்டு

1. திருத்தி எழுதி விளக்குக.

1. "எருமி நாடு குமிழ் ஊர் பிறந்தகாவுடி ஈதேன்கு சிறுபோவில் இளயர் செய்த அதிட்அனம்"

எருமை நாட்டுக் குமிழூர்ப் பிறந்த
காவிதி ஈதேற்குச் சிறுபோவில்
இளையர் செய்த அதிட்டானம்

என்பது திருத்தம். புதுக்கோட்டையில் இருந்து ஒன்பது கற்றொலைவில் உள்ள சிற்றண்ணல்வாயில் (சித்தனவாசல்) மலையில் ஓவியக் குகையமைந்த பகுதியின் மறுபக்கம் இருக்கிற இயல்பான குகைத்தளத்தில் இக்கல்வெட்டு உள்ளது. ஏழடிப்பட்டம் என இந்நாளில் வழங்கும் இப் பகுதியில் வழுவழுப்பான பல படுக்கைகள் காணப்பெறு கின்றன. முதல் படுக்கையின் மூன்று பக்கங்களில் அழுத்தமாக வெட்டப்பட்டுள்ளது இக்கல்வெட்டு.

இக்கல்வெட்டு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு; கி. மு. 2–1 ஆம் நூற்றாண்டுக்குரியது. கி. மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு உரியது எனவும் கூறுவர். இக் கல்வெட்டில் எகரம் புள்ளி பெறவில்லை என ஐ. மகா தேவனும் புள்ளி உண்டு என இரா. நாகசாமியும் கூறுவர்.

கல்வெட்டுச் செய்தி: எருமை நாடு என்னும் பகுதியில் அமைந்த குமிழூரில் பிறந்தவனும் காவிதிப் பட்டம் பெற்றவனும் ஆகிய ஈதேன் என்பவனுக்குச் சிறு போவில் எனும் ஊர்க்குரிய இளையர் இவ்வதிட்டானத்தைச் செய்து தந்தனர்.

2. குறிப்பு வரைக.

(1) **எருமி நாடு:** எருமை நாடு. மைசூர் எருமையூர் எனவும் மைசூரினைச் சுற்றியமையும் பகுதி எருமை நாடு எனவும் கூறப்பெறும். (2) **காவுடி:** காவிதி; காவிதிப் பட்டம். (3) **சிறுபோவில்:** ஓருரின் பெயர்; சித்தன்ன வாசலாகலாம். (4) **இளையர்:** போர் வீரர். **தம்பியர்;** ஈதேனின் தம்பியர் எனினுமாம். (5) **அதிட்அனம் – அதிட்டானம்.** இடம்; படுக்கைகளமைந்த பள்ளியைக் குறிக்கும் சொல்.

IX

புகளூர் - ஆர்நாட்டார்மலைக் கல்வெட்டு

1. புகளூர் ஆர்நாட்டார்மலைக் கல்வெட்டினைப் பற்றிக் குறிப்பு வரைக.

அமைவிடம்: திருச்சி மாவட்டத்தில் கரூரில் இருந்து பத்துக்கல் தொலைவில் புகளூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூர்க்கருகில் ஆர்நாட்டார் மலை என்றொரு மலை உள்ளது. மலையடிவாரத்தில் வேலாயுதம்பாளையம் என்னும் ஊர் இருக்கிறது. இவ்வூரில் இருந்து மலைமீது ஏறிச் சென்றால் கல்வெட்டுள்ள குகைகளை அடையலாம். மலையின் தென்புறம் அமைந்த குகையில் 12 கல்வெட்டுகளும், வடபுறம் அமைந்த குகையில் ஒரு கல்வெட்டும் உண்டு. இவை 'தமிழி' எழுத்துக் கல்வெட்டுக்கள்.

காலம்: எழுத்து அமைதியைக் கொண்டு, "இக் கல்வெட்டுக்கள் கி. பி. 3–4ஆம் நூற்றாண்டுக்கு உரியவை; 'தமிழி' எழுத்துக்களின் பிற்காலத்தவை' என ஐ. மகாதேவனும், 'வடபுறக் குகைக் கல்வெட்டொன்று மட்டும் தொன்மையானது; கி. மு. 2 ஆம் நூற்றாண்டுக் குரியது; பிற கி. பி. முதல் நூற்றாண்டுக்கு உரியவை' என இரா. நாகசாமியும் கூறுவர்.

செய்தி: 'வடபுறக் குகை காகன் மகன் இளங்கீரனால் செய்விக்கப்பெற்றது' என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. தென்புறக் குகைக் கல்வெட்டுக்களில், பெருஞ்சேரல் இரும்பொறை மகன் பெருங்கடுங்கோ இவன் மகன் இளங்கடுங்கோ இளங்கோப் பருவத்தில் யாற்றூர்ச் செங்காயபனுக்கு இக்குகையிற் கல்லறுப்பித்தமையும், கொற்றந்தை படுக்கைகளமைந்த முன்று (முற்றம்) செய்வித்தமையும் கூறப்பட்டுள்ளது.

2. சேரர் மரபு கூறும் ஆர்நாட்டார் மலைக் கல் வெட்டினை எழுதி விளக்குக. (அல்லது) மூதா அமண்ணன் யாற்றூர்ச் செங்காயபன் உறைய் கோஆதன் செல்லிரும்பொறைமகன் பெருங் கடுங்கோன் மகன் கடுங்கோன்ளங் கடுங்கோ ளங்கோ ஆக அறுபித கல் - திருத்தி எழுதி விளக்குக

"மூத்த அமணன் யாற்றூர்ச் செங்காயபன் உறைய கோஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங் கடுங்கோன் மகன் கடுங்கோன் இளங் கடுங்கோ இளங்கோ ஆக அறுப்பித்த கல்"

என்பது ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டின் திருத்தமான பாடம்.

ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டில் (1) கோ ஆதன் செ(ர)ல் இரும்பொறை (இவன் மகன்) (2) பெருங்கடுங் கோன் (இவன் மகன்) (3) கடுங்கோன் இளங்கடுங்கோன் ஆக மூவர் மரபு அறியலாம். இம்மூவருள் இளங்கடுங்கோன் இங்குள்ள படுக்கைகளை அமைப்பித்தவன் ஆவன்; அமணரில் மூத்தவனும், யாற்றூரினனும் ஆகிய செங்காயபன் உறைவதற்காக இயற்றினன் என அறியலாம்.

சாசனத்தில் குறிப்பிடப்பெற்ற வேந்தர்கள் சேர மரபினர் ஆவர். 'கோ ஆதன்' 'இரும்பொறை' என்ற பெயர்கள் இவர் சேர மரபினர் என்பதனைக் காட்டும். இவர்கள் யாவர் என நோக்குவோம்.

ஐ. மகாதேவன் கருத்து: "கோ ஆதன் செல்லிரும் பொறையின் மகன் பெருங்கடுங்கோன்; அவன் மகன் இளங்கடுங்கோன் என இக் கல்வெட்டுக் குறிக்கிறது. "ஆதன் எனவும் செல் எனவும் பெயர்களுடையவனுக்

குறிக்கப்பெறுபவன் சங்க காலச் சேர அரசருள் செல்வக் கடுங்கோ வாழியாதன் மட்டுமே ஆவான். இவன் பதிற்றுப் பத்துள் ஏழாம்பத்தின் பாட்டுடைத்தலைவனாவான். இவனே 'கோஆதன் செல்லிரும்பொறை' ஆவான். இவன் மகனாகிய பெருங்கடுங்கோ பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய 'பெருஞ்சேரல் இரும் பொறை' ஆவான். இவன் மகன் இளங்கடுங்கோ ஒன்பதாவது பத்தில் குறிக்கப்பெறும் 'இளஞ்சேரல் இரும் பொறை' ஆவான்.

'பெருஞ்சேரல் இரும்பொறையே' பாலை பாடிய பெருங்கடுங்கோ என்றும், இளஞ்சேரல் இரும்பொறையே மருதம் பாடிய இளங்கடுங்கோ என்றும் வழிவழியாகக் கருதப்பெறுவதொரு கருத்துண்டு. இதனால் இவர்கள் பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ எனப்பெற்றமை அறியலாம். எனவே பதிற்றுப்பத்து 7, 8, 9-ஆம் பத்துக் களின் பாட்டுடைத் தலைவரே, இக்கல்வெட்டில் குறிக்கப் பெற்றவர்' என ஐ. மகாதேவன் கூறியுள்ளார்.

மயிலை சீனி வேங்கடசாமி: ஏழாம் பத்தின் பாட் டுடைத் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வழியாதனுக்கு இளந்துணைப் புதல்வர் இருந்தனர்; இவனுடைய முதல் புதல்வன் தகடூர் எறிந்த இளஞ்சேரல் இரும்பொறை; மற்றொரு மகன் குட்டுவன் இரும்பொறை; இக்குட்டுவன் இரும்பொறையின் மகன் இளஞ்சேரல் இரும்பொறை எனப் பதிற்றுப் பத்துக் கூறுகிறது. (1) கோஆதன்செல் லிரும்பொறை, அல்லது கோஆதன் சேரல் இரும்பொறை 7-ஆம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதனாக இருக்கமுடியாது என்பதனைப் பெயர்களே நன்கு காட்டும். (2) பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பெருங்கடுங்கோ என்னும் பெயர் சங்க இலக்கியத்தில் எங்கும் இல்லை. (3) சாசனத்தில் கண்ட இளங்கடுங்கோ

9-ஆம்பத்தின் தலைவனாகிய இளஞ்சேரல் இரும்பொறையாக இருக்க முடியாது. இளஞ்சேரல் இரும்பொறைக்கு இளங் கடுங்கோ என்ற பெயர் எங்கும் கூறப்பெறவில்லை. எட்டாம் பத்துக்குரிய பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பியாகிய குட்டுவன் இரும்பொறை என்பவனுடைய மகனே இளஞ்சேரல் இரும்பொறை என்பர். (ஐ. மகாதேவன் குட்டுவன் இரும்பொறை என்பது பொதுப்பெயர்; பெருஞ் சேரல் இரும்பொறையைக் குறிப்பது என்பர்). எனவே சாசனத்தில் கண்ட மூன்று அரசரை 7, 8, 9-ஆம் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்கள் எனக் கூறமுடியாது.

பெருஞ்செல்லிரும்பொறையின் மகனாகிய பெருங் கடுங்கோ, நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை, புற நானூறு ஆகிய தொகைநூல்களில் பாடல்களை இயற்றிய பாலைபாடிய பெருங்கடுங்கோ ஆவான், இவன் மகன் இளங் கடுங்கோ, நற்றிணையில் ஒரு பாடலும், அகநானூற்றில் இரண்டு பாக்களும் இயற்றிய மருதம்பாடிய இளங்கடுங்கோ ஆவான் எனக் கூறுவர்.

3. திருத்தி எழுதி விளக்கம் தருக.

1. **ஞாகன் மகன் ளங்கீரன்:** நாகன் மகன் இளங் கீரன் என்பது இதன் திருத்தம். இது புகளூரில் ஆர்நாட்டார் மலையில் உள்ள வடபுறக் குகையிலுள்ள கல்வெட்டாகும். இது தமிழி எழுத்தின் பிற்கால எழுத்தமைதி கொண்டது; கி.பி. 3 - 4 ஆம் நூற்றாண்டுக்குரியது என ஐ. மகாதேவனும்; கி.மு. 2-ஆம் நூற்றாண்டுக்குரியது என இரா. நாகசாமியும் கூறுவர்.

பல படுக்கைகளுடன் அமைந்த வடபுறக் குகையை நாகன் என்பவனின் மகன் இளங்கீரன் என்பவன் செய்தான் என்பது, கல்வெட்டுச்செய்தி

சொல் முதலில் வாராத 'ஞ' என்னும் எழுத்து இங்கு முதலில் வந்துள்ளது. இது வெட்டியோன் பிழையாகலாம்.

நடன. காசிநாதன் "ஞைகன் மகன் பெருங்கீரன்" என இக்கல்வெட்டினைப் படித்துள்ளார். இரா. நாகசாமி அவர்களின் கருத்தும் இதுவேயாகும்.

3. **கொற்றந்தை ளஎய்முன்று:** 'கொற்றந்தை செஎய் முன்று' எனத் திருத்தலாம். இது புகளூரில் உள்ள தென்புறக் குகைக் கல்வெட்டுக்களில் ஒன்று. கொற்றந்தை (கொற்றன் தந்தையின் மரூஉ முடிபு) என்பவன் படுக்கைகளமைந்த இம்முன்றினைச் செய்வித்தான் என்பது இதன் பொருள். (முன்று – முன்றில்; படுக்கையமைந்த பகுதி) ஐ. மகாதேவன், "கொற்றந்தை இளவன் முன்று" எனப் படித்துக் கொற்றந்தை இளவன் என்பவன் இங்கு மூன்று படுக்கைகளைச் செய்தான் எனப் பொருள் கூறுவர். தமிழ்நாட்டரசு தொல்லியல் துறையினர் கல்வெட்டில் 'முன்று' என்னும் சொல்லே இருக்கிறது எனக் கூறுவர். (முன்று – முற்றம்).

4. **இளங்கடுங்கோ கல் அறுத்தமை: குறிப்பு வரைக.**

புகளூரில் ஆர்நாட்டார் மலையில் உள்ள இரு கல்வெட்டுக்கள், அமணனும் யாற்றூரைச் சேர்ந்தவனுமாகிய செங்காயபன் உறைவதற்காக 'இளங்கடுங்கோ' என்னும் சேரமன்னன் கல்லறுத்தமையைக் கூறுகின்றன. (கல் அறுத்தல் – பள்ளியில் படுக்கைகளைச் செய்வித்தல்) இம் மன்னன் கோ ஆதன் செல்லிரும் பொறையின் பேரனும் பெருங் கடுங்கோனின் மகனுமாவான்.

ஒரு கல்வெட்டில் "ஆக அறுப்பித்த கல்" எனவும், மற்றொன்றில் "ஆகி அறுத்த கல்" எனவும் உள்ளன.

முதல் கல்வெட்டு "இளங்கடுங்கோ இளங்கோ ஆதற்பொருட்டு (வேண்டிக் கோடல்) நிலையில் அறுப்பித்த கற்படுக்கை" எனப் பொருள்படும். இளங்கடுங்கோ இளங்கோ ஆக அறுப்பித்த கல் என்பது கல்வெட்டுத் தொடர்.

அடுத்த கல்வெட்டு இளங்கடுங்கோ இளங்கோப்பட்டம் எய்தியபின் இப் படுக்கைகளைச் செய்வித்தான் எனப் பொருள்படும். இது, "இளங்கோ ஆகி அறுத்த கல்" என அமைந்துள்ளது. எனினும் அறிஞர் இரண்டனையும் இளங்கோப் பட்டம் எய்திய பின்னரே கல் அறுப்பித்தமை கூறுவதாகக் கொள்வர்.

5. புகளூர்க் கல்வெட்டுக்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை என்பதை ஆராய்க.

புகளூர் ஆர்நாட்டார் மலையில் உள்ள கல்வெட்டுக்கள் முற்பட்ட தமிழி எழுத்துக்களால் அமைந்துள்ளன. அவற்றின் காலம் கி. மு. 2 ஆம் நூற்றாண்டெனக் கருதப்படுகிறது. இக்கல்வெட்டில் கோ ஆதன் செல்லிரும் பொறை; அவன் மகன் பெருங்கடுங்கோன்; அவன் மகன் இளங்கடுங்கோன், என மூன்று சேர மன்னர் மரபு காணப்படுகிறது. இம் மூவரையும் பதிற்றுப்பத்தின் 7, 8, 9-ஆம் பத்துக்களின் பாட்டுடைத் தலைவர்களான செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை என்று ஐ. மகாதேவன் கூறுகிறார்.

மற்றும் புகளூர்க் கல்வெட்டில் 'பிட்டங் கொற்றன்' எனபவன் நல்பியூரினன் என்று குறிக்கப்பெறுகிறான். சங்க இலக்கியங்களில், சேரர்களின் படைத் தலைவன் பிட்டன் கொற்றன் என்றும், அவன் குதிரைமலைத் தலைவன் என்றும் அதிகமான் மகன் எழினியும் குதிரைமலைத் தலைவன் என்றும் குறிப்புக்கள் உள்ளன. இவற்றைக்கொண்டு, முதலில்

அதிகமானின் மகன் எழினி குதிரைமலையை ஆண்டான் என்றும் பெருஞ் சேரலிரும்பொறை தகடூரை முற்றுகை யிட்டபோது பிட்டன் கொற்றன் படைத்தலைவனாக இருந்து தகடூரை எறிந்து வெற்றி வாங்கித்தந்தான் என்றும், அதனால் பெருஞ் சேரலிரும்பொறை குதிரைமலையைப் பிட்டன்கொற்றனுக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்றும் கோசரின் ஊர் நல்லூர் ஆகலானும் பிட்டன்கொற்றன் நல்பியூரினன் ஆகலானும் பிட்டங்கொற்றன் கோசர் தலைவனாக வேண்டும் என்றும் ஐ. மகாதேவன் குறித்து உள்ளார்.

கருரே சேரர்களின் தலைநகர் என்பதை உறுதி செய்யப் புகளூர்க் கல்வெட்டுக்கள் உதவுகின்றன. இனிக் கருவூரே சேரர்களின் தலைநகர் என்பதற்குரிய சான்றுகளைக் காண் போம். (1) புகளூர்க் கல்வெட்டில் கருவூர் பொன் வாணிகன் என்ற சங்ககாலப் புலவர் பெயர் காணப்படுகிறது. கருவூர் புகளூர்க்குப் பத்துமைல் தொலைவில் உள்ளது. (2) கருவூரில் ஓடும் 'ஆன்பொருனை' தற்போது ஆம்ராவதி என்று திரிந்து வழங்குகிறது. (3) கருவூருக்கு வஞ்சி என்றும் ஒரு பெயருண்டு என்பதைக் 'கருவூராகிய வஞ்சிமாநகர்' என்ற கல்வெட்டுத் தொடர் உறுதி செய்கிறது. (4) கருவூர்க்கு அருகிலுள்ள ஆர்நாட்டார் மலையில் சேரமன்னர் பெயர் கொண்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. (5) மேலை நாட்டார் குறிப்புக்களில் கருவூர் உள்நாட்டில் இருந்ததாகவே குறிக்கப்படுகிறது. (6) சங்க காலத்தில் கருவூருக்கும் மேலைநாடுகளுக்கும் வாணிகத் தொடர்பு இருந்தது என்பதனைக் கருவூர்க்கு அருகில் கிடைத்த ரோமானியக் காசுகள் உறுதி செய்கின்றன. (7) சேரன் செங்குட்டுவன் ஐந்தாம் பத்தில், 'காவிரி அன்றியும் பூவிரி புனல் ஒரு மூன்றுடன் கூடிய கூடல் அனையை" என்று குறிக்கப் படுகிறான். இக்கூடல் காவிரியும், ஆன்பொருனையும்,

குடவனாறும் ஒன்றுகூடும் கூடல் எனப் பழைய உரை குறிக்கிறது. இவ்வாறுகள் கருவூருக்கு அருகில் ஒன்று கூடுகின்றன. அதன் அருகே முக்கூடல் என்னும் ஊர் இன்றும் உள்ளது. (8) உறையூருக்கருகே கருவூர் இருந்தது எனச் சங்க இலக்கியம் குறிக்கிறது. (9) கருவூர்க்கு அண்மையில் கிடைத்த கல்வெட்டுக்களில் வஞ்சி நகரம் குறிக்கப்படுகிறது. (10) மேலைக் கடற்கரையில் உள்ள கொடுங்கோளூரை வஞ்சி என்று கூறுவதற்குக் கல்வெட்டுச் சான்று எதுவும் இல்லை.

6. முற்காலத்தில் சமணத் துறவிகளுக்கு யார் யார் கற்படுக்கைகள் செய்துகொடுத்தனர் என்பதனை விவரமாக எழுதுக.

மீனாட்சிபுரம் கல்வெட்டு: (1) கணியாகிய நந்தஸ்ரீ இயக்குவனுக்கு நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் ஒரு பள்ளி செய்து கொடுத்தான். (2) அதே இயக்குவனுக்கு நெடுஞ்செழியனின் சகலனும் இளஞ் சடிகனது தந்தையுமாகிய சடிகன் ஒரு பள்ளி செய்து கொடுத்தான். (3) அதே இயக்குவனுக்கு வெள்ளறை நிகமத்துக் காவிதி கழிதிக அந்தை என்பவனின் மகன் பிணவு என்பவன் ஒரு பள்ளி செய்து கொடுத்தான். (4) சந்தரிதன் என்பவன் ஒரு பள்ளி செய்து கொடுத்தான். (5) வெள்ளறை நிகமத்தோர் ஒன்று சேர்ந்து ஒரு பள்ளி செய்து கொடுத்தனர். சித்தண்ணல் வாயில் கல்வெட்டு: மைசூர் என்று இப்போது வழங்குகின்ற எருமை நாட்டில் குமிழூரில் பிறந்த காவிதி ஈதேன் என்ற துறவிக்குச் சித்தன்ன வாசல் என்று இப்போது வழங்கும் சிறுபோ என்ற ஊரில் அந்த ஈதேனின் தம்பிமார் (இளையர்) ஒரு அதிட்டானம் (கற்படுக்கை) செய்து கொடுத்தனர். புகளூர் ஆர்நாட்டார் மலைக் கல்வெட்டு: மூத்த அமணனாகிய யாற்றூர்ச் செங்காயபன் என்ற துறவி

உறுவதற்காகக் கோஆதன் சேரல் இரும்பொறையின் பேரனும், பெருங்கடுங்கோனின் மகனுமான இளங்கடுங் கோன் என்பவன் தான் இளங்கோ ஆவதற்காக ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தான். பின்பு, தான் இளங்கோ ஆனபின் ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தான்.

X

அரச்சலூர் இசைக் கல்வெட்டு

அரச்சலூர் இசைக் கல்வெட்டுப் பற்றியொரு கட்டுரை வரைக.

அமைவிடம்: ஈரோட்டில் இருந்து காங்கேயம் செல்லும் சாலையில் 12 கல் தொலைவில் அரச்சலூர் உள்ளது. இவ்வூரெல்லையில் உள்ளது நாகமலை. மலை வழியாக ஒருகல் தொலைவு சென்றால் ஆண்டிப்பாறை என்னும் பகுதியை அடையலாம். அங்கே உள்ள 'பாண்டியன் குழி' என்னும் பகுதியில் இயற்கையான குகைத்தளம் இருக்கிறது. இங்குள்ள கல்வெட்டு 'அரச்சலூரர் இசைக் கல்வெட்டு' ஆகும்.

காலம்: பொருட்சிறப்பும் எழுத்தியல் சிறப்பும் உடைய இக்கல்வெட்டானது 'தமிழி' எழுத்தின் பிற்கால அமைதிகளை உடையது. இது கி. பி. 3-4-ஆம் நூற்றாண்டு கட்கு இடைப்பட்டது என ஐ. மகாதேவன் கூறுவர்; கி. பி. 2-ஆம் நூற்றாண்டிற்குரியது எனத் தமிழகத் தொல்லியல் துறையினர் கூறுவர்.

கல்வெட்டுப் பின்வருமாறு: கல்வெட்டு எண் 10ஐக் காண்க.

இவ்விரண்டு கல்வெட்டுக்களும் இடவலமாகப் படித்தாலும் மேலிருந்து கீழாகப் படித்தாலும், ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. இதற்கு அருகில் அமைந்துள்ள கல்வெட்டு இவற்றுடன் தொடர்புடையது. அது பின்வருமாறு: க. எண். 10 காண்க.

1. **திரு. ந. இராமச்சந்திரன்** அவர்கள் இதனை,

"எழுத்துப் புணருத்தான் மணிய
வண்ணக்கன் தேவன் சாத்தன்"

என்று படித்தார்; முதலில் உள்ள கல்வெட்டும் இந்தக் கல்வெட்டும் ஒரேகாலத்தில் வெட்டப்பட்டவையே; முதல் இரு கல்வெட்டுக்களுக்கும் இதற்கும் தொடர்புண்டு. வர்ணகம் பாடுவதில் வல்லவன் (வண்ணக்கன்) ஆகிய தேவன் சாத்தன் என்பவன் ஊர் மணியக்காரனாக இருந்திருத்தல் வேண்டும். முன்னால் உள்ள இரண்டு கல்வெட்டுக்களும் அடைவு வண்ணங்களாகும்" என விளக்கம் தந்தார்.

2. **திரு. மகாலிங்கம்** அவர்கள், இக்குகையில் ஆசீவக நோன்பிகள் வாழ்ந்தனர்; முன்னிரண்டு கல்வெட்டுக்களுக்கும் இறுதிக் கல்வெட்டுக்கும் தொடர்பு இல்லை; ஆசீவகர் தவம்புரிய ஏற்பாடுகள் செய்தமையைக் காட்டுவது இக்கல்வெட்டு, என்று கூறி 'எழுத்துப் புணருத்தான்' என்பதைச் "சித்தம் தீர்த்தம் பூணத் தந்தான்" எனப் படித்தார்.

3. **திரு. ஐ. மகாதேவன்**, "ஏழுதானம் பண்வித்தான் மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன்" எனப் படித்தார். "தேவன் சாத்தன் என்பவன் மணிகளைப் பரிசோதித்துத் தரம் பார்க்கும் பணிபுரிந்து வந்தான்; அவன் ஏழு கற்படுக்கைகளைச் செய்வித்தான் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும்; முன்னிரு கல்வெட்டுக்களும்

இதன் சமகாலத்தன்; இயந்திரங்கள் ஆகலாம்" என்று பொருள் விரித்தார்.

4. மத்திய தொல்லியல்துறை ஆய்வாளர்கள்,

"எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தன்"

என்று படித்தனர்; "மணிகளைப் பரிசோதிக்கும் அலுவலன் (மணிய் வண்ணக்கன்) ஆகிய தேவன் சாத்தன் என்பவன் இசை எழுத்துக்களைப் புணர்த்தான்" என்பது இதன் பொருள். முன்னிரு கல்வெட்டுக்களும் அவனால் புணர்க்கப் பெற்றனவாகலாம் என்று திரு. நாகசாமி விளக்கினர்.

எழுத்துப் புணர்த்தல்: எழுத்துக்களை ஒன்றுடன் ஒன்றாகக் கூட்டுதல்: புணர்ச்சி – புணர்த்தல் ஆகும். இசைக்குரிய எழுத்துக்களை ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்து இசையுண்டாக்குதல் எழுத்துப் புணர்த்தலாகும்.

"சொல்லிய இயல்பின் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்"

என்ற சிலப்பதிகாரம் – அரங்கேற்றுக் காதையில் உள்ள தொடரில், சித்திரப் புணர்ப்பு; வஞ்சனைப் புணர்ப்பு என்னும் இரண்டுவகை புணர்ச்சிகள் கூறப்பட்டுள்ளன; சித்திரப் புணர்ப்பு என்பது இசைகொள்ளும் எழுத்துக் களின்மேல் பண்நீர்மை நிறுத்துதல் எனவும், வஞ்சனைப் புணர்ப்பு என்பது இசைகொள்ளா எழுத்தின் மெல்லொற்று வந்துழி மெல்லெழுத்துப்போல் நெகிழ்த்துப் புணர்த்தல் ஆகும் எனவும் பழைய குறிப்புரை கூறுகிறது. பாடலாசிரியன் குழலாசிரியன் முதலியோர் இவ்வாறெல்லாம் இசை எழுத்துக்களைப் புணர்க்கும் அறிவுடையராக இலங்கினர் என்பது சிலம்பிற் கண்டது. மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன் இவ்வாறு இசை எழுத்துக் களைப் புணர்த்தவனாதல் கூடும்.

2. அரச்சலூர் இசைக் கல்வெட்டின் எழுத்தமைதி பற்றிக் குறிப்பு வரைக.

அரச்சலூர் இசைக் கல்வெட்டானது 'தமிழி' என்னும் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு எழுத்துக்கள் கி. பி. 2, 3-ஆம் நூற்றுண்டுக்குரியவை.

(1) இக்கல்வெட்டில் மகரம், ணகரம் முதலிய எழுத்துக்கள் வட்டெழுத்து என்னும் எழுத்துக்களின் தொடக்க நிலையைக் காட்டுகின்றன. பிற எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களாம். இதனால் "தமிழி என்னும் எழுத்தில் இருந்தே தமிழ், வட்டெழுத்து என்னும் இரண்டு வகை எழுத்துக்களும் தோன்றித் தனித்தனியே வளர்ந்தன" எனப் புலனாகிறது. (2) இக்கல்வெட்டாலும் (தருமபுரி மாவட்ட நடுகற்களாலும்) கி. பி. 4–8ஆம் நூற்றுண்டுகளில், தமிழ் எழுத்துக்கள், வட்டெழுத்துக்கள் என்னும் இரண்டு வகையும் கலந்த எழுத்துக்களால் தமிழ்க் கல்வெட்டுக்கள் எழுதப்பெற்றன என்பது புலனாகிறது.

XI

திருநாதர்குன்று கல்வெட்டு

1. திருநாதர்குன்று கல்வெட்டினை எழுதி விளக்குக.

"ஐம்பத்தே முனசனம் நோற்ற சந்திர நந்தி ஆசிரிகர் நிசீதிகை" என்பது திருநாதர் குன்று கல்வெட்டாகும்.

செஞ்சிக்கருகில் உள்ள திருநாதர் குன்று குகையில் பல சமணர் வாழ்ந்துள்ளனர். அங்குப் பாறை ஒன்றில் இக்கல்வெட்டு காணப்படுகிறது.

சந்திரநந்தி என்னும் சமணப்பெரியார் இந்த இடத்தில் 57 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்; இறுதியில் இந்நிசீதிகையில் உயிர் நீத்தார் எனக் கூறுகிறது இது.

இக்கல்வெட்டு கி. பி. 6-7ஆம் நூற்றுண்டுக்கு உரிய வட்டெழுத்துக் கல்வெட்டாகும். 'ஐ' என்ற உயிரெழுத்து இங்குதான் முதலில் கிடைக்கிறது. வட்டெழுத்தின் வளர்ச்சியை அறிய இக்கல்வெட்டும் துணைபுரிகிறது.

XII

தண்டம்பட்டு நடுகல்

1. 12ஆம் எண்ணுள்ள இக்கல்வெட்டினைத் திருத்தி எழுதி வரலாற்றுக் குறிப்புரை தருக.

"கோவிசைய மகேந்திரவர்மற்குப் பதினெட்டாவது மேவேணாட்டு ஆந்தைப்பாடி ஈசைப் பெரும்பாணரசர் மருமக்கள் பொற்சேந்தியார் சேவகர் தொறுக் கொண்ட ஞான்று மீட்டுப் பட்டான் வேணாட்டு நந்தியார் கல்" என்பது திருத்தமான பாடம். இது 'தண்டம்பட்டு' என்னும் ஊரில், சாலையின் அருகில் உள்ள வேடியப்பன் கோயிலில், அமைந்துள்ள நடுகல் ஆகும். இது பல்லவ அரசன் முதல் மகேந்திரவர்மனின் 18ஆவது ஆட்சியாண்டு (கி. பி. 608)க்கு உரியது ஆகும்.

நடுகல்லமைப்பு: வலது கையில் குறுவாளும், இடது கையில் வில்லும் கொண்ட ஒரு வீரனின் உருவம் நடுகல்லில் உள்ளது. இவ் உருவத்தின் இடதுபக்கம் இக்கல்வெட்டுள்ளது. இது வட்டெழுத்துக் கல்வெட்டு.

செய்தி: மகேந்திரவர்ம பல்லவனின் 18ஆவது ஆட்சி ஆண்டில், மேல்வேணாட்டில் இருந்த ஆந்தைப்பாடியை 'ஈசைப் பெரும்பாணரசர்' என்னும் வாணர்குல அரசனின் மருமகனாகிய 'பொற்சேந்தியார்' என்பவன் ஆண்டுவந்தான். இவ்வரசனின் சேவகர்கள், (தண்டம்பட்டில் இருந்த)

ஆநிரைகளைக் கவர்ந்தனர். கவர்ந்த நிரையை மீட்பதற்கு நடந்த போரில் வேணாட்டினைச் சேர்ந்த நந்தியார் என்பவன் வீரமரணம் அடைந்தான். இந்நந்தியாருக்காக இந்நடுகல் நடப்பெற்றது.

2. குறிப்பு வரைக.

1. வேணாடு: வேள் + நாடு = வேணாடு. தென்னார்க்காடு வடவார்க்காட்டுப் பகுதிகளில் இவ்வேணாடு அமைந்ததாதல் வேண்டும். இவ்வேணாடு, வேணாடுமுன்னூறு எனக் குறிக்கப்பெறும். இவ்வேணாடு (1) தென் வேணாடு. (2) மேல் வேணாடு, (3) கீழ் வேணாடு எனப் பிரிக்கப் பெற்று இருந்தது. திருக்கோவலூர் முதலான ஊர்களைத் தன்னகத்தடக்கிய இவ்வேணாட்டின் உட்பிரிவுகளில் பல்லவச் சிற்றரசர் வாணர்க்கடங்கிய, சிலர் ஆட்சி புரிந்தனர். 2. மீவேணாடு: செங்கம் பகுதியிலமைந்த தாழையூத்து முதலான ஊர்களைத் தன்னகத்தடக்கியது; மேல் வேணாடு எனவும் கூறப்பெறும். 3. தொறு: தொழுவம், ஆநிரை, தொகுதி எனப் பொருள்படும் சொல். "தொழுவும் ஆநிரையும் தொகுதியும் தொறுவெனல்" என்பது பிங்கலந்தை நிகண்டு. செங்கம் நடுகற்களில் பயில வழங்கும் இச்சொல்லைத் திருஞானசம்பந்தர், திருவண்ணாமலைத் திருப் பதிகத்தில் கையாளுவர். 'தூமா மழைநின்று அதிர வெருவித் தொறுவின் நிரை ஓடும்' என்பது தேவாரத் தொடர். 4. மருமக்கள்: வழித்தோன்றல் (மருமான்); மருமகன்; அடங்கிய சிற்றரசர் என்றும் பொருள்படும். 5. வாணகோவரையர்: வாணகோப்பாடி நாட்டை ஆண்ட சிற்றரசர். சேலம் மாவட்டத்தின் கீழ்ப் பகுதியும் தென்னார்க்காட்டின் மேல் பகுதியும் வாணகோப்பாடி நாடாகும். இவ் வாணகோவரையர், மாபலிச்சக்கர வர்த்தியின் வழியினர் எனத் தம்மைக் கூறிக்கொண்டனர்;

பல்லவர்க்கடங்கிய சிற்றரசராக இருந்தனர். 'பெரும் பாணரசர்' இக் கல்வெட்டிற் கண்ட வாணர்குல அரசனுவான். 6. 'தொறுக்கொண்ட ஞான்றுமீட்டுப் பட்டான், என்ற பகுதியால் திணை துறை புலனுகும். ஆநிரை கவர்தல் வெட்சி; மீட்டல் கரந்தைத் திணையாகும். தொல்காப்பிய அடிப்படையில் வெட்சித்திணையில் அமையும், 'பூசல்மாற்று' என்னும் துறைக்கும், புறப்பொருள் வெண்பாமாலை யடிப்படையாக நோக்கின் கரந்தைத் திணையில்,

'படைக்கு ஓடா வியன் மறவரைக்
கடைக்கொண்டு களத்தொழிந் தன்று'

என்னும் இலக்கணம் உடைய 'போர்க்களத் தொழிதல்' என்னும் துறைக்கும் உரியதாகலாம்.

XIII

எடுத்தனூர் நடுகல்

1. 'எடுத்தனூர் நடுகல்' — குறிப்பு வரைக (அல்லது) கல்வெட்டெண் 13ஐத் திருத்தி எழுதி விளக்குக.

(அ) கோவிசைய மகேந்திரவர்மற்கு முப்பத்து நான்காவது வாணகோவரசர் மருமக்கள் பொற்றேக்கையார் இளமகன் கருந்தேவகத்தி தன்னெருமைப் புறத்தே வாடிப் பட்டான்கல்.

(ஆ) கோவிவன் என்னும் நாய் இருகள்ளரைக் கடித்துக் காத்திருந்தவாறு – என்பது திருத்தமான பாடம்.

இக் கல்வெட்டமைந்த நடுகல் எடுத்தனூரின் மேற்கே உள்ள ஊமைவேடியப்பன் கோயிலில் உள்ளது; இந்நாளில் தெய்வமாக வழிபடப்பெறுகின்றது. முதல் மகேந்திர வர்மனின் 34ஆம் ஆட்சியாண்டிற்கு (கி. பி. 624க்கு) உரியது.

சிற்ப அமைதி: நடுகல்லில் இடப்புறம் பார்ப்பவனுக்கு ஒரு வீரன் உருவம் உள்ளது. வில்லும் குறுவாளும் ஏந்தி நிற்கும் இவன் காலடியின் வலப்பக்கத்தில், காவல் புரியும் நிலையில் ஒரு நாயின் உருவமும் காட்டப்பட்டுள்ளது. சிலைகளின்மேல் வட்டெழுத்தாலாகிய இக்கல்வெட்டுக்கள் உள்ளன.

செய்தி: மகேந்திரவர்மனின் 34ஆம் ஆட்சியாண்டில், வாணகோவரையனின் மருமக்களுள் ஒருவன், 'பொற்றேக் கையார்' என்பவன். இவனுடைய படை வீரர்களுள் ஒருவன் கருந்தேவகத்தி என்பவன் ஆவன். இவன் எடுத்தனூரில் அமைந்த தன் எருமைத் தொழுவத்தை நிரை கொள்வாரிடம் இருந்து காக்கப் போரிட்டு வீர மரணம் அடைந்தான். இவன் நினைவாக இந்நடுகல் நிறுத்தப்பெற்றது.

எடுத்தனூரில் அமைந்த (கருந்தேவகத்திக்கு உரிமை யான இவ்) எருமைத் தொழுவில் களவுபுரியக் கள்வர் சிலர் முயன்றனர். 'கோவிவன்' என்னும் பெயருடைய நாய் கள்வர் இருவரைக் கடித்து நிரை காத்தது; அம்முயற்சியில் இறந்தது. அந்நாய்க்காக இந்நடுகல் நடப்பெற்றது.

2. மகேந்திரவர்மன்கால நடுகற் கல்வெட்டுக்களால் அறியலாகும் வரலாற்றுண்மைகளைத் தருக.

பாடப்பகுதி நடுகற்களுள், மகேந்திரவர்மனின் **34 ஆம்** ஆட்சியாண்டுக்கு உரியது, எடுத்தனூர் நடுகல். **32 ஆம்**

ஆட்சியாண்டுக்கு உரியது மோத்தக்கல் நடுகல். இவ்வாட்சி யாண்டுகளால், மகேந்திரவர்மன் 30 ஆட்சியாண்டுகளுக்குப் பின்னும் அரசாண்டமை உறுதியாகிறது. இதனை ஒட்டித் திரு. நாகசாமி எழுதுவது பின்வருமாறு: "செங்கம் நடுகற்களால் சிம்மவிஷ்ணு 33 ஆண்டுகளும் இவன் மகன் மகேந்திரவர்மன் 39 ஆண்டுகளும் ஆட்சி செய்தனர் என அறியப்படுகிறது. சிம்மவிஷ்ணு (580 to 600) சுமார் 20 ஆண்டுகளும், மகேந்திரவர்மன் (600 to 630) 30 ஆண்டு களும் ஆண்டுள்ளனர் என வரலாற்றாசிரியர் கூறியுள்ளனர். இவ்வாறு குறிக்கும்போது ஒரு மன்னனுக்குப் பின்னர் மற்றொருவன் பட்டத்துக்கு வந்தான் எனக்கொள்வர்; தந்தை இருக்கும்போதே மகனும் முடிசூடிக்கொண்டு சோழர் குலம் போல உடன் ஆண்டான் எனக் கருதுவது இல்லை. முதலாம் நரசிம்மன் கி. பி. 630-இல் அரியணை ஏறினான் என்பது உறுதியாதலினால் முதல் மகேந்திரவர்மன் 590-இல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும்; சிம்மவர்மன் 556-இல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும் என்று மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. அல்லது பல்லவரும் சோழரேபோல் தந்தையும் மகனும் ஒரே காலத்தில் ஆட்சி செய்தார்கள் என்று கொள்ளவேண்டியிருக்கும்"

மகேந்திரவர்மனின் இறுதிக் காலத்தில் வாணகோ வரையரின் மருமக்கள் தம்முள் போர்மலைந்தனர்; மருமக் களின் உறவினரும் போரில் ஈடுபட்டனர். அத்தகைய போர் நிகழ்ச்சிகளாலேயே தண்டம்பட்டுப் போரும் நிகழ்ந்தது எனலாம்.

3. குறிப்பு வரைக.

1. மயிந்திரபருமன்: பல்லவ அரசன் முதல் மஹேந்திரவர்மன். 'மஹேந்திரவர்மன்' என்னும் வட மொழிப் பெயரில் அமைந்த 'ஹ' கரம் 'ய' அல்லது 'ச'

என்ற எழுத்தாக மாறிச் செங்கம் நடுகற்களில் (க. எ. 12, 13) எழுதப்பெறுகிறது. மயிந்திர பருமன்; மயீந்திர பருமன்; மயேந்திர பருமன்; மசீந்திர பருமன் - என மகேந்திரவர்மன் குறிக்கப்பெறுகிறான்.

2. **தன் எருமைப் புறத்து வாடிப்பட்டான்:** தன் எருமைத் தொழுவினைக் காக்க முயன்று இறந்தான்.

3. **கோவிவன்:** நாயின் பெயர். இது இரு கள்ளரைக் கடித்துத் தொழுவினைக் காத்தது; இறந்தது. இதற்கு மகேந்திரவர்மனின் 34ஆம் ஆண்டில் எடுத்தனூரில் நடுகல் நடப்பெற்றது. மனிதர்க்கே அன்றி நாய் முதலான அஃறிணைப் பொருள்கட்கும் நடுகல் நாட்டப் பெறுதல் உண்டு என்பதனை இச்சான்று விளக்குகிறது.

XIV
தா. வேளூர் நடுகல்

1. 14–ஆம் எண்ணுள்ள இக்கல்வெட்டினைத் திருத்தி எழுதிப் பொருள் விளக்கம் தருக.

"கோவிசைய நரசிங்கவர்மற்கு இரண்டாவது வாணகோ அதியரசர் சேவகர் மீகொன்றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பனைய மாரியார் இவ்வூர்த் தொறுக்கொண்டஞான்று பட்டார்" என்பது திருத்தமான பாடம்.

இக் கல்வெட்டு அமைந்த நடுகல் தா. வேளூர் என்னும் ஊரின் வடக்கே ½ கற்றொலைவில் உள்ள வேடியப்பன் கோயிலில் உள்ளது, தெய்வ உருவாக இந்நாளில் வழிபடப் பெறுகிறது. இது இரண்டாம் நரசிம்மவர்மனின் இரண்டாம் ஆண்டுக்கு உரியது.

அமைதி : வில்லும் வாளும் ஏந்திய வீரன் ஒருவன் இடதுபுறம் பார்த்தவனாக நடுகல்லில் அமைக்கப்பட்டிருக்கிறான். உருவின் மேற்புறம் வட்டெழுத்தாலாகிய கல்வெட்டு அமைகிறது. இக் கல்வெட்டின் எழுத்தமைதி கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குரியது.

செய்தி : இரண்டாம் நரசிம்மவர்மனின் இரண்டாம் ஆண்டில், 'பனையமாரியார்' என்பவன் தா. வேளூர்த் தொழுவில் உள்ள ஆநிரையைக் கவர்தற் பொருட்டுப் படையெடுத்து வந்து போரிட்டான். இப்பனையமாரியார் பல்லவச் சிற்றரசனாகிய வாணகோவரையனின் கீழ், மேல்கொன்றை நாட்டில் இருந்த மேல்வேளூர் என்னும் ஊரில் இருந்து ஆட்சிபுரிந்து வந்தான். பனைய மாரியார் தா. வேளூரினைச் சேர்ந்த தொழுவினைக் கொள்வதற்குத் தான் ஆற்றிய போரில் இறந்தான். (வேற்றூரினனாகிய இவனுக்கு) இறந்தவூராகிய தா. வேளூரில் இந்நடுகல் நிறுத்தப்பெற்றது.

2. குறிப்பு வரைக.

1. **நரசிங்கபருமர் :** நரசிங்கவர்மன். இக்கல்வெட்டுக்குரியவன் இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன்) என்பது எழுத்தமைதியால் உறுதியாவதாகும்.

2. **பனையமாரியார் :** இவன் இரண்டாம் நரசிம்மவர்மனின் 2-ஆம் ஆண்டில் பல்லவருக்கடங்கிய வாணகோவரையனுக்கு அடங்கியவன் ; மீகொன்றை நாட்டில் இருந்த மேல் வேளூரினை ஆட்சி செய்தவன். (இதனால் ஊராள்வோர் இருந்தமை புலனாகும்) 'பனையமாரியார்' என்பதனைப் 'பறையமாளியார்' என நடுவணரசு தொல்லியலறிஞர் படித்துள்ளனர்.

3. **இவ்வூர்த் தொறுக்கொண்ட ஞான்றுபட்டார்:** தொறுவினைக் கொள்ளுதல் வெட்சித்திணை; இந்நடுகல் நிரைகவர வந்த இடத்தில் வீரர் இறந்தால், அங்கேயே அவர்க்கு நடுகல் எடுக்கப்பெறும் வழக்காற்றினைக் காட்டுகிறது.

4. **வாணகோஒஅதியரைசர்:** வாணகோ அதியரசர்.

XV

கம்பவர்மனின் சின்னையம்பேட்டை நடுகல்

1. சின்னையம் பேட்டை நடுகல் – குறிப்பு வரைக.

வடஆர்க்காடு மாவட்டச் சிற்றூர்களில் ஒன்று சின்னையம்பேட்டை. இங்குள்ள நடுகல்லில் ஒரு கல்வெட்டு உளது. ஊரின் வடக்கே ஒரு கல் தொலைவில் பாம்பன் ஆற்றங்கரையில் அமைந்துள்ள சாவுமேட்டு வேடியப்பன் கோயிலில் அமைந்துள்ள மூன்று நடுகற்களுள் இந்நடு கல்லும் ஒன்று. இது கம்பவர்ம பல்லவனின் 3 ஆம் ஆண்டுக்கு உரியது.

அமைப்பு: நடுகல்லொன்றில் நேரே நோக்குபவனுக் வில்லும் வாளும் ஏந்தியவனாக வீரன் உருவம் அமைந் துள்ளது. இந்நடுகல்லின் புறத்தில் அமைந்த இரண்டு கற்களில் தமிழ் எழுத்துக்களில் கல்வெட்டுள்ளது. ஒரு கல்லில் ஏழு வரிகளும் மற்றொரு கல்லில் ஆறு வரிகளும் உள்ளன.

செய்தி: கம்பவர்மனின் 3-ஆம் ஆண்டில், எயில் நாட்டைச் சேர்ந்த வீரர்கள், பாசாற்றூர் எருமைத்தொறு வினைப் போகிட்டுக் கைப்பற்றினர். நிரை கவர்ந்தனர். எயில் நாட்டார் நிரையை ஓட்டிச்செல்லலாயினர். பாசாற்

னூர்ரார் தம் எருமைத் தொறுவினைக் கவர்ந்த எயில் நாட்டவருடன் போரிட்டனர். போர் தொடர்ந்தது; கோவூர் நாட்டில், சிற்றிடையாற்றின் கரையில் முதுகொன்றை மூக்கின் மேல்மலை அயங்கயக்கரை என்னுமிடத்தில் சென்று எயில் நாட்டாருடன் பொருதனர். மீகொன்றை நாட்டைச் சேர்ந்த மலையனூருடைய செம்பந்தொண்டன் என்பவனுடைய மகனை காரிப்பெருமான் என்பவன் இப்போரில் கலந்துகொண்டான்; இவன் வயிரமேகவாணகோவரையரின் சேவகன். இவன் பெருவீரத்துடன் சண்டையிடும்போது இவனுடைய அம்பராத்துணியில் இருந்த அம்புகள் யாவும் தீர்ந்து போயின. இதுகண்டு தன் வாளினைத் தாவி உருவிப் படை எதிர்சென்று போரிட்டு வீரமரணம் அடைந்தான். அவன் நினைவாக இந்நடுகல் நட்ப்பெற்றது.

2. தொறு மீட்டுப் பட்டவர் யார் யார்? விளக்கமாக எழுதுக.

(க. எண். *12*, *13*, *14*, *15* காண்க.)

3. குறிப்பு வரைக.

1. **கம்பவருமன்:** இவன் மூன்றும் நந்திவர்மனின் மகன்; நிருபதுங்கனின் உடன் பிறந்தவனுகலாம் என **உல்சு** கருதுகிறுர்; யாருக்குப்பின் அரசு புரிந்தான் எனத் தெரியவில்லை; *25* ஆண்டுகட்குமேல் அரசுபுரிந்திருக்கிறுன். வடார்க்காடு மாவட்டத்தில் பல கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. காஞ்சி மாநகரை ஒட்டி இவன் ஆண்டனனு என உறுதியாகத் தெரியவில்லை.

2. **வயிரமேகவாணகோவரையன்:** வயிரமேகவாணகோவரையன் என்னும் வாணகுல அரசன் கம்பவர்மபல்லவன் காலத்தவன். இவன் (தென்னுர்க்காடு மாவட்ட) நடுநாடு, வாணகோப்பாடி, (வடவார்க்காட்டுள் பஞ்சு

பாண்டவர் மலையைச் சுற்றியமைந்த) இலாடைப்பாடி ஆகிய பகுதிகளை ஆண்டவன்; பல்லவர்க்கடங்கிய சிற்றரசன். காவிரியின் வடகரையில்இருந்த பெருநிலப் பரப்பனைத்தும் இவனாட்சியில் நிலவின என்பது செங்கம் நடுகற்கல்வெட்டுக்களில் கண்டது. அபராஜித வர்மனின் நான்காம் ஆண்டுக்குரிய திருவொற்றியூர்க் கல்வெட்டுக்கள் இரண்டில் '**வயிரமேகவரையனாயின வாணகோவரையன்**' எனக் குறிக்கப்பெறுகிறான். இவன் மனைவியர் பற்றி அக்கல்வெட்டுக் குறிக்கிறது. கம்பவர்மன் காலத் தா. வேளூர் (எண். 18) சின்னையன் பேட்டை (எண். 15) நடுகற்களில் இவ்வாணகோவரையன் குறிக்கப் படுகிறான்.

3. **மீகுன்றைநாடு:** மீகொன்றை நாடு – மேல் கொன்றை நாடு.

4. **எயினாட்டார்:** எயில் நாட்டார். இது எயில் நாடு 500 எனச் செங்கம் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகிறது.

5. **முதுக்கொன்றை மூக்கு:** திருப்பம்; கோணம். முதுக்கொன்றையில் உள்ளது.

6. **பாசாற்று எருமைத்தொரு எயினாட்டார் கொள்ளப், பாசாற்றூர் பூசலிடப் பூசல்சென்று கோலூர் நாட்டுச் சிற்றிடையாற்று முதுக்கொன்றை மூக்கின் மீமலை அயங்கயக்கரையில் சென்று முட்டி:** இது போர் நிகழ்ச்சி கூறும் பகுதி. எயில் நாட்டார் வெட்சிப்போர் புரிந்தனர்; பாசாற்று எருமைத் தொறு வினைக் கொண்டனர். உடனே பாசாற்றூரார் போரிட்டனர். (பூசல் மாற்று என்னும் துறை.) போர் தொடர்ந்து நடந்தது: கரந்தைப் போர் (நிரை மீட்டற்குரிய) வீரர் களாகிய பாசாற்றூரவர் எயில் நாட்டு வீரர்களை ஐயங்

குளக்கரையில் சென்று தாக்கினர். இவ் ஐயங்குளக்கரை கோவூர் நாட்டில் சிற்றிடையாற்றின் கரையில் மூது கொன்றையின் திருப்பத்தில் (மூக்கில்) உள்ளது.

7. **காரிப்பெருமாள் உரையிலம்புமாள எவ்விப் பத்திரமுருவிப் பட்டான்** : *மீமலை ஐயங்கயக்கரையில் வெட்சியாராகிய எயில் நாட்டவரை நிரை மீட்கப் போர் புரிந்த காரிப்பெருமான் தன் உறையிலிருந்த (உறை — அம்பறுத்தூணி) அம்புகள் தீர்ந்தமையால் எவ்விப் பத்திரம் (வாள்) உருவிப் போரிட்டிறந்தான். இப் போர் நிகழ்ச்சி, 'வெட்சித்திணையில், வாட்டொழிலில் பொய்த்த லின்றி மாற்றுரைக் கொன்று தானும் இறக்கும் ஒருவகைப் பிள்ளை நிலைக்கு உரியது. 'வருதார் தாங்கல் வாள் வாய்த்துக் கவிழ்தல் என்று இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்' என்பது தொல்காப்பியம். புறப்பொருள் வெண்பா மாலையில் கரந்தைத் திணையில் அமைந்த துறைகளுள் ஒன்றாகிய, 'ஆளெறி பிள்ளை' என்னும் துறைக்கு இந் நிகழ்ச்சி உரியது.*

> "வருவாரை எதிர்விலக்கி
> ஒருதாளுகி ஆளெறிந்தன்று" என்பது கொளு.

XVI

கம்பவர்மனின் திருவான்மூர் நடுகல்

1. **திருவான்மூர் நடுகல் — குறிப்பு வரைக.**

ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மாவட்டம் கூடூர் தாலூகாவில் மல்லாம் என்ற சிற்றூர் உள்ளது. (இவ்வூர் திருவான்மூர் என்று கல்வெட்டில் உள்ளது.) இவ்வூரி லுள்ள நடுகல் கம்பவர்மனின் 20-ஆவது ஆண்டுக்கு உரியது. நடுகல்லின் வலது கால் முட்டியை ஊன்றி அமர்ந்து

நிலையில் ஒரு வீரனின் தலையற்ற உடல் காணப்படுகிறது. வலதுகையில் குறுவாள் கொண்ட இவ்வீரன், இடது கையில் முடியினைப் பிடித்துத் தன் தலையை ஏந்திக் கொண்டு பலிபீடத்தில் வைப்பவனைப்போலக் காட்சி தருகிறான். கல்வெட்டு அவ்வுருவத்தின் மேற்புறம் அமைந்துள்ளது.

2. திருவான்மூர் நடுகற்கல்வெட்டில் கண்ட செய்திகளைத் தருக.

"ஒக்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் பட்டைப் போத்தன்" என்பவன் 'மேதவம் புரிந்ததற்கு இணையானது' என்று எண்ணிப் பிடாரிக்கு நவகண்டம் கொடுத்தான்; குன்றுத்த (தோளிடை அமைந்த) தன் தலையினை அறுத்துப் பலிபீடத்தின் மீது வைத்தான்.

திருவான்மூர்ச் சபையினர், ஊர்ப்பறை கொட்டிக் கல்மேடு செய்வித்தனர். 'ஒக்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் பட்டைப்போத்த'னுடைய ஆவி சாந்தியடைதற் பொருட்டு (அவன் மகனாகிய) பட்டைப்போத்தன் என்பவனுக்குத் திருவான்மூர்ப் பொத்தனங்கிழவர் 'தொறுப்பட்டி' என்னும் பெயருடைய நிலத்தைத் கொடுத்தனர். இது கம்பவர்மனின் 20 ஆம் ஆட்சியாண்டில் நடந்தது. "இத்தர்மத்தை 'அன்று' என மறுத்தவர் கங்கைக்கும் குமரிக்கும் இடையில் அமைந்த 700 காதப்பரப்பில் உள்ளார் செய்த பாவம் அனைத்துக்கும் உரியராவார். அன்று என மறுத்தவர்கள் அப்பொழுது ஆளும் அரசனுக்குக் கால்பொன் ஒறுப்புத் தொகை செலுத்தக் கடவர்" — என்பது கல்வெட்டிறுதியில் கண்ட காப்புரை. இக்கல்வெட்டால் போரில் இறந்தவர்க்கு மட்டுமல்லாமல் தலைப் பலி தந்தோர்க்கும் நடுகல் எடுப்பிக்கப்பெற்ற வழக்காறு அறியப்பெறும்.

3. குறிப்பு வரைக.

(1) **ஒக்கண்ட:** இது நாகனுக்கு அடைமொழியாகும். (2) **நவ(க்)கண்டம் கொடுத்தல்:** வாளால் ஒன்பது இடங்களில் வெட்டித் தசையைப் பலியாகக் கொடுத்தல். பின் தன் தலையைத் தலையைத் தானே அறுத்துக் கொற்றவைக்குப் பலியாகத் தருதலும் உண்டு. இச் செய்தி கலிங்கத்துப்பரணி முதலான தமிழ் நூல்களில் கூறப் பெறும். (3) **படாரி:** (Bhatari) பிடாரி; துர்க்கை எனினுமாம். (4) **குன்றகத்தலை:** குன்றன்ன தலை, பெருந் தலை. தோளிடை அமைந்த தலை எனினுமாம். (5) **பிடலிகை:** பலிபீடம். (6) **பொத்தனங்கிழவர்:** ஊர்ச்சபை உறுப் பினர். (7) **காவதம்:** 10 மைல். (8) **அன்ருள்கோ:** அந்நாளில் ஆளும் அரசன்.

XVII

பழமங்கலம் நடுகல்

1. பழமங்கலம் கல்வெட்டுப் பாடலை எழுதி விளக்குக.

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற சயம்பெறுகச் – சீர்த்தபுகழ்
நிற்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரடிகுலச்
சொக்கனேந்த லேஉலகிற் காண்"

என்பது திருத்தமான பாடம்.

இது, பழமங்கலம் என்னும் ஊரில், 'வேடன் கோயிலில்' தெய்வமாக வழிபடப்பெறும் நடுகல்லில் அமைந்துள்ள வெண்பாவாகும். நடுகல்லில் வாள்ஏந்தி நிற்கும் வீரன் உருவுடன் இக்கல்வெட்டு உள்ளது; 13–14-ஆம் நூற்றுண்டுக்குரிய எழுத்தமைதி கொண்டது.

மங்கலம் என்ற ஊரின்மேல் படையெடுத்து வந்த புகைவரைப் போரிட்டுக் கொன்றவனும், கரடி குலத்தைச் சேர்ந்தவனும் ஆகிய சொக்கன் என்னும் ஆண்டகையின் வெற்றியும் மிக்க புகழும் நிலைபெற்று நிற்குமாறு, நின்ற நிலையில் இந்நடுகல்லில் பொறிக்கப் பெற்றான் – என்பது பாடலின் பொருள்.

2. குறிப்பு வரைக.

1. **வாய்த்தபுகழ்மங்கலம்** – *பழமங்கலத்தின் பழைய பெயர். புகழ்வாய்த்த மங்கலம் என மாற்றின் மங்கலம் என்பது ஊரின் பெயராகும். 2.* **நிக்குவணம்** – *நிற்குவணம் – நிற்கும்வண்ணம்; புகழ்நிற்கும்வண்ணம். நிற்கும் வண்ணம், நிற்கும்நிலையில் எனினும் ஆம். 3.* **கரடிகுலச் சொக்கன் ஏந்தல்** – *சொக்கனேந்தல் என்பதனைப் பெயராகவோ, சொக்கன் என்னும் பெயருடைய ஆண்டகை என்றோ கொள்ளலாம். இவன் 'கரடி' என்னும் வம்சத்தவனாகக் கூறப்படுகிறான்.*

3. பழமங்கலம் நடுகல்லமைப்பினை விளக்குக.

பழமங்கலம் நடுகல்லமைப்புப் பிறநடுகற்களின் அமைப்பில்இருந்து வேறுபட்டது. பழமங்கலம் நடுகல் பின்புறத்தும், இருபுறங்களிலும், மேற்புறத்தும் கற்களால் மறைக்கப்பெற்று ஒரு வீடுபோல் காட்சி தருகிறது.

நடுகல்லின்மேல் பந்தல்இட்டு வழிபட்டவர்கள் கற்களால் மறைத்துச் சிறு கோயிலாக்கியமையை இவ் அமைப்பால் அறியலாம். தொல்காப்பியர் கூறிய கல்லொடு புணரும் இருமூன்று பக்கங்களுள், 'சீர்த்தகுசிறப்பில் பெரும் படை' என்பதும் ஒன்று. நடுகல்லுக்குக் கோயிலும் மதிலும் வாயிலும் ஏனைய சிறப்புக்களும் படைத்தல் பெரும் படையின் பகுதிகள் என்று நச்சினார்க்கினியர் கூறினார்; இளம்பூரணர் 'பெரும்படையாவது நாட்டிய கல்லுக்குக்

கோட்டம்செய்தல்; அது இற்கொண்டுபுகுதல் என்று உரைத்ததுறை' என்றார்.

வேத்தமருள் வீளிந்தோன் கல்லென
ஏத்தினர் துவன்றி இற்கொண்டுபுக்கன்று

எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

13 – 14-ஆம் நூற்றாண்டுக்குரியதும், இந்நாளில் வேடன்கோயில் என வழிபடப்பெறுவதுமாகிய பழமங்கலம் நடுகல்லமைப்பு, நடுகல் வழிபாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறுவதாகும்.

XVIII

கம்பவர்மனின் தா. வேளூர் நடுகல்

1. கம்பவர்மனின் தா. வேளூர் நடுகற் செய்தியைத் தருக.

இது வடவார்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம் தானிப்பாடிக்கு வடக்கே ஒருகல் தொலைவில் உள்ள தா. வேளூரில் காணப்பெறும் நடுகற்களில் ஒன்றாகும்; பல்லவ அரசன் கம்பவர்மனின் எட்டாவது ஆட்சியாண்டுக்கு இக்கல்வெட்டு உரியது.

பல்லவனுக்கடங்கிய சிற்றரசன் 'வயிரமேகவாண கோவரையன்' என்பவன் ஆவன். இவ்வாணர்குல அரசனின் சேவகருள் 'காளமன்' என்பவனும் ஒருவன். இக்காளமன், தகடூர்நாட்டில் இருந்த யாசாற்றூரினன் ஆகிய கதவ மாதேவன் என்பவனின் மகனாவன். காளமன், கம்பவர்மனின் எட்டாமாண்டில் மீகொன்றைநாட்டில் இருந்த மேல் வேளூரில் இருந்து வாழ்ந்துவந்தான்; இக்காலத்தில் முருங்கைச்சேரியினனாகிய நத்தத்(தன்) என்பவனுடைய தலைமயனாரின் மகளைக் கள்வர்சிலர் கவர்ந்துசென்றனர்

இதனைக்கண்ட காளமன், கள்ளரைத் துரத்திச்சென்று பிடித்தான்; கள்ளருடன் போரிட்டுக் கன்னியைக்காத்தான். வீர மரணமடைந்தான். இக் காளமனின் நினைவாக (தா. வேளூரில்) இந்நடுகல் நாட்டப்பெற்றது.

இந்நடுகல்லால் பகைவரோடு போரிட்டிறந்தார்க்கு மட்டுமல்லாமல், 'கள்ளரிடமிருந்து பெண்ணைக்காத்தல்' போன்ற செயற்கரும் செயல்கள் புரிந்தவர்க்கும் நடுகல் நிறுத்தினர் என்னும் வழக்காறு புலனாகிறது.

2. குறிப்பு வரைக.

(*1*) **தகடூர்நாடு :** *தருமபுரியின் பழைய பெயர் தகடூர். தருமபுரியைச்சூழ அமைந்த நாட்டுப்பகுதி.* (*2*) **பாகாற்றூர்** *– பாசாற்றூர்.*

3. தா. வேளூர் நடுகற் கல்வெட்டுக்களைப்பற்றித் தொகுத்து எழுதுக. (கல். எண். 17ம் 18ம் காண்க)

XIX
தகடூர் நடுகல்

1. தகடூர் நடுகல் – குறிப்பு வரைக.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில், '<u>அரிமிதைய மாவலிவாணராயர்</u>' என்னும் அரசன் கங்கநாடு, புறமலை நாடு, திருக்கோவிலூர்நாடு, கோவூர்நாடு, தாயனூர்நாடு, பற்றநாடு என்னும் பகுதிகளை ஆண்டுவந்தான். இக்காலத்தில் ஆண்ட நுளம்ப அரசன் ஒருவன், வாண வரசனுடன் பெரும் நம்பிக்கைக்குரியவனாக ஒழுகினான்; மணவுறவு செய்துகொண்டு அரிமிதையமாவலிவாணராயரின் அரண்மனை புகுந்தான்; வாண அரசனை வஞ்சித்து அவனது அரசாட்சியைக் கைப்பற்ற முயன்றான்.

நுளம்பனின் வஞ்சனையை அறிந்த மாவலிவாணராயர் அவனுடன் போரிட்டு இறந்தான். நுளம்பன் அந்நாட்டிற் கரசன் ஆனான். இந்நிகழ்ச்சி நடந்தகாலத்தில் அரிமிதைய மாவலிவாணராயரின் மனைவி கர்ப்பிணியாக இருந்தாள். 'சங்கரக்குட்டியார்' என்பவன் அரசியைக் காப்பாற்றிப் பாதுகாத்தான்; வாணவரசரின் தேவியார் ஆண்பிள்ளை பெறும்வரை பொறுத்திருந்தான். ஆண்பிள்ளை பிறந்தபின் தகடூர்மீது படையெடுத்துச் சென்றான்; நுளம்பனின் படையுடன் போரிட்டுத் தகடூருள் புகுந்து நுளம்பனைக் கொன்றான்; முன்பு இழந்த நாட்டுப்பகுதியை மீட்டான். நாடுபாவிய இப்போரில் சங்கரக்குட்டியாருக்குத் துணையாகச் சென்ற நாகந்தை சிறுகுட்டி என்பான் இறந்தான். தகடூரில் உயிர்நீத்த நாகந்தை சிறுகுட்டிக்கு இந்நடுகல் நிறுத்தப்பெற்றது.

2. குறிப்பு வரைக.

(1) **அரிமிதைய மாவலி வாணராயர்**: வாணர்குல அரசர். நுளம்பனிடம் நாடிழந்து மீட்கமுயன்று உயிர் நீத்தார். (2) **கங்கநாடு**: கங்கபாடி எனப்பெறுவது. மைசூர்மாநிலத் தென்பகுதியும் சேலம்மாவட்ட வடபகுதியும் தன்னகத்துக்கொண்டது. (3) **புறமலைநாடு**: புறமலையைச் சுற்றியமைந்த நாடு. தகடூர்நாட்டில் புறமலைநாடு இருந்தது என்க்குறிப்பு உண்டு. தீர்த்தமலை முதலான தர்மபுரி மாவட்ட ஊத்தங்கரை வட்டச் சிற்றூர்கள் பல இந் நாட்டகத்தன. (4) **கோயினூர் நாடு**: கோயிலூர் நாடு; திருக்கோவிலூரை ஒட்டிய பகுதியாகலாம். (5) **நுளம்பன்**: நுளம்பபாடியரசன். மைசூர்மாநிலக் கிழக்குப்பகுதியையும், பல்லாரி ஜில்லாவையும் தன்னகத்துக்கொண்டது நுளம்பாடியாகும். (6) **நாடுபாவினார்**: நாடுபாவுதல். இழந்த நாட்டினைப் பெறுதல் (பாவுதல்–பரப்புதல்) (7) **துணிந்து**: துணித்து; வெட்டிக்கொன்று. (8) **கல்நாடு**: கல்நாட்டு.

XX

மோத்தக்கல் நடுகல்

1. மோத்தக்கல் நடுகல் – குறிப்பு வரைக.

" கோவிசைய மயிந்திர பருமற்கு முப்பத்திரண்டாவது பொன் மோதனர் சேவகன் விண்றன் வடுகன் புலிகுத்திப் பட்டான் கல் " என்பது மோத்தக்கல்லில் ஆற்றங்கரை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகற் கல்வெட்டு. வட்டெழுத்துக்களால் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டின் கீழ்ப்புறத்தில் புலியுடன் போரிடும் வீரனின் உருவம் அமைந்துள்ளது. இவ்வீரனின் இடதுகை, புலியின் வாயிலுள்ளது ; வலதுகையில் குறுவாள் காணப்படுகிறது.

" பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் 32ஆம் ஆட்சியாண்டில் 'பொன்மோதனர்' என்பவனின் சேவகன் 'விண்றன் வடுகன்' என்பவன் புலியுடன் சண்டையிட்டான். புலியை குத்திக்கொன்றான். தானும் இறந்தான். அவனுக்காக இந்நடுகல் நடப்பெற்றது " என்பது மோத்தக்கல் கல்வெட்டுச் செய்தி.

இந்நடுகற்கல்வெட்டால் போரில் வீரமரணம் அடைந்தவர்கன்றிப் புலி முதலான விலங்குகளுடன் போரிட்டு இறந்தார்க்கும் கல் நாட்டப்பெற்றது என்னும் வழக்காறு அறியப்பெறும்.

XXI

ரெட்டியூர் நடு

1. ரெட்டியூர் நடுகல் – குறிப்பு வரைக.

" ஸ்வஸ்திஸ்ரீ அய்யப்ப தேவன் நாடாள
வேணுடையை இ(ஞ) சப்பையனர்

அடியான் அளய்க் குட்டி
பன்றி குத்திப் பட்டான் கல்"

என்பது ரெட்டியூர் நடுகற் கல்வெட்டு. ரெட்டியூர் தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள ஊர்களில் ஒன்று. இக்கல்வெட்டு 'ஐயப்ப தேவன்' என்னும் அரசன் காலத்தது. தனிஉரிமை படைத்தவன் போலத் தோன்றும் இவ்வரசனின் மரபு தெரியவில்லை. கி. பி. 9ஆம் நூற்றாண்டுக்கு உரியது இக்கல்வெட்டு என்பது எழுத்தமைதியால் புலனாகிறது.

'அய்யப்ப தேவன்' என்னும் அரசனின் காலத்தில் வேணாட்டையாண்ட இசைப்பையனார் என்பவனின் பணி மகனான 'அளக்குட்டி' என்பவன் பன்றியுடன் சண்டையிட்டான்; பன்றியைக் குத்திக் கொன்று தானும் இறந்தான். இவனுக்காக இந்நடுகல் நாட்டப்பெற்றது என்பது ரெட்டியூர் நடுகற் கல்வெட்டுச் செய்தி.

விலங்குகளுடன் போரிட்டு இறந்தார்க்கும் நடுகல் எடுக்கும் பழைய வழக்காற்றினை இந்நடுகல் காட்டுகின்றது.

2. நடுகற்கள் யார்யாருக்கு நடப்பெறும்? விளக்குக. (*க. எண். 12 முதல் 21 வரை காண்க*).

XXII
திருவையாற்றுக் கல்வெட்டு

1. முதல் இராசேந்திரனின் திருவையாற்றுக் கல்வெட்டுச் செய்திகள் யாவை? (அல்லது) முத்தான் பொன்னங்கை நல்கியன யாவை?

கோப்பரகேசரி பன்மரான முதல் இராசேந்திரனின் மூன்றும் ஆட்சியாண்டில், முதல் இராசேந்திர சோழனின் தேவியாரான 'நம்பிராட்டியார் த்ரைலோக்கியமுடையார்"

என்பவரின் அதிகாரிச்சியாக இருந்த 'முத்தான் பொன்னங்கை' என்பவள், இராசேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்றில் இருந்த தென்கயிலாயமுடையார் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஆடவல்லபெருமானுக்கும் நம்பிராட்டியார்க்கும் அணிகலன்கள் தந்தாள்.

ஆடவல்லார்க்குச் சார்த்தி அருளக் கொடுத்தன: (1) கழுத்தில் அணிவதற்காகச் **சண்பங்காறை** என்னும் ஒருவகை அணிகலன் கொடுத்தாள். இது குடிநைக்கல்லால் 6 கழஞ்சு பொன்நிறையுடையது; கட்டப்பட்ட மாணிக்கம் ஒன்றும் வயிரம் இரண்டும் உட்பட 6 கழஞ்சு 1 மஞ்சாடியும் 5 மா நிறையும் உடையது. (2) திருக்கைகளில் சார்த்தி அருள நான்கு **திருக்கைக்காறைகளைத்** தந்தாள். ஒவ்வொன்றும் 2 கழஞ்சு எடையுடையன. (3) திருக்கால்களில் அணியும் இரண்டு **திருக்காற்காறைகள்** தந்தாள். ஒவ்வொன்றும் பொன்நிறை 3 கழஞ்சு ஆக நிறை பொன் 20 கழஞ்சு; கட்டிய மாணிக்கம் 1ம் வயிரம் 2ம் உட்பட நிறை 20 கழஞ்சே 1 மஞ்சாடியும் 5 மா.

ஆடவல்லார் நம்பிராட்டியார்க்குச் சார்த்தியருள (1) **ஒற்றைத்தாலி** ஒன்று தந்தாள். இது 11 மணிகளை உடையது; கொக்குவாய் ஒன்றும் படுகண் ஒன்றும் கோத்தநாண் உட்பட 3½ கழஞ்சு 2 மஞ்சாடி 5 மா நிறை. (2) இவர்க்குத் திருக்காதுகளில் சார்த்த **நாறைக்கண்பட்டி** என்னும் அணிகள் இரண்டு தந்தாள். இவற்றின் நிறை அரைக்கழஞ்சு 4 மஞ்சாடி 5 மா.

2. குறிப்பு வரைக.

(1) **பரகேசரி:** சோழ அரசர் மாறி மாறிச் சூடிக் கொண்ட பெயர்களுள் ஒன்று. (2) **இராசேந்திரசிங்க**

வளநாடு : கல்வெட்டு 6 விளு 6ல் காண்க. (3) **பொய்கை நாடு :** திருவையாறு, திருநெய்த்தானம், திருமழபாடி ஆகிய தலங்களைத் தன்னகத்துக்கொண்ட நாடு. இது இராசேந்திர சிங்க வளநாட்டு உட்பிரிவுகளில் ஒன்று (நாடு – இந்நாளைய தாலூகாவுக்குச் சமம்). (4) **திருவையாற்றுத் தென் கயிலாயமுடையார் கோயில் :** திருவையாற்றில் உள்ள பஞ்சநதீஸ்வரர் கோயிலின் பெரிய திருச்சுற்றின் தெற்குப் பகுதியில் வடக்குநோக்கிய வாயிலுடன் தென்கயிலாயம் என்னும் சுற்றாலயம் அமைந்துள்ளது; இதே திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் உள்ள ஓலோகமாதேவீச்சுரத்தினும் முற்பட்டது இது. அப்பரடிகள் கயிலாயக் காட்சியை ஐயாற்றில் இருந்து கண்டமைக்கு அறிகுறியாக இக்கோயில் கட்டப்பட்டது என்பர். இக்கோயில் பழுதுபட்டுக் கிடந்ததால் முதல் இராசேந்திரனின் மனைவியார் பஞ்சவன் மாதேவியார் இதனைப் புதுப்பித்தார்; இராசேந்திரனின் மகள் அம்மங்கை நுந்தாவிளக்குக் கொடை தந்தாள். இக்கோயிலில் அமைந்த சிற்பநுட்பம் சாளுக்கிய நாட்டில் வளர்ச்சியடைந்த வாகாடகச் சிற்பத்திறனுக்கு எடுத்துக் காட்டாகும். (5) **நம்பிராட்டியார்:** அரசனின் தேவியரையும் இறைவியையும் குறிக்கும் மரியாதைச்சொல். (6) **திரைலோக்கியமுடையார் :** முதல் இராசேந்திரனின் மனைவியருள் ஒருத்தி. (7) **அதிகாரிச்சி :** பெண்ணதிகாரி; சோழர் அரசியலில் பெண்களும் உயர் அதிகாரிகளாக இருந்தனர். (அதிகாரிகளின் மனைவியரையும் இத்தொடர் குறிப்பதாகலாம்) (8) **குடினைஞக்கல் :** பொன்னை எடையிடும் கல். (9) **கொக்குவாய் :** சிறிதகன்ற வாயினை உடைய கொக்கி. (10) **படுகண் :** கொக்கியால் மாட்டிப் பிணைக்கப்பெறும் பகுதி. (11) **பதின்று ஒருபது :** பதினொன்று.

XXIII

திருவெள்ளறைப் பாடல் கல்வெட்டு

1. திருவெள்ளறையிற் கண்ட சாசனப் பாடலை எழுதி விளக்குக.

ஸ்ரீ

கண்டார் காணு உலகத்திற் காதல் செய்து நில்லாதே
பண்டே பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதே
தண்டுஆர் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
உண்டேல் உண்டு மிக்கது உலகம் அறிய வைம்மினே.

திருச்சிராப்பள்ளியில் இருந்து 12 கல் தொலைவில் திருவெள்ளறை என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் ஸ்வஸ்திக வடிவில், நான்மூலைப் பெருங்கிணறு ஒன்று உள்ளது. இக்கிணற்றின் சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதன் இறுதியில் இப்பாடல் காணப்படுகிறது.

பல்லவ அரசன் தந்திவர்மனுடைய (775 – 923) காலத்தில், ‘ஆலம்பாக்கத்து விசையநல்லூழான்’ என்பவனுடைய தம்பியாகிய ‘கம்பன் அரையன்’ என்பவன், இக்கிணற்றினை வெட்டினன். இது தந்திவர்மனின் நான்காம் ஆண்டில் தொடங்கி ஐந்தாமாண்டில் முடிக்கப்பெற்றது. இக்கிணற்றுக்கு **‘மார்ப்பிடுகு பெருங்கிணறு’** *என்பது பெயர்.*

இதன் பொருள் : *மெய்ப்பொருள் கண்டறிந்த பெரியவர்களால் நிலைப்பொருள் என்று கொள்ளப்படாத இவ்வுலகத்தினிடத்தே நீ ஆசைவைத்து நிற்காதே. முன்பே இறைவன் படைத்த ஆயுட்காலம் நிறைய உண்டு என்று எதிர்பார்த்துக்கொண்டு நீ மனம் வருந்தாதே. ஊன்று கோலை உடைய மூப்பு வந்து உன்னைத் தளரச்செய்வதற்கு முன்பாகவே நீ தர்மம் செய்தது உண்டானால் உனக்கு*

மோக்ஷம் உண்டு; அன்றி நீ பாவம் செய்தது உண்டானால் உனக்கு நரகம் உண்டு. எனவே இவற்றின் மேம்பட்டதான தர்மத்தை உலகம் அறியும்படி செய்துவைப்பாயாக.

XXIV

திருத்தணிப் பாடல் கல்வெட்டு

1. திருத்தணிகைப் பாடற் கல்வெட்டினை எழுதிக் குறிப்புத் தருக.

திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசற்குக்
கருங்கல்லால் கற்றளியா நிற்க – விரும்பியே
நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து.

இது "ஸ்வஸ்திஸ்ரீ" எனத்தொடங்கி, 'இ வெண்பா பெருமானடிகள் தாம்பாடி அருளித்து' என்று முடிகிறது]

பாடியோன் : *திருத்தணிகைக் கல்வெட்டுப் பாடல் பெருமானடிகளால் பாடப்பெற்றது. இங்குப் பெருமானடிகள் என்பது பல்லவ அரசன் அபராசிதனைக் (872 – 890) குறிக்கும். இவன் நிருபதுங்கபல்லவனின் மகன். இவன் கவிதை படைக்கும் ஆற்றல் உடையவனாயிருந்தமையை இக்கல்வெட்டு உணர்த்துகிறது.*

பாடற் செய்தி : *திருத்தணிகையில் வீரட்டானேசுவரர் கோயில் என இந்நாளில் கூறப்பெறும் தூங்கானைமாடக் கோயிலை அபராசிதன் காலத்தவனாகிய நம்பியப்பி என்பவன் முழுக்கற்றளியாக எடுப்பித்தான் என்று இப்பாடலால் அறியலாம்.*

2. நம்பியப்பி – சிறு குறிப்பு வரைக.

நம்பியப்பி என்பவன் அபராசிதன் காலத்தவன். திருத்தணியில் உள்ள வீரட்டானேச்சுவரர் கோயிலை முழுக்-

கற்றளியாக எடுப்பித்தவன். இவனைப் பெருமானடிகளாகிய அபராசித பல்லவன் புகழ்ந்து பாடியுள்ளான். திருந்து திருத்தணியில் எனத் தொடங்கும் இப்பாடலில், 'நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பியப்பி' எனப் பாராட்டப் பெறுகிறான்.

XXV

சோழர்காலப் பாடற் கல்வெட்டு

1. 25 ஆம் எண்ணுள்ள கல்வெட்டுப் பாடலைத் திருத்தி விளக்கம் தருக. (அல்லது) செங்கம் பாடற் கல்வெட்டுச் சிறப்பினை விளக்குக.

வடவார்க்காடு மாவட்டம் 'செங்கம்' என்னும் ஊரில் உள்ள ரிஷபேசுவரர் கோயிலில் இரு வெண்பாக்களுடன் கூடிய வடமொழிக் கல்வெட்டொன்று உள்ளது. இதன் பிற்பகுதியில் பாடமாகிய பாடற்பகுதி கல்வெட்டாக உள்ளது. இது கி. பி. 12–13 ஆம் நூற்றாண்டுக்குரியது. இது ஒரு வெண்பா.

வண்டறைதார் மன்னர் மலைபடைத்தென் மன்னரைவெங்
கண்டதிறல் காங்கேயன் கண்சிவப்பப் — பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சோரி
அலைகடாம் பாட்டுண் டது.

[இப்பாடலில் 'ஸ்ரீ' என்று தொடங்குவது 'ஸ்ரீ' என்பதாகலாம்; காங்கேமன் – காங்கேயன்; மாலவனர் – மால்வரை என்றிருத்தல் தகும்]

பொருள் : வண்டுகள் ஒலிக்கும் மாலையணிந்த மன்னர்களோடு போர் செய்து வென்ற படையை உடைய பாண்டிய மன்னரைப் புறங்கண்ட காங்கேயன் சினமுற்றமையால் முன்பு மலை(படு) கடாம் என்னும் நூல் பாடப்

பெற்ற மலை (தற்போது) செங்குருதி அலைகளால் மோதப்பட்டது ஆயிற்று.

மற்றுமொரு பொருள் : பகை மன்னரைப் புறங் கண்ட ஆற்றல்மிக்க காங்கேயன் கண்சிவந்த அளவில் முன்னர்ச் சங்ககாலத்தே மலைபடுகடாம் என்ற பாடலைப் பெற்ற பெரியமலை இப்போது சிவந்த குருதி அலைகள் தாவும் தன்மை உடையதாயிற்று. எனவே வண்டு ஒலிக்கும் மாலையணிந்த மன்னர் மலையரண் படைத்து என்ன பயன் ? (மலையரண் படைத்தும் பயனில்லை என்பதாம்)

2. 'மலைகடாம் பாட்டுண்ட மால்வரை' விளக்கம் தருக.

மலைபடுகடாம் என்பது பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று. இது இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்னும் புலவரால் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் என்பான் மீது பாடப்பெற்றது. இந்நன்னன் வேளிர் குலத்தவன்; பல்குன்றக்கோட்டத்தை ஆண்டவன்; செங்கண்மா எனப் பட்ட செங்கம் இவனது தலைநகரம்; ஆறு சேயாறு; மலை நவிரமலை.

இந்நன்னனுக்குரிய நவிரமலையை இந்நூல், 'பேரிசை நவிரம்' 'கழைவளர் நவிரம்' எனப்புகழும். இந்நவிரமலை மட்டுமன்றிப் பலமலைகளால் சூழப்பெற்ற பல்குன்றக் கோட்டமென்னும் பகுதியை நன்னன் ஆண்டமையால், 'குன்றுசூழ் இருக்கை நாடுகிழவோன்' எனப் பாராட்டப் பெறுகிறான். இங்ஙனம் செங்கண்மாத்துவேள் நன்னனின் மேல் மலைபடுகடாம் பாடப்பெற்றதனைச் சமத்காரமாகப்

'பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சோரி
அலைகடாம் பாட்டுண்டது'

எனச் செங்கம் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.

XXVI

நரலோகவீரன் - தில்லைத் திருப்பணிக் கல்வெட்டு

1. நரலோகவீரன் தில்லைத்திருப்பணிக் கல்வெட்டுப் பாடலை எழுதி விளக்குக.

நரலோகவீரன், 'அருப்பாக்கிழான் மணவில் கூத்தன் காளிங்கராயன்' என்ற பெயருடையவன். இவன் முதற் குலோத்துங்கசோழனின் காலத்து இறுதியிலும், விக்கிரம சோழன் காலத்துவக்கத்திலும் சோழர் படைத்தலைவனாக இருந்தவன். இவன் தில்லையிலும், திருவதிகையிலும் பல திருப்பணிகளை ஆற்றியுள்ளான். இவன் தில்லையில் ஆற்றிய திருப்பணிகளை, நடராசர் கோயிலின் முதல் பிரகாரத்தின் வெளிப்பக்கம் வடபுறச்சுவரில் கல்வெட்டாக உள்ள 36 வெண்பாக்கள் காட்டுகின்றன. அவற்றுள் இரண்டாவது வெண்பா, பின்வருமாறு :

" தில்லையிற்பொன் னம்பலத்தைச் செம்பொன்னால் வேய்ந்துவான்
எல்லையைப்பொன் னாக்கினான் என்பரால் — ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்கும்
குடைவேந்தன் தொண்டையர் கோ "

'வடநாட்டு வேந்தரின் செல்வமெல்லாம் அழியுமாறு வேல்கொண்டு போரிடும் அரசனாகிய தொண்டையர்கோன் நரலோக வீரன், தில்லையில் உள்ள பொன்னம்பலத்திற்குப் பொற்றகடுகள் வேய்ந்து வானுலகிலும் பொன் ஒளி பரவுமாறு செய்தான்' — என்பது வெண்பாவின் பொருள்.

நரலோகவீரன் குலோத்துங்க சோழனின் வடநாட்டுப் படை எடுப்புக்களில் தலைவனாய்ப் பங்கேற்றமையும், தொண்டைமண்டல மணவிற்கோட்டத்து மணவில் என்னும் ஊரில் பிறந்தமையை ஒட்டித் தொண்டைமான் என்னும் பெயருடைமையும் இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ளன.

2. கல்வெட்டுக்கள் உரைநடையாக மட்டுமன்றி செய்யுளாகவும் அமைவன — சான்றுகளுடன் விளக்குக.

க. எண். 17, 23-6 காண்க.

XXVII

இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தி

1. இரண்டாம் இராசராசசோழனின் மெய்க்கீர்த்தியின் பொருளை வரைக

இரண்டாம் இராசராச சோழன் (1146-1163) இரண்டாம் குலோத்துங்கனின் புதல்வனாவான். வேங்கி, கொங்கு, கங்கநாடுகள் இவனாட்சிக்கு உட்பட்டவையாகும். இவன் தனக்குத் திறைசெலுத்த மறுத்த சேரனையும் பாண்டியனையும் வென்றான்; சோழநாடு வாழுமாறு காவிரிக்கு வாளால் வழிகண்டான். கும்பகோணத்துக்கு அருகிலுள்ள தாராசுரத்தில் இராசராசேச்வரம் என்னும் சிவன்கோயிலை எடுப்பித்தான்.

இரண்டாம் இராசராசன் நான்கு மெய்க்கீர்த்திகளை உடையவன். இவற்றுள் 'பூமருவிய திருமாதும்' என்பதும் ஒன்றாகும். இதில் இவனாற்றிய போர்ச்செயல்கள் அதிகமின்மையின் ஒன்றும் கூறப்பெறவில்லை. இதிற்கண்ட செய்திகள் பின்வருமாறு: (1) இராசராசன், திருமகளும் நிலமகளும், வெற்றிச் செல்வியும், கலைமகளும், புகழ்மகளும் விரும்பித் தழுவிய பான்மை படைத்தவன். (2) அரிய நான்மறை கூறும் விதிகளும் வழிகளும் இவனாட்சிக் காலத்துத் தழைத்தன. (3) வருமுறை உரிமை காரணமாக மணிகளை உடைய முடியைச் சூடினான். (4) திங்கள்

போன்ற வெண்கொற்றக்குடை திசைக்களிறு எட்டும் தங்கக்கூடிய தனிக்கூடமாக விளங்கியது. (5) கரிய கலியாகிய குறும்பினை இவனுடைய செங்கோல் அழித்தது. (6) சேரர், இராட்டிரகூடர், பாண்டியர், ஈழநாட்டு மன்னர் முதலிய அரசர் இவனுக்கு அடங்கி வாழ்ந்தனர். (7) எண்ணில்லாத கற்பங்கள் (கற்பம்-432 கோடியாண்டுகள்) மண்ணுலகத்தை ஆண்டான். (8) சிவந்த பொன்னாலாகிய சிம்மாசனத்தில் 'புவனமுழுதுடையாள்' என்னும் பட்டத்தரசியுடன் வீற்றிருந்தான். (9) பரகேசரி திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்னும் பட்டங்கள் உடையவன்.

2. "செம்பொன் வீரசிம்மாசனத்துப் புவனமுழு துடையாளொடும் வீற்றிருந்தருளிய"– பொருள் விளக்கம் தருக.

'இரண்டாம் இராசராசன் புவனமுழுதுடையாளோடு சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்' என இப்பகுதி கூறுகிறது. இதனால் அரசருடன் பட்டத்தரசியரும் சிம்மாசனத்தில் வீற்றிருந்தமை புலனாகும். இது 'உடனிருக்கை' என்று கூறப்பெறும். புவனமுழுதுடையாள் என்பது இவனது பட்டத்தரசியின் பெயர்.

3. குறிப்பு வரைக.

(1) **திரிபுவனச் சக்கரவர்த்திகள்:** பட்டப்பெயர்களுள் ஒன்று; பாண்டியரும் சோழரும் புனைந்து கொண்டனர்; சேர, சோழ, பாண்டிமண்டலங்களாகிய திரிபுவனங்களுக்கும் அரசர் என்பது பொருள். (2) **திசைக்களிறு எட்டு:** ஐராவதம், புண்டரீகம், வாமனம் குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் என்பன.

XXVIII

சடையவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி

1. சடையவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்திச் செய்திகளை விளக்குக.

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்பவன் கி. பி. 1251-இல் முடிசூட்டப்பெற்றவன். இவன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இறந்த பின்னுல் அரசனுனன். பொத்தப்பிநாடு முதல் குமரி வரை அமைந்த பகுதி முழுமையையும் இவன் ஆண்டான். இதனுல் 'எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியன்' எனப் பெற்றுன். தில்லை, திருவரங்கக் கோயில்கட்குப் பொன் வேய்ந்த இக்காவலன் பெருவீரம் மிக்கவன். இவன் கி. பி. 1271-இல் இறைவனடி அடைந்தான். இவன் 7 ஆம் ஆட்சியாண்டுக்கு முன் நிகழ்த்திய பல போர்நிகழ்ச்சிகளை இவனது மெய்க்கீர்த்தி விளக்குகிறது. இவன் மெய்க்கீர்த்தி "பூமலர்வளர் திகழ்திருமகள் புகழாகம் புணர்ந்திருப்ப" எனத் துவங்குவது.

முற்பகுதி: மெய்க்கீர்த்தியின் முற்பகுதி இலக்கியப் பாங்கில் சில செய்திகளைக் கூறுகிறது. (1) திருமகள் இவன் மார்பில் உறைந்தாள்; கலைமகள் மனத்தில் உறைந்தாள்; மலைமகள் தோளில் உறைந்தாள்; இந்திரன் முன்பு சூட்டிய ஆரம் இவன் கழுத்தில் இலங்கியது. (2) இவனுடைய ஆணை இமயமலையைக் கடந்தும் வழங்கிற்று. (3) இவனுடைய மணிக்கவிகை உலகனைத்துக்கும் நிழல்தரக் கலிப்பகை அழித்து எண் திசையிலும் செங்கோல் ஓச்சினுன். (4) இவனுடைய செம்முரசு முழங்கச் சிலை விசும்பு அடைந்தது; புலி

வனம்புக்கது ; கயல்கள் இமயத்தில் விளையாடின. (இதனால் சேரசோழரை வென்று பெருவேந்தனாகத் திகழ்ந்தான் என்பது புலனாகும்.) (5) ஒருமை மனமும் இருபிறப்பும் முத்தீயும் நால்வேதமும் உடைய அந்தணர்களின் ஐவேள்வியும் ஆறங்கமும் சிறந்தன. (6) அருந்தமிழும், ஆரியமும், ஆறுசமயத்து அறநெறிகளும், திருந்துகின்ற மனுநெறியும் தழைத்தோங்கின. (7) குச்சரம் (கன்யாகுப்ஜ அரசர்) ஆரியர், கோசலர், கொங்கணர், வச்சிரர், காசியர், மாகதர், அருமணர், சோனகர், அவந்தியர் முதலான உலக அரசர் அனைவரும் வணங்கித் திறைச் செலுத்தினர்.

வரலாற்றுப் பகுதி :

1. **சேரநாட்டுப்போர்:** முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் முதலில் சேரநாட்டின்மீது படையெடுத்தான்; தன்னுடன் போருடற்றிய சேரனையும், அவனுடைய படையையும் பெரிதும் அழித்தான். சேரன் புறங்காட்டி ஓடினான். பாண்டியன் மலைநாட்டினை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். பாண்டியனிடம் தோற்றோடிய சேர மன்னன் வீரரவி உதயமார்த்தாண்டன் என்பவன் ஆகலாம் என அறிஞர் கூறுவர்.

"வடிநெடு வாளும் வயப்பெரும் புரவியும்
தொடிநெடுந் தோளுமே துணைஎனச் சென்று
சேரனும் தானையும் செருக்களத்து ஒழிய
வாரசும்பு உலரா மலைநாடு நூற"

என்பது மெய்க்கீர்த்திப் பகுதி.

(2) **சோழநாட்டை வென்றமை:** இச் சுந்தர பாண்டியன் கி. பி. 1257-இல் சோழநாட்டின் மீது படையெடுத்தான். இக்காலத்திய சோழ அரசன் மூன்றாம் இராசேந்திரன் ஆவான். இவன் பாண்டியனோடு போரிட்டுத் தோற்றான்; ஆண்டுதோறும் கப்பஞ் செலுத்துபவனாயினான்.

(இச்சோழன் இறந்த [1279 க்குப்] பின் சோணுடு முழுமையும் பாண்டியர்க்கு உரியதாயிற்று) 'பருதிமா மரபில் பொருதிறல் மிக்க சென்னியைத் திறை கொண்டு' என்பது மெய்க்கீர்த்திப் பகுதி.

3. **போசளருடன் போர்:** ஹொய்சளப்பேரரசர் சோழநாட்டின் ஒரு பகுதியைத் தம்மாட்சிக்கு உட்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்தனர்; திருச்சிக்கு அருகில் உள்ள கண்ணனூர்க்கொப்பத்தில் கோட்டையமைத்துக்கொண்டு ஆண்டு வந்தனர். வலிமை குறைந்தவர்க்குதவியாக இருந்து சோழர் அல்லது பாண்டியர்க்குதவி புரிந்து வந்தனர். இச் சுந்தரபாண்டியன் காலத்தில், வீரநரசிம்மனின் மகன் வீரசோமேசுவரன் போசள அரசனுக இருந்தான். கி. பி 1265 இல் பாண்டியன் போசளனேடு பெரும் போருடற்றினன்.

"பாண்டியன் கண்ணனூர்க்கொப்பத்தின்மேல் படை எடுத்தான்; இங்குள்ள கோட்டையை முற்றுகையிட்டான்; சோழநாட்டுப்பகுதியை ஆண்ட போசள அரசரை மதிலினுள் அடைந்துகொள்ளுமாறு செய்தான்; போரில் போசள அரசரின் குதிரைகள் பலவற்றை அழித்தான்; சிங்கணன் முதலான சேனைத் தலைவர்களையும், பல வீரர்களையும் அழித்து உடல் துண்டாகுமாறு வெட்டினன். போர்க்களத்தில் ரத்த வெள்ளத்தில் பெரும் பிணக்குன்றுகள் இறைந்து கிடக்குமாறுசெய்தான்; பருந்தும் காகமும் தசைகளை உண்டு மகிழ்ந்து அமர்க்களம் எடுக்குமாறு ஆக்கினன்; போரில் வென்று பொற்குவியல், மணி, அரசமகளிர் ஆகியவற்றைக் கைப்பற்றினன்; (புறமுதுகிட்டோடிய போசளனைக் கொன்றான்; பிறரால் கண்ணுறுதலைக்கூட எண்ணவியலாத கண்ணனூர்க்கொப்பத்தைக் கைப்பற்றினன்) என்று மெய்க்கீர்த்திக்கூறும்.

" திண்டோன் வலியிற்
பொன்னி நாட்டுப் போசலத் தரைசர்களைப்
புரிசையின் அடைத்துப் பொங்குவீரப் புரவியும்
செருவிற லாண்மைச் சிங்கணன் முதலாய
தண்டத் தலைவரும் தானையும் அழிபடத்
துண்டித்து அளவில் சோரிவெங் கலுழிப்
பெரும்பிணக் குன்றம் இருங்களன் இறைத்துப்
பருந்தும் காகமும் பாறுந் (த)சையும்
அருந்தி மகிழ்ந்து ஆங்கு அமர்க்களம் எடுப்பச்
செம்பொற் குவையும் திகழ்கதிர் மணியும்"

என்பது மெய்க்கீர்த்தி. (இம்மெய்க்கீர்த்தியில் இதுவரை அமைந்த பகுதியே பாடமாக உள்ளது)

2. எண்ணலங்காரத்தை விளக்குக.

ஒருமைமனத் திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத்து
அருமறையோர் ஐவேள்வி ஆறங்கம் உடன்சிறப்ப'

என்பது எண்ணலங்காரம் பொருந்திய பகுதி.

(விளக்கம் க. எண் 4-இல் 8-இல் காண்க)

3. சோழர் மெய்க்கீர்த்தியைவிடப் பாண்டியர் மெய்க்கீர்த்திகள் இலக்கியப் பாங்குடையவை என்பதை நும்பாடப்பகுதி வாயிலாக நிறுவுக. அல்லது சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியில் அமைந்துள்ள இலக்கிய நயத்தைப் புலப்படுத்துக.

1. சக்கரவாளகிரிக்கு அப்பாலும் சுந்தரபாண்டியனது ஆணை சென்றது என்பது, "**திகிரிவரைக் கப்புறத்துச் செழுந்திகிரி சென்றுலவ**" என்று மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பகுதியில் திகிரி என்னும்

சொல் சக்கரவாளகிரி, ஆணை என்ற இரு பொருள்களில் திரும்பத் திரும்ப வருவதால் சொற்பின் வருநிலையணியாகி இலக்கியச்சுவை தருகிறது.

2. சுந்தரபாண்டியனிடம் சேரரும் சோழரும் தோற்றனர் என்பதை வெளிப்படையாகக் கூறாமல், "**செம்முரசின் முகில் முழங்கச் சிலையகன்று விசும்படையத் திறல் புலிபோய் வனமடைய**" என்று மெய்க்கீர்த்தி கூறுகிறது. வானத்தில் ஒருவில் இருக்கிறதே அது அங்கே எப்படி வந்தது தெரியுமா? பாண்டியனிடம் தோற்ற சேரனின் கொடியில் எழுதப்பட்ட வில், அவனிடம் இருக்க விரும்பாமல் அவனைவிட்டு வானத்துக்கு வந்துவிட்டது என்றும் காட்டிலே போய்ப் புலிகள் ஏன் வாழ்கின்றன தெரியுமா? பாண்டியனிடம் தோற்ற சோழன் கொடியில் எழுதப்பட்ட புலி, அவனோடுவாழ அவமானப்பட்டு இப்படி காட்டுக்கு வந்துவிட்டது என்றும் தற்குறிப்பேற்ற அணி தோன்றக் கூறப்பட்டிருக்கிறது. இப்பகுதி ஒரு சிறந்த இலக்கிய விருந்தாகும்.

3. பாண்டியர் இமயத்தை வென்று தமது கயலை அங்கே பொறித்துள்ளார்கள் என்பதை இலக்கிய நயம் தோன்றக், '**கயலிரண்டும் நெடுஞ்சிகரக் கனவரையில் விளையாட**' என மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. குளத்து நீரில் விளையாட வேண்டிய கயல்கள் மலையில் துள்ளி விளையாடின என்பது நயம்.

4. சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியில் **எண்ணலங்காரம்** அமைந்துள்ளது, (வினா 2இல் காண்க)

எனவே இம்மெய்க்கீர்த்தி இலக்கிய பாங்கிலமைவது எனலாம்.

குறிப்பு: சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி இவன் காலத்தில் அருந்தமிழ் தழைத்தோங்கியது என்று கூறுவதற்

கேற்ப அம்மெய்க்கீர்த்தியிலேயே அதற்கோர் சான்ருகத் தமிழ் மணம் கமழ்கிறது.

4. குறிப்பு வரைக.

(*1*) **விண்ணவர்கோன் அன்றிட்ட எழிலாரம் கழுத்திலங்க :** இது பாண்டியன் ஒருவனுக்கு இந்திரனூரம் சூட்டப்பெற்ற வரலாற்றைக் காட்டுவது. இவ்வரலாறு திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. **(2) அறுசமயம் :** சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம், புறப்புறம், புறம், அகப்புறம், அகம்; என்னும் நான்கு வகையால் தனித்தனி அறுவகைப் பட்ட சமயங்கள்.

XXIX

சதாசிவராயர்காலக் கல்வெட்டு

1 சதாசிவமகாராயரின் திருவரங்கம் கல்வெட்டுச் செய்திகளைத் தருக.

விசயநகர அரசன் ஸ்ரீமந் சதாசிவமகாராயர் காலத் திருவரங்கம் கல்வெட்டுச் சகம் 1467 (கி. பி. 1545)க்கு உரியதாகும்; விசுவாவசு ஆண்டு, பால்குண (மாசி-பங்குனி) மாதம், சுக்கிலபட்சத்துச் சப்தமியும் திங்கட்கிழமையும் பெற்ற உரோகிணி நாளில் வெட்டப்பெற்றதாகும். ஔக்குத் (Aukkuth) திருவேங்கடயங்கார் என்பவர் தந்தது இச் சிலாசாசனம். இதிற் கண்ட செய்திகள் பின்வருமாறு :

தென்கரை பாண்டியகுலாசனி வளநாட்டில் விழவரு வீதி வளநாட்டுத் திருவரங்கம் ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்கு நலந்திகழ் நாராயண ஜீயர் என்பவரால் முன் ஒரு காலத்தில் திருவரங்கன் திருப்பதிப்பிடாகையாக நிலம் தரப்பெற்றது. இந் நிலத்தின் எல்லைகள் :

கிழக்கு: தென்கரை இராசகம்பீர வளநாட்டுத் தஞ்சாவூர் உசாவடி உறையூர்க் கூற்றத்தில் உள்ள கீழ்ப் பலாற்றுத் தேவதானம். **தெற்கு:** திருச்சிராப்பள்ளி மண்கோட்டை. **மேற்கு:** கிருஷ்ணராய அலவந்தபுரம் உறையூர்வெட்டி. **வடக்கு:** திருக்காவிரி.

பின்னர், திருவரங்கன் திருப்பதியை ஆறு அரித்துக் கொள்வதனை நாராயணஜீயர் கண்டார். ஆற்றால் நேரும் அழிவினைத் தடுப்பதற்காக (1) மேல்முகத்தில் இருந்து ஆனைக்காத்தான் கரைக்கு யந்திரஸ்தாபனம் செய்தார்; (2) அங்கே சாஸ்தாவையும் எழுந்தருளுவித்தார்; (3) கிளையாறு (கிழியாறு) உண்டாக்கித் தென் திருக்காவிரிப் பகுதியில் ஆற்றுவெள்ளம் குறையுமாறு (மலடு) செய்வித்தார்; (4) இம்மலடனுறு கெடுமாறு (வெள்ளம் குறையுமாறு காவிரியின்) வடகரையில் நாணலை நட்டார். கிழியாற்றுக்குத் தென்கரையில் நாணலை நடவில்லை. ஆகையால் சிந்தாமணியில் இடங்கொடுத்தது. சிந்தாமணியில் வாழ்ந்த மக்களை வேறு இடத்திற்குப் பெயரக்கட்டளை இட்டுக் 'கொளகுட்டை' என்ற கிராமத்தைப் பரிவர்த்தனை செய்து கொடுப்பாராயினர்.

அப்பொழுது அரசாண்ட சோழன் நாராயணஜீயரை அழைப்பித்தான். ஜீயரிடம் 'சந்நியாசியாக இருப்பவன் (சர்வபூத சௌஹார்த்தமுண்டாய் அதாவது) எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்யவேண்டியவனாக இருக்க, நீவிர் இப்படிப் (பிராமணஹிம்சை) பிராமணர்க்குத் துன்பம் செய்யலாமா?' என வினவினான். நாராயணஜீயர், "பிராமணஹிம்சை கூடாது என ஆணை இடுகிற பரதேவதையாகிய ஸ்ரீகிருஷ்ணனே, '<u>நிமித்தக்ருதம் பாபம் தர்மாயகல்பதே</u>' (ஒரு நல்லகாரியம் புரியும்போது சில தவிர்க்க முடியாத பாவங்களும் விளையலாம்; தவிர்க்கவியலாமல் விளையும் இப்பாவங்களும் காரணம் கருதித்

தருமமாகவே கருதப்பெறும்) என்று ஸ்ரீ பகவத்கீதையிலும் சொன்னது கண்டே யாம் இவ்வாறு செய்தோம்; இதனை நீ அறிக'' எனக் கூறினர். நாராயண ஜீயரின் விளக்கத்தைக் கேட்ட அரசன் பெருமகிழ்வு கொண்டான். இதுவே ஜீயரின் கருத்து ஆனல் ஜீயர் செய்த பாவம் (பாவத்துக்குக் கழுவாய்) ஓரடிக்கு ஒரு கழஞ்சு பொன் பெறக்கூடியது என, நினைத்தான். உரிய பொன்னை ஸ்ரீரங்கநாதருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான்.

பல ஆண்டுகள் கழிந்தன. சிறிது காலம் மட்டும், 146 பொன் மதிப்புடையதும், $14\frac{1}{10}$ வேலி தானமானிய நிலமுடையதுமான சிந்தாமணிக் கிராமம், பண்டாரவாடையாய் இருந்து மாறியது, ஸ்ரீ சைல பூர்ணசார்ய தாதாசார்யரான ஒளக்குத் திருவேங்கடய்யங்கார் என்பவருக்கு இவருடைய பிரியசிஷ்யரும் விசய நகர வேந்தரும் ஆகிய சோமகுலதிலகாயமான இராமராஜா சதாசிவராயமஹாராசசர் என்பவர் இச்சிந்தாமணியை, நத்தம், வயல், தலைத்திடர், வாஸ்து வாஸ்துசேஷம். ஆறு பிராப்தி வெள்ளாங்குடி இருப்பு 1 மற்றும் எப்பேர்ப்பட்ட சகல சமுதாயப் பிராப்தியும் உட்பட நிதிநிக்ஷேப ஜலபாஷாணதி அஷ்டபோக தேசஸ்வாமியுங்களும் உட்பட ஏகபோகமாய்த் தாரை வார்ப்பித்துத் தந்தார்.

தாதாசார்யரான ஒளக்குத் திருவேங்கட அய்யங்கார் முன்னல் குறிப்பிடப்பெற்ற (பூர்வன்) நலந்திகழ் நாராயண ஜீயர் இட்ட கட்டளைப்படியே இச்சிந்தாமணிக் கிராமத்தை திருவரங்கப்பெருமாளுக்கே பொலியூட்டாக (சோழ) இராஜாவுக்கும் சதாசிவராயர்க்கும் தர்மமாகச் சமர்ப்பித்தார்.

இப்படித் தரப்பெற்ற சிந்தாமணிக் கிராமத்தில் உபயம்கொண்டு பெருமாளுக்கு நாள்தோறும் நான்கு

தளிகை அமுது செய்விக்கப்பெற வேண்டும்; இந் நிவந்தத்தை நிறைவேற்றுபவர்க்குரிய விழுக்காடாக நாலு தளிகையில் ஒரு தளிகையை ஔக்குத் திருவேங்கடயங்கார் சந்தாநபரம்பரையாக சந்திராதித்தவரையும் அனுபவிக்க வேண்டும். ஸ்ரீ வைஷ்ணவர்கள் அமுது செய்தருளும்படிக்கு நடக்கச் செய்யவேண்டும்.

2. **நாராயண ஜீயர் சோழனிடம் யாது கூறினர்? சோழன் ஆற்றிய கழுவாய் யாது? ஆராய்க.**

(வினா 1 இன் விடையை இங்கு முதலில் எழுதுக.)

நாராயணஜீயரைச் சோழன் அழைப்பித்து, "சந்நியாசியானவன் சர்வபூத ஸௌகார்த்தம் உண்டாய் இருக்க வேண்டியிருக்க இப்படி பிராம்மண ஹிம்சை பண்ணலாமோ" என்று கேட்டான். ஜீயர், 'பிராமண ஹிம்சைக்கு ஆக்ஞை இடுகிற பரதேவதைதானே நிமித்தக்ருதம் பாபம் (அபம்) அபிதர்மாய கல்பதே' என்று ஸ்ரீ பகவத் கீதையிலேயும் சொன்னது கண்டு செய்தோம் காணும்' என்று பதிலுரைத்தார் என்று சாசனம் கூறுகிறது. கீதையில் உள்ளதாகச் சாசனம் கூறும் தொடர் ஒரு சுலோகத்தின் பாதிப் பகுதியே ஆகும். அன்றியும் அத்தகையதொரு தொடர் பகவத் கீதையில் இல்லை. (Epigraphia Indica Vol. XX1X Part III Page 74: Fn. 3)

3. **திருவரங்கம் கல்வெட்டுத் தொடக்கத்திலமைந்த சாசனச் சுலோகத்தை எழுதி விளக்குக.**

"ஸேது வந்த்யோ சகஸ்யாப்தே ஸ்ரீமான் வேங்கடதேசிக:।
சிந்தாமணி மஹாகிராமம் ஸ்ரீரங்கேசாய தத்வான்॥"

என்பது திருவரங்கம் கல்வெட்டின் தொடக்கத்தில் அமைந்த வடமொழி அநுஷ்டுப் சுலோகம் (சேதுவந்த்யே என்பதைச் சேது வந்த்யோ எனத் திருத்திக்கொள்க.)

'சகாப்தத்தில் சேதுவரை வணங்கத் தகுந்தவரான் ஸ்ரீமான் வேங்கடதேசிகர் என்பவர், சிந்தாமணி என்னும் பேருரை ஸ்ரீரங்கத்துப்பெருமானுக்குக் கொடுத்தார்' என்பது இதன் பொருள். கல்வெட்டிற் கண்ட செய்தியை மிகச் சுருக்கமாக இச்சுலோகம் கூறுகிறது.

4. **'சிந்தாமணி நத்தம் செய்த்தலைத்திடர் வாஸ்து வாஸ்துஸேஷம் ஆறு ப்ராப்தி வெள்ளாங் குடியிருப்பு க. மற்றும் எப்பேர்ப்பட்ட சகல சமுதாயப்ராப்தியும் உட்பட நிதிநிக்ஷேப ஜலபாஷாணாதி அஷ்டபோக தேஜஸ்வாமியங் களும் உட்பட' — தொடர்ப்பொருள் தருக.**

சிந்தாமணியில் இருந்த நத்தமும், வயலும், தோட்டமும், வீடும், வீட்டுமனையும், ஆறுபடுபொருளும், வெள்ளாங்குடி இருப்பு ஒன்றும் உட்பட சமுதாயத்தாரால் அனுபவிக்கப் பெறும் எல்லாப் பிராப்திகளும் உட்பட நிதிநிக்ஷேபம் ஜலபாஷாணாதி அஷ்டபோக தேஜஸ்வாமியங்களும் உட்பட (நிலம் ஏகபோகமாகத் தரப்பெற்றது).

சமுதாயப் பிராப்தி: *குடிகள் பொதுவாக அடையும் நிலவருவாயும் ஊர்ப்பொதுச்செலவில் அடையும் பங்கு களும்.* **நிதிநிக்ஷேப ஜலபாஷாணாதி அஷ்டபோகம்:** *விக்கிரயம், தானம், வினிமயம், ஜலம், தரு, பாஷாணம், நிதி, நிக்ஷேபம் என்னும் எட்டு எனவும், அக்ஷிணி, ஆகாமி, ஜலாமிருதம், பாஷாணம், நிதி, நிக்ஷேபம், சித்தம், சாத்தியம் என்னும் எட்டு எனச் சிலரும் கூறுவர்.* **தேஜஸ்வாமியம்** – *முழு உரிமை.*

இத்தொடரில் தரப்பெற்ற உரிமைகளை, 'உடும்போடி ஆமை தவழ்ந்தது' 'மீன்பயில் பள்ளமும் தேன்பயில் பொதும்பும் மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும்

உள்ளிட்டு நீர்பூசி நெடும்பரம்பு எறிந்து உடும்போடி ஆமை தவழ்ந்தது எவ்வகைப்பட்டதும் உள்நிலம் ஒழிவின்றி' என்ற தொடர்களால் முற்பட்ட சாசனங்கள் குறிக்கின்றன.

5. ஔகுத் திருவேங்கடய்யங்கார் பற்றிக் குறிப்பெழுதி அவர் ஆற்றிய அறப் பணிகளை விளக்குக.

திருவரங்கம் கல்வெட்டுத் திருவேங்கடய்யங்கார் என்பவரைக் குறிக்கிறது. வைணவ சமயத் தலைவருள் ஒருவராக இருந்த இவர், 'ஸ்ரீ சைல பூர்ணசாரியர்' என்னும் குடும்பத்தினருள் ஒருவர்; 'ஔகுத்' என்னும் ஊரினர்; இவர் சதாசிவமகாராயர் என்னும் அரசனின் குருவாகத் தன் வாழ்நாளில் பிற்பாதியில் ஆனார். இவர் 'திருமல ஔகுத் தாதாசாரியார்' என்பவரின் மகனாவார். இவராற்றிய அறப்பணிபற்றிச் சாசனம் கூறும் செய்திகளை வினா ஒன்றில் காண்க.

6. நலந்திகழ் நாராயண ஜீயர் பற்றிக் குறிப்பு வரைக. அவர் ஆற்றிய பணிகளை விளக்குக.

நலந்திகழ் நாராயண ஜீயர் என்பவர் சதாசிவ மகாராயருடைய திருவரங்கம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளார்.

'நாராயணன்' என்பது இவரது இயற்பெயர். இவர் 'கூரநாராயண ஜீயர்' எனவும் கூறப்படுவார். இவர் நலந்திகழ் நாராயண ஜீயர் எனப்படுவதேன் எனக் கோயிலொழுகு என்னும் நூல் விளக்குகிறது.

"நாராயண ஜீயர் வழிபாட்டாளராகத் திருவரங்கம் கோயிலில் வாழ்வு தொடங்கினார். பின் ஆட்சியாளராக மாறிக் கோவிலை நிர்வாகித்தார். அக்காலத்தில் இருந்த 'விண்ணப்பஞ் செய்வார்' என்னும் குழுவிலிருந்த கோயில் பணியாளர்கள் இறை பணியாற்றத் தகுதியற்றவராக

இருந்தனர். கூரநாராயண ஜீயர் 'சுதர்சன சதகம்' பாடிச் சடங்குகளாற்றித் தூய்மையை ஏற்படுத்தினர். இவ்வாறு நலம் திகழுமாறு செய்தமையால் இவர் நலம்திகழ் நாராயண ஜீயரானார்" என்று கோயிலொழுகு கூறுகிறது. இன்றும் வைணவ அடியவர்கள் இவர்க்கு முதலிருக்கை (Pontificical seat) தருகின்றனர். இவர் 12 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராவார். இவர் திருவரங்கத்தினை வெள்ளம் அரிப்பதுகண்டு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் கோயிலொழுகினும் விளக்கமாகக் கல்வெட்டு விளக்குகிறது. அது பின்வருமாறு

(வினா 1 இல் ஜீயர்பற்றியுள்ள செய்திகளை எழுதுக)

7. குறிப்புத் தருக.

(1) **சதாசிவமஹாராயர்:** கி. பி. 1542 – 1570 வரை யாண்ட விஜயநகர மன்னர். கிருஷ்ணதேவராயரின் மருமகனை இராமராயரால் அரசபதவி அடைந்தவர்; இவர் பெயரளவில் அரசராக இருக்க இராமராயரே அரசாண்டார். இவர் சோமகுலதிலகாயமான எனவும் ஔக்குத்திருவேங்கட அய்யங்காரின் பிரியசிஷ்யரெனவும் கூறப்பெற்றுள்ளார். (2) **ஸ்ரீசைலபூர்ணாசாரியர்:** இது ஒரு குடும்பப்பெயர். இவர்கள், விசய நகர அரசர் காலத்தில் மல்லிகார்ச்சுன தேவராயர் காலம் முதல் வைணவப் பணிகள் ஆற்றினர். அரசரிடம் மிகச் செல்வாக்குற்றனர். இக்குல முன்னோர் ஸ்ரீரங்கத்திலிருந்து திருப்பதியில் சென்று தங்கியவராவர். **ஔகுத்** – 'ஔக்கு' அல்லது 'ஔகு' என்னும் பெயர் சைலபூர்ணாசாரியருள் ஒருவரான திருவேங்கடயங்காரின் பெயரின் முன்னுள்ளது. இது இவர் வாழ்ந்த ஊரின் பெயர். 'ஔகு' இன்னும் அதே பெயருடன் கர்னூல் மாவட்டம் கோயில் குண்ட்லா தாலூகாவில் காணப்படுகிறது. (3) **சகாப்தம்:** சகரயாண்டு. இத்துடன் 78 கூட்டினால் கிறித்துவஆண்டு பெறலாம். (4) **விசுவாவசு:** ஆண்டுகள்

அறுபதில் ஒன்று. (5) **பால்குணமாசம்:** மாசி பங்குனி (இது சாந்திரமானம்). (6) **சுக்லபக்ஷம்:** வளர்பிறை நாட்கள். (7) **சப்தமி:** 7-ஆம் திதி. (8) **சோமவாரம்:** திங்கட்கிழமை. (9) **பாண்டியகுலாசனி வளநாடு:** இராசராசன் வகுத்த வளநாடுகளுள் ஒன்று. திருச்சி, பெரம்பலூர், உடையார்பாளையம், தஞ்சை தாலுகா ஊர்கள் பல இந்நாட்டிலிருந்தன. பாண்டியகுலாசனி – பாண்டியர் குலத்திற்கு இடிஎன்று பொருள்படும். இது இராசராசனின் சிறப்புப்பெயர்களில் ஒன்று. சோழர்காலப் பகுப்புக்களே விசயநகரஅரசர் காலத்திலும் பெரும்பாலும் இருந்தன. (10) **விழவரும்வீதி வளநாடு:** இதன் ஊர்களில் ஸ்ரீரங்கமும் ஒன்று. விழாக்கள் இடையறாது நிகழ்ந்தமையால் இப் பெயருடையதாயிற்று. இது நித்யோத்சவவீதி வளநாடு எனவும் கூறப்பெறும். இது விசயநகரவேந்தர் கால அரசியல் பிரிவுகளுள் ஒன்று. (11) **திருவரங்கம்திருப்பதி:** ஸ்ரீரங்கம் என்னும் வைணவத்தலம். (12) **ஸ்ரீபண்டாரம்:** கோயில் கருவூலம்; பொக்கிஷம். (13) **தென்கரை இராசகம்பீர வளநாடு:** காவிரியின் தென்கரையில் அமைந்த வளநாட்டுப்பிரிவு. இராசகம்பீரன் என்பது இரண்டாம் இராசராசசோழனின் சிறப்புப் பெயராகும். (14) **உசாவடி:** விசயநகர அரசர்கால அரசியல் பிரிவு. (15) **ஜீயர்:** வைணவமடாலயத் தலைவர்கட்கு வழங்கிய மரியாதைச்சொல். (16) **யந்திரஸ்தாபனம்:** விருப்பம் நிறைவேறுவதற்காக மந்திரச் சக்கரங்கள் பொறிக்கப்பெற்ற தகட்டை ஸ்தாபித்தல். யந்திரம் – அணைகட்டி நீரைத் திருப்புவது போன்றவற்றுக்கு அமைக்கும் சாதனம் எனத் தி. ந. சுப்பிரமணியம் கூறியுள்ளார். (17) **கிழியாறு:** கிளையாறு. குறையாறு, வளர்ப்பாறு என்பன போல ஒரு வடிகால் ஆறு. (18) **மலடுசெய்வித்தல்:** வெள்ளம் குறையுமாறு செய்தல். நதியைப் பெண்ணாகக் கூறுவதற் கேற்ப வெள்ளம் குறைவித்தல் மலடு செய்வித்தலாகச்

சொல்லப்பட்டது. (19) **மலட்டாறு:** *வெள்ளம் குறைய வெட்டப்பட்ட ஆறு. தற்போதைய மலட்டாருகலாம். இது காவிரியில் இருந்து பிரிந்து இணையொத்ததாக ஓடுவதாகும்.* (20) **சிந்தாமணி:** *காவிரியின் தென்கரையூர்; ஸ்ரீரங்கத்தின் நேர் எதிரிலுள்ளது.* (21) **கிருஷ்ணராய அலவந்தபுரம்:** *திருச்சிக்கு அருகில் உள்ள அம்மமந்தபுரம் ஆகலாம.* (22) **வெட்டி-வழி:** *கிருஷ்ணராய அலவந்த புரத்தில் இருந்து உறையூர்க்குச் செல்லும் வழி. இது தானப் பகுதிக்கு மேல் பால் எல்லையாகும்.* (23) **பரிவர்த்தனை:** *மாற்றுகிலம் தருதல்.* (24) **பகவத்கீதை:** *கண்ணனல் அருச்சுனனுக்குப் பாரதப் போர் தொடங்குங்கால் போர்க் களத்தில் கூறப்பட்டது.* **கீதையிலே பி** – *கீதையிலேயும் கூட* (25) **பண்டாரவாடையாய்த் திறந்துபோன** – *குடி பாத்தியமான ஊராய் இருந்து மாறிய; அரசனுக்குச் சொந்த மானதாய் இருந்து மாறிய எனினும் ஆம்.* (26) **சோம குல திலக** – *சந்திர வம்சத்தில் திலகம் போன்று திகழ்ந்த* (27) **ஏகபோகம்** – *முழு உரிமை.* (28) **கிலோத்தாரணம் பண்ணின** – *கல்லை நட்டு; அழிவு போக்கிப் புதுக்கின எனினும் ஆம்.* (29) **தளிகை** – *குறித்த அளவு படைக்கப் பெறும் இறைவனுக்குரிய அமுது.* (30) **நிபந்திக்கட்டளை அற்றபடி விட்டவன் விழுக்காடு** – *நிபந்தக் கட்டளையை நடத்துபவனுக்குரிய பங்கு.* (31) **சதுர்த்தாம்சம்** – *நான்கில் ஒரு பங்கு.* (32) **ஆசந்திராதித்தவல்** – *சந்திரனும் சூரியனும் உள்ளவரை.* (33) **ஸ்ரீ வைஷ்ணவர்** – *திருமால் கோயில் நிர்வாகிகள்.* (34) **ஸ்ரீரங்கநாராயணபிரியன்** – *திருவரங்கம் கல்வெட்டை எழுதியவன்; கோயில் கணக்கன்.*

XXX

திருவீங்கோய் மலையிலுள்ள கிருஷ்ணதேவமகாராயரின் கல்வெட்டு

1. திருவீங்கோய்மலைக் கல்வெட்டில் கிருஷ்ண தேவராயரின் வெற்றிச் சிறப்புக்களாகக் கூறப் பட்டுள்ளன யாவை?

'*கிருஷ்ணதேவ மகாராயர் (1509-1529) விசயநகரத்தில் இருந்து திக்குவிசயமாகப் புறப்பட்டார். கிழக்கு (பூர்வ) நோக்கிச் சென்றார்; உதயகிரி மலைக்கோட்டையைக் கைப் பற்றினர்; திருமலை இராகுத்த்ராயன் என்பவனைப் பிடித்தார்; வினிகொண்டை, வெல்லமகொண்டை, நாகார்ச்சுன கொண்டை, கொண்டை வீடு, கொண்டைபள்ளி இராச மகேந்திரபுரம் முதலான இடங்களில் இருந்த கலையரண் கொண்ட கோட்டைகளைக் கைப்பற்றினர்; பிரதாபருத்திர கஜபதியின் மகன வீரபத்திரனையும், பிரதாபருத்திர கஜபதி யின் (மகன்) பிரசலாதனையும், சிரச்சந்திரன், மல்லூகான், உத்தண்டகான் என்னும் சேனைத்தலைவரையும் உயிருடன் சிறைப்பிடித்தார்; (கலிங்க அரசன்) பிரதாபருத்திர கஜ பதியை வெட்டிக்கொன்ருர்; சிங்காத்திரிக்கு எழுந்தருளினர்; பொட்டுநூரில் வெற்றித்தூண் நிறுவினர்*' - எனக் கி. பி. 1517க்குரிய திருவீங்கோய்மலையில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது.

2. திருவீங்கோய்மலைக் கல்வெட்டில் கண்ட அறச் செயலைக் கூறுக.

கிருஷ்ணதேவராயர் சோழ மண்டலத்தில் உள்ள தேவஸ்தானங்களான திருச்சிராப்பள்ளி திருவீங்கோய்மலை செந்தலை திருக்காட்டுப்பள்ளி திருமழபாடி வல்லம்

தஞ்சாவூர் திருநல்லூர் திருவாரூர் திருநகரி திருவையாறு திருவெழுந்தூர் இராசுராமபாளையம் திருவாஞ்சியம் திருப்புகலூர் திருப்பனந்தாள் திருநாங்கூர் தாடாலங்கோயில் சீகாழி அரிகண்டபுரம் உட்பட இரண்டாற்றுப்பற்றுச் சீர்மை, புவனேகவீரன் பட்டணச்சீர்மை, இராசராசேச்வரச் சீர்மை, தஞ்சாவூர்ச் சீர்மை, வீரமடக்குச் சீர்மை, வழுதலம் பட்டுச் சீர்மை, வழுவத்தூர்ச் சீர்மை, பெரம்பூர்ச் சீர்மை, குழித்தண்டலைச் சீர்மை ஆகியவற்றில் உள்ள விஷ்ணு ஸ்தானம், சிவஸ்தானம், தேவஸ்தானங்களுக்குரியார் பழங் காலம் (பூர்வம்) முதலே அரண்மனைக்குச் செலுத்திவருகின்ற சோடி, சூலவரி, ஆயம், ஸ்தலயாதிக்கம் (முதலானவற்றால் வரும்) பத்தாயிரம் பொன்னை அவ்வத் தேவஸ்தானங் களுக்கே உரிமையாக்கினார்.

கிருஷ்ணதேவராயர் மகர சங்கராந்தி புண்ணிய நாளில் கிருஷ்ணவேணி யாற்றங்கரையில் உண்டவல்லி அனந்தசாயி சந்நிதியிலும், விசயவாடை மல்லிகார்ச்சுன தேவர் சந்நிதியிலுமாகத் தாராபூர்வமாகச் சர்வமான்யம் (முற்றூட்டு) ஆக்கித் தர்மசாசன இராயசமும் பிறப்பித்தார். இந்த ராயசப் பிரமாணப்படியே எல்லாத் தேவஸ்தானங் களிலும் கல்வெட்டு எழுதுவித்துக்கொண்டு பூஜை புனஸ் காரமும் அங்கரங்கவைபோகமும் திருப்பணிகளும் சாங்கோ பாங்கமாகச் சந்திரசூரியர் உள்ளவரை நிலையாக நடத்துதல் வேண்டும்.'' என்று கி. பி. 1517க்கு உரிய திருவீங்கோய் மலையில் உள்ள கிருஷ்ணதேவராயர் கல்வெட்டுக் கூறுகிறது.

(குறிப்பு: இக்கல்வெட்டுப்படிகள் பல ஆலயங்களில் காணப்படுகின்றன.)

3. திருவிங்கோய்மலை சாசனத் தொடக்கத்தி லமைந்த வடமொழிச் சுலோகத்தை எழுதிப் பொருள் தருக.

நமஸ்துங்க சிரச்சும்பி சந்த்ர சாமரசாரவே ।
த்ரைலோக்ய நகராரம்ப மூலஸ்தம்பாய சம்பவே ॥

என்பது திருவிங்கோய்மலைக் கல்வெட்டின் துவக்கத்தில் காணப்படும் வடமொழி அநுஷ்டுப் சுலோகம். விசயநகர அரசர்காலக் கல்வெட்டுக்களில் பெரும்பாலும் காணப்பெறும் இறைவணக்கச் சுலோகங்கள் மூன்றனுள் இதுவும் ஒன்று. இது சிவபெருமானைப்பற்றியது.

'சாமரம் போன்ற சந்திரனைத் தலையில் அழகாகத் தரித்திருப்பவரும் மூன்று உலகங்களிலும் உள்ள நகரம் கிராமம் ஆகியவற்றின் படைப்புக்கு ஆதாரத்தூணாக உள்ள வருமான சம்பு என்னும ஈசுவரனை வணங்குகிறேன் என்பது இதன் பொருள்.

4. திருவிங்கோய்மலைச் சாசனத்தின் இறுதியில் அமைந்த சுலோகத்தை எழுதிப் பொருளை விளக்குக.

"ஸ்வதத்தாத் விகுணம் புண்யம் பரதத்தானு பாலனம் ।
பரதத்தா பஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது ॥."

என்பது கல்வெட்டின் இறுதியிலமைந்த வடமொழி (அநுஷ்டுப்) சுலோகம்.

"தான் அளித்ததைக் காட்டிலும் பிறர் அளித்ததைத் திறம்பட நிர்வாகிப்பது (காப்பது) இருமடங்கு நலம் பயக்கும்; பிறர் அளித்ததை அபகரித்தால் தான் அளித்ததும் பயன் அற்றதாய்ப் போய்விடும்" — என்பது இதன் பொருள்.

5. குறிப்பு வரைக.

(*1*) **சம்வத்சரம்** – *ஆண்டு.* (*2*) **பூர்வ தக்ஷிண பச்சிம உத்தரசதுச் சமுத்திராதிபதி** – *கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளில் உள்ள நாற்கடல்களின் தலைவன்.* (*3*) **விஷ்ணுஸ்தானம்** – *வைணவத் திருப்பதி.* (*4*) **சிவஸ்தானம்** – *சிவத்தலம்.* (*5*) **சோடி** – *ஜோடி, மிகக் குறைந்த வரியுடைய தீர்வை நிலம்.* (*6*) **சூலவரி** – *சிவாலய நிலங்களுக்குரிய வரி.* (*7*) **புறவரி** – *பெரும்பாலும் காசாக இறுக்கப்பெறும் வரிகளைக் குறிக்கும் சொல்.* (*8*) **அரசுபேறு** – *அரசரால் பெறக்கூடிய வரிகள்.* (*9*) **சர்வமானியம்** – *முற்றூட்டு.* (*10*) **தர்மசாசன ராயசம்** – *தர்ம சாசனப் படிபாட்டுத் தீட்டோலை; ராயசம் – ஓலை; ஈண்டு அரசாணை.* (*11*) **சந்தலகை** – *செந்தலை என்னும் ஊர்.* (*12*) **பற்று** – *நாட்டின் ஒரு பகுதி.* (*13*) **சீர்மை** – *சீமை; விசயநகர அரசர்கால அரசியல் பிரிவு; பல ஊர்களை உடையது. பேரூர் எனினுமாம்.* (*14*) **ஆயம்** – *பொதுவாக வரிகளைக் குறிக்கும் சொல்.* (*15*) **மகரசங்கராந்தி** – *தைம்மாதப் பிறப்பு.* (*16*) **புனஸ்காரம்** – *மீண்டும் செய்யப்பெறுவது.* (*17*) **அங்கரங்க வைபோகம்** – *சோடச உபசார பூசை.*

மூன்றாம் பகுதி

பொதுக் கட்டுரைகள்

1. சாசன அமைப்பு

சாசனம் என்பது அரசனின் ஆணை. இச்சாசனம் மங்கலச்சொல், அரசர் மரபு, அரசன் பெயர், காலம், தர்மத்தின் விவரம், கையெழுத்துக்கள், ஒப்படைக்கிளவி என்பனவற்றை உறுப்புக்களாகக் கொண்டிருக்கும்.

1. **மங்கலச் சொல்:** சாசனங்கள் பெரும்பாலும் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லால் தொடங்குகின்றன. ஒருசில 'சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ' எனத் துவங்குகின்றன. ஸ்வஸ்திஸ்ரீ என்பதற்கு 'மங்களம் உண்டாகட்டும்' என்பது பொருள். விஜயநகர அரசர் கல்வெட்டுக்களில் இறைவணக்கச் சுலோகத்துக்குப் பின், மங்கலச்சொல் காணப்படுகிறது. செப்பேடுகளில், வடமொழிப்பகுதியின் தொடக்கத்திலும் தமிழ்ப்பகுதியின் தொடக்கத்திலும் மங்கலச்சொல் காணப்பெறும். ஆயினும் ஒருசில செப்பேடுகளில், தமிழ்ப் பகுதியின் தொடக்கத்தில் மங்கலச்சொல் காணப்படவில்லை. முதல் மகேந்திரவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் கால நடுகற்களிலும் மங்கலச் சொற்கள் காணப்படவில்லை. பிற எல்லாக் கல்வெட்டுக்களும் மங்கலச் சொற்களுடன் தொடங்குகின்றன.

2. **அரசர் மரபு:** பெரும்பாலும் எல்லாச் செப்பேடுகளிலும் சாசனம் செய்த மன்னரது முன்னோரதுமரபு கூறப்படும். இவற்றில், புராணகால மன்னரதுமரபு வரலாற்றுக்கால மன்னரதுமரபு என இரண்டுவகை காணப் பெறுவதுண்டு. கல்வெட்டுக்களாயின் சாசனகால மன்னர் பெயர் குறிக்கப்பெறும். வேந்தனுடைய மெய்க்கீர்த்தி அமையின் அவன் புகழ் மட்டும் கூறப்பெறுமே அன்றி மரபு கூறப்பெறாது.

3. **அரசன் பெயர்:** செப்பேட்டிலும் கல்வெட்டிலும் அரசன் பெயர் குறிக்கப்பெறும்போது பட்டப்பெயர், மெய்க்கீர்த்தி என்பன கூறப்பெறும். 'கோவிசைய' என்பது பல்லவரது பட்டப்பெயர். 'மாறவர்மன்' 'சடையவர்மன்' என்பன பாண்டியர்கள் ஒருவர்பின் ஒருவராக மாறிமாறிப் புனைந்துகொண்ட பட்டப்பெயர். 'இராசகேசரி' 'பரகேசரி' என்பன சோழர்கள் மாறிமாறிப் புனைந்துகொண்ட பட்டப் பெயர். "ஸ்ரீமந் மகாமண்டலேசுவர ஸ்ரீராஜராஜ, ராஜ

பரமேஸ்வர, ஸ்ரீ வீரப்பிரதாப் ஸ்ரீ மந் சதாசிவ ராஜமஹா ராயர்" என்பது போலவும், "ஸ்ரீ மந் மகா மண்டலேசுவர அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயகண்டன், கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொடாதான், பூர்வ தக்ஷிண பச்சிம உத்தரசதுச் சமுத்திராதிபதி, ஸ்ரீ வீரப் பிரதாப ஸ்ரீவீரகிருஷ்ணதேவ மஹாராயர்" என்பது போலவும், விஜயநகரமன்னர் பெயர்கள் பலபட்டப்பெயர் களோடு கூறப்படும். முதல் ராசராசன்காலக் கல்வெட்டுக்கள் தொடங்கி அரசர் பெயர்களுக்குமுன் மெய்க்கீர்த்திக் காணப்பெறும். அரசரின் ஆட்சியாண்டுகள் ஏறஏற மெய்க் கீர்த்திகளும் வளர்வனவாகும்.

4. **காலம்:** சாசனம் எழுந்த காலத்தைக் குறிக்கப் பல்வேறு முறைகள் கையாளப்பட்டுள்ளன. (1) **ஆட்சி யாண்டு குறித்தல்:** சாசனம்செய்யப்பட்ட காலத்திலிருந்த அரசனின் இத்தனையாவது ஆட்சியாண்டில் சாசனம் செய்யப்பெற்றதாகக் குறிக்கப்பெறும். ஒரோவழி அவ் வாண்டோடு நாளும் குறிக்கப்பெறும். சோழர்க்கு இளவர சானது முதற்கொண்டும், பல்லவர்க்கு அரியணை ஏறியது முதற்கொண்டும் ஆட்சியாண்டு கணக்கிடப்படும். (2) **எதிராமாண்டு குறித்தல்:** பாண்டியர் சாசனங்களில் பெரும்பாலும் ஆட்சியாண்டின் எதிராமாண்டு குறிக்கப் பெறும். இங்கே ஆட்சியாண்டு என்பது நடந்து முடிந்த ஆண்டையும் எதிராமாண்டு என்பது நடந்து கொண்டிருக்கும் ஆண்டையும் குறிக்கிறது எனலாம். சிவகாசிச் சாசனத்தில் தனக்கிரண்டாமாண்டின் எதிரா மாண்டில்என வீரபாண்டியனின் ஆட்சியாண்டு குறிக்கப் பெறுகிறது. அதாவது 2-ஆம் ஆண்டு முடிந்தது மூன்றாம் ஆண்டு நடக்கும்போது இச்சாசனம் செய்யப்பெற்றதாகப் பொருள். (பக்கம் 95 காண்க) (3) **அப்தம் குறித்தல்:** அரசனின் ஆட்சியாண்டைக் குறிக்காமல், **கலியப்தம்**

அல்லது சகாப்தம் குறிக்கப்படுகிற வழக்கமும் இருந்திருக்கிறது. கலியுகம் தொடங்கியது முதல் எண்ணப்படுகின்ற ஆண்டு கலியப்தம் எனப்படும். சாலிவாகனின் ஆட்சி தொடங்கியதுமுதல் எண்ணப்படுகின்ற ஆண்டு சகாப்தம் எனப்படும். கலியப்தத்தினின்று 3101 ஐக் கழித்தால் கி. பி. ஆண்டு கிடைக்கும். சகாப்தத்தோடு 78-ஐக் கூட்டினால் கி பி. ஆண்டு கிடைக்கும். சகாப்தம் அல்லது கலியப்தத்தின் எண்ணிக்கை கூறுவதோடு சம்வத்சரம், மாதம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணங்களும் கூறப்பட்டிருக்கும். பார்த்திவசேகரபுரம் செப்பேட்டில், கலியப்தத்தின் எண்ணிக்கை கூறாமல் கலியுகம் தொடங்கி 14,49,087 சென்றநாள் என்று நாள்மட்டும் குறிக்கப்பட்டு இருக்கிறது. (பக்கம் 99 காண்க)

5. **தர்மத்தின் விவரம்:** (உள்ளுறை) செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் செய்யப்பட்ட தர்மத்தின் விவரம் கூறப்படுதலே உள்ளுறையாகும். இப்பகுதியில் தானம் செய்தவரின் பெயரும் அதனை ஏற்றுக்கொள்வோரின் பெயரும், தானம் நிலமானால் அந்நிலத்தின் பெயரும் பெருநான்கெல்லைகளும், அதன் வருவாயைப் பயன்படுத்த வேண்டிய முறையும் கூறப்பட்டிருக்கும்.

தானஞ்செய்பவர், தானம்செய்யும் நிலமுள்ள இடத்தில் இராமல் பிறிதோரிடத்தில் இருந்துகொண்டும் தானம் செய்வதுண்டு. லெய்டன் பட்டயத்தில், 'இராசராசன் தஞ்சாவூர் புறம்படிமாளிகை ராஜாஸ்ரயனில் தெற்கில் மண்டபத்தில் இருந்து ஆனைமங்கலத்தைத் தானஞ்செய்தான்' என்றும் 'கிருஷ்ணதேவமகாராசர், கிருஷ்ணவேணியாற்றங் கரையில் உண்டவல்லி அனந்தசாயி சந்நிதியிலும் விசயவாடை மல்லிகார்ச்சுனதேவர் சந்நிதியிலும் இருந்து திருவீங் கோய்மலை முதலான சோழமண்டல தேவஸ்தானங்களுக்குத் தானமளித்தார்' என்றும் கூறப்படுவதனால் இச்செய்தி உணரலாம்.

உள்ளுறையின் இறுதிப் பகுதியில், 'இத்தருமத்தைச் சந்திரசூரியர் உள்ளவரை அனுபவித்துக்கொள்வதாக' எனக் கூறப்பட்டிருக்கும். சான்றாகத் திருவரங்கம் கல்வெட்டில் 'சந்திராதித்தவரையும் அனுபவித்துக்கொண்டு' என்றும் தளவாய்புரம் சாசனத்தில் 'பகல்செய்யும் பருதி ஞாயிறும் இரவுச்செய்யும் பனிமதியும் அகல் ஞாலமும் உள்ளளவும்' என்றும் குறிக்கப்படுகிறது.

6. **கையெழுத்துக்கள் :** சாசனங்களில் கொடையளித்தவரின் கையொப்பம், நடத்த ஒப்புக்கொண்டவரின் கையொப்பம். புணைபட்டவர் கையொப்பம் முதலானவை காணப்பெறும். லெய்டன் செப்பேடுகளில் (6) அரசியல் அலுவலர் பலரும் ஊர்ச்சபையலுவலர் பலரும் கையொப்பம் இட்டுள்ளனர். எழுதியவர் பெயர் (திருவரங்கம் (29) பார்த்திவசேகரபுரம் (5) முதலிய) சாசனங்களின் இறுதியில் உள்ளது.

7. **ஓம்படைக்கிளவி :** சாசன இறுதியில் காப்புரை காணப்பெறும். 'இத்தருமத்தை இன்னார் காப்பாராகுக; இத்தருமத்தைக் காத்தவர் இவ்வுயர்வு அடைவர்; காவாதார் இத்தகைய தீங்கினை அடைவர்' என இப்பகுதி கூறும்.

கூரம் செப்பேட்டில், 'தேவதமாகா நின்ற பப்ப பட்டார கருங்கா ... ... க் காத்துக்கொடுக்க' என்றுள்ள இறுதிவரி காப்புரையாகலாம். பள்ளன்கோயில் பட்டய இறுதியில் ஸி (ஸித்தம்) என்றுள்ளது. திருவான்மூர் நடு கல்லில், 'இது அன்றென்றார் கங்கையிடைக் குமரி இடை எழுநூற்றுக் காதமும் செய்தான் செய்த பாவத்துப்படுவார் அன்றான் கோவுக்குக்காற்பொன் தண்டப்படுவார்' என்பது காப்புரையாக உள்ளது. திருவீங்கோய்மலைக் கல்வெட்டில், 'இந்தத் தர்மத்துக்கு அகிதம் நினைத்தவன் தங்கள் தங்கள் மாதாபிதாவையும் கோபிராமணரையும் வாரணாசியிலே

கொன்ற பாவத்திலே போகக்கடவார்களாகவும்' என்றுள்ளது.

முடிப்பு: செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் இறுதியில் உ (பிள்ளையார்சுழி) என்ற அடையாளமாவது, சுபமஸ்து அல்லது ஸ்வஸ்திஸ்ரீ என்ற சொல்லைக்கொண்டாவது முடியும். விஜயநகர மன்னர் கல்வெட்டுக்களாயின், ஏதாவது ஒரு வடமொழிச் சுலோகத்தோடு முடியும்.

2. செப்பேடு உருவாகும் முறை

அரசன் கொடை தருதல்: அரசன் தானே கொடைகளைத் தருவதுண்டு. பிறர் விண்ணப்பித்துக்கொண்டதற்கு ஏற்பக் கொடைதருவதும் உண்டு. இவ்வாறு விண்ணப்பித்துக்கொண்டவன் விக்ஞப்தி அல்லது விண்ணப்பம் எனப்பெறுவான்.

அரசு ஆணை நிறைவேற்றப்பெறுதல்: அரசன் தான் அளித்த தானம்பற்றி ஒருத்தரவு பிறப்பிப்பான். இவ் உத்தரவு நிறைவேற்றப்பெறுவதனை லெய்டன் பட்டயம் விரிவாகக் கூறுகிறது (லெய்டன் பட்டயம் காண்க)

செப்பேடு செய்துகொள்ளுதல்: அரசாணை நிறைவேற்றப்பெற்ற பின்னல், நிலம்பெற்றோர் தமக்குரிய ஆவணமாக வைத்துக்கொள்வதற்காகச் செப்பேடுகள் ஓலைப்பிடிபாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பெறும். அரசன் செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்க எனக்கூறி நிலம் தருதலும் உண்டு. சாசனமும் அறையோலையும் நாட்டுச் சபையார் செய்துதருதலைச் சிவகாசிச்சாசனமும், மகாசபைக் குறிப்பொடு கொடுத்தலையும், புரவெழுதிச்சாசனம் செய்து தருதலையும் தளவாய்புரச் சாசனமும் குறிக்கின்றன.

முதல் செப்பேடு அழிய மீண்டும் தருதல்: தளவாய்புரச்சாசனம், முன்பு கடுங்கோனும், கழுதூரில்

இறந்த பாண்டியன் ஒருவனாலும் செய்து தரப்பெற்ற செப்பேடுகள் மறக்கேட்டில் அழிந்தன; மீண்டும் செப்பேடு செய்துதருக என வேண்டிக்கொண்டதற்கிணங்கப் பராந்தகன் வீரநாராயணனால், செய்து தரப்பெற்றதாகும். இதனால் ஒரு முறை செப்பேடுபெற்று இழந்தவர், மீண்டும் விண்ணப் பித்துக்கொண்டு (உரிமையுண்மையை நிறுவிப்) புதுச் செப்பேடு பெறும்முறையும் இருந்தமையை உணரலாம்.

3. செப்பேட்டின் அமைப்பு

செப்பேடுகள் பெரும்பாலும் வடமொழி தமிழ் என்னும் இருமொழிப் பகுதிகள் உடையனவாக இருக்கும். பார்த்திவசேகரபுரம் சாசனம், தமிழ்ப் பகுதி மட்டுமே உடையது. பிற ஐந்து சாசனங்களில் இரு பகுதிகளும் உள்ளன.

வடமொழிப் பகுதி: இறைவணக்கச் சுலோகங்களுடனும் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்றும் துவங்கும்; 'பிரசஸ்தி' எனப்படும் பகுதியில், புராண அரசர், வரலாற்றரசர் பரம்பரை கூறப்படும். பின் தானமளித்த அரசனின் புகழ் தானவிவரம் கூறப்படும். நிறைவேற்றியோர், பிரசஸ்தி செய்தோர் பற்றிய விவரங்களும் காணப்பெறும்.

தமிழ்ப் பகுதி: உரைநடையாகவும் செய்யுளாகவும் இருக்கும். பாண்டியர் சாசனங்களாயின் வட்டெழுத்திலும் பிற சாசனங்கள் தமிழ் எழுத்துக்களிலும் எழுதப்படும். மங்கலச் சொல்லுடன் தொடங்கும். மதுரைக்காஞ்சியின் முதலடியும் தளவாய்புரச் சாசனத் தொடக்கமும் ஒன்று என்பது குறிக்கத்தக்கது. முதலில் புராண அரசர், வரலாற்று வேந்தர் மரபு கூறப்பெறும். இப்பகுதி சருக்க மாகவும் அமைதலுண்டு. (க. எண். 4) பிறகு தானம் அளித்த அரசன், தான விவரம் முதலியன காணப்பெறும். ஆனை,

னாட்டாரை அடைந்து நிறைவேற்றப்பெறுதல்; பெருநான் கெல்லைகள் முதலிய விவரங்கள் தெளிவாகக் கூறப்பெறும். இறுதியில் தமிழ்ப் பகுதியைப் பாடியோர், எழுதியோர் பற்றிய குறிப்புக்கள் காணப்பெறும்.

குறிப்பு: பொதுக்கட்டுரைகள் ஏறத்தாழ மூன்று பக்க அளவில் அமைதல் நலம். எனவே முன் பகுதியில் கண்டு பெருக்கிக் கொள்க.

4. வரலாறு எழுதப் பெருந்துணைபுரியும் சாசனப் பகுதிகள்.

1. **மெய்க்கீர்த்தி:** கல்வெட்டுக்களில் முதல் இராசராசன் காலத்திலிருந்துதான் மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன. இவை வரலாறுகாணப் பெரிதும் பயன்படுவன. (1) இரண்டடித் தொடையால் நான்கு சீர்களுடையதாகி வந்து (2) வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லி (3) இறுதியில் அவன் வரலாறு கூறி (4) அரசியுடன் சிறந்து வாழ்க எனக்கூறி (5) இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க ஆண்டு எனத் திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி எனப் பன்னிருபாட்டியல் கூறுகிறது. மெய்க் கீர்த்திகள் அரசரின் ஆட்சியாண்டு வளரவளரத் தாமும் வளர்வனவாகும்.

முதல் இராசராசனின் மெய்க்கீர்த்தி அளவடியால் அமைகிறது. எனினும் பன்னிரு பாட்டியலில் கூறப்பெற்றது போல அவளுடன் வாழ்க எனச்சொல்லும் முறை இல்லை. முழுவதும் வரலாறு கூறுவது.

இரண்டாம் இராசராசனின் (27) மெய்க்கீர்த்தியும் அளவடியாலமைவது; அரசியின் பெயர் காணப்பெறுகிறது. வரலாற்றுச் செய்திகளறியத் துணைபுரிவதாக இல்லை.

சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (28) மெய்க்கீர்த்திப் பலவகை அடிகளும் விரவிச் சொற்சீரடியும் பெற்று அமைகிறது. இலக்கணவிளக்கப் பாட்டியலும் வச்சணந்தி மாலையும் 'மெய்க்கீர்த்திமாலை சொற்சீரடியால் அமையும்' எனக் கூறுகின்றன. இம்மெய்க்கீர்த்தியில் எண்ணலங்காரம் முதலான அணியழகுகள் காணப்படுகின்றன. 'குல முறையில் செய்த கீர்த்தியை அழகுற மொழிதல் மெய்க்கீர்த்தி மாலை' என இலக்கண விளக்கப்பாட்டியலுரை கூறுவதற்கேற்பப் பாண்டியனுக்கு இந்திரனாரம் சூட்டியமையும் இதில் குறிக்கப்பட்டுள்ளது.

2. **செப்பேட்டுத் தமிழ்ப் பகுதி:** புராணவேந்தர், வரலாற்று அரசர், சாசனம் தந்த அரசன் என்ற முறையில் செய்திகள் கூறப்பெறும். இம்முறை விரிவாகத் தளவாய் புரச்சாசனத்திலும் (3) சுருக்கமாகச் சிவகாசிச் சாசனத்திலும் (4) காணப்பெறுகிறது. இது வடமொழிப் பிரசஸ்தியை ஒத்தது. மெய்க்கீர்த்திமாலையின் ஒரு வகையே ஆகும். அணியழகுபட இலக்கியப்பாங்கிலமையும் இப்பகுதியே அரசமரபறியத் துணைபுரிவதாகும்.

5. சங்ககாலக் கல்வெட்டுக்கள்

முன்னுரை: சங்ககாலக் கல்வெட்டுக்கள் எனக் கருதப்பெறுவன கி. மு. 3-ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 4-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டனவாம். இதுவரை 22 குகைகளில் இக்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழிக் கல்வெட்டுக்கள்: இக்காலத்தனவாகிய கல்வெட்டுக்கள் கி. பி. 1903 முதல் கண்டுபிடிக்கப்படலாயின. மீனாட்சிபுரம் கல்வெட்டு 1906, சித்தன்னவாயில் கல்வெட்டு 1914, புகளூர்க் கல்வெட்டு 1927 ஆகிய ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பெற்றுப் பிரதி செய்யப்பெற்றும் எவராலும் படிக்கப் பெறாமல் இருந்தன.

அன்மையில் அரச்சலூர்க் கல்வெட்டுப் புலவர் இராசு என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்றது. இக் கல்வெட்டுக்கள் எழுதப்பெற்றுள்ள எழுத்துமுறையை வாசித்துத் தமிழ்க் கல்வெட்டுக்களே இவை என்னும் முடிவுக்குவரக் கே. வி. சுப்பிரமணிய அய்யர் வழிசெய்தார். திரு. ஐ. மகாதேவன், இரா. நாகசாமி ஆகியோர் இவற்றைப் படித்து உலகிற்குணர்த்தினர்.

தமிழி எழுத்து: இச்சாசனங்கள் '**தமிழி**' என்னும் எழுத்தால் எழுதப்பெற்றுள்ளன. இவ்வெழுத்துக்களைத் **தமிழ்ப் பிராமி** எனவும் குறிப்பர். இவ்வெழுத்துக்களே தமிழ் எழுத்துக்களுக்கும் வட்டெழுத்துக்களுக்கும் அடிப்படையாக அமைவன. இவ்வெழுத்துக்கள் குகைகளில் அமைந்த கல்வெட்டுக்களில் அதிகமாக அமைவதனால் **லேண எழுத்துக்கள்** எனவும் கூறப்பெறும். (லேண — குகை.)

மீனாட்சிபுரம் கல்வெட்டு மிக முற்பட்ட தமிழி எழுத்துக்களால் ஆனது. இக்கல்வெட்டில் உயிர்மெய் எழுத்துக்களில் அகர ஆகார வேறுபாடு குறியீடுகளால் உணர்த்தப்பெறவில்லை. அசோகன் பிராமி த (DHA) வும் ச (SA) வும் கையாளப்பட்டுள்ளது. சித்தன்னவாசல் கல்வெட்டின் எழுத்துக்களில் சற்று வளர்ச்சி காணப்படுகிறது. எகரம் ஏகாரத்தின் உள் புள்ளியிட்டு எழுதப்பட்டுள்ளது. புகளூர்க் கல்வெட்டில் அகரம், றகரம் ஆகிய எழுத்துக்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. இகரக்குறி வளையத் தொடங்குகிறது. அரச்சலூர்க் கல்வெட்டுத் தமிழியின் பிற்கால நிலையினைக் காட்டுவதாக உள்ளது. (பக்கம் 157 காண்க.) திருநாதர் குன்றுக் கல்வெட்டில் திரிசூலம் போன்ற அமைப்புடையதான ஐ என்னும் உயிர் எழுத்துக் காணப்படுகிறது.

சொல்லமைதி: (1) மீனாட்சிபுரம் கல்வெட்டில் பணஅன், கடல் அன், இகுஅன் என விகுதிகள் தனியாகப்

பிரித்தெழுதப்பட்டுள்ளன. சித்தன்னவாசல் கல்வெட்டிலும் குமிழ்வூர் ஈதேன்கு அதிட்அனம் எனப் பிரித்து எழுதப்பட்டுள்ளன. இவ்விரண்டு சொல்லமைதிகளாலும் இவ்விரண்டு கல்வெட்டுக்களும் கி. மு. 3-ஆம் 2-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவை என்பதை உணரலாம்.

(2) மீனாட்சிபுரம் கல்வெட்டில் கணிய், ஸிரிய், பளிய், வழுதிய் என இகர ஈற்றின் பின்னும், தந்தைய் வெள்அறைய் என ஐகார ஈற்றின் பின்னும் யகர ஒற்று அதிகப்படியாகச் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. புகளூர்க் கல்வெட்டிலும் உறைய் என ஐகார ஈற்றின் பின் யகர ஒற்று அதிகப்படியாகச் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. இங்ஙனம் யகர ஒற்றுப் பெறும் முறை, பல்லவர் பிற்காலச்சோழர் பாண்டியர் கல்வெட்டுக்களிலும் ஒரோவழி காணப்படுகிறது.

(3) புகளூர் ஆர்நாட்டார்மலைக் கல்வெட்டில், ன்கர ஈற்றின் முன் வந்த இகரம் கெட்டநிலை காணப்படுகிறது.

(உம்) மகன் + இளங்கடுங்கோ = மகன்ளங்கடுங்கோ; கடுங்கோன் + இளங்கடுங்கோ = கடுங்கோன்ளங்கடுங்கோ; நாகன் மகன் + இளங்கீரன் = நாகன் மகன்ளங்கீரன்.

(4) மீனாட்சிபுரம் கல்வெட்டில் கணி, ஸிரி, இகுவன், தம்மம், பளி, ஸுதன், நிகமம் என்ற வடமொழிப் பாகதச் சொற்கள் காணப்படுகின்றன. சித்தன்னவாசல் கல்வெட்டில், அதிட்டானம் என்ற வடசொல்லும் திருநாதர்குன்று கல்வெட்டில், அனசனம், ஆசிரிகர், நிசீதிகை என்ற வடசொற்களும் காணப்படுகின்றன.

(5) கொட்டுவித்த என்பது கொட்டுபித்த எனவும் செய்த என்பது செஇய எனவும் கொட்டியோர் என்பது கொடிஓர் எனவும் காவிதி என்பது காவுடி எனவும் அறுப்பித்த என்பது அறுபித எனவும் சிதைந்த சொல் வழக்குகள் காணப்படுகின்றன.

குகைகள் : சங்ககாலக் கல்வெட்டுக்கள் மலைகளில் ஒதுக்குப்புறத்தில் இயல்பாக அமைந்த குகைகளில் உள்ளன. படுக்கைகள் பல செய்விக்கப்பெற்றிருக்கும் இக் குகைகளில், சமணரும் புத்தரும் வாழ்ந்தனர் எனச் சிலரும், சைனர் மட்டுமே வாழ்ந்தனர் என நாகசாமியும் கூறுவர். **பெயரும் செயலும் :** மலைகளைக் குடைந்து புதிதாக உருவாக்காமல் இயல்பான குகைகளைச் செதுக்கி இக் குகைகளைச் செய்துள்ளனர். இவை **பள்ளி** (7) (சைன பௌத்தர் வாழும் இடம்) **அதிட்டானம்** (8) (இடம்) **முன்று** (9) (முற்றம்) எனக்கூறப்பெறுகின்றன. இவற்றைச் செய்தல் '**கொட்டுவித்தல்**' (செம்மட்டியால் செதுக்குதல்) என மீனாட்சிபுரக் கல்வெட்டிலும், **அறுத்தல்** (வளைபோல் தோண்டுதல்) எனப் புகளூர்க் கல்வெட்டிலும் கூறப்படுகிறது. **வாழ்ந்தோர் :** இக்குகைகளில் கணியநந்த ஸிரியிகுவன் (7) காவிதிஈதேன் (8) அமணன்யாற்றூர்ச் செங்காயபன் (9) என்போர் வாழ்ந்தனர். **செய்வித்தோர் :** அரசமரபினர் மீனாட்சிபுரம், புகளூர் குகைகளைச் செய்வித்தனர். இளையர் சித்தன்னவாசல் குகையைச் செய்தனர் ; வணிகக்குழுவினர் மீனாட்சிபுரத்திலும் தனியார் இருவர் புகளூரிலும் குகைப்பணி புரிந்தனர்.

வரலாறு : சங்ககாலப் பாண்டிய மன்னனைப்பற்றியும் சேர மரபினரைப் பற்றியும் கல்வெட்டுக்கள் (7ம் 9ம்) கூறுகின்றன. இசை எழுத்துக்களைப் புணர்த்தமையை அரச்சலூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. வெள்ளறைநிகமம் என்னும் வணிகக் குழுவினர் (9) பற்றியும், வண்ணக்கன் இளையர் பற்றியும் குறிப்புக்களுண்டு.

தோற்றக்கால கல்வெட்டுக்கள் : சங்ககாலத்தில் 'பெயர் பொறித்துப் பீடுஎழுதி' நடுகற்கள் நடப்பெற்றன என இலக்கியங்கள் குறிக்கின்றன. ஆனால் அவைகளில் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்நாள்வரை கிடைத்தவற்றில்

இக்குகைக் கல்வெட்டுக்களே முற்பட்டவையாகும். இச் சாசனங்கள் தாம்தோன்றிய நோக்கத்தை மட்டுமே விவரிப்பன.

மொழிநடை: வடசொற்களும், பிராகிருதச் சிதைவுச் சொற்களும், தமிழ்ச்சொற்களும் கலந்து காணப்படுகின்றன. செய்த அதிட்அனம், அறுப்பித்தகல் என்பனபோன்று வாக்கியங்கள் பெயர்ப் பயனிலை கொண்டு முடிகின்றன. இதற்குப் பிராகிருதச் செல்வாக்கே காரணம் என்பர். காவிதி பிணவு போன்ற அருந்தமிழ்ச் சொற்களும் கையாளப்பட்டுள்ளன.

6. நடுகற் கல்வெட்டுக்கள்

தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களிலும் சங்க இலக்கியங்களிலும் நடுகல் பற்றிப் பல செய்திகள் காணப்பெறுகின்றன. எனினும் பல்லவ அரசர் காலம் முதலாக அமைந்த நடுகற் கல்வெட்டுக்களே கிடைத்துள்ளன.

நடுகல்லானோர்: வீரருக்கு நடுகல் எடுப்பர் என்பது இலக்கணம் கூறும் செய்தி. வெட்சிப்போரிட்டும் (14) கரந்தைப்போரிட்டும் (15) நவகண்டம் கொடுத்தும் (16) புலி, பன்றி முதலான விலங்குகளைக் கொன்றும் (20-1) கன்னியைக் காத்தும் (18) கள்வரோடு போரிட்டும் (13) நாடு பாவியும் (19) வீரமரணம் அடைந்தார்க்கு நடுகல் காட்டப்பெற்றன. அஃறிணைப் பொருளாகிய **நாய்க்கும்** எடுத்தனூரில் (13) நடுகல் எடுக்கப்பெற்றது.

கோயில்: நடுகல்லுக்கும் பந்தலிட்டு வழிபாடு செய்தல் புறப்பாட்டில் கண்டமுறை. நடுகல்லின் மேலும் பின்புறமும் பக்கங்களிலும் கற்களிடப் பெறுவது உண்டு. (பழமங்கலம் நடுகல் காண்க) இந்நடுகற்கள் இந்நாளிலும் வழிபடப்பெறுகின்றன.

நாட்டும் இடமும் முறையும்: நடுகற்கள் வீரர் மரணம் அடைந்த ஊரில் எடுக்கப் பெறலாம் (14, 19) ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும்தான் நடுகல் எடுப்பிக்கப் பெற்றன எனலாம். ஊர்ச் சபையார் ஊர்ப்பறை கொட்டி நடுகல் எடுப்பர்; பக்கங்களில் கல்திட்டைகள் சேர்த்துக் கல்மேடு செய்து நடுகல் எடுப்பர்; நடுகல்லானவன் ஆவி சாந்தியடைவதற்காக நிலக்கொடை தருவர் என்பன திருவான்மூர் நடுகல்லால் அறியப்பெறும்.

வரலாறு: மகேந்திரவர்மனும் இவன் தந்தையும் ஆண்டதாகக் கருதப்பெற்ற ஆட்சியாண்டுகட்குப் பின்னர் அமைந்த ஆட்சியாண்டுகளுடைய கல்வெட்டுக்கள் கிடைத்து உள்ளன. நாட்டுப் பிரிவுகள் பற்றிய பல செய்திகளும் கூறப்பெற்றுள்ளன. (XIII வினு 2 காண்க).

எழுத்தியல் உண்மை: மிகப்பழைய தமிழ்க்கல் வெட்டுக்கள், '**தமிழி**' என்னும் எழுத்தால் எழுதப் பெற்றுள்ளன. ஆனல் பிற்காலத்தில் பல்லவவேந்தர் முதலியோர் கல்வெட்டுக்கள் '**தமிழ்**' எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. பாண்டியர் சாசனங்கள் பல '**வட்டெழுத்தால்**' எழுதப்பட்டுள்ளன. அறிஞர் சிலர் ''வட்டெழுத்துத் தனித்து வளர்ந்த ஒருவகை எழுத்து முறை' எனக் கருதுவர். தற்போது கிடைத்துள்ள மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் கால நடுகற்கள் வட்டெழுத்தில் எழுதப் பட்டுள்ளன. இவ்வெழுத்துக்களின் வரிவடிவ அமைப்பு ஆனது 'தமிழி' என்னும் எழுத்திலிருந்தே தமிழ் எழுத்துக் களும் வட்டெழுத்துக்களும் தோன்றி வளர்ந்தன' என்பதனை உறுதி செய்கிறது.

மக்கள் வாழ்க்கை: ஒருரினர் அடுத்த ஊரில் உள்ள ஆன்தொறு அல்லது எருமைத்தொறுக்களைக் கவர்ந்தனர். கள்வர்களும் அவ்வாறு கவர்வதுண்டு இங்ஙனம் கவரப்பட்ட தொறுக்களை மீட்கத் தொறுவின் உரிமையாளர் அல்லது

ஞானிளர் போரிட்டனர். இப்போரில் வீரம் காட்டி இறந்தவர் உண்டு. அவருக்கு உதவியாக நாய்களும் போரிட்டு இறந்திருக்கின்றன. அங்ஙனம் உயிர்விட்ட மறவர்க்கும் நாய்க்கும் நடுகல்நட்டு மக்கள் வழிபாடாற்றி வந்தனர்.

பெண்களைக் கள்வர் கவர்ந்துபோயிருக்கின்றனர். அப் பெண்களை மீட்டுப் போராடி உயிர்விட்டவரும் உண்டு. காட்டினின்றும் நாட்டுள் புகுந்த அல்லது வேட்டையாடும் போது எதிர்த்த புலி, பன்றி முதலான கொடிய விலங்கு களுடன் போராடி அவற்றைக் குத்தித் தாமும் இறந்து பட்டவரும் உண்டு. தாம் நேர்ந்துகொண்டபடிக் கடவுளுக் காகத் தம் உடம்பை அரிந்து நவகண்டம் கொடுத்துத் தம் தலையையும் அரிந்து வைத்த மறவரும் உண்டு. இத்தகைய மறவர்க்கு நடுகல் நடப்பட்டதுடன் வழிபாட்டுக்காக நிலங்களும் விடப்பட்டன.

பகைவன் ஒருவன் வஞ்சனையால் ஒரு நாட்டைக் கவர, தன் மன்னன் இறக்கவே அவனுடைய மனைவிமக்களைக் காத்துப் பின் மக்கட்காகப் பகைவனுடன் போராடி உயிர் விட்டவரும் உண்டு. அவர்கட்கும் நடுகல் நாட்டப்பட்டது.

பல்லவர் காலத்தில் அவர்க்கடங்கிய சிற்றரசருக்கு மெய்க்காவலராகச் சிலர் இருந்தனர் என்பதும் அவர்கள் சேவகர், இளமகன், அடியான் என்று அழைக்கப்பட்டனர் என்பதும் இவர் தம் தலைவர் பொருட்டு உற்றுழி உதவி உயிரையும் விட்டனர் என்பதும் தெரியவருகின்றன.

7. அரசர்களின் சமயப்பற்றும் பொறையும்

அரசர் தாம் ஆட்சிபுரிதற்குத் துணையாக இருப்பவன் இறைவன் என எண்ணினர். இரண்டாம் வரகுணன், 'பின்னைப் பிறைசடைக் கணிந்த பினாகபாணி எம்பெருமானை உள்ளத்தில் இனிதிருத்தி உலகம் காதலால் ...

னவாய்புரச் சாசனம் கூறுகிறது. மற்றும் 'அமரராலயம் பல செய்தும்' அரசர் இலங்கினர் என இச்சாசனம் கூறுகிறது.

பற்று : எண்ணிறந்த தேவதானமும் எண்ணிறந்த பிரமதேயமும் இருநிலத்தில் இயற்றுவித்தவனாக வீர நாராயணன் (3) கூறப்படுகிறான். அரசர் தாம் சார்ந்த சமயத்திற்குப் பல கொடைகள் தந்தனர்; ஆலயம் எடுப்பித்தனர். பல்லவ அரசன் பரமேசுவரன் கூரத்தில் **'வித்யாவிநீத பல்லவ பரமேசுவரகிருஹம்'** என்னும் சிவாலயம் கட்டினான் (2). கருநந்தடக்கன் பார்த்திவசேகர புரத்தில் ஸ்ரீ கோயில் எடுப்பித்தான்; விஷ்ணுபடாரகரை எழுந்தருள்வித்தான்; பல நிவந்தங்கள் தந்தான் (5).

பொறை : அரசர் எல்லாச் சமயங்களும் தழைக்க உதவினர். 'அறுசமயத்தறநெறியும்......திறம்பாது தழைத் தோங்க அரசாண்டனா' எனச் சுந்தரபாண்டியன் மெய்க் கீர்த்தி (28) கூறுவதனால் இதனை உணரலாம். சங்ககால நெடுஞ்செழியனும், இளங்கடுங்கோவும் சமணப்பள்ளிகள் அமைத்தனர்; சிவபாதசேகரன் ஆகிய இராசராசன் நாகப்பட்டினத்துச் சூளாமணிபன்ம விகாரத்துக்கு ஆனை மங்கலத்தைப் பள்ளிச்சந்தமாக அளித்தான் (6). கிருஷ்ண தேவராயர், சோழமண்டல சிவவைணவ ஆலயங்களுக்குப் பதினாயிரம் பொன்னை நீக்கிச் சர்வமான்யமாகத் தந்தார் (30).

8. அக்காலச் சமயநிலை

பணிகள் : ஸ்ரீ கோயில்கள் எடுப்பிக்கப்பெற்றன. அரசரும், பொதுமக்களும் இப்பணியாற்றினர். **'நம்பியப்பி'** என்னும் அரசலுவலன் அபராசிதன் காலத்தில் திருத்தணிச் சிவாலயம் செய்தமைத்தான். திருக்கோயில்கட்குப் பொன் வேய்ந்தமையும் (24) உண்டு. திருக்கோயில்களுக்கு வழிபாடு முதலானவற்றுக்காகப் பல வகையான நிவந்தங்கள் தரப்

பெற்றன. (க. எண். 2, 5, 6) இவற்றால் பஞ்சகவ்யம் தெளித்தல், எழுநாள் திருவிழா நடத்துதல் தீபதூப ஆராதனைகள் செய்தல் முதலான பல வழிபாட்டுப் பணிகள் நிகழ்ந்தமை அறியலாம். சோடச உபசார பூசை (அங்கரங்க வைபோகம்) முதலானவையும் ஆலயங்களில் நிகழ்ந்தன (30). பாரதம் வாசிக்கப்பெற்றதும் உண்டு (2).

சைனம் : கணி என்னும் சமண சங்கத்தவர் இருந்தனர் ; (7; 1) சங்ககாலக் கல்வெட்டுக்கள் சைன சமயத்தவர் பெருமையைக் காட்டுகின்றன. பள்ளன்கோயில் செப்பேட்டில் திருப்பருத்திக்குன்றில் வஜ்ரநந்தி குரவருக்குத் தானம் தரப்பெற்றமை கூறப்பட்டுள்ளது. திருநாதர்குன்று கல்வெட்டினால் சமண சமயத்தவர் உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்தலும், அவர் நினைவாக நிசீதிகை எடுக்கப் பெறுதலும் அறியவருகிறது (11).

பௌத்தம் : நாகப்பட்டினத்தில் சூளாமணி பன்ம விகாரம் எடுப்பிக்கப்பெற்றது (6) அதற்கு இராசராசன் கொடை தந்தமை லெய்டன் பட்டயத்துக் கண்டது.

வைணவம் : பார்த்திவசேகரபுரம், (5) திருவரங்கம் (29) சாசனங்களினால் வைணவ சமயநிலையை அறியலாம். ஸ்ரீ மாதவசரணசேகரன், ஹரிசரணகமலசேகரன் முதலான சிறப்புப் பெயர்கள் இச்சமயத்தில் ஈடுபாடுகொண்ட பலர் வாழ்ந்தமை காட்டும் (3, 4) விசையநகர அரசர் காலத்து வைணவ மடத்துத் தலைவர் ஔக்குத் திருவேங்கடய்யங்கார் (29) குறிக்கப்பட்டுள்ளார்.

9. நில உரிமை

நிலங்கள் அளக்கப்பெற்று விளைச்சலுக்கேற்பத் தரப் படுத்தப்பெற்றிருந்தன; தரம் பிரித்ததற்கேற்ப வரிவிதிக்கப் பெற்றன. நில உரிமைகள் பற்றிய மாற்றம் முதலானவை புரவுவரி அலுவலரால் குறிக்கப்பெற்றன.

எண்வகை உரிமை : நிலம் விற்றல், வாங்கலில் சில முறைகள் இருந்தன. விலைப்பொருள் கொடுத்து ஆவணம் செய்துகொள்ளலும் (1) பரிவர்த்தனை மூலம் கொள்ளலும் (5; 29) சாசனங்களில் காணப்பெறும். ஒரு நிலம் மற்றொருவருக்கு உரிமையாக்கப்பெறும்போது நீர், மரம், கல், செல்வம், புதையல், விற்பனை, ஒற்றி, ஈதல் என்னும் எண் வகை உரிமைகளுடன் (அட்டபோகத்துடன்) தரப்பெறும். "வாஸ்து வாஸ்து சேஷம் ஆறு ப்ராப்தி வெள்ளாங் குடி இருப்பு மற்றும் எப்பேர்ப்பட்ட சகல்சமுதாயப் பிராப்தியும் உட்பட நிதி நிக்ஷேப ஜல பாஷாணாதி **அஷ்ட போக** தேஜஸ்வாமியங்களும்" உட்பட நிலந்தரப்பெற்றதாகத் திருவரங்கம் கல்வெட்டுக் (29) கூறுகிறது. சோழர் சாசனங்களில் பல சொற்றொடர்களால் சமுதாயப் பிராப்தியும் அட்டபோக உரிமையும் உட்பட நிலம் தரப்பெற்றமை கூறப்பட்டுள்ளது (சாசனம் 6; 29)

நில உரிமை : உழுபவனை உரிமையாளனகக்கொண்டு வெள்ளாண் வகை நிலங்களை இருவகையாகப் பிரிக்கலாம். (1) **கொடையாகத் தரப்பெறுவன :** பிரமதேயம், தேவதானம், பள்ளிச்சந்தம். (2) **குறிப்பிட்ட பணி நிறைவேற்றத் தரப்பெறுவன :** கணிமுற்றூட்டு, வெட்டிப் பேறு, விழாப்புறம், பணிமக்களுக்கு விருத்தி, பாரத் விருத்தி முதலானவை. (சாசனம் 2, 5, 6 காண்க.)

உடன் வாரமும் பிரிவுகளும் : எவ்வகை நிலம் ஆயினும் விளைவுநோக்கி இருபோக நிலம் (இருபூ விளைவது) என்பது போலத் தரம் பிரிக்கப்பெற்றிருந்தன (4) நிலத்தின் மொத்த விளைச்சல் **உடன் வாரம்** எனப்பட்டது: இது இரண்டு பங்குகளாகப் பிரிக்கப்பெற்றது. ஒன்று காராண்மை; இது உழுது பயிரிடும் குடிமக்களது உரிமை; இன்று குடிவாரம் என வழங்குவது; பாங்கமைந்த குடிகளது காராண்மை [illegible]

கோடெழுந்து கிடந்ததனை' என்னும் தளவாய்புரச் சாசனப் பகுதியால் இச்சொற்பொருள் அறியவரும். மற்றொன்று **மீயாட்சி**: இது நிலச் சொந்தக்காரரின் உரிமை; இன்று மேல்வாரம் எனப்பெறுவது.

குடிநீக்குதல்; நீக்காமை: நில உரிமையாளர், உழுபவரை மாற்றும் உரிமையுடன் நிலம் தரப்பெறுதல் உண்டு; இது **குடிநீக்கும் இறையிலி** எனப்பட்டது. நில உரிமையாளர் உழுபவரை மாற்றும் உரிமை இல்லாத நிலையில் பெற்ற இறையிலி, **குடிநீங்கா இறையிலி** எனப் பெற்றது. ஒருவர் மற்றொருவருக்குத் தானமாக நிலத்தைத் தரும்போது உழுது பயிரிடுபவனை மாற்றித் தருவதனை, "கோவும் பொறியும் மாற்றிக் **குடிநீக்கி**" நிலம் தரப் பெற்றது எனப் பள்ளன் கோயில் பட்டயம் கூறுவதனால் அறியலாம். நில உரிமையாளருக்கு உழுபவர்க்கு உள்ள உரிமையைக் கூட்டுதல் குறைத்தலாகிய அதிகாரங்கள் தரப் பெறுவதனைக் "காராண்மை மிகுதி குறைவு உள்ளடங்க" என்னும் சாசனத் தொடர் காட்டும்.

இறையிலியாக்குதல்: வரியற்ற நிலமாக்குதல். இவ்வாறு ஆக்கும்போது முற்றிலும் வரியற்றதாக ஆக்குதலுண்டு; இது **இறைநீங்கல்** எனப்பட்டது. இவ்வாறல்லாமல் அரசன் வருவாயைத் தான் பெற்றுக் கொள்ளாமல் மற்றொருவர்க்கு அவ்வுரிமையைத் தருதலும் இருந்தது; இது **இறை இறங்கல்** எனப்பட்டது. பள்ளன் கோயில் செப்பேடுகளில் எல்லா உரிமைகளும் தானம் பெற்றவர்க்குத் தரப்பட்டமை, 'கோவும் பொறியும் மாற்றி' எனக் குறிக்கப்பட்டுள்ளது. லெய்டன் பட்டயம் அரசுக்குரிய வருவாய் (இறைகட்டின காணிக் கடன்) முழுவதும் நீக்கப்பெற்றமையையும், அரசன் உண்ணற்பாலனவாகிய எல்லாவற்றையும் பள்ளிசந்தத்துக்கே உரிமையாக்கப் பெற்றதனையும் கூறுகிறது (6).

பிரமதேயம்: பிரமதேய ஸ்திதி வழாமல் நிறுத்துதலைக் குறிக்கோளாகக் கொண்டு வீரநாராயணன் இருந்தான் (4). இப் பிரமதேயங்கள் பங்கு வழியாக அனுபவிக்கப் பெற்றன (2). தேவதானப் பிரமதேயம் (3), ஏகபோக பிரமதேயம் (3, 4) என்னும் வகைகளும் இருந்தன. ஏகபோக பிரமதேயத்துக்கு முழு உரிமையாளராக நிலம் பெற்றவரே இருந்தனர்.

உரிமையில் மாறுதல்: திருக்கோயிலுக்குரிமையாக இருந்த நிலம் அரசுரிமையாயிற்று எனத் திருவரங்கம் கல்வெட்டுக் கூறுகிறது. 'நெடுநாளைக்கு மேலாகச் சில காலம் பண்டாரவாடையாய்த் திறந்துபோன' என்பது தொடர். இதனால் ஒருவருரிமை மற்றொருவனுக்கு மாறியமை முதலானவற்றை அறியலாம். (பக்கம் 71–3 காண்க)

மீன் பிடிக்கும் உரிமை: ஊரின் இடைப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் இருந்த நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் உரிமை ஊர்ச் சபையார்க்கே இருந்தமையும் அதிற் செம்பாதி தனியார்க்கு உரிமையாக்கப் பெற்றமையும் சாசனங்களில் காணப்படும். (பக்கம் 74 காண்க)

பயிரிடும் உரிமை: எல்லாப் பயிரினங்களையும் பயிரிடும் உரிமை சிலருக்கே இருந்தது. இது விசேட உரிமை என்பதனை லெய்டன் பட்டய வியவஸ்தைகளால் அறியலாம்.

10. நீர்நிலைகளும் நீர்ப்பாசனமும்

அரசர் 'காயல்போல் குளங்களின் கரையுயரினர்; ஆறு பல தலைகண்டனர்' எனச் சாசனங்கள் கூறுகின்றன. பொதுமக்களும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டனர்.

1. **ஆற்றுப் பாசனம்:** பாடமாகிய சாசனங்களில் பாலாறு (2) தண்பொருநை (4) விளப்பில் (6) என்னும்

ஆறுகள் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறுகளில் இருந்து கால்வாய்கள் பிரிக்கப்பெற்றுப்' பாசனத்துக்குப் பயன் படுத்தப்பெற்றன.

2. **ஏரிப்பாசனம்:** கூரத்தில் பரமேச்வர பல்லவன் ஒரு ஏரி கண்டான் (2). பள்ளன் கோயில் பட்டயமும் 'ஏந்தல் ஏரி' என்று ஒரு ஏரியின் பெயரைக் கூறுகிறது (1). இவையும் பாசனத்துக்குப் பயன்பட்டன.

3. **கால்வாய்:** நீர்நிலைகளுக்குப் பாய்வனவாகவும் கால்வாய்கள் இருந்தன. இதனை ஆனைமங்கலத்துத் தேவர் ஸ்ரீகுளத்துக்கு வாய்க்கால் ஒன்று பாய்ந்தமையால் அறியலாம். கால்கள் பாசனத்துக்குப் பயன்பட்டன. இக் கால்களில் பெருங்கால் சிறுகால் என்னும் வேறுபாடு இருந்தது. இராசராசன் வாய்க்கால் (6) நாட்டுக் கால்கள் முதலியனவாகப் பெயருற்றிருந்தன. அணைகளும், கண்களும், தலைவாய், தலைப்பேழை முதலியனவும் இருந்தன. பெரும் பிடுகுகால் என்பது பாலாற்றில் இருந்து பிரிந்த கால்வாய்; இதனைப் பரமேச்வரபல்லவன் வெட்டுவித்தவனாவான்.

4. **கிணறு:** தளவாய்புரச்சாசனம் இரு கிணற்றுப் பாய்ச்சல் நிலம், மூன்று கிணற்றுப் பாசன நிலம் என்னும் வரையறைகளைத் தருகிறது.

5. **குளம்:** நடையாட்டி குளம், குடிநடை ஏரி ஓங்கிய குளம், இளநேச்சுர நாட்டு ஓலைக்குளம் என்னும் குளங் களைத் தளவாய்புரம் சாசனம் கூறுகிறது. வெங்கைக்குளம், நெடுமட்குளம், முடால நாட்டுக் கீழ்க்குளம், தெதிகீழ்க் குளம் என்னும் குளங்களைப் பார்த்திவசேகரபுரம் சாசனம் கூறுகிறது. இக் குளப்பெயர்களால் இவை நாடு, ஊர் முதலானவற்றுக்கு உரியனவாக இருந்தமை புலப்படும். குளங்களால் நீர் பாயும் வயலிவை இவை எனும் வரையறை இருந்ததனைப் 'பிரமதேயம் பெற்றுடைய நிலத்தில் அட்டின

பூமி கடலங்குளத்தாலும் இலஞ்சைக் குளத்தாலும் நீர் பெறுவன' எனப் பார்த்திவசேகரபுரம் சாசனம் கூறு மாற்றால் அறியலாம். இக்குளங்களுக்கு வாய்க்கால்களால் நீர் நிரப்பப்பெற்றது.

ஓடையும் வாய்க்காலும்: ஓடைகளை லெய்டன் பட்டயம் குறிக்கிறது. சில ஓடைகள் வாய்க்காலிலும் சில வாய்க்கால்கள் ஓடையிலும் கலந்தனவாகத் தெரிகிறது. இவ்வாறு அமைந்ததனால் ஒன்றுக்கு மற்றொன்று வடிகாலாக இருந்து பாசனத்துக்குப் பயன்பட்டிருந்ததனை உணரலாம்.

பெருங்கிணறு: கேணி, துரவு எனப்பெறும். வேள் வடுகன் கேணி என்பதனைப் பள்ளன்கோயில் சாசனம் குறிக்கிறது; மார்ப்பிடுகு பெருங் கிணறு என்பது திரு வெள்ளறை கிணற்றின் பெயர்.

ஊற்றுப் பாசனம் இருந்தது: ஏற்றப் பாசனம் வழக்கிலிருந்தது. குற்றேத்தம் பேரேத்தம் என்னும் பகுப்பு இருந்தது. மும்மூலை ஏத்தம் என்பது பள்ளன்கோயில் செப்பேட்டில் கூறப்படுகிறது. கூடையால் நீரிறைக்கும் முறையும் இருந்தது.

நீர்ப்பாசனம் பற்றிய பல தீர்மானங்கள் இருந்தன; இவற்றை லெய்டன் பட்டயம் விரிவாகக் கூறுகிறது. (பக்கம் 119 – 20; 136 – 7)

11. இலக்கியச் செய்திகள்

திருவிளையாடற் புராணச் செய்திகள் தளவாய்புரம், சிவகாசிச் சாசனங்களிலும் இடம்பெற்றுள்ளன. (பக். 97 காண்க). சடையவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தி 'விண்ணவர்கோன் அன்றிட்ட எழிலாரம் கழுத்திலங்க' எனக் கூறுவது இந்திரன் ஆரம் சூட்டிய திருவிளையாடல் செய்தியைக் காட்டுவதாகும். அகத்திய முனிவனைத்

பற்றித் தளவாய்புரம், சிவகாசிச் சாசனங்கள் குறிக்கின்றன. (3) 'அகத்தியனோடு தமிழ் தெரிஞ்சும்' என்பது சிவகாசிச் சாசனம். **சங்கம்பற்றித்** 'தென்மதுராபுரி செய்தும் அங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்' என்னும் தளவாய்புரச் சாசனத்தொடர் குறிக்கிறது. சங்க இலக்கியத்தில் கூறப்பெறும் **தலையாலங்கானத்துப்போர்** 'ஆலங்கானத்தமர் வென்றும் ஞாலம்காவல் நன்கெய்தியும்' என்ற தொடரில் கூறப்பட்டுள்ளது. **மலைபடுகடாம்** என்னும் நூல் பாடப்பட்டதனைச் செங்கம் கல்வெட்டுக் குறிக்கிறது. மதுரைக் காஞ்சியின் தொடக்கம் 3-ஆவது கல்வெட்டின் தொடக்கமாகும்.

இதிகாசம்: இராமாயண பாரதக் கதைகளின் செல்வாக்குச் சாசனங்களால் தெரியவருகிறது. நாடோறும் பாரதம் படிக்கப்பெற்றதனைக் கூரம் சாசனம் (2) கூறுகிறது. பாரதப்போரில் பாண்டியர் கலந்துகொண்டனர். 'தார்த்தராஷ்ட்ரர் படைமுழுதும் களத்தவியப் பாரதத்துப் பகடோட்டியும்' எனத் தளவாய்புரம் சாசனம் கூறுகிறது; இச்சாசனம், தசவதனன் சார்பாகச் சந்துசெய்து கொண்டதாக இராவணனைப் பற்றியும், அரிச்சந்திரன், அர்ச்சுனன் பற்றியும் கூறுகிறது.

வடமொழிச் சுலோகங்கள்: பல புனையப்பெற்றன. முடிசூட்டு விழாவில் வீரபாண்டியன் அநுஷ்டுப் சுலோகத்தினைச் செவிமடுத்தான்; அதன் விழுப்பம் நோக்கி மிக மகிழ்ந்தான். அதனை இயற்றிய பீதாம்பரபட்டனுக்கு தலையாக பிரமதேயமாக விளம் தந்தான் (4) எனச் சிவகாசிச் சாசனம் கூறுகிறது. செப்பேட்டுப் பிரசஸ்திப் பகுதியாகிய

வடமொழிக் கவிஞர் நிலக்கொடை பெற்றுள்ளனர் (6). விஜயநகர அரசர் கல்வெட்டுக்களிலும் அனுஷ்டுப் சுலோகங்கள் (29, 30) காணப்படுகின்றன.

தமிழ்க் கவிதைகள்: பல தமிழ்க் கவிதைகள் சாசனங்களாக உள்ளன. அபராசித பல்லவன் கவிதை எழுதும் ஆற்றல் உடையவனாக இருந்ததனைத் திருத்தணிக் கல்வெட்டால் அறியலாம். இதனைப்போலவே தாமிர சாசனங்களிலும் மரபுகூறும் பகுதி இலக்கிய நயம்பட அமைகிறது. தளவாய்ப்புரச்சாசனத்தொடக்கமும் மதுரைக் காஞ்சியின் தொடக்கமும் ஒன்றே. இலக்கண விளக்கப் பாட்டியல், வச்சணந்திப் பாட்டியல்களில் 'மெய்க்கீர்த்தி மாலை' எனச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகக் கூறப்பெறும் மெய்க்கீர்த்தி, பல கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றன. எண்ணலங்காரம் முதலிய அணியழகுகளும் சாசனப்பாடற் பகுதிகளில் காணப்பெற்றுள்ளன.

பிற செய்திகள்: வேதம், வேத அங்கங்கள், வேதம் ஓதுதல், கல்விமுறைகள் பற்றிப் பார்த்திவசேகரபுரம் சாசனம் கூறும். இதில் வேதத்தைக் குறிக்கும் பெயர்கள் நச்சினார்க்கினியருரையுடன் ஒப்பிடற்குரியன. (பக். 106 - 9) பகவத்கீதைக்கு இருந்த செல்வாக்கினைத் திருவரங்கம் கல்வெட்டால் (29) உணரலாம்

12. சிற்றரசர் வரலாறு

பல்லவர் காலத்துச் சிற்றரசர்: (அ) **வித்தியா விநீதன்** (சா. எண். 2), (ஆ) **வாணகோவரையர்** (12ல்

2ல் 5), வயிர மேகவாணகோவரையர் (15, 18), அரிமிதைய மாவலிவாணராயர் (19) பல்லவருக்கடங்கிய சிற்றரசர். இவரிடையே குழப்பங்களும் நிகழ்ந்தன. (இ) பொன் மோதனர் (20) அய்யப்பதேவன் (21) மரபு தெரியவில்லை. **சோழர் காலம்:** (அ) கடாரநாட்டு அரசன் சூளாமணி பன்மன் (6). (ஆ) காங்கேயன் என்னும் சிற்றரசன் (25) **ஆய்குல மன்னர்:** கோக்கருநந்தடக்கன் என்னும் ஆய்குல மன்னன் பார்த்திவசேகரபுரம் சாசனத்தில் குறிக்கப் பெறுகிறான் (5) **பிற அரசர்:** பொத்தப்பிச்சோழன் ஸ்ரீகண்டன் என்பவன் தளவாய்புரச் சாசனத்திலும் பாண்டியனால் வெல்லப்பெற்ற களப்பிரர் பற்றிய செய்திகள் (1, 2, 3) சில சாசனங்களிலும் கூறப்பெற்றுள்ளன.

13. அரசியல் தலைவர்கள்

பல்லவர் சாசனங்களில் பள்ளன்கோயில் செப்பேட்டில் நரபயன் என்னும் அமைச்சன் (1) கூறப் படுகிறான். **தளவாய்புரச் சாசனத்தில்** பராந்தகன் வீரநாராயணனுடைய உடன்கூட்ட அலுவலர் பலர் கூறப் பெற்றுள்ளனர். **சிவகாசிச் செப்பேட்டில்** வீரபாண்டிய னுடைய யானைப்படைத் தலைவனும் சில உடன்கூட்ட அலுவலரும் கூறப்பெற்றுள்ளனர். **பார்த்திவசேகரபுரம்** சாசனத்தில் இருவர் கூறப்பெற்றுள்ளனர். **இராசராசனின் லெய்டன்** பட்டயம் பல அரசியல் தலைவரைக் குறிக்கிறது. **திருவையாற்றுக் கல்வெட்டுப்** பெண் அதிகாரி (அதிகாரிச்சி)யைக் குறிக்கிறது. **தில்லைக் கல்வெட்டில்** நரலோக வீரன் என்னும் சேனைத்தலைவன் குறிக்கப் பெறுகிறான்.

14. வரி வகைகள்

பல்லவர்கால வரிவகைகளைச் சாசனம் 2-இலும், சோழர் கால வரிவகைகளைச் சாசன எண் 6-இலும், விசயநகர வேந்தர் கால வரிவகைகளைச் சாசனம் 29, 30-இலும் காண்க.

15. நாட்டுப் பிரிவுகள்

பல்லவர் காலத்தில் கோட்டம், நாடு குறிக்கப்பெறுதல்; (சாசனம் 1, 2) இராசராசன் காலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் நாடும் ஊரும் மட்டும் கூறப்பெறுதல்; (3-5) நடுகற் கல்வெட்டுக்களில் நாட்டுப் பிரிவுகள்; (12, 14, 15, 18, 19) இராசராசன் காலம் முதல் மண்டலம், வளநாடு, நாடு என்னும் முறையில் அரசியல் பிரிவுகளமைதல்; (6, 22) விசயநகரவரசர் காலத்தில் (29, 30) நாட்டுப் பிரிவுமுறை; என்னும் தலைப்புக்களில் கட்டுரையை குறிப்புரையின் துணையால் உருவாக்கிக் கொள்க.

16. அரசாணை நிறைவேற்றப்பெறுதல் சாசனங்களில் எவ்வாறு கூறப்படுகிறது?

(பள்ளன் கோவில், பாண்டியர் செப்பேடுகள், லெய்டன் பட்டயம் ஆகியவற்றைக்கண்டு தொகுத்தெழுதுக)

17. மெய்க்கீர்த்தி என்றால் என்ன? பாடப்பகுதியின் அமைந்த மெய்க்கீர்த்தி ஒன்றினை விளக்குக.

(பக்கம் 210; 124-7; 184-91 காண்க.)

18. அளவைகள்

முன்னுரை : கல்வெட்டுக்களை ஆராயுமிடத்து அக் காலத்தில் வழங்கிய முகத்தல் நிறுத்தல் பரப்பு என்ற அளவுகளைப் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன.

முகத்தலளவை : நெல்லை, நாழி, குறுணி, தூணி, கலம் என்ற அளவைகளால் அளந்தனர். இதற்குப் பார்த்திவ சேகரபுரம் செப்பேட்டில், 'நாற்கலனே எண் குறுணி நெல்லுக்கொண்டு' என்ற தொடரும், லெய்டன் செப்பேட்டில், 'நெல்லு எண்ணுயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து முக்கலனே இருதூணிக் குறுணி ஒரு நாழியும்' என்ற தொடரும் சான்ருக உள்ளன. முகத்தலளவைக் கருவிகள் சில, 'மடைப்பள்ளிநாழி' 'பதினுழிக்கால்' எனச் சிறப்புப் பெற்றிருந்தன. இவற்றில், 'பதினுழிக்கால்' என்பது பார்த்திவசேகரபுரத்தை அடுத்திருந்த தெங்கநாடு முதலான பகுதிகளில் வழக்கில் இருந்ததாகவும், 'மடைப்பள்ளி நாழி' என்பது பார்த்திவசேகரபுரத்தில் உள்ள ஸ்ரீ விஷ்ணு படாரகர்கோயில் மடைப்பள்ளியில் வழங்கியதாகவும் தெரிகிறது.

வாய்பாடு

8 நாழி	—	1 குறுணி
4 குறுணி	—	1 தூணி
12 குறுணி	—	1 கலம்

நிறுத்தல் அளவை : பொன்னை மா, மஞ்சாடி, கழஞ்சு என்ற அளவைகளால் நிறுத்துக் கணக்கிட்டனர். இதற்குத் திருவையாற்றுக் கல்வெட்டில் வந்த, "குடிஞைக்

கல்லால் பொன் அறுகழஞ்சும் இதிற் கட்டின மாணிக்கம் ஒன்றும் வயிரம் இரண்டும் உட்பட நிறை அறுகழஞ்சே மஞ்சாடியும் அஞ்சுமாவும்'' என்ற தொடர் சான்றாகும். "பொன்னை நிறுக்கப் பயன்பட்ட கல் குடிஞைக் கல் என்றும், இரத்தினங்களை நிறுக்கப் பயன்பட்ட கல் காசுக் கல் என்றும் சோழர் காலத்தில் வழங்கி வந்துள்ளது'' என்பது பிற சாசனங்களால் தெரியவருகிறது.

வாய்பாடு

5 மா	—	1 குன்றி
2 குன்றி	—	1 மஞ்சாடி
20 மஞ்சாடி	—	1 கழஞ்சு

பரப்பளவு: நிலத்தின் பரப்பானது வேலி, மா, குழி, காணி, முந்திரிகை, பட்டி என்ற அளவுகளால் குறிக்கப் பட்டது. இதற்குச் சிவகாசிச் செப்பேட்டில் வந்த, 'நீர் நிலன் மூவேலியும்' என்ற தொடரும், லெய்டன் செப் பேட்டில் வந்த, 'நிலன் தொண்ணூற்றேழே இரண்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகை' என்ற தொடரும், கூரம் செப்பேட்டில் வந்த, 'ஆயிரத்திருநூற்றுக் குழிப் படியால் மண்டகம் எடுத்த நிலத்தோடும் கூட ஐந்தேகால் பட்டி நிலமும்' என்ற தொடர்களும் சான்றுகளாகும்.

வாய்பாடு

144 சதுர அடி	—	1 குழி
100 குழி	—	1 மா
20 மா	—	1 வேலி
4 முந்திரிகை	—	1 காணி
[illegible]	—	1 மா

முடிவுரை : பல்லவர் காலத்தில் பட்டி என்ற நில அளவு பெரிதும் இருந்துள்ளது. 1200 குழி கொண்டது ஒரு பட்டி என்பது கூரம் பட்டயத்தால் தெரிகிறது. ஒன்றுக்குக் கீழ்பட்ட பாகம் முந்திரிகை ($\frac{1}{320}$) காணி ($\frac{1}{80}$) மா ($\frac{1}{20}$) என்ற பெயரால் சோழர் காலத்தில் வழங்கப்பட்டன. விசய நகர அரசர் காலத்தில் $\frac{1}{4}$, $\frac{1}{10}$, $\frac{3}{4}$ என்று எழுதும் பின்ன முறை இருந்தது என்பது சதாசிவராயர் கல் வெட்டால் தெரிகிறது. புறஞ்சில் என்னும் நிலமளக்கும் கோல் சிவகாசிச் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. நிலத்தின் பரப்பு அதில் விதைக்கும் விதையளவாலும் குறிக்கப்பட்டது என்ற சிறப்புச் செய்தி பார்த்திவசேகரபுரச் சாசனத்தால் தெரிகிறது. மற்றும் ஈழக்காசு, காணம், காசு என்ற நாணய அளவுகளும், காதம் என்ற தூரத்து அளவும் அக்காலத்து வழங்கியதாகத் தெரிகிறது.

B. A., B. Lit., மாணவர்களுக்கான,

தென்னிந்திய வரலாறு

விரைவில் வெளிவரும்.